
# காங்கிரஸ் வினா-விடை

## மூலமும் ஆய்வும்



பூங்கொடி பதிப்பகம்

பெ.சு.மணி

# காங்கிரஸ்

## வினா - விடை

- மூலமும் - ஆய்வும் -

### பெ. சு. மணி

பூங்கொடி பதிப்பகம்

14. சித்திரைக்குளம் மேற்கு தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி - 044-24643074.

## நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | காங்ரெஸ் வினா-விடை (மூலமும் ஆய்வும்) |
| ஆசிரியர் | : | பெ.சு. மணி |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | டிசம்பர், 1979 |
| இரண்டாம் பதிப்பு | : | டிசம்பர், 2012 |
| பக்கம் | : | 368 |
| எழுத்து | : | 11 புள்ளி |
| கட்டு | : | சாதா அட்டை |
| தாள் | : | 11.6 வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| வெளியீடு | : | **பூங்கொடி பதிப்பகம்**<br>14, சித்திரைக்குளம் மேற்கு தெரு<br>மயிலாப்பூர்,<br>சென்னை-600 004.<br>போன்: 044 - 24643074 |
| ஒளி அச்சு | : | **மனோ கிராஃபிக்ஸ்**<br>கோடம்பாக்கம், சென்னை-24.<br>தொலைபேசி- 9444463214 |
| அச்சிட்டோர் | : | **அமர் ஆப்செட்,**<br>சென்னை- 600 005. |


**ரூ. 160.00**

# பதிப்புரை

தேடல், ஆய்வு, ஆவணப்படுத்துதல், புதையுண்ட வரலாற்றுச் செய்திகளை அகழ்ந்தெடுத்தல். எடுத்துக்கொண்ட ஒவ்வொரு துறையிலும் பெரும்பாலும் அத்துறைகளில் முதல் நூலைப் படைத்தல், காய்தல், உவத்தல் இன்றி நடுநிலையில் நோக்குதல் முதலானவை எங்கள் ஆசிரியர் பெ.சு.மணியின் எழுத்துப் பணியில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்கள். இவற்றையெல்லாம் அவருடைய நூல்கள் பலவற்றின் முன்னுரைகள், அணிந்துரைகள் உறுதிப்படுத்தியுள்ளன. குறிப்பாக சிலம்புச் செல்வர் ம.பொ.சி. - தமிழில் அரசியல் இலக்கிய முன்னோடி மூதறிஞர் வெ.சாமிநாதசர்மா, பாரதியியல் அறிஞர்கள், தொ.மு.சி. ரகுநாதன், ரா.சு. பத்மநாபன், ஈழத்துத் திறனாய்வுச் செம்மல்கள் கலாநிதி க. கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் 'சிட்டி பெ.கோ. சுந்தரராஜன், டாக்டர் அ.அ. மணவாளன், டாக்டர் ஔவை நடராசன், பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, பதிப்புச் செம்மல், ச. மெய்யப்பன், பேராசிரியர் கா. திருநாவுக்கரசு, பேராசிரியர் சு. வேங்கடராமன், இராமகிருஷ்ண மடத்தின் துறவிகள் சுவாமி கமலாத்மானந்தர், சுவாமி ஆத்மகனானந்தர் முதலானோர் எங்கள் ஆசிரியர் நூல்களுக்கு அளித்துள்ள முன்னுரைகள், அணிந்துரைகளில் மேற்குறிப்பிட்ட சிறப்பம்சங்களைச் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழில் தேசியம் தொடர்பான நூல்களைப் படைப் பதில் பாரதியார். திரு.வி.க., காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா, வெ.சாமிநாத சர்மா, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ஆகியோரை வழிகாட்டிகளாகக் கொண்டு எழுதி வருபவர், பெ.சு.மணி.

ம.பொ.சி. ஐயாவிற்கு அடுத்தபடியாக பெ.சு. மணியின் தேசிய இலக்கிய நூல்களைப் பதிப்பித்துக் கொண்டுவருகிறது பூங்கொடி பதிப்பகம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

காங்ரெஸ் வினா - விடை மூலமும் ஆய்வும் எனும் இந்நூல் தமிழில் அரசியல் இலக்கியத் துறைக்கு குறிப் பிடத் தக்க பங்களிப்பாகும்.

இந்நூலில் தமிழில் முதன் முதலில் அரசியல் நூல்களை எழுதி வெளியிட்ட முன்னோடி தேசியச்செம்மல் ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயர் (1855-1916) எழுதிய 'சுய அரசாட்சி வினா - விடை' (1883) முழுமையாக, பிற்சேர்க்கையில், அளிக்கப்பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். 'சுய அரசாட்சி வினா - விடை'யையும், 'காங்ரெஸ் - வினா - விடை'யையும் ஒப்பிட்டு எழுதப்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்க தாகும்.

''பூங்கொடி பதிப்பக உரிமையாளர் திரு. வே. சுப்பையா அவர்கள் நூல்களை அழகாகப் பதிப்பிப்பதில் தமது திறமையை வளர்த்துக் கொண்டே வருகிறார். அவரது திறமை இந்த நூலிலும் வெளிப்படுகிறது'' என்று ''காங்ரெஸ் வினா- விடை மூலமும் ஆய்வும்

நூலிற்கு எழுதிய அணிந்துரையில் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் ஐயா வெளியிட்ட சீரிய கருத்திற்கு மேன் மேலும் வலிமை சேர்க்கும் வகையில் எங்கள் பதிப்பகப் பணி தொடர்கின்றது என்பதை தமிழ் வாசகர்கள் நல்லாதரவு எடுத்துக்காட்டுகின்றது.

இந்நூலின் இரண்டாம் பதிப்பிற்கும் தமிழ் வாசகர்களின் பேராதரவை வேண்டுகின்றோம்.

'பூங்கொடி' பதிப்பகம்
சென்னை-600 004.

***வே. சுப்பையா***

## *இரண்டாம் பதிப்பின்*

# முன்னுரை

'காங்ரெஸ் வினா - விடை மூலமும் ஆய்வும்'' 1979-ல் முதல் பதிப்பாக வெளிவந்தது. அப்பொழுது அது வரலாற்றாய்வாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது. காங்ரெஸ் இயக்க வரலாற்றாய்வாளர்கள் மட்டுமல்லாமல், அரசியல் இயக்கங்களின் வலாற்றாய் வாளர்களாலும் வரவேற்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழில் அரசியல் இலக்கியக் களஞ்சியத்திற்கு, 'காங்ரெஸ் வினா - விடை - மூலமும் ஆய்வும் குறிப் பிடத்தக்க பங்களிப்பாகவும் குறிப்பிடப்பெற்றது.

''இந்நூலின் மூலம் தமிழர் மறந்துவிட்ட ஒரு மாபெரும் தேசபக்தத் தமிழரான திரு மும்பை வீரராகவாச்சாரியாரை நினைவு படுத்தியுள்ளார், ஆசிரியர் பெ.சு.மணி'' என்று ம.பொ.சி.யின் செங் கோல் இதழின் விமர்சனத்தில் கட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தேசிய இயக்கப் பிரசாரத்திற்குத் தமிழில் வழி வகைகளை முதன் முதலில் வகுத்தளித்தது, 'காங்ரெஸ் வினா - விடை' ஆகும். வங்கத்தின் பிரபல

வரலாற்றாசிரியர்கள் பிமன் பிஹாரி மஹீம்சாரி, பக்த ஸுசாத் மஹீம்தாரும் இணைந்து எழுதிய "காங்ரெஸ் அண்ட் காங்ரெஸ் மென்" எனும் நூலில் 'காங்கிரஸ் வினா - விடை'யின் வரலாற்றுச் சிறப்பை பின்வருமாறு போற்றியுள்ளனர்.

**"தமிழ் - காங்ரெஸ் வினா - விடை "இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றிலேயே முதன் முறையாக பொது மக்களை காங்ரெசில் சேருமாறு வேண்டுகோள் விடுத்தது.... வினா - விடை தமிழில் வழங்கப்பட்டதால் மக்களிடையே** முன்னுதாரணம் கூற முடியாத அளவில் பெரும் ஊக்கம் பிறந்தது. காங்ரெஸ் வினா - விடையில் 1887-லேயே காங்கிரசை எவ்வாறு வலிமை பெறச் செய்யவேண்டும் என்பதும் கூறப்பெற்றுள்ளது. சான்றுக்கு பின்வருவது ஒன்று.

**வினா** - அப்படியிருக்க ஏன் அந்தக் காங்கிரஸ் சபையை நமது தேசத்தார் பலப்படுத்தக்கூடாது?

**விடை** - அவசியம் பலப்படுத்த வேண்டியதே. இத்தேசத்திலுள்ள அனைவரும் அக்கறையாய் 'பலப்படுத்தவேண்டும். பலப்படுத்த வேணும் என்று வாயால் சொல்லித் திரிந்தாலென்னாகும்? எல்லோரும் அங்கம் வைத்து தங்கள் வேலை யாகவே பாவித்து விடாமுயற்சி செய்து அச் சபையாரின் கருத்தை இத்தேசத்து மகா ஜனங் களுக்கு அறிவித்துக் கொண்டேயிருக்க வேண் டும். ஆங்காங்கு விடாமல் இவ்விஷயமாய்

புரட்சிகள் நமது தேசத்தார் செய்து கொண்டு வரவேணும். இப்படியெல்லாம் செய்து அச் சபையின் நோக்கத்தை நமது தேசத்தார் அறிவித்து வருவார்களேயானால் அவர்களை கடைசியில் அச்சபைக்கு வாக்கு வலிமையதிக்கப் படும்.''

காங்கிரசின் பிரசார முறை எப்படி அமைய வேண்டும் என்பதைக் காங்கிரஸ் தோன்றிய மூன்றாம் ஆண்டிலேயே காங்கிரஸ் வினா-விடை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

*''கிறிஸ்துவ மதத்தைப் பரவ தக்க ஆங்கிலேய நாட்டார் எங்கும் அமைப்புவது போல் காங்கிரஸ் கமிட்டியார் சில காங்கிரஸ் பாதிரி களைக் கிராமங்கள் தோறும் அனுப்ப வேண்டும். அப்போதுதான் ஜனங்களுக்கு இராஜரீக விஷயங் களில் தியான முண்டாகும். அதுவுமன்றி - ஆங்காங்கே குளிர் கமிட்டி மெம்பர்கள் இந்த காங்கிரஸ் விஷயமாய் அப்போதைக்கப்போது மகா ஜனங்களுக்கு சுதேச பாஷைகளில் அறிவித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.*

காங்கிரசிற்கு நிதி திரட்டல் எவ்வளவு அவசியம் என்பதையும் 'காங்கிரஸ் - வினா - விடை'யில் கீழ் வருமாறு விளக்கியுள்ளது.

**வினா** - எல்லாம் சரிதான். இவ்வேலைகளையெல்லாம் செய்துவரப் பணம் வேண்டாமா?

விடை - பணமில்லாதவன் பிணமல்லவா? பணமில்லாதவன் எவ்வேலைதான் செய்ய முடியும். இப்படிப்பட்ட சன்மார்க்க விஷயங்களுக்கு உதவாத பணம் என்னத்துக்கு ஐயா? நமது தேசத்தாருக்கு இவ் விஷயத்தில் சிரத்தையும் அபிமானமும் உண்டாகு மேயாகிப் பணத்தைச் சேர்ப்பதுதான் கஷ்டம்? இத்தேசத்திலுள்ள எல்லா ஆண் பெண்களும் பொது விஷயத்துக்காக வென்று கொஞ்சம் கொஞ்சம் பணம் கொடுப்பாராகில் சுவர்ணக் குவியல் சேரக் கேட்பானேன்? இப்போது இத்தேசத்திலுள்ள தேவாலயங்களுக்கும், மடங்களுக்கும் பணம் சேரவில்லையா? எத்தனைபேர் ஆயிரமாயிரமாகப் பணத்தைத் தேவாலய விஷயங்களுக்காகக் கொடுத்து வரவில்லையா? மனத்தில் சுகம் பெறவேணுமென்று பணம் செலவு செய்வதுபோல் இகத்திலும் க்ஷேமமடைய பணம் செலவு செய்வது அவசியமல்லவா? இகத்தில் க்ஷேமமாய் இருந்தால்தான் மனத்திலும் சுகிர்தம் பெறலாம். எத்தனையோ சுதேசிகள் பணத்தைக் கோயில்களுக்கும் குளங்களுக்கும், சத்திரங்களுக்கும் எழுதிவைத்து விடுகிறார்கள். அம்மாதிரியாகவே இனி நமது தேசத்தார் பொது விஷயங்களுக்காகவும் பணத்தைக் கொடுத்துவர வேண்டும், பொது விஷயங்களில் சிரத்தையுள்ள ஒவ்வொரு சுதேசியும், மாதம் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம் கொடுத்தால் எவ்வளவோ பணம் சேருமே.

## காங்ரெஸ் வினா - விடை முதல் ஆய்வு

நவம்பர், 1973-ல் முதல் பதிப்பாக வெளி வந்த என்னுடைய ''இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்'' எனும் நூலில் 'காங்கிரஸ் வினா - விடை'யின் முதல் ஆய்வு வெளிவந்தது. இந்நூலிற்கு சிலம்புச் செல்வர், தமிழரசுக் கழகத்தலைவர் ம.பொ.சி. எழுதிய அணிந்துரையில் இதைப்பற்றி (தேசியம் பற்றி) விரிவாக ஆராய்ந்து விளக்கம் தரும் நூல் இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை - இந்தக் குறையைப் போக்கி எனது அருமை நண்பர் திரு. பெ.சு.மணி அவர்கள் 'இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் பெயரில் இந்நூலை எழுதியுள்ளார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

494- பக்கங்களைக் கொண்ட முதல் பதிப்பில் காங்ரெஸ் வினா - விடை' பற்றிய ஆய்வு, சுருக்கமாக பன்னிரெண்டு பக்கங்களில் வெளிவந்தது. அணிந்துரை வழங்கிய ம.பொ.சி. அப்பொழுது காங்கிரஸ் வினா - விடை அத்யாயத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இதற்கு ஒரு காரணமுண்டு. நூலை வெளியிட்ட 'பூங்கொடி' பதிப்பகத்திற்கு நூலகம் ஒன்றிற்கு நூல்களை உடனடியாக அனுப்பவேண்டிய அவசியத் தேவை ஏற்பட்டது. நானும் எனதருமை நண்பர் ம.பொ.சி.யின் செங்கோல் இதழ் மாமன்னர் வே. கணபதியும், ம.பொ.சி. ஐயா விடம் அணிந்துரை எழுதி உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அவர் என்னப்பா இவ்வளவு பெரிய நூலைக் கொடுத்து உடனடியாக அணிந்துரை எழுதச் சொல்கிறாயே' என்று

சற்றுத் தயங்கினார். ஆயினும் சந்தித்த நாளிற்கு அடுத்த நாளிலேயே அணிந்துரையை அளித்துவிட்டார். இதனால் காங்கிரஸ் வினா - விடை' அவருடைய கவனத்தைக் கவராது போயிற்று.

1978-ல் வெளி வந்த இரண்டாவது பதிப்பு 650 பக்கங்களைக் கொண்டது. காங்ரெஸ் வினா - விடை பற்றிய ஆய்வு சற்று விரிவு பெற்று நாற்பது பக்கங்களில் வெளிவந்தது.

1979-ல் 'காஙரெஸ் வினா - விடை மூலமும் ஆய்வும் முழுமையாக நண்பர் வே. சுப்பையாவின் பூங்கொடி பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது. முதல் பதிப்பில் காணப்பெறாத 'காங்ரெஸ் வினா - விடை' பற்றிய ம.பொ.சி.யின் கருத்து இந்தப்பதிப்பில் அழுத்தமாகக் கூறப்பெற்றது.

'இந்த நூலுக்கு அணிந்துரை தருவதை தமிழ்ப் பணியோடு கலந்த தேசியப் பணியாகக் கருதி மகிழ்ச்சியடைகிறேன்'' என்று குறிப்பிட்டதுடன் தகவல் நூல்களைத் தமிழில் பெருக்கும் இந்நூலாசிரியரின் தமிழ்ப்பணி பெரிதும் பயன்படுவதாக இருக்கிறது'' என்றும் பாராட்டினார்.

1982-ல் வெளி வந்த ''விடுதலைப் போரில் தமிழகம் - முதல் தொகுதி'' டாக்டர் ம.பொ.சிவஞானம் காங்ரெஸ் வினா - விடை வெளியீட்டில் இருந்து பல குறிப்புகளை எடுத்தாண்டுள்ளார்.

1985-ல் காங்ரெஸ் நூற்றாண்டு மலரில் ''தேசியம் வளர்த்த தமிழ் அரசியல் எழுத்துத்துறை'' எனும்

கட்டுரை எழுதியுள்ளேன். இக்கட்டுரையில் 'காங்ரெஸ் வினா விடை'யைப் பற்றிச் சுருக்கமாக எழுதியுள்ளேன். மலரில் வெளிவந்த என்னுடைய முப்பத்திரண்டு கட்டுரைகளில் ஒன்று 'முற்கூறியக் கட்டுரை.

மலர்க் குழுந் தலைவர் அன்பர் திண்டிவனம் க. இராமமூர்த்தி 'மலர் அறிமுகம்' கட்டுரையில் எழுதிய தாவது. ''இம்மலர் தயாரிப்புத் துவங்கிய நாள் முதல் நல்ல வரலாற்று நூலாசிரியராக விளங்கும் ஆற்றல் பெற்ற நண்பர் திரு. பெ.சு. மணி இடைவிடாது தகவல்களை சேகரித்து பல கட்டுரைகளைத் தொகுத்து அளித்தும், பல கட்டுரைகளை அவரே எழுதியுடன் மலரை முழுமையாக்க உதவியிருக்கிறார்.

இந்த இரண்டாவது பதிப்பில் ''தமிழ் நாட்டின் புதிய விழிப்பின் ஆதிகர்த்தாக்களுள் ஒருவர் என்ற மகாகவி சுப்பிர மணிய பாரதியாரால் பாராட்டப் பெற்ற தேசபக்த செம்மல் ஸ்ரீ சுப்பிரமணிய ஜெயரின் ''சுய அரசாட்சி வினா - விடை'' (1883) முழுவதையும் பிற் சேர்க்கையில் இணைத்துள்ளேன். இந்த இணைப்பு காங்ரெஸ் வினா - விடை ஆய்விற்கு உதவ வல்லது.

இத்துடன் மேலும் இணைக்கப்பெற்றுள்ள கட்டுரைகள், கவிதை யாவும் இரண்டாம் பதிப்பின் விரிவாக்கத்திற்குரிய சான்றுகளாகும்.

நூல் வெளியீட்டு விழா பற்றிய பிற்சேர்க்கை காங்ரெஸ் அறிஞர்கள் பங்கேற்பைப் பற்றிய பதிவாகும்.

இந்நூலை 2013-ல் (முதல் பதிப்பு 1979) வெளி யிட்டுள்ள சகோதரர் வே. சுப்பையா, ம.பொ.சி.யால்

பாராட்டப் பெற்ற பதிப்பாளர், ம.பொ.சி.யின் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்து வருபவர். என்னுடைய நூல் இருபதிற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டவர். தொடர்ந்தும் வெளியிட்டு வருபவர். அவருக்கு நான் நன்றி கூறுவது எனக்கு நானே நன்றி கூறுவதற்கு ஒப்பாகும்.

ஒளி அச்சுக் கோர்ப்பு செய்த அன்பர் கேசவன் ஒத்துழைப்பில் சிறந்தவர். அவருக்கு என் நன்றி உரியது.

முதல் பதிப்பில் எழுதப் பெற்ற ''நன்றியினை''யும் இங்கு இணைத்து உவகைகொளத்தக்கது.

23/11, ராமகிருஷ்ணாபுரம், 2வது தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 003.
22-6-2013

***பெ.சு.மணி***

# அணிந்துரை

## - (முதற் பதிப்பு)

## சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

"இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபை" என்னும் பெயரானது, இந்தியப் பெருநாட்டின் வரலாற்றில் ஒரு புனிதமான இடத்தைப் பெற்று விட்டது. இந்தியாவின் விடுதலைக்குப் போராடி, அதிலே மகத்தான வெற்றி கண்ட பெருமை காங்கிரஸ் மகாசபைக்கு உண்டு. நாடு விடுதலை பெறுவதற்கு முன்பிருந்த "காங்கிரஸ் மகா சபை" வேறு; இன்றுள்ள 'காங்கிரஸ் கட்சி' வேறு. "தேசிய காங்கிரஸ் மகாசபை" என்பது, அரசியல் கட்சிகளிலே ஒன்றல்ல; தேசத்திலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஓர் அமைப் பாகும். அதனாலேயே, "தேசிய" என்னும் அடை மொழி அதன் பெயரோடு இணைந்தது.

இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மகாசபை சென்னை மாநகரத்தில் கூடியது. அதற்குள்ள தனிச் சிறப்புக்களை இந்நூலில் தொகுத்துத் தந்துள்ளார், ஆசிரியர் டாக்டர் பெ. சு. மணி.

திரு.மு. வீரராகவாச்சாரி என்பவர், "காங்கிரஸ் வினா - விடை" என்னும் பெயரில் சிறிய நூல் வடிவிலான பிரசுரம் ஒன்றை 1887-ல் வெளியிட்டார். அந்தப் பிரசுரம் பிரிட்டிஷ் ஆட்சியையே கலக்கி விட்டது. அதன் எதிரொலி இலண்டன் மாநகரில்

கேட்டது. இத்தனைக்கும் அந்தப் பிரசுரம் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கும் குறிக்கோளுடன் வெளிவந்ததல்ல; தமிழில் வெளிவந்ததால் ஆட்சி அதைக் கண்டு அஞ்சியது.

ஆங்கிலம் படித்த இந்தியர் மத்தியிலே பிரதேச மொழி எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்பட்டிருந்தது என்பதனை இந்நூலாசிரியர் சான்றுகள் காட்டி நமக்கு உணர்த்துகிறார். பிரதேச மொழிகளில் அரசியல் பிரச்சாரம் செய்வதனை பிரட்டிஷ் ஆட்சி எந்த அளவுக்கு வெறுத்தது என்பதற்கும் பல்வேறு நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் தந்திருக்கிறார். பிரிட்டிஷ் ஆட்சியைப் புகழுகின்ற பிரசுரத்தைக் கூட பிரதேச மொழியில் வெளியிடுவதை அந்நாளில் ஆங்கிலேயர் விரும்பவில்லை.

திரு. வீரராகவாச்சாரியாரின் ''காங்ரெஸ் வினா - விடை'' பிரசுரம் இந்நூலின் இறுதியில் அப்படியே தரப் பட்டிருக்கிறது. அதைத் தவிர்த்து, நூலின் முற்பகுதி ஆசிரியர் பெ.சு. மணி அவர்களின் கைவண்ணத்துடன் காங்கிரஸ் வரலாற்றைக் கூறுகின்றது.

வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுப்பதிலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தவற்றிடையே இலைமறை காயென மறைந்துள்ள தொடர்புகளை வெளிப்படுத்துவதிலும் இந்நூலாசிரியருக்குள்ள தனித் திறமையை அவர் முன்பு வெளியிட்டுள்ள நூல்களில் கண்டிருக்கின்றேன். அந்தத் திறமையை இந்த நூலிலும் காண முடிகிறது.

தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது வெறும் இலக்கிய ஆராய்ச்சியில் மட்டும் அடங்கி விடுவதல்ல. தகவல் நூல்களைப் பெருக்குவதன் மூலமும் தமிழை வளர்க்க முடியும். தமிழருடைய அறிவு வளர்ச்சிக்கும் அது தேவைப்படுகிறது. ஆங்கிலம் படித்தவர்கள்தான் அரசியல் மேதைகளாக முடியும் என்று எண்ணப் படுகிறது. தகவல் நூல்கள் தமிழில் பெருகுமானால், அந்த எண்ணத்தைப் பொய்ப்பித்துக்காட்ட முடியும். இந்நூலாசிரியரின் தமிழ்ப் பணி அதற்குப் பெரிதும் பயன்படுவதாக இருக்கிறது. அவருக்கு எனது பாராட்டு உரித்தாகுக!

இந்த நூலுக்கு அணிந்துரை தருவதை தமிழ்ப் பணியோடு கலந்த தேசியப்பணியாகக் கருதி மகிழ்ச்சியடைகிறேன். நாட்டுப்பற்றுக்கும், மொழிப் பற்றுக்கும் இணைப்பு ஏற்படுத்த இதுபோன்ற நூல்களை இன்னு மின்னும் ஆசிரியர் பெ.சு. மணி வெளியிட தமிழ் மக்கள் அவரை ஊக்குவிக்க வேண்டும்.

பூங்கொடி பதிப்பக உரிமையாளர் திரு. வே. சுப்பையா அவர்கள் நூல்களை அழகாகப் பதிப்பிப் பதில் தமது திறமையை வளர்த்துக் கொண்டே வருகிறார். அவரது திறமை இந்த நூலிலும் வெளிப் படுகிறது. அவருக்கு என் பாராட்டுதல்கள்.

# நன்றியுரை

(முதற் பதிப்பு)

''இந்திய தேசிய இயக்க வரலாற்றின் தமிழ் ஆவணங்களுள் இடம் பெறாத ஒரு குறையை நிறைவு செய்ய, வெளிவந்துள்ளதே, ''காங்ரெஸ் வினா-விடை, மூலமும் - ஆய்வும்'' என்னும் இந்நூலாகும்.

1887-இல் காங்கிரஸ் இயக்கத்தின் முதல் தமிழ் அரசியல் வெளியீடாக, தனிச் சிறப்பெய்தும் 'காங்ரெஸ் வினா-விடை' 1890-க்குள் நான்கு பதிப்புகளைக் கண்டது. கிராமங்களில் வாழும் எளிய மக்களுக்கும் அரசியல் அறிவைப் புகட்டி, பொது மக்கள் கருத்தை உருவாக்க எழுந்தது, 'காங்ரெஸ் - வினா - விடை.'

இந்நூல் மிக நீண்ட காலமாகவே கிடைக்க வில்லை. பிரிட்டனில் 'லண்டன் மியூசியம்' நூலகத் தில் இந்நூல் உள்ளது. இந்த நூலகத்தார், என் வேண்டு கோளை ஏற்று, காலதாமதமில்லாமல், குறைந்த கட்டணத்தில் நூலின் 'மைக்ரோ - பில்ம்' பதிப்பை அனுப்பி வைத்தனர், முதல் நன்றி இந்நூலகத்தாருக்கு உரியது.

'மைக்ரோ பில்மை' பிரதியெடுக்க சென்னை அமெரிக்கன் நூலகம் உதவியது. திரு.கே. வி. சீதாராமன் இவ்வகையில் எனக்கு உற்றத் துணைவராக

விளங்கினார். இவருக்கு என் நன்றியை வெளிப் படுத்துகிறேன்.

இந்நூலின் ஆய்விற்கு பயன்பட்ட நூல்களுள், Report of the Third Indian National congress 1887'' என்பது மிக முக்கியமானது. இந்த நூலை நான் பார்வையிட வாய்ப்பளித்தவர், பெரியவர் திரு. எஸ். ஆர். வெங்கடராமன் (தலைவர், இந்திய ஊழியர் சங்கம்) அவர்கள், பூனாவினால் உள்ள தமது சங்கத்தின் நூலகத்தில் இருந்து வரவழைத்தார். பூனா நூலகர் திரு. கே. சாரங்கபாணி மராட்டியர் - அவர்கள் விதி விலக்காக, நூலை, விரைவில் படித்துவிட்டுத் திருப்பிவிட வேண்டும் எனும் அடிப்படையில், அனுப்பி வைத்தார். இந்த இரு சான்றோர்களுக்கும் என் தனி நன்றி உரியது.

எனது நூல்களை வெளியிட்டு ஊக்கமளித்து வரும் அன்பர். வே. சுப்பையாவிற்கு எனது உளங் கனிந்த நன்றி உரியது. மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டு அன்புடன் ஒத்துழைத்த 'பிரபு பிரிண்டிங் ஹவுஸ்' அச்சகத்தாருக்கு பாராட்டுதலோடு நன்றி கூறுகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் இந்த நூலிற்கு அணிந் துரையை ஆர்வமுடன் வழங்கி பெருமைப்படுத்திய தற்கு என்றும் என் நன்றி உரியது.

''காங்ரெஸ் வினா-விடை'' ஒரு கட்சியின் அரசியல் வெளியீடு என்ற கருத்தில் நோக்குவதைவிட,

தேசிய அரசியலின் பாலபாடத்தை எளிய தமிழில் எடுத்தோதிய சிறந்த தமிழ் அரசியல் வெளியீடு என்ற மதிப்புடன், வாசகர்களின் வரவேற்பு இந்நூலுக்கு கிடைக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

*11, இராமகிருஷ்ணாபுரம், 2-வது தெரு,*
*மேற்கு மாம்பலம், சென்னை-33*
*28-12-1979*

***பெ.சு. மணி***

# பொருளடக்கம்


1. காங்கிரசின் தோற்றம் 21

2. முதல் காங்கிரஸ் -பம்பாய் - 1885

3. இரண்டாம் காங்கிரஸ் - கல்கத்தா - 1886

4. மூன்றாம் காங்கிரஸ் - சென்னை - 1887 74

5. காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க் குரல் 119

6. சுய அரசாட்சி - வினா - விடையும்
காங்கிரஸ் - வினா - விடையும். 135

7. ''காங்ரெஸ் -வினா- விடை'' ஓர் ஆய்வு 160

8. ''காங்ரெஸ் வினா - விடை - மூலம் 172

பிற்சேர்க்கை-1

1. முதற் பதிப்பு வெளியீட்டு
விழா அழைப்பிதழ் 268

2. திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின்
அறுபதாம் ஆண்டு நிறைவு விழா
வாழ்த்துப்பா - 1915 விருதை
சிவஞான யோகி 272

3. பாரதியார் மொழிபெயர்த்து தொகுத்த
'பாரத ஜன சபையின் சரித்திரம்'
- கட்டுரை - பெ.சு.மணி 305

4. ஸ்ரீ.மு. வீரராகவாச்சாரியார் (1851-1906)
வாழ்க்கைக் குறிப்பு 290

5. சுய அரசாட்சி
- வினா -விடை (முழுவதும்) 305

# காங்கிரசின் தோற்றம்

'காங்ரெஸ் வினா - விடை' என்னும் காங்கிரஸ் மகாசபையின் முதல் தமிழ் அரசியல் வெளியீட்டைப் பற்றி ஆய்வு செய்வதற்கு முன்பு காங்கிரசின் தோற்றம், முதல் மூன்று காங்கிரஸ் மகாசபைகளின் நடவடிக்கை களைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும்.

'காங்கிரஸ்' என்று குறிப்பிடும்பொழுது 1885-ல் பம்பாயில் முதன் முறையாக இந்தியாவின் பல பாகங்களில் இருந்து எழுபத்திரண்டு பட்டதாரிகள் கூடி அமைத்த 'இந்திய தேசிய காங்கிரஸை' (Indian National Congress) குறிக்கிறது.

'காங்கிரஸ்' என்ற சொல், பம்பாய் அமைப்பாளர் களின் மறு சிந்தனையிலேதான் தோன்றியது. முதலில் 'இந்திய தேசிய யூனியன்' என்ற பெயரைத்தான் வைத்தார்கள். கல்கத்தா 'இந்தியன் அசோசியேஷன்', தேச பக்தர் சுரேந்திரநாத்பானர்ஜியின் தலைமையில் 'நேஷனல் காங்கிரஸ்' என்ற பெயரில் 1883 முதலேயே மாநாடுகளை 25, 26, 27 தேதிகளில் கல்கத்தாவில் இந்தியன் அசோசியேஷன் 'வருடாந்திர நேஷனல் காங்கிரஸ்' மாநாட்டை நடத்த உத்தேசித்தது. இந்தச் சமயத்தில்தான் பம்பாய் அமைப்பாளர்கள் 'யூனியன்'

என்ற சொல்லுக்குப் பதிலாக, 'காங்கிரஸ்' என்ற சொல்லை எடுத்துக் கொண்டார்கள்.

கல்கத்தாவில் நடைபெற்ற மாநாட்டை, ''கல்கத்தாவில் அண்மையில் நடைபெற்ற மாநில மாநாடு'' என்று பம்பாய் காங்கிரசின் உத்தியோக பூர்வமான அறிக்கை வருணித்தது.

கல்கத்தா இந்தியன் அசோசியேசனும், சுரேந்திரநாத் பானர்ஜியும் எடுத்த தேசிய காங்கிரஸ் முயற்சிகளை மிக்கத் தந்திரமாகப் பின்னுக்குத் தள்ளி, பம்பாய் முயற்சிதான் முதலாவது என்ற பெயரை எடுத்துக் கொண்டனர் என்ற குற்றச் சாட்டும் கூறப்பட்டது.

காங்கிரஸ் மகாசபையின் தோற்றம் பற்றிய அந்த அமைப்பின் ஆதாரப்பூர்வமான அறிக்கையில் காங்கிரஸின் தோற்றம் குறித்து தெளிவான குறிப்பு இல்லை.

## *பாரதியார் தொகுத்த ''பாரதஜன சபை - காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்''*

மகாகவி சுப்பிரமணியபாரதியார் காங்கிரசின் உத்தியோக பூர்வமான அறிக்கையை மொழிபெயர்த்து தொகுத்து எழுதிய நூல், இது. தமிழில் இரு பாகங்களாக வெளி வந்துள்ளது. 'சுதேச மித்திரன்' சார்பில் நவம்பர் 1918-ல் முதற் பதிப்பு வெளிவந்தது, விலை ரூ.1.00, பக்கங்கள் 188.

காங்கிரஸ் மகா சபையைப் பற்றிய விரிவான வரலாற்றைத் தொகுத்து தேசியக் கவிஞர் பாரதியார் எழுதியுள்ளார் என்ற செய்தியின் முக்கியத்துவத்தை

அறிய வேண்டும் என்பதற்காகவே இந்நூலைப் பற்றிக் குறிப்பிடுகிறோம்.

நூலின் முகவுரையில் பாரதியார் பின்வருமாறு பாராட்டப் பெற்றுள்ளார்.

''காங்கிரஸ் மகா சபையின் சரித்திரத்தை நம் தாய் மொழியாம் இனிய தமிழ் மொழியில் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைப்பது எளிதான காரியமல்ல. ஆயினும் அக்காரியத்தைக் கூடிய வரையில் குற்றங் குறைகளின்றி நிறைவேற்றுவிப்பது நமது கடமையென்றே கருதினோம். அவ்விதமே நிச்சயித்து அதனைத் தொடங்கும் தறுவாய் பாரத மாதாவின் அருளினால் ஸ்ரீமான் சுப்பிரமணியபாரதியின் அருமையான புலமையும், ஆழ்ந்த அறிவும் இக்காலத்திற்கு உற்ற துணையாக அடையப் பெற்றோம். ஆகவே இந்நூலை இயற்றும் பொறுப்பை அவர் மேற்கொண்ட பின்னர் பிரசுரிக்கும் கடமை மட்டில் நமக்கேற்பட்டது. இச்சமயம் பாரத ஜன சபை சரித்திரத்தின் முதற் பகுதியை பிரசுரிக்கலானோம்.''

காங்கிரசை, பாரத ஜன சபை என்று குறுப்பிட்டதின் நுட்பம் உணரத்தக்கது. இந்த நூலின் பின்வரும் பகுதியை இனி பார்ப்போம்.

''காங்கிரஸ் சபையின் உத்தியோகஸ்தருடைய அறிக்கையில் இந்தச் சபையின் உற்பத்தி தெளிவாகக் கூறப்படவில்லை. '1885-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்திலே, அவ்வருஷத்துக் கிரிஸ்மஸ் பண்டிகையின் போது பாரத தேசத்தின் எல்லாப் பாகங்களிலும்

பிரதிநிதிகள் ஒன்றுகூடி சபைகூட்ட வேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது, என்று மாத்திரம் ''உத்தியோக அறிக்கை''யில் உற்பத்தி கூறப்படுகின்றது. எவராலே நிச்சயிக்கப்பட்டது? எந்த ஊரிலே? என்ற விஷயங் களைப் பற்றி ''உத்தியோக அறிக்கை'' அதாவது மேற்படி சபையின் கார்யஸ்தர்களாலே பிரசுரம் செய்யப் பட்ட அறிக்கையில் யாதொரு தகவலும் கிடைக்க வில்லை.''

அகில இந்திய அடிப்படையில் ஒரு தேசிய இயக்கமாக காங்கிரஸ் தோன்றியதற்கு வலுவான வரலாற்றுப் பின்னணி உண்டு.

கல்கத்தாவில் 'பிரிட்டிஷ் இந்தியன் அசோசி யேஷன்' (1851), 'இந்தியன் அசோசியேஷன்' (1876), பம்பாய் மாநிலத்தில் 'பம்பாய் இந்தியன் அசோ சியேஷன்' (1876), 'பூனா சர்வ ஜனிக் சபை' (1872), சென்னை மாநிலத்தில் 'மெட்ராஸ் நேடிவ் அசோசி யேஷன்' (1852), 'சென்னை மகாஜன சபை (1884), முதலான மாநில அரசியல் அமைப்புகள், காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்னமேயே அரசியல் கிளர்ச்சிகளில் நாட்டு மக்களைத் திரட்டவும், ஒன்றுபட்ட தேசிய உணர்ச்சியை வளர்க்கவும் பாடுபட்டுள்ளன.

எனவே, இந்த மாநில அரசியல் அமைப்புகளை, காங்கிரசுக்கு முந்திய தேசிய இயக்கங்களாக குறிப்பிட வேண்டும். காங்கிரஸ் மகாசபையின் கூட்டங்களுக்கு இந்த மாநில அரசியல் அமைப்புகள் ஏற்பாடுகள் செய்து வந்துள்ளன. இந்த மாநில அமைப்புகளின் தலைவர்கள்

பல்வேறு சந்தர்ப்பங்களில் முக்கிய பொது நிகழ்ச்சி களில் ஒன்று கூடி உரையாடிய சமயங்களில் நாடு முழுவதற்குமான ஒரு பொது அமைப்பின் தேவைபற்றி தங்களுக்குள் விவாதித்துள்ளனர்.

இவ்வாறு மாநிலத் தலைவர்கள் சந்திப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்த முக்கிய நிகழ்ச்சிகளாகக் குறிப்பிடப்படுவன பின்வரும் நான்காகும். 1877-ல் டெல்லியில் அரசு சார்பில் நடைபெற்ற ''தர்பார்'', 1883 -ல் கல்கத்தாவில் நடைபெற்ற அகில உலகப் பொருட் கண்காட்சியை ஒட்டிக்கூடிய 'இந்தியன் நேஷனல் காங்கிரஸ் கான்பரன்ஸ்', 1884-ல் பம்பாயில் இந்தியர்களின் அன்பைப் பெற்ற வைஸ்ராய் ரிப்பன் பிரபுவிற்கு அளிக்கப்பெற்ற வழியனுப்புவிழா, சென்னையில் 1884-ல் நடைபெற்ற தியோசாபிகல் சொஸைடியின் மாநாடு.

இவைகளேயல்லாமல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நலன்களைக் காக்கவும், நாட்டில் ஆங்காங்கே உருவாகி வந்த எதிர்ப்புகளும், எழுச்சிகளும் 'படித்தோரின் அதிருப்தி' யோடு ஒன்று சேர்ந்துவிடாமல் தடுக்கவும் ''பிரிட்டிஷ் விசுவாசிகளால்'' ஒரு திட்டம் உருவாக்கப் பட்டது. இதற்கு அக்காலத்திய கவர்னர் ஜெனரல் டப்ரின் பிரபுவின் ஆலோசனையும் துணை நின்ற தெனவும் கூறுவர்.

இந்திய 'வைரஸ்ராய்' ரிப்பின் பிரபு 1883 ஜுலை 10-இல் கிங்ஸ்லி பிரபுவிற்கு, எழுதியக் கடிதத்தில்

ஆங்கிலம் படித்த 'புதிய வகுப்பார் ''எவ்வாறு பயன்படுவர் என்பதைக் குறித்து பின்வருமாறு கூறி யுள்ளார்.'' புதிய வகுப்பை ''பிரிட்டிஷ் இந்தியாவில் அரசியல் யதார்த்தமாக ஒப்புக் கொள்வது நல்லதாகும். மக்களின் எண்ணங்களை விருப்பங்களை புதிய வகுப்பினர் தலைமையேற்று வெளிப்படுத்துவதற்கு துணைபுரியும்''
(P 12, New India -1855 - Briton martin-JR California university - 1969

இந்தத் திட்டத்தினால் ஆங்கிலக் கல்வி கற்றவர்கள், சமுதாயத்தை வழி நடத்தமுற்பட்டு ஆங்காங்கு கம்பெனியாதிக்கக் கொடுமையாலும், சுரண்டலி னாலும் கிளர்ந்தெழும் கிளர்ச்சிகளுக்கு தலைமை யேற்க விடாமல் தடுக்க அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட வரையில் மிதமான கோரிக்கைகளை வைத்து, உத்தியோக நலன்களை முன்னிறுத்தி, ஆங்கிலம் கற்றோரின் கூடாரமாக ஓர் அமைப்பை உருவாக்க வேண்டிய தேவையேற்பட்டது.

ஹ்யூமின் முயற்சியால் 1885-ல் பம்பாயில் 'இந்திய தேசிய காங்கிரஸ்' அமைக்கப்பட்டது. அந்தக் காலச் சூழ்நிலையில் இந்தியர்களின் நலன்களுக்காக இந்தி யரல்லாதார் ஒருவரால் ஓர் அரசியல் இயக்கம் உருவாக் கப்பட்டது விந்தையானாலும், வரலாற்று உண்மை யாகும். காங்கிரசின் மிதவாதத் தலைவர் களுள் ஒருவரான கோபால கிருஷ்ண கோகலே, காங்கிரஸை ஹ்யூம் போன் றோர்தான் அமைத்திருக்க முடியும் எனும் கருத்தை 1913-ல் லண்டன் பேச்சொன்றில் வெளியிட்டார்.

கோகலேயின் கருத்தை மறுத்து லாலா லஜபதிராய் 1916-ல் எழுதியதாவது.

''இந்தியர் எவரும் காங்கிரஸ் மகாசபையை ஸ்தாபித்திருக்க முடியாது'' என்றும், ''அக்காலத்தில் அரசியல் கிளர்ச்சி என்றாலே அதிகாரிகளுக்கு மிகுந்த அவநம்பிக்கை இருந்தது. ஆதலின் காங்கிரஸை ஸ்தாபித்தவர் ஒரு பிரபல ஆங்கிலேயராகவும், புகழ் பெற்ற மாஜி உத்தியோகஸ்தராகவும் இருந்திராவிடின், அதிகாரிகள் ஏதேனும் ஒரு வழியில் அவ்வியக்கத்தை ஒடுக்கியிருப்பார்கள்'' என்றும் ஸ்ரீகோகலே கூறி யிருப்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

முதலாவதாக, காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டபோது தான் அரசியல் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டதென்று கூறுவது தவறாகும். அதற்கு முன்பிருந்தே அரசியல் கிளர்ச்சி நடந்துதான் வந்தது. அதை ஒடுக்குவதற்குக் கையாண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இரண்டாவதாக, அக்காலத்தில்தான் அரசியல் கிளர்ச்சியில் அவநம்பிக்கை அதிகம் என்பது சரியன்று. பிற்காலத்திலும் இந்நாளிலுங்கூட அந்த அவநம்பிக்கை குறைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. மேலும் இந்தியர் எவரும், பல இந்தியர் தங்கள் கூட்டு முயற்சியினாலுங் கூடக் காங்கிரஸ் இயக்கத்தை ஆரம்பித்திருக்க முடியாதென்பது உண்மையானால், அதனால் நிரூபிக்கப்படுவதென்ன? அவ்வியக்கம் உரிய காலத்திற்கு முன்பே தொடங்கப்பட்டதென்பதும், தவறான அஸ்திவாரத்தின் மீது அமைக்கப் பட்ட தென்பதுமேயாகும்.''*

* (யுவ பாரதம் - தமிழாக்கம், கல்கி. பக். 166 - 167)

லஜபதிராய், ஹ்யூமின் தொண்டுகளைப் பாராட்டி யுள்ளார். ஹ்யூமைப் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் எப்படியிருப்பினும், காங்கிரசிற்கு உடல், பொருள், ஆவி மூன்றையும் உவந்தளித்தவர், ஹ்யூம் எனும் கருத்து அக்காலத்தில் ஏற்றிப் போற்றப்பட்டது. தொடர்ந்து இருபது வருடங்களாக காங்கிரஸின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய பெருமை, ஹ்யூமிற்கு உரிமை.

'காங்கிரசின் தந்தை' என்று காங்கிரஸ் மாநாட்டுத் தலைவர்களாலேயே பாராட்டுப் பெற்றவர், ஹ்யூம் 'இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (1973) எனும் இந்நூலாசிரியரின் நூலில் காங்கிரசில் 'ஹ்யூம் ஆற்றிய அரிய பணிகள் விளக்கப்பட்டுள்ளன.

இனி, 1885-ல் பம்பாயில் நடைபெற்ற முதல் காங்கிரஸ் மகாசபையின் நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வோம்.

## *முதல் காங்கிரஸ் (பம்பாய் - 1885)*

1885 மார்ச் மாதம் ஹ்யூம் அனுப்பிவைத்த சுற்றுக் கடிதத்தில், முதல் காங்கிரஸ் பூனா நகரத்தில் நடைபெற விருக்கிறது எனக் குறிப்பிடப்பட்டது. மாநாடு நடைபெறப்போகும் சமயத்தில் பூனாவில் 'பிளேக்' நோய் பரவியதால் பம்பாய் நகரத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

1885-ம் வருடம் டிசம்பர் மாதம் 28, 29 தேதிகளில் 'பம்பாய் அசோசியேஷன்' ஆதரவில் பம்பாய் நகரத்தில்

கோகுல்தாஸ் தாஜ்பால் சம்ஸ்கிருத கல்லூரியில் முதல் காங்கிரஸ் நடைபெற்றது.

வங்காளத்தைச் சேர்ந்த புகழார்ந்த வழக்கறிஞர் உமேஷ் சந்திர பானர்ஜி (1844 - 1906) தலைமை ஏற்றார். இவர் தலைமையேற்க முன்மொழிந்தவர் ஹ்யூம், வழி மொழிந்தவர்கள் சென்னை நீதிபதி எஸ். சுப்பிரமண்ய ஐயர், கே.டி. திலங்.

மாநாட்டிற்கு வந்த பிரதிநிதிகளின் விவரங்கள் வருமாறு.

| மாநிலம் | பிரதிநிதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சென்னை | 21 |
| பம்பாய் - சிந்து | 38 |
| பஞ்சாப் | 3 |
| வடமேற்கு மாகாணம் - ஔத் | |
| மத்திய மாகாணம் - பீரார் | 7 |
| அஸ்ஸாம் | 3 |

முதல் காங்கிரஸிற்கு செலவான தொகை ரூ. 3000.00

ஆங்கிலம் அறிந்தவர்களே மாநாட்டிற்கு அழைக்கப் பட்டிருந்தனர். பம்பாய் மாநாட்டில் கலந்துகொண்ட அந்நாளைய தமிழகத்தின் பிரபல பத்திரிகையாசிரியர் சே. ப. நரசிம்மலு நாயுடு அவர்கள் (1854-1922) தமது 'திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்' என்னும் நூலில் மொழி பிரச்னைக்கும் வழிகாணப்பட்டதைக் குறிப்பிட் டுள்ளார்.

''எங்களுக்கு குஜராத்தி, மராட்டி, இந்துஸ்தானி முதலான அத்தேசத்துப் பாஷைகள் அடியோடு தெரியாதென்று கண்டு, அத்தேசத்து அந்த பாஷைகள் தெரிந்த பி.ஏ. முதலான பரீக்ஷைகளைக் கொடுத்த கல்வி மான்களை எங்களுக்குத் துபாசிகளாக நியமித் திருந்தார்கள்.''

இந்நூலை காங்கிரஸ் மகாசபையின் ஆர்வலர்களுக்குக் காணிக்கையாக்கி நரசிம்மலு நாயுடு பின்வருமாறு ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். "To the well wishers of the Indian National (Social. Political and Religious) elung amidst Congress to which my heart soul many difficulties and trails the following pages are dedicated out of pure affection and devoted loyalty )

பம்பாய் காங்கிரஸின் தொடக்கத்தைப் பற்றி பாரதியார் பார்வை பின்வருவது.

*''டிஸம்பர் 28-ந் தேதியன்று முதற் கூட்டம் கூடிற்று. வெற்றி, பாரத ஜாதி பேசத் தொடங் கிற்று. அப்பேச்சின் முதல் உச்சாரணங்கள் அன்னிய பாஷையிலே செய்யப்பட்டன. விதியின் ரஹஸ்யங்களை உணர்தல் மிகவும் அரியதன்றோ'' ('பாரத ஜன சபையின் சரித்திரம்' - பாகம் 1 - 1918, ப. 4.)*

''விதியின் ரஹஸ்யங்கள்'' எனும் குறிப்பும், ''அன்னிய பாஷை'' எனும் குறிப்பும் சிந்தனைக் குரியன. பாரதியின் பார்வையே தனிச் சிறப்புள்ளது தானே. 'உலக சரித்திரக் காட்சிகள்' எனும் நூலில்

நேருஜி கூறியுள்ள கருத்தும் இங்கு பொருந்தக் கூடியது. ''முக்கியமாக ஆங்கிலம் படித்த வகுப்பாரின் கட்சியை எடுத்துக் கூறும் கருவியாகவே அது இருந்தது.''

*தலைமையுரை*

முதல் காங்கிரசின் தலைவர் உமேஷ் சந்திர பானர்ஜி தமது தலைமையுரையில் காங்கிரசின் சிறப்பம்சங்களையும், கொள்கைகளையும் குறிப்பிட்டார். இதன் சுருக்கம் வருமாறு,

'நவீன காலத்தில் பாரததேச சரித்திரத்தில் முதன் முறை கூடும் இந்த ஜன சபையின் நாயகம் எனக்குக் கிடைத்தது. என் ஜன்மத்தில் ஒரு பெரிய கௌரவமென்று மதிக்கின்றேன்... சென்னை, சேலம், கோயமுத்தூர் முதலாக சென்னை மாகாணத்தில் பெரும்பாலும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள்... ''இந்தியன் மிர்ரர்'', ''ஹிந்து'', ''இந்தியன் ஸ்பெக்டேடர்'', ''ட்ரிப்யூன்'' முதலிய பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் வந்து கூடியிருப்பதைப் பார்க்கும்போது, மிகப் பெரிதும், எந்நாளும் நிலைத்திருக்கத் தக்கதுமாகிய இந்த சபை இந்த விசாலமான தேச முழுவதிலும் தோன்றியுள்ள பொது உணர்ச்சியிலே விளைந்த கனிதான் என்பது ஸ்பஷ்டமாக ருஜுப்படுகிறது.

பாரத பூமியில் நமக்குத் தெரிந்த சரித்திரத்தின் கால அளவுக்குள்ளே இதுபோல் முக்கியமும் பொறுமையும் உள்ள சபை எப்போதுமே கூடியதில்லையென்பது நிச்சயம். இந்த சபை பாரத தேசத்துக்கும்

பரிபூர்ணமான பிரதிநிதி. இங்கிலாந்தில் "காமன்ஸ் சபை" (பார்லிமெண்ட்) மெம்பர்கள் வாக்காளர்களால் சீட்டுப் போட்டுத் தெரிந்தெடுக்கப் படுவது போல், நம்மை ஜனங்கள் அனுப்பவில்லை யென்பது மெய்தான். ஆனால் உள்ளத்தின் உணர்ச்சிகளும், விருப்பங்களும், அவசரங்களும் ஒரே மாதிரி இருப்பது கொண்டு ஒருவன் பிறருக்காகப் பரிந்து பேச உரிமையுடையோன் ஆவான் என்பது மெய்யானால், நாம் பாரத மஹா ஜனங்களுக்கு நியாயமான வக்கீல்களென்பதிலே சந்தேகமில்லை. நம்மை நாமே நியமித்துக் கொண்டு வந்தோமென்று சொல்லிச் சி..ர் ஆட்சேபிக்கலாம். அது சரியில்லை, ஏனென்றால், இந்த சபை நடக்கப் போவதாக இந்தியாவின் எல்லா மாகாணங்களிலும் வருஷ முழுமையும் செய்தி பரவி வந்தது. எல்லா இடங்களிலும் இச் செய்தி ஜனங்களுக்கு மிக்க மகிழ்ச்சி விளைவித்து, நம்மை விதிப்படி சீட்டுப் போட்டெடுக்கா விட்டாலும், பொதுச் சபைகள் நம்மை அனுப்பியிருப்பதனால் நாம் நேரான பிரநிதிகள்."

காங்கிரசின் நோக்கங்களைப் பற்றி தலைவர் தொடர்ந்து கூறியதாவது.

1. நமது தேசத்தின் நன்மைக்காக பிரிட்டிஷ் ராஜ்யத்தின் வெவ்வேறு பகுதிகளில் பாடுபடுவோர் எல்லாரும் ஒருவருக்கொருவர் சந்தித்துப் பழகி அந்யோன்யம் மிகுதியாகும்படி செய்தல்.

2. தேச பக்தர்களுக்குள்ளே ஜாதி, மத, மாகாண பேதங்களால் ஏற்படக் கூடிய அஸூயைகளை யெல்லாம் நேரான சிநேஹப் பழக்கத்தால் மாற்றி.

நமக்கு மிகவும் அன்பரான லார்ட் ரிப்பன் அதிகாரத்தின்போது நம்முள்ளே தோன்றிய தேசிய ஒற்றுமை உணர்ச்சிகளை ஒருங்கு கூட்டி மேன் மேலும் வரையச் செய்தல்.

3. இந்தியாவில் கல்வி கற்ற கூட்டத்தார் நமது முக்கியமான ஜன ஸமூஹ விவகாரங்களில் எவ்விதமான தீர்மானங்கள் உடையோர் என்பதை அறிந்து பதிவு செய்தல்.

4. பொது ஜன அனுகூலங்களைக் கருதி நமது ராஜ தந்திரிகள் இனி வரும் பன்னிரண்டு மாதங்களிலும் செய்யத் தகுந்த காரியங்களையும், செய்யும் நெறிகளையும் தீர்மானம் செய்தல்.''

*தேசபக்த மெய்ஞானி சுவாமி விவேகானந்தர் பார்வையில் -*

சுவாமி விவேகானந்தர் 1896-ஆம் ஆண்டில் இலண்டனில் 'இந்தியா லண்டன்' எனும் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்று இங்கு நினைவு கூரத் தக்கது.

நிருபர் - இந்திய தேசியக் காங்கிரஸைப் பற்றித் தாங்கள் கவனம் செலுத்தியதுண்டா?

**சுவாமிஜி** - மிகுதியாக கவனம் செலுத்தியதாக நான் உரிமை பாராட்ட இயலாது. எனது பணியோ வேறு துறையைச் சேர்ந்தது. ஆனால் அந்த இயக்கம் மிகவும் முக்கியமானதுதான். அதன் வெற்றிக்காக உள்ளம் உவந்து ஆசி கூறுகின்றேன். இந்தியாவின் பல இனத்தாரிடையே ஒரு நாடு உருவாகின்றது.

முதல் காங்கிரஸின் முதல் சாதனையே சுவாமி விவேகானந்தர் சுட்டிக் காட்டியது போல "இந்தியாவின் பல இனத்தாரிடையே ஒரு நாடு உருவாகின்றது" எனும் முயற்சியின் முழுமையை நோக்கியப் பயணம் தான். இதைத்தான் உமேஷ் சந்திர பானர்ஜி தமது தலைமை யுரையில் எடுத்துக் கூறினார்.

## *ஜி. சுப்பிரமணிய ஐயர் (1855-1916)*

முதல் காங்கிரசில் முதல் தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய பெருமை தமிழ் நாட்டு தேசபக்தர் திலகம் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயருக்குக் கிடைத்தது. முப்பது வயதேயுள்ள இவருக்கு இந்த முதல் பெருமை அளிக்கப்பட்டதைக் கண்டு வியப்பெய்தியவரும் உண்டு. 'ஹிந்து' பத்திரிகை மூலம் 1878 முதல் பத்திரிகைத் துறையின் மூலவராக விளங்கி தேசிய நலன்களை ஆதரித்து, கிளர்ச்சியுற எழுதி வந்த திரு. ஜி. சுப்பிரமண்ய ஐயரின் ஆற்றலை அறிந்து வைத் திருந்தவர் ஹ்யூம். காங்கிரஸ் அமைப்பு ஏற்படுவதற்கு முன்பே ஹ்யூம், தேசபக்தர் திரு. ஜி. சுப்பிரமண்ய ஐயரிடம் தொடர்பு கொண்டிருந்தார். 1883-ல் திரு. ஜி. சுப்பிரமண்ய ஐயர் எழுதிய முதல் தமிழ் அரசியல் அரிச் சுவடியான "சுய அரசாட்சி வினா - விடை" எனும் நூலில் ஹ்யூமைப் பாராட்டியுள்ளார். காங்கிரஸ் கூடப் போகிற செய்தியும் "ஹிந்து"வில் முன் கூட்டியே வெளிவந்தது. காங்கிரஸ் தோன்றுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு ஒரு தேசிய கட்சி தேவை (wanted a national party) எனும் தலையங்கத்தை ஹிந்து எழுதியது.

*ஜி. சுப்பிரமணிய ஐயர் சொற்பொழிவு -*

தேசபக்தர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயருக்குக் கிடைத்த இந்த கௌரவம் ''தமிழ் நாடு செய்த தவத்தால் வந்தது'' என பாரதியார் தமது காங்கிரஸ் மகா சபையின் சரித்திரத்தில் குறிப்பிடுகிறார்.

***''தமிழ்நாடு தவமுடையது. ஏனெனில், காங்கிரஸ் மகா சபையின் முதற் கூட்டத்தில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் பாக்கியம் தமிழ் நாட்டுத் தலைவராகிய ஸ்ரீ சுதேச மித்திரன் ஜி. சுப்பிரமணிய அய்யருக்கே கிடைத்தது.★***

திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் முன் மொழிந்த தீர்மானம் வருமாறு.

''இந்தியாவின் அரசியல் நெறியை இங்கும் இங்கிலாந்திலும் பரிசோதனை செய்வதாக வாக்குக் கொடுத்தபடி, அதற்காக ஒரு ராஜ விசாரணைக் கூட்டம் (ராயல் கமிஷன்) நியமிக்கப்பட வேண்டுமென்றும், அந்தக் கூட்டத்தில் பாரதஜனப் பிரதிநிதிகளுக்கு இடம்தர வேண்டுமென்றும், அக்கூட்டத்தார் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் சாட்சி விசாரணை நடத்த வேண்டும் மென்றும் இந்த ஜன சபை சிபார்சு செய்கிறது.''

இதை வழி மொழிந்தவர் பம்பாய் மாநில அரசியல் தலைவர்களுள் ஒருவரான திரு. பிரோஷ்ஷா மேத்தா. இவர் நீண்ட காலம் காங்கிரசை ஆட்டிப் படைத்தவர். வங்காளத்தைச் சேர்ந்த நரேந்திரநாத்ஸேன் அவர் களும் தீர்மானத்தை வழிமொழிந்தார்.

★ பக.4, பார7த ஜனசபை வரலாறு.

முதல் தீர்மானத்தை முன்மொழிந்து திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆற்றிய சொற்பெருக்கில், ஒரு பகுதி வருமாறு.

''பல நூற்றாண்டுகளாக இந்தியா கொலை, கொள்ளை, ஆக்ரமிப்பு முதலான பயங்கரக் குழப்பங்களால் தாக்கப்பட்டு வந்தது. இறைவனின் கருணைமிக்க அருளாட்சி நோக்கால் ஆங்கிலப் பேரரசு இந்தியாவை ஆட்கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவிற்கு அமைதியையும், பாதுகாப்பையும் அளித்தது. முந்திய ஆட்சி எதனைக் காட்டிலும் ஆட்சியின் குறிக்கோளும், பயன்களும் மொத்தமாகப் பார்க்கும் பொழுது நலம் தருவதாகவே அமைந்தன. பொருளாதார, தார்மிகச் செழிப்பிற்கு வழிபடுத்தும், உலக வரலாறு எடுத்துக் காட்டும் சக்திகள், நம் நாட்டில் இந்த ஆட்சியின் வாயிலாக செயலாற்றத் தொடங்கு கின்றன. இந்த ஆட்சியின் காரணமாக நமக்கு கிடைத்துள்ள பயனைச் சுருக்கிக் கூறுகிறேன். முதன் முறையாக இந்தியச் சமுதாயம் திட்டவட்டமான ஓர் ஒற்றுமையைபெற்றுள்ள காட்சியைக் காண்கிறோம். தேசிய வாழ்க்கை வழியைப் பற்றிய சிந்தனை, நாட்டின் கௌரவத்திற்கும், நலனுக்கும் பாடுபடவேண்டுமென எழுந்துள்ள உள்ளார்ந்த ஆர்வம் ஆகியவனவற்றையும் குறிப்பிட வேண்டும். இன்று பேசும் பேறு பெற்றுள்ள நான், என் முன்னே செல்வாக்குள்ள பெரிய அவை யைக் காண்கின்றேன். எங்கிருந்தெல்லாம் வந்திருக் கிறார்கள். இந்தியாவின் பல பாகங்களில் இருந்து ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளவும் சாதனங்கள் அருகியுள்ள இடங்களில் இருந்து வந்திருக்கிறார்கள்.

லாகூர், சிந்து, பம்பாய், கல்கத்தா, சென்னை முதலான இடங்களில் இருந்து வந்து குழுமியுள்ளார்கள், தேசிய அரசியல் வாழ்க்கையின் தொடக்கத்தை குறிக்கும் இக்கூட்டம், மிக விரைவில், எதிர்காலத்தில் மாபெரும் திருப்பத்தை முன் கூட்டியே முடிவு செய்கிறது.

இன்று தொடக்கம், இதுவரை இருந்தாற்போல் இல்லாமல், மிக்க ஒழுங்கு முறையுடன் நாம், இந்திய நாடு, தேசிய கருத்து, தேசிய நாட்டம், என்றே நாம் பேச முன்வர வேண்டும்.

கனவான்களே! மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த மாபெரும் மாறுதலுக்கு நாம் எதற்கு கடன்பட்டுள்ளோம்? ஆங்கிலேயரின் அரசியல் நெறிக்கல்லவா கடன்பட்டிருக்கிறோம். நீதியுணர்வு, பெருந்தகைமை, முன்னேற்ற உணர்வு இவையாவும் இந்த ஆங்கில அரசியல் நெறியின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் அல்லவோ?''*

பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவிற்குக் கிடைத்தது, கடவுளின் அருளாட்சியின் விளைவு; தேசிய ஒற்றுமையும், இந்தியர் என்ற உணர்வையும் காங்கிரஸ் உருவாக்குகிறது; பிரிட்டிஷ் அரசியல் நெறி முறைகள் இந்தியாவை உய்விக்கும் சக்தி வாய்ந்தன; முதலான கருத்துகள் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் சொற்பொழிவில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ராஜாராம்மோகன்ராய் காலத்தில் இருந்தே பிரிட்டிஷ் ஆட்சியை, 'கடவுளின் அருளாட்சியின்

★ P.20-21- G Subramania Iyer - His life and career - 1909 C Karunakaran - Ganesh and co - Madras

விளைவு' என்று வரவேற்கும் மனப்பான்மை தோன்றியது. இந்த மனப்பான்மை எந்த அடிப் படையில் தோன்றியது. ஐந்நூறு ஆண்டுகால முஸ்லீம் ஆட்சியில், இந்துக்கள் அடிமைப் பட்டிருந்தார்கள் என்ற உணர்வில் தோன்றியது, அந்த மனப்பான்மை. இந்தியா முழுவதற்கும் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றின் நிலை பேற்றுக்குரிய கட்டுக் கோப்பான ஆட்சி முறையையும் பிரிட்டிஷ் ஆட்சி அளித்தது எனக் கருதியவர்களின் மனப்பான்மையும் மற்றுமொரு காரணமாகும்.

*இக்கருத்தின் எதிரொலியை 1883-ல் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் 'சுய அரசாட்சி வினா-விடை' நூலிலும் கேட்கிறோம் ''வெகு நாளாய் மகமதிய அரசர்களின் கொடுமைகளி னாலும், மற்ற கலகக் காரர்களின் கொடுமை களினாலும், நமது தேசம் அலங்கோலப் பட்டிருக்கிறது.'' (பக்.21.)*

ஆங்கிலம் கற்றவர்கள் பெற்ற அரசியல் விழிப் புணர்ச்சி, பிரிட்டனில் நாடளுமன்ற ஜனநாயகத்தை உச்சிமேல் வைத்து மெச்சியது. அத்தகைய ஜனநாயகத் தையும் இந்தியர்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சி படிப்படியாக வழங்கும் என்றும் இந்த வர்க்கம் நினைத்தது. இதற்கான 'முயற்சிகளுக்கு முதல் தகுதியாக, பிரிட்டிஷ் ராஜ விசுவாசியாகப் பிரகடனப் படுத்திக் கொள்வதில் இந்த வருக்கம் ஏகமனதாய் குரல் கொடுத்தது.

இதனால்தான் காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்பு பிரிட்டிஷ் ராஜ வாழ்த்துபாடி வணக்கம் செலுத்துவதில் 'திரிகரண சுத்தி' கடைபிடிக்கப்பட்டது.

நாடாளுமன்ற ஜனநாயக அடிப்படையில் இந்திய ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு முன் னோட்டமாக இந்திய ஆட்சியில் இந்தியர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்க வேண்டும் எனும் 'உத்தியோக வேட்புமனு இயக்கமும்' காங்கிரஸ் இயக்கத்தோடு தோன்றியது.

## *ராஜாஜி பார்வையில்*

மூதறிஞர் ராஜாஜி, காங்கிரசின் இந்தத் தொடக்க நிலையை விமர்சனம் செய்துள்ளார்.

காங்கிரசின் பொன் விழாவை முன்னிட்டு 1935-ல் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையின் தலைப்பு, ''தேசிய இயக்கத்தில் காங்கிரஸின் முதல் ஐம்பதாண்டு வரலாறு!'' என்பதாகும்.★ கட்டுரையின் தொடக்கம் வருமாறு.

''இந்திய தேசியம் காங்கிரஸ் என்ற பெயரில் மலர்ந்தது. இன்று இது மகாநதியாக, பரவி, பெருகி யுள்ளது. இம்மகாநதியின் வெள்ளத்தின் வேகம் அனைத்தையும் இழுத்துச் செல்கிறது.

இம்மகோன்னதை நதியின் பெருக்கை உற்று நோக்குவோம். உற்பத்தி ஸ்தானத்திலிருந்து தேசியப் பெருக்கு தொடர்ந்து ஒடும் ஜீவநதியாக விளங்குகிறது. ஆயினும் இந்திய தேசியத்தின் வரலாற்றில் நடைமுறையில் ஒவ்வோர் கட்டத்தில் ஒவ்வொன்று முக்கியம் பெற்றுவந்துள்ளது.

★ தினமணி சுடர் - 14-4-1974 - ப.1.

முதல் இருபது ஆண்டு காலத்தில் குறிப்பாக, எல்லா உத்தியோகங்களும் இந்தியர் மயமாக வேண்டுமென்பதில் இயக்கம் நாட்டம் கொண்டது. தேசிய தன்மானத்தை நிலை நாட்டுவது உடனடிக் குறிக்கோள். எல்லா உத்தியோகங்களும் இந்தியருக்கே என்பதுதான் அதற்கு உரைகல். இத்துறையில் சாதனைகள் அரிய பொக்கிஷமாக மதிக்கப்பெற்றது.''

## *காங்கிரசின் தொடக்கக் காலப்பணி*

காங்கிரசின் வரலாற்றுப் பாத்திரம் காலந்தோறும் மாறிவந்துள்ளது. வரையறுக்கப்பட்ட, கட்டுப்படுத்தப் பட்ட, போதிய விழிப்புணர்ச்சி பரவாத நிலையில் முதல் காங்கிரஸ் பிரகடனப்படுத்திய கொள்கைகளை குறைத்து மதிப்பிடுதல் நியாயமாகாது.

தேசியத் தலைவராக, முதல் காங்கிரஸ் மூலம் உயர்வு பெற்ற திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், நவம்பர் 28, 1914 **'நியூ இந்தியா'** (ஆசிரியர் அன்னிபெசண்ட்) பத்திரிகையில் 'தேசிய காங்கிரஸ்' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை காங்கிரஸின் ஆரம்ப காலப்பணி களின் சாதனைகளை மதிப்பிட்டுள்ளது.

''1885-ல் இருந்த இந்தியா வேறு, 1914-ல் உள்ள இந்தியா வேறு... சிதறிக் கிடந்த தனித்தனி தொண்டர் களை ஒரே மேடையில் கொண்டு நிறுத்துவது, பொதுவான கருத்துகளுடன், பொதுவான தேசிய இன உணர்வைத் (Comman Nationality) தூண்டிவிடுவது, ஆட்சியிடம் முறையிடுவது; ஆகிய இவையே பல ஆண்டுகளுக்கு முன்பாக காங்கிரசின் முதல் நோக்க

மாயிருந்தது. இந்த நோக்கம் இன்று எதிர் பார்த்ததற்கு மேலாகவே பெருமளவு நிறைவேறியுள்ளதை பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.''

ஒரு செய்தி திரும்பத் திரும்ப வலியுறுத்தப் படுகிறது. அதாவது காங்கிரஸ் என்ற சொல்லோடு 'தேசிய' எனப் பொருள்படும் 'நேஷனல்' என்ற சொல் இணைந்துள்ளதின் அரசியல், சமூக முக்கியத்துவம் பற்றியதுதான், அது.

இந்த 'நேஷனல்' என்ற சொல்லை காங்கிரஸ் விரோதிகள், ஆங்கிலோ - இந்தியப் பத்திரிகைகள், விலக்கி வைப்பதில் உறுதி காட்டின.

## *பாரதியார் பார்வையில்*

பாரதியார் இந்த விலக்கி வைக்கும் போக்கின் காரணம் பற்றி குறிப்பிட்டுள்ளார். 10-10-1908-ல் 'இந்தியா' இதழில் பாரதியார் எழுதியுள்ள குறிப்பு வருமாறு:

> ***''ஒரு காலத்தில் காங்கிரஸ் என்ற பெயரைக் கேட்டவுடனே மெயில் பத்திரிகைக் குக் கோபமும் அருவருப்பு முண்டாய்க் கொண்டு வந்தன... அப்போதெல்லாம் மெயில் பத்திரிகை ''இந்தியன் நாஷனல் காங்கிரஸ்'' என்று எழுதுவது கிடையாது. சும்மா, ''இந்தியன் காங்கிரஸ்'' என்றுதான் எழுதும். நாஷனல் என்ற வார்த்தையை உப யோகித்தால் இந்தியர்கள் ஒரு ஐக்கியமுடைய***

*சாதியார் என்பதை 'மெயில்' பத்திரிகை ஒப்புக் கொண்டதாக முடிந்துவிடுமல்லவா? அங்ஙனம்தான் ஒப்புக்கொள்ளவில்லையென்பதைப் பலருமறிய நிலைநிறுத்தும் பொருட்டே, மேற்படி பத்ராதிபர் 'நாஷனல்' என்ற பதத்தை விட்டு விடுவது வழக்கமாக இருந்தது!''* ★

7-7-1906 'இந்தியா' இதழிலும் பாரதியார் காங்கிரசின் தேசிய ஐக்கியப் பணியையும், காங்கிரஸ் மாநாட்டிற்கு செல்வதை ஒரு புனித யாத்திரையாகக் கருதும் மனப்பான்மை நிலவியதையும் குறிப்பிட்டுள்ளார்.

''ராஜாங்க முறைமகளில் சீர்திருத்த சம்பந்தமாக இதுவரை காங்கிரசிலிருந்து உயர்ந்த நன்மை எதுவும் கைவந்து விடவில்லை. ஆனால், ஜன ஐக்கிய விஷயத்தில் காங்கிரஸ் பெரும் தூண்டுகோலாக யிருக்கிற தென்பதை யாவரால் மறுக்க முடியும்?... காலஞ் சென்ற ஸ்ரீமான் மஹாதேவ கோவிந்த ரானடே என்ற உத்தம தேச பக்தர் வருஷம் தோறும் காங்கிரசை ஒரு புண்ணிய சமாஜமென்று கருதி வந்தார். காங்கிரஸுக்குப் போவது தீர்த்தயாத்திரை செய்வதற்கு நிகரென்று அவர் எண்ணினார்.''*

காங்கிரசின் இந்த தேசிய ஐக்கியத் தொண்டை முதல் காங்கிரசில் யாவரும் பரவசமுடன் எடுத்துரைத்தனர்.

திரு ஜி. சுப்பிரமணிய ஐயரின் முதல் தீர்மானத்திற்குப் பிறகு எட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

★ பாரதி தரிசனம் - முதல்பாகம் - 1906, - பக். 12.

எட்டுத் தீர்மானங்களை முன் மொழிவதிலும், வழிமொழிவதிலும் சென்னை மாநிலப் பிரதிநிதிகளில் எழுவர் பங்கேற்றனர். பி. அனந்தாசாருலு, நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர், மு. வீரராகவாசாரியார், டி.எஸ். ஒயிட், ரங்கய்ய நாயுடு, தஞ்சை எஸ். ஏ. சுவாமி நாதய்யர், எஸ். வெங்கட சுப்பராயலு பந்துலு, ஆகியோரே அந்த எழுவர்.

இனி தீர்மானங்களின் வாசகங்கள், அவற்றை முன் மொழிந்தோர், வழிமொழிந்தோர் பற்றிய விவரங்கள் வருமாறு.

### *2-வது தீர்மானம்*

''இந்திய மந்திரி சபையில் இப்போதுள்ள, வடிவத்தை அழித்துவிட வேண்டும். அதுதான் எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் அஸ்திவாரம் என்று இந்த ஜன சபை கருதுகிறது.''

முன்மொழிதல் - சிப்ளோங்கர் (புனா)

வழி மொழிதல் - அனந்தாசார்லு (சென்னை)

கோஷால் (அலஹபாத்)

### *3-வது தீர்மானம்*

''ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் - சரியானதென்று ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு தொகையினர் - வைஸ்ராய் சட்டசபையிலும், மாகாண சபைகளிலும் பஞ்சாபிலும் மாகாண சபைகள் ஏற்படுத்த வேண்டும்; பணத்திட்டங்களை மேற்படி

சபையாரின் ஆலோசனைக் குட்படுத்த வேண்டும். அரசாட்சியின் எல்லா இலாக்காக்களையும் பற்றி சபையார் நிர்வாக உத்தியோகஸ்தரைக் கேள்விகள் கேட்க இடம் கொடுக்க வேண்டும்; பெரும் பகுதி (மெஜாரிடி) செய்யும் தீர்மானத்தை மாற்றும் உரிமை அதிகாரிகளுக்கு உண்டாயினும், அதன் பேரில் பெரும் பகுதி அனுப்பும் ஆட்சேபங்களை ஏற்றுக் கவனிக்கும்படி காமன்ஸ் சபை (இங்கிலீஷ் பார்லிமெண்ட்) யில் ஒரு சாசுவதக் கமிட்டி ஏற்பட வேண்டும்'' என்று இந்த ஜனசபை அபிப்பிராயப் படுகிறது.

முன் மொழிதல் - திலங் (பம்பாய்)

வழிமொழிதல் - நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர் (சென்னை)

தாதாபாய் நவ்ரோஜி (பம்பாய்)

### 4-வது தீர்மானம்

''உத்தியோக வருக்கத்தில் முதல் நியமனங்களுக்காக இப்போது இங்கிலாந்தில் நடக்கும் போட்டிப் பரீட்சைகள், இனிமேல், 1860- ம் வருஷத்து இந்தியா மந்திரி சபை கமிட்டியின் கொள்கைப்படி ஸம காலத்தில் இரண்டு தேசங்களிலும் நடத்த வேண்டும்; இரண்டு பரீட்சைகளும் இயன்றவரை ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். பரீட்சை தேறினோரின் ஜாப்தாவில் இரண்டு தேசத்துப் பெயர்களையும் ஒன்றாகத் திறமைக்குத் தக்கபடி வரிசைப்படுத்தி பிரசுரம் செய்ய

வேண்டும்; இந்தியாவில் தேறுவோரை மேற் படிப்புக்கு இங்கிலாந்துக் கனுப்பலாம்; உசிதமானால் அங்கே அவர்களை மேலும் பரீட்சைகளுக்குட் படுத்தலாம்; குற்றேவல்களைத் தவிர மற்றெல்லா முதல் நியமனங்களுக்கும் ஸர்க்கார் இஷ்டப்படி அறிவு, குணம், சரீரம் மூன்றிலும், தகுந்த நிபந்தனைகள் செய்து இந்தியாவிலே போட்டிப் பரீட்சைகள் நடத்தவேண்டும்; ''ஒப்பற்ற ஸிவில் ஸெர்வீஸ்'' என்ற பரீட்சைக்கு பிரவேச வயதின் உச்ச எல்லை இருபத்து மூன்றுக்கு குறையாமல் உயர்த்தி வைக்கவேண்டும் என்று இந்த ஜன சபை வேண்டுகிறது.''

முன்மொழிதல் - தாதாபாய் நவுரோஜி (பம்பாய்)

வழி மொழிதல் - வீரராகவாசாரியார் (சென்னை)

டி.எஸ். ஒயிட் (சென்னை)

இந்த நான்காவது தீர்மானத்தை வழிமொழிந்த மு. வீரராகவாசாரியார், 1884-85-ல் சென்னையில் நடைபெற்ற 'சென்னை மகா ஜன சபையின்' முதல் மாநில மாநாட்டில் ''இந்தியச் சட்டமன்றத் துறையும், இந்தியச் சட்டமன்றங்களும் (Indian Legislation and Indian Legislative counsils) எனும் ஆய்வுக் கட்டுரையைப் படித்து புகழ்பெற்றவர்.

தமக்கு முன் முதல் தீர்மானத்தில் பேசிய தமது அருமை நண்பர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் தேசிய இலட்சியத்தை, தாமும் ஆதரித்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

*''நம்மிடையே தாய் மொழிகளின் வேறுபாடுகளும், சமூக பழக்க - வழக்க மாறுபாடுகளும் நிலவிய போதிலும் நாம் தேசிய இனத்தின் உண்மையானக் கூறுகளைக் கொண்டுள்ளோம்.''*

இவ்வாறு 'தேசியம்', 'தேசிய இனம்', என்பன வற்றின் தேவைகளை மாநில அமைப்பின் - சென்னை மகா ஜன சபையின் - பிரதிநிதிகளாகச் சென்றவர்கள் வலியுறுத்தியது இந்திய தேசியத்தின் உருவாக்கத்திற்கு உதவியது.

திரு. மு. வீரராகவாசாரியாரைத் தொடர்ந்து பேசிய திரு. டி.எஸ். ஒயிட் என்பவர் ஒரு முக்கியக் கருத்தை வெளியிட்டார். பிரிட்டனில் இருந்து படைத்துறை சாராத அரசாங்க அலுவலர்களை (Civilions) இந்தியாவில் இறக்குமதி செய்யவேண்டாம் என வாதாடினார்.

*''அந்நியர் ஒருவருக்கு செலுத்தும் ஒவ்வொரு தம்பிடியும் நாட்டிற்கு ஏற்படும் முழுமையான பொருள் இழப்பாகும். சுதேசிக்கு செலுத்தும் ஒவ்வொரு தம்பிடியும் நாட்டின் முழுமையான சேமிப்பிற்கு செல்கிறது.''★*

*5-வது தீர்மானம்*

''நாட்டு இராணுவச் செலவை அதிகமாக்க நினைத்தல் அனாவசியம்; தேசகால நிலைமைகளை

★ The National Congress - A S. Rajam. - 1918. P.38

உத்தேசிக்க, மிகை என்று இந்த ஜன சபை கருதுகிறது.''

முன்மொழிதல் - ரங்கய்ய நாயுடு (சென்னை)

வழி மொழிதல் - தீன்ஷா எதுல்ஜீ வாச்சா (பம்பாய்)
தயாராம் ஜேட்முல் (கராச்சி)

## *6-வது தீர்மானம்*

''இராணுவச் செலவை உயர்த்த வேண்டினால் மற்றச் செலவுகளைக் குறைக்க வேண்டும், இல்லாவிடில் சுங்கத் தீர்வுகளை மறுபடி உயர்த்தலாம், அல்லது 'லைசென்ஸ்'' (அனுமதித்) தீர்வையினின்றும் இப்போது விலக்கப்பட்டிருப்போர் ஆகிய உத்யோகஸ்தர், அல்லாதார் என்ற இரு திறத்தாரையும் அத் தீர்வைக்குட்படுத்தலாம்; ஆனால் எல்லோர் விஷயத் திலுமே அத்தீர்வைக்குரிய வரும்படி அளவின் கீழெல்லை இயன்ற வரை உயர்ந்ததாக இருக்க வேண்டும்; மேலும், இந்தியாவின் கடனுக்கு பிரித் தானியா தானும் உத்தரவாதியென்பதை அங்கீகரிக்க வேண்டும் என்று இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்கிறது''

முன்மொழிதல் - யாங்நிக் (பம்பாய்)

வழிமொழிதல் - சுவாமிநாதய்யர் (தஞ்சாவூர்)
வெங்கட சுப்பராயுடு பந்துலு
(மசூலிப்பட்டணம்)

இவ்விடத்தில் 1885-ல், முதல் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சிலவற்றைப் பற்றி 1887-ல் வெளிவந்த ''காங்கிரஸ் வினா - விடை'' பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளது.

''**வினா** - மேற்சொல்லிய தீர்மானங்களைப் பற்றி இத்தேசத்துக் கவர்ன்மெண்டார் ஏதாவது கவனித்தார்களா?

**விடை** - ஓ! கவனித்தார்கள். ஆறாவது தீர்மானத்தைப் பற்றி அப்போது நமது தேசத்துக் கவர்னர் - ஜெனரலாகிய டப்ரின் பிரபு சிலாகித்துப் பேசினார். மேலும், அந்தத்தீர்மானத்தில் கண்ட விஷயங்களைப் பற்றியும், நான்காவது தீர்மானத்தில் சொல்லப்பட்ட விஷயங்களைப் பற்றியும் விசாரித்துத் தமக்கு ரிப்போர்டு செய்யும்படி இரண்டு கமிட்டிகள் ஏற்படுத்தினார். இத்தேசத்துக் கவர்ன்மெண்டார் முதல் காங்கிரஸில் செய்த தீர்மானங்களைப் பற்றிக் கவனித்திருப்பதன்றி, ஆங்கிலேய நாட்டில் பிரசுரமாகும் பத்திரிகைகளெல்லாம் அந்தக் காங்கிரஸைப் பூஷித்துப் பேசின.''

## *7-வது தீர்மானம்*

''வட பர்மாவை பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்துக் கொள்ளக் கூடாது; துரதிர்ஷ்டவசத்தால் ஒருவேளை அதைக் கவர்ன்மெண்டார் சேர்த்துக் கொள்ள விரும்பினாலும், பர்மா முழுதையும் இந்தியா வைரஸ்ராயின் எல்லையினின்று முழுதும் பிரித்து இலங்கைத் தீவு போலே ஒரு குடியேற்ற நாடாக செய்து

விடவேண்டும் என்று இந்த ஜன சபை அபிப்ராயப் படுகிறது.''

முன்மொழிதல் - பிரோஷ்ஷா மேர்வான்ஜீ மேத்தா (பம்பாய்)

வழிமொழிதல் - கிருஷ்ணாஜீ லஷ்மண் நூல்கார் (புனா)

### *8-வது தீர்மானம்*

''இங்கு செய்த தீர்மானங்களை ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள ராஜீய சங்கங்களுக்கும் தெரிவிக்க வேண்டும். அவை, பிரசங்கங்கள் போன்ற சாதனங்களால் இத்தீர்மானங்களில் கண்ட விஷயங்களிலே அனுகூலம் கிடைப்பதற்குரிய வழிகளைத் தேட வேண்டும் என்று இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.''

முன்மொழிதல் - முரளீதர் (அம்பாலா)

வழிமொழிதல் - துருவன் (ஸுரத்)

இந்த எட்டாவது தீர்மானம், மாநில அரசியல் அமைப்புகளுக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபைக்கும் உள்ள உறவை நிர்ணயம் செய்கிறது. சென்னை மகா ஜன சபையும், ''இந்தச் சபையே சென்னை பட்டணத்திற்கு ஸ்டாண்டிங் காங்கிரஸ் கமிட்டியாகவும் இருக்கிறது'' என்று குறிப்பிட்டுக் கொண்டது. இந்தச் சபையின் நோக்கங்களில் இரண்டாவதாக, ''நேஷனல் காங்கிரசின் கருத்து நிறைவேறும்படித்தக்க முயற்சி செய்வது.'' என்பதாகவும் உள்ளது.

*೨-வது தீர்மானம்*

''அடுத்த வருஷத்துக் காங்கிரஸ் கல்கத்தாவில் கூட வேண்டும்; 1886 - ம் வருஷம் டிஸம்பர் மாஸம் 22-ந் தேதி செவ்வாய்க்கிழமை சேர்ந்து அன்றும் அடுத்த இருதினங்களிலும் சபை நடைபெறவேண்டும் என்று இந்த ஜன சபை நிச்சயிக்கிறது.''

முன்மொழிதல் - ஏ. ஓ. ஹ்யூம் (ஸிம்லா)

வழிமொழிதல் - எஸ். சுப்ரமண்ய ஐயர் (சென்னை)

முதல் காங்கிரசில் நிறைவேறிய இந்தத் தீர்மானங்கள் தொடர்ந்து பல காங்கிரஸ் சபைகளில் நிறைவேற்றப்பட்டு வந்தன.

பொதுவாக முதல் காங்கிரசிற்கு வந்திருந்தோரின் எண்ணிக்கை எழுபத்திரண்டு எனக் கூறப்பட்டாலும், பலர் பதிவேட்டில் பெயர்களை குறிப்பிடவில்லை யென்றும் கூறப்பட்டது.

பம்பாய் நகரப் பிரதிநிதிகளில் முக்கியமானவர்கள் வருமாறு: தாதாபாய் நவ்ரோஜி, காசிநாத்திரியம்பாக் திலங், பிரோஸ்ஷாமேத்தா, தின்ஷா எதுல்ஜீ வாச்சா, ரஹிம துல்லா, எம்.ஸயானி, மெஹ்ராம்ஜி மலபாரி, கணேஷ் நாராயண் சந்தவார்கள். இவர்களில், ஐவர் பிற்காலத்தில் காங்கிரஸ் மகாநாட்டின் தலைவர்களாகி யுள்ளனர்.

சென்னையின் முக்கியப் பிரதிநிதிகள் வருமாறு; பி. ரங்கய்ய நாயுடு, எஸ். சுப்ரமண்ய ஐயர், மு. வீரராகவாசாரியார், ஜி. சுப்பிரமணிய ஐயர்,

பி. அனந்தாசாருலு, மசூலிப்பட்டணம் சிங்கராஜு வெங்கடசுப்பு நாயுடு, அனந்தப்பூர், பி. கேசவப் பிள்ளை. இவர்களில் பி. அனந்தாசாருலு பிற் காலத்தில் காங்கிரஸ் மகாசபையின் தலைவராகி யுள்ளார்.

இவர்களைத் தவிர அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பலர் வந்திருந்தனர். சென்னை யூரேஷியன் சங்கத்தின் தலைவர் டி.எஸ். ஒயிட், சென்னை கலெக்டர், திவான் பகதூர், ஆர். ரகுநாத்ராவ், பூனா நீதிபதியும், சட்டமன்ற உறுப்பினருமான மகாதேவ கோவிந்தரானடே, ஆக்ரா லாலா பாஜிநாத், அகமதாபாத் பேராசிரியர் அபாஜி விஷ்ணு கத்வாதா, ஆர்க்காடு பேராசிரியர் க. சுந்தரராமன், திருவள்ளூர், டி.என். ஐயர், டெக்கான் கல்லூரி பேராசிரியர் ஆர். ஜி. பண்டாரகர், மற்றும் பலர். இவர்களுள் டி.எஸ். ஒயிட் மட்டும் சபை நடவடிக்கைகளில் கலந்துக் கொண்டார்.

கல்கத்தாவில் இருந்து பிரநிதிதிகள் வாராமைக்கு காரணம் உண்டு. பம்பாய் அமைப்பாளர்கள், கல்கத்தா இந்தியன் அசோசியேஷனுடன் உரிய முறையில் தொடர்பு கொண்டு, அழைப்புகளை காலத்தில் அனுப்பவில்லை. இத்துடன் இதே நாட்களில் கல்கத்தாவில் இந்தியன் அசோசியேஷன் வருடாந்திர தேசிய காங்கிரஸ் மாநாட்டை நடத்தியது. இந்த மாநாட்டுக்கான ஏற்பாடு, பம்பாய் காங்கிரஸ் மாநாட்டு ஏற்பாட்டிற்கு முந்தியே முடிவாக்கப்பட்டது. கல்கத்தா தேசபக்தர்கள் இக்குறையை பெரிதாக்காமல் அடுத்த 1886 - மாநாட்டை சிறப்பாக நடத்தினார்கள்.

சென்னை மகாஜன சபையின் முக்கியப் பிரமுகர்களான திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், நீதிபதி. எஸ். சுப்பிரமண்ய ஐயர், திரு. பி. அனந்தாசாருலு, திரு. மு. வீரராகவாசாரியார், திரு. பி. ரங்கய்யா நாயுடு முதலானோரும், தஞ்சாவூர் மக்கள் சங்கத்தின் தலைவர், எஸ். ஏ. சுவாமிநாத அய்யர், மசூலிப்பட்டணம் சிங்கராஜு வெங்கடசுப்ப நாயுடு, அனந்தப்பூர் பி. கேசவபிள்ளை ஆகியோரும் முதல் காங்கிரசின் வெற்றிக்கு உழைத்தார்கள்.

இருபத்தொன்று சென்னை மாநிலப் பிரதிநிதிகளில் ஊர்வாரியான பிரதிநிதித்துவம் வருமாறு: சென்னை 8; பெர்ஹாம்பூர் 1; மசூலிப்பட்டணம் 1; செங்கற்பட்டு 2; தஞ்சாவூர் 1; கும்பகோணம் 1; மதுரை 1; திருநெல்வேலி 1; கோயமுத்தூர் 1; சேலம் 1; கடப்பை 1; அனந்தப்பூர் 1; பல்லாரி 1.

இந்தப்பட்டியலுக்குக் கீழே ''தமிழ்நாட்டின் ஊர்களைக் கணித்திடுக.'' என்னும் குறிப்பை பாரதியார், நூலில் தந்துள்ளார்.

முதல் காங்கிரசில் சென்னை மாநிலப் பிரதிநிதிகளின் ஆற்றலைப் பாராட்டி லாகூரில் இருந்து வெளிவந்த ட்ரிப்யூன் (Tribune) எனும் ஆங்கில இதழ் 16-1-1886 - ல் எழுதியதாவது.

***''சென்னை மாநிலம் மிக்க எண்ணிக்கையுள்ள பிரதிநிதிகளை அனுப்பிவைத்தது. அனைவரும் நல்ல கல்வியைப் பெற்றவர்கள்; உயர்ந்த சமூக அந்தஸ்து வாய்ந்தவர்கள்;***

***தங்களது முற்போக்கான கொள்கைகளாலும், பிணைத்திழுக்கும் நாவன்மையாலும் அவை யோரை தங்கள் வயப்படுத்திக் கொண்டனர்.''***

''இந்து'' வார ஏடு, முதல் காங்கிரசின் வெற்றி என்றும் நினைவில் நிற்பது என வருணித்தது.

*''இளைய இந்தியா தனது அரசியல் வாழ்வின் முதற்கட்டத்தில் நுழைகிறது. இந்த வகையில் நமது தேசிய வரலாற்றில் டிசம்பர் 28 என்றும் நினைவில் நிற்கும் பெருமை யைப் பெறுகிறது.''*

அன்னி பெசண்டு அம்மையார், முதல் காங்கிரசின் எழுச்சியை காவிய நயத்தோடு வருணித்தார்;

''மகிழ்ச்சியும், ஊக்கமும் நிறைந்த நினைவை, விட்டு வைத்து முதல் தேசிய காங்கிரஸ் கலைந்தது; ஒற்றுமையுணர்வு எடுத்துக்காட்டப்பட்டது. இந்தியா வின் குரல் கேட்கத் தொடங்கியது. 'தான் ஒரு தேசிய அரசு' என இந்தியா உணர்ந்தது. சிலர் விழிகளில் வியப்பும், அச்சமும் உற்பாதங்களாக விளங்குகின்றன; மற்றும் சிலர் விழிகளிலோ நிறைநலமும், நன்னம்பிக் கையும் ஒளிர்ந்தன. இந்திய வானப் பரப்பை உஷையின் மெல்லிய ரோஜா விரல்கள் தீண்டின. அவளுடைய விடுதலைக் கதிரவன் எப்பொழுது உயர்ந்து தாய் நாட்டின் மீது ஒளிக்கற்றைகளைப் பரப்பப் போகிறான்?''

ஆம்; காரிருள் நீங்க வந்த எழு ஞாயிறாக முதல் காங்கிரஸ், தேசபக்தர்கள் நினைவில் நின்றது. தேச

விடுதலையின் புனிதயாத்திரை கல்கத்தாவை நோக்கியது.

## *இரண்டாம் காங்கிரஸ் கல்கத்தா (1886)*

முதல் காங்கிரசின் வெற்றி, இரண்டாம் காங்கிரசின் பிரதிநிதித்துவப் பரப்பை விரிவாக்கியது.

பம்பாய் காங்கிரசுக்கு பணபலம், வர்த்தக முதலாளிகளிடமிருந்து கிடைத்தது. கல்கத்தா காங்கிரசுக்கு பணபலம் ஜமீன்தாரர்களிடமிருந்து கிடைத்தது. மாநாட்டிற்காக பதினாராயிரம் ரூபாய் செலவு செய்ய முடிந்தது.

முதல் காங்கிரசுக்கு எழுபத்திரண்டு பிரதிநிதிகள் என்றால், இரண்டாம் காங்கிரசுக்கு நானூற்று முப்பத்தாறு பிரதிநிதிகள் வந்தனர். ஒரே ஆண்டில் காங்கிரசின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவோர் தொகை கூடியது. பிரதிநிதிகள் பற்றிய விவரம் வருமாறு:

| மாநிலம் | பிரதிநிதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சென்னை | 47 |
| பம்பாய் சிந்து | 48 |
| பஞ்சாப் | 17 |
| வடமேற்கு மாகாணம் - ஔத் | 74 |
| மத்திய மாகாணம் - பீரார் | 10 |

| | |
|---|---|
| பெங்கால் - பீஹார், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் | 240 |

முதல் காங்கிரசில் வங்காள மாநிலத்தைச் சேர்ந்த பிரதேசங்களில் இருந்து மூன்றே மூன்று பிரதிநிதிகள் வந்ததையும், இரண்டாம் காங்கிரசில் இருநூற்று நாற்பது பிரதிநிதிகள் வந்துள்ளதையும் கவனிக்க வேண்டும். இதே போல் வடமேற்கு மாகாணம் - ஒளத் எனப்படும் இன்றைய உத்தர பிரதேசத்தை உள்ளிட்ட இடங்களில் இருந்து முதல் காங்கிரசுக்கு பிரதி நிதித்துவமே இல்லாது போயிற்று; இந்த இரண்டாம் காங்கிரசில் எழுபத்து நான்கு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மற்ற மாநிலங்களின் பிரதிநிதிகளும் இரு மடங்காயினர். ஆகவே, 1886 காங்கிரஸ் நாடு முழுவதையும் வலுவாகப் பிரதிபலித்தது.

முதல் காங்கிரசிற்கு இன்முகங் காட்டிய பிரிட்டிஷ் ஆட்சி, அதன் வளர்ச்சியைக் கண்டு இரண்டாம் காங்கிரசிடம் சற்று எச்சரிக்கையாய் இருந்தது. வைஸ்ராயின் ஆட்சிக் குழுவினருக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழ்கள் திருப்பப்பட்டன; அரசியல் கூட்டங்களில் அரசாங்க அலுவலர்கள் கலந்து கொள்ளக் கூடாது எனக் காரணம் கூறப்பட்டது. ஆனாலும் வைஸ்ராய் முக்கியப் பிரமுகர்களை சிற்றுண்டிக்கு அழைத்துக் கௌரவப்படுத்தினார்.

வரவேற்புக் குழுவின் தலைவரான ராஜேந்திர லால் மித்ரா, புகழ் பூத்த ஆராய்ச்சி அறிஞர். அவர் தமது வரவேற்புரையில், வழக்கம் போல் காங்கிரசின் ஜன

ஐக்கிய முயற்சியைக் குறிப்பிட்டார். ''நாம் அண்மைக் காலம் வரையில், தனி மனிதர்களாக, குடும்பங்களாக வாழ்ந்து வந்தோம். ஆனால், இனிமேல் ஒன்றுபட்டு, தாய்நாட்டின் முன்னேற்றத்தையும், நமது முன்னேற்றத்தையும் வளப்படுத்தி ஒரு நாடாக விளங்கப் போகிறோம்... நாம் எல்லோரும் ஒரே அரசியல் பந்தத்தால் கட்டுண்டிருக்கிறோம். நாம் ஒரே ஜாதி.''

அம்பிகா சரண் மஹூம்தார், ராம் பால்சிங், சுரேந்திரநாத் பானர்ஜி, என்.ஜி. சந்தவார்கர், மதன் மோகன் மாளவியா, பி. அனந்தாசாருலு ஆகியோரின் சொற்பொழிவுகள் மாநாட்டின் சிறப்புகளாக அமைந்தன.

இரண்டாம் காங்கிரசில் மொத்தம் பதினைந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை மாநிலத்தில் இருந்து சென்றவர்களில் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், திரு. எஸ். சுப்பிரமண்ய ஐயர், திரு. பி. ரங்கய்யா நாயுடு, திரு. எஸ். ஏ. சுவாமிநாத ஐயர், டி. சிதம்பரராவ் ஆகியோர் பல தீர்மானங்களை முன்மொழிந்தும், வழி மொழிந்தும் பேசினர்.

முதல் தீர்மானம், பிரிட்டிஷ் மகாராணியின் ஆட்சியில் ஐம்பது வருஷம் ஆனதற்கு வாழ்த்து பற்றியது.

**முதல் தீர்மானம்** - ''மஹாராணியின் அனுகூலமான, என்றும் மறப்பரிய, கீர்த்திமிக்க ஆட்சியில்

ஐம்பது வருஷம் முடிவு பெற்றதைக் குறித்துச் சக்ரவர்த்தினியிடம் கடமைப்படி உண்மையான மகிழ்ச்சிகள் தெரிவிப்பதுடன், பாரத தேசத்தின் எல்லாப் பகுதிகளின்றும் பிரதிநிதிகள் வந்து கூடிய இந்த ஜனசபை பிரிட்டிஷ் ராஜ்யத்தின் மீது அம்மகாராணி இன்னும் பல பல வருஷம் ஆளவேண்டுமென்று வாழ்த்துகிறது.'' ராஜ பக்தி விசுவாசத்தை வெளிப் படுத்தும் காங்கிரஸின் தீர்மானங்கள் 1886-ல் தொடங்கி எட்டு மாநாடுகளில் 1914 - வரையில் நிறை வேற்றப்பட்டுள்ளன. காங்கிரசின் இந்தப் போக்கிற்கு அரசியல் சாசன வழிக்கிளர்ச்சியில் இருந்த உறுதியான நம்பிக்கை ஒரு காரணமாகும்.

இந்த காங்கிரசில் முதன் முறையாக இந்தியாவின் வலிமையைப் பற்றியும், ஜனப்பிரநிதி ஆட்சியின் அவசியத்தைப் பற்றியும், இரண்டாம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, குறிப்பிடத்தக்கதாகும்.

**இரண்டாம் தீர்மானம்** - ''பாரத ஜனங்களில் பெருந்தொகையாரின் வறுமை வளர்ந்து கொண்டு போவதை இந்த ஜனசபை அனுதாபத்துடனும், மிகுந்த கலக்கத்துடனும் நோக்குகிறது. இவ்விஷயத்தை கவர்ன்மெண்டார் புறக்கணிக்க வில்லையென்றும், பல பரிஹாரங்கள் தேடிக் கொண்டுதான் வருகிறார்க ளென்றும் இந்த ஜனசபை அறியுமேயாயினும் பிரதி நிதிகள் மூலமாக ராஜ்யம் நடத்துவதே ஜனங்களின் நிலைமையைச் சீராக்குவதற்கு மிகவும் முக்கியமான ஸாதகமென்று தனது பலமான கொள்கையை இந்த ஜனசபை குறிப்பிடுகிறது.''

''பிரதிநிதித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை'' என்பது பிரிட்டிஷ் அரசியலின் பைபிள் என நம்பியோர், கொடுத்த சற்று முதற்போக்கான அரசியல் குரலே, 'ஜனப் பிரதிநிதி ஆட்சியின் அவசியம்' என்பதாகும்.

காங்கிரஸ் அமைப்பு பற்றிய ஒரு தீர்மானமும் குறிப்பிடத் தக்கதாகும். பதின்மூன்றாம் தீர்மானத்தின் வாசகங்கள் வருமாறு:

''எல்லா முக்யமான ஸ்தலங்களிலும், சாசுவத ஜன சபை கமிட்டிகள் ஸ்தாபிக்க வேண்டும் என்று இந்த ஜன சபை நிச்சயித்துக் கொள்ளுகிறது.''

கல்கத்தா காங்கிரசின் நடவடிக்கைகளின் கொடு முடியாகக் குன்றாப் புகழ் கொண்டது, மாநாட்டு தலைவர் தாதாபாய் நவ்ரோஜியின் அரிய பெரிய ஆய்வுரையாகும்.

காங்கிரசின் தோற்றத்திற்கு ஹ்யூம் கலந்தா லோசித்தவர்களில் தாதாபாய் நவ்ரோஜியும் ஒருவர். பிரிட்டனில், 'லண்டன் இந்தியன் அசோசியேஷன்', 'ஈஸ்ட் இந்தியா அசோசியேஷன்' எனும் அமைப்பு களின் வாயிலாக இந்தியர்களின் பிரச்னைகளுக்கு ஆதரவு தேடியவர். அயல் நாட்டில் இவரது இத்தகையத் தொண்டுகள், இந்தியாவில் இவரை மாபெரும் வீரராக அறிமுகப்படுத்தின. இவர் தாயகம் திரும்பியபோது பிரோஸ்ஷாமேத்தா, மகாதேவ கோவிந்தரானடே போன்றவர் தலைமையில் பம்பாய் மக்கள் பெரிய

வரவேற்பு அளித்து பெருமைப்படுத்தினர். 1897-ல் பிரிட்டனில் லிபரல் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 'கறுப்பு மனிதர்' இவர். 1906- ஆம் ஆண்டில் 'ஸ்வராஜ்' என்ற முழக்கத்தை 'ஸம்ஸ் கிருத ரூபத்திலேயே இங்கிலீஷ் பாஷையிலும்' வழங்கியவர். 'இந்தியாவின் அரும் பெருங் கிழவனார்'' என்னும் அரிய பெருமைக்குரிய பட்டத்தைப் பெற்றவர்.

தாதாபாய் நவ்ரோஜியின் இரண்டாம் காங்கிரசின் தலைமையுரையில், ''ஆங்கிலம் கற்றோரின் ராஜ பக்தி', 'சமூக சீர்திருத்தம்', 'இந்தியாவின் வறுமை' ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கன.

பிரிட்டிஷ் ஆட்சியின் வருங்கயால் விளைந்த நன்மைகளையும், ஆங்கிலம் கற்றோரின் ராஜ பக்தியையும் குறிப்பிட்டு அவர் பேசியதின் ஒரு பகுதி வருமாறு:

''இங்கிலீஷ் ராஜ்யத்தினிடம் நாம் பூர்ணமான அன்பும் ஆதரவும் கொண்டிருக்கிறோம். அவர்கள் நமக்குச் செய்த நன்றிகளையெல்லாம் மறக்க மாட்டோம். அவர்கள் நமக்குக் கொடுத்த கல்வியினால் ஒரு புதிய ஒளி பெற்றோம். ஜனங்களுடைய நன்மைக்காக ராஜாவே யொழிய ராஜாவுக்காக ஜனங்களில்லை யென்ற பாடம் அவர்களே நமக்குக் கற்றுக் கொடுத் தார்கள். ஆசியாவின் கொடுங்கோன்மை யாகிய இருளுக்கிடையே ஆங்கிலேயே நாகரிகத்தின் விடுதலை ஒளி நமக்குக் கிடைத்தது. (கரகோஷம்)...

இங்கிலீஷ் படித்த வகுப்பினரைப் பற்றி ஸர். பார்ட்டில் ப்ரேர், இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் சொல்லிய அபிப்ராயத்தைக் கேளுங்கள்: அவர் இந்த தேசத்து ஜனங்களிடம் நெருங்கின பழக்கமுடையவர். அவர் சொன்னார்; ''நான் போகுமிடமெல்லாம் இங்கிலீஷ் ஆட்சி முறையின் மேன்மையைப் புகழ்ந்து பேசி அதை இந்திய சுதேசி ஜனங்களின் இயற்கைக் குணங்களுடன் ஒன்றுபடும்படி செய்து வைப்போர் யாரெனில் ஆங்கிலம் படித்த சுதேசிகளேயாவர்'' என்று கூறுகிறார். இதுவே நம்முடைய உண்மையான எண்ணங்களுக்கு ஸாட்க்ஷி.''

பிரிட்டிஷ் இந்திய அரசு, 6-8-1880-ல் இந்தியா மந்திரிக்கு அனுப்பிய அறிக்கையில் இருந்தும் தாதா பாய் நவ்ரோஜி பின்வரும் மேற்கோளை எடுத் தாண்டார்.

''இந்திய ஜனங்களில் இங்கிலீஷ் படித்தவர்களின் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. இவர் களுடைய புத்திக்கு நிச்சயமாகவே பிரிட்டிஷ் ராஜ்யத்தை புரட்டிவிட வேண்டுமென்ற கொள்கை முற்றிலும் விரோதமானது. அங்ஙனம் செய்தால் மஹா கொடூர மான. அராஜகமும் குழப்பமும் ஏற்படுமென்பதை இவர்கள் அறிவார்கள்.''

மேற்படி மேற்கோளில் ''பிரிட்டிஷ் ராஜ்யத்தைப் புரட்டிவிட வேண்டுமென்ற கொள்கை முற்றிலும் விரோதமானது'' என்று 1880-ல் ஆங்கிலக் கல்வி முறைப்பற்றிய குறிப்பு எவ்வளவு தீர்க்கதரிசனமாக

அமைந்தது! இதே கருத்து 1887-ல் வெளிவந்த ''காங்கிரஸ் வினா - விடை''யிலும் குறிப்பிடப் பட்டுள்ளதை உரிய இடத்தில் பார்ப்போம்.

1835-ல் மெகாலே பிரபுவின் ''கல்விக் குறிப்புகளில்'' ஆங்கிலம் கற்ற வருக்கத்தைப் பற்றிய பின் வரும் விமர்சனமும் நினைவு கூரத்தக்கது.

''அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நிறத்தாலும், ரத்தத்தாலும் இந்தியர்களாகவும் அறிவு, விருப்பங்கள், அபிப்பிராயங்கள், நியதிகளில் ஆங்கிலேயர்களாகவும் இருப்பார்கள்.''

என்றென்றும் ஆங்கிலமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என முழங்கிய ராஜாஜி ஒரு காலத்தில் ஆங்கிலம் படித்த வருக்கத்தின் அடிமைப் புத்தியை சாடியிருப்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

''அந்நியர் ஆக்ரமிப்பைக் கண்டு மக்களின் உள்ளம் கொதிப்படைவதற்குப் பதிலாக ஆங்கிலேயரை குரு ஸ்தானத்தில் வைத்து மதித்துப் போற்றி அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல முயலும் ஆங்கிலம் படித்தக் கூட்டம் ஒன்று நாட்டில் முளைத்து வளர்ந்தது.''

காங்கிரஸ், பிரிட்டிஷ் ராஜ்யத்திற்கு விரோத மானதல்ல, அதன் வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவது எனும் கருத்தையும் காங்கிரஸ் சபையிலேயே எதிரொலிக்கச் செய்தார் தாதா பாய்நவ்ரோஜி.

*"நான் இப்போது தெளிவாக ஒரு கேள்வி கேட்கிறேன். இந்த ஜனசபை ராஜ துரோகத்தையும் கலகத்தையும் வளர்க்கும் கூட்டமா? (அன்று, அன்று) பிரிட்டிஷ் ராஜ்யத்திற்கு இஃதொரு ஸ்திரமான அஸ்திவாரக்கல் அன்றோ? (ஆம், ஆம்) முதல் காங்கிரஸில் தாதாபாய் நவ்ரோஜி 'ராஜ பக்தி'யைப் பற்றி பேசியுள்ளார். "கடந்த காலத்தில் சுதேச ஆட்சியிடம் காட்டிய ராஜபக்தியை விட, அந்நிய ஆட்சியிடம் ஆழ்ந்த ராஜபக்தியை வெளிப்படுத்தி 'பிரிட்டிஷ் பிரஜைகள்' என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறோம். இதற்குக் காரணம் யாதெனில் பிரிட்டன் சுதந்திரமும், பிரதிநிதித்துவமும் உள்ள அரசாங்க அமைப்பின் தந்தையாகும். அதன் பிரஜைகள், அதன் குழந்தைகள் என்ற முறையில் சுதந்திரத்தையும் பெற உரிமை உடையவர்களாகு கிறோம்.''*

அடுத்து, தாதாபாயின் தலைமையுரையில் விளக்க முற்ற கருத்து 'காங்கிரஸ் சபையும் சமூக சீர்திருத்தமும்'' என்பதாகும்.

காங்கிரஸ் அமைக்கப்படுவதற்குரிய ஆலோசனைகள் எழுந்த காலத்தில், இந்த அமைப்பு, சமூகசீர்திருத்த அமைப்பாக விளங்க வேண்டுமா? அல்லது அரசியல் அமைப்பாக இருக்கட்டுமா? எனும் கருத்தோட்டம் எழுந்ததாகக் கூறப்படுகிறது.

ஹ்யூமைப் பொறுத்த வரையில் அரசியல் சிந்தனை வளர்ச்சியே முதல் தேவை; இந்தச்

சிந்தனையின் வளர்ச்சியிலே, சமூக சீர்திருத்தச் சிந்தனையை, இணைத்துக் கொள்ளலாம் என்பதே, அவர் கருத்து. அரசியல் அதிகாரங்களைப் பெற்ற பிறகு சமூகசீர்திருத்தம் காண்பது, இந்தியர்களுக்கு எளிது என்பதும் அவர் கருத்து.

பம்பாய் மாநிலத்தில் சமூக சீர்திருத்தத் துறையில் பெரும் ஊக்கத்துடன் உழைத்த பி.எம். மலபாரிக்கு 1.2.1885 - ல் ஹ்யூம் எழுதிய ஒரு கடிதத்தில் அவரது அணுகு முறையைக் காண்கிறோம். குழந்தை மணம், விதவை மறுமணம் பற்றி இரு குறிப்புகளை 1884-ல் ரிப்பன் பிரபுவின் ஆட்சி காலத்தில் அரசாங்கத்திடம் வைத்தார், மலபாரி. இது சம்பந்தமாகவே ஹ்யூம், மலபாரிக்கு கடிதம் எழுதினார்.

> *''தாங்கள் கட்டுக்கோப்பில்லாத ஓர் அறப்போராட்டத்தை மேற்கொள்கிறீர்கள். புனித பூமி'யைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக, சக்தி வாய்ந்த நம்பிக்கையற்றவர்களின் ஒரு சிறு குழுவை ஒழிப்பதாகவே அது அமையும். தற்காலிக வெற்றி கிடைத்தாலும், அது சக்தி விரயமே. நிலைபேறான பயன் ஏற்படாது. மலையும், அது வழங்கும் நீரோட்டமும் இன்னமும் எதிரிகள் வசமே உள்ளன.''*

மற்றுமொரு சான்று வாயிலாக ஹ்யூமின் கருத்தை அறியலாம். அரசியல் சீர்திருத்தம், சமூக சீர்திருத்தம் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் மட்டும் கருத்து செலுத்தியோர் பெருகியிருந்த காலத்தில் இரண்டிலும்

சொல்லாலும் செயலாலும் பாடுபட்டவர் சீர்திருத்தச் செம்மல் திரு. ஜி. சுப்ரமணிய ஐயர்.

''சென்னை இந்து ஆசார சீர்திருத்தச் சங்கம்'' எனும் சமூக சீர்திருத்த அமைப்பு சென்னையில் 9-11-1892-ல் அமைவதற்கு திரு. ஜி. சுப்ரமணிய ஐயர் பாடுபட்டவர்களுள் ஒருவர். இந்த அமைப்பின் சார்பில் 1893-ல் சென்னை வந்த ஹ்யூமை பேட்டி கண்டார்.

பேட்டியில் அரசியல் சீர்திருத்தமாயினும், சமூக சீர் திருத்தமாயினும் அதனதன் வழியில் நிகழவேண்டும். இரண்டையும் ஒன்றாகக் கலக்கக் கூடாது என்று ஹ்யூம் கூறினார்.

திரு. ஜி. சுப்ரமணிய ஐயர், ''அரசியல் சீர்திருத்த வாதிகள், சமூக சீர்திருத்தத்தில் போதிய பரிவு காட்டுவதில்லை'' என்பதைச் சுட்டிக் காட்டினார்.

ஹ்யூம் தமது கருத்தை பின்வருமாறு விளக்கி னார்:

''அரசியல் சீர்திருத்தத்திற்கு சற்று முன்னிடம் அளித்து சமூக சீர்திருத்தம் வழி விடவேண்டும் என்பது எனது கருத்தாகும். சான்றாக, இங்கிலாந்தில் வாக் குரிமைச் சீர்திருத்தம் பெற்றதன் பயனாக சமூக முன்னேற்றத்தில் வியக்கத்தக்க மாறுதல் நிகழ்ந்தது.''*

''காங்கிரசின் தந்தை''க்கு இந்தக் கண்ணோட்டம் இருந்ததோடு, அவருக்கு காங்கிரஸ் அமைப்பு பற்றி ஆலோசனை அளித்ததாக கூறப்படும் கவர்னர் ஜெனரல்

* Indian Social Reformer - November 1893.

டப்ரின் பிரபு, காங்கிரஸ் ஓர் அரசியல் அமைப்பாக உருவானால் தான் ஆட்சியாளருக்கு பொது ஜனக் கருத்தை அறிய உதவும் என எடுத்துக்காட்டினாராம்.

ஆக, இந்தப் பின்னணியை நினைவில் கொண்டு இரண்டாம் காங்கிரசில் தாதாபாய் நவ்ரோஜியின் ''காங்கிரஸ் அமைப்பும் சமூக சீர்திருத்தமும்' எனும் பேச்சை நோக்க வேண்டும். காங்கிரசின் முன் உள்ள முதற்பணி மக்களை ஒன்று சேர்த்து, பொதுக் கருத்தை உருவாக்கி அரசாங்கத்திடம் வைப்பதே. இந்த முயற்சிக்கு சோதனைகளாகவோ, தடைகளாகவோ, அந்தக் காலகட்டத்தில் சமூகசீர்திருத்தம் கட்சி மட்டத்தில் தோன்றக் கூடாது எனும் கருத்து தலைமை யுரையில் வெளிப்பட்டது.

''இந்த ஜனசபை ஆசாரத் திருத்தத்தைப் பற்றிய விஷயங்களையும் கவனிக்க வேண்டுமென்றும், அங்ஙனம் செய்யாதிருத்தல் நமக்கொரு பழியென்றும் சிலர் தூற்றுகிறார்கள். ஆசாரத் திருத்தம் அவசிய மென்பதை நான் மிகவும் நன்றாக அறிவேன். ஆனாலும், கனவான்களே! ஒவ்வொரு விஷயத்துக்கும் தகுந்த காலம், தகுந்த இடம், தகுந்த சந்தர்ப்பம், தகுந்த மனிதர் - இவையெல்லாம் தனித்தனியுண்டு. (கர கோஷம்) நாம் ராஜரீகக் கூட்டத்தார்.

நமது ராஜரீக ஆசைகளை ஆள்வோரிடம் தெரிவிக்கும் பொருட்டு நாம் கூடினோம். ஆசாரத் திருத்தங்களை விவாதம் செய்ய நாம் கூடவில்லை. நாம் இவற்றைப் புறக்கணிப்பதாக நீங்கள் குறை

கூறுவீராயின், காமன்ஸ் சபையார், கணித சாஸ்திர, வேதாந்த சாஸ்திரங்களின் ஸூக்ஷ்ம விசாரணை நடத்தவில்லையென்று அந்த சபையார்மீது குறை கூறுவதை யொக்கும். மேலும் இங்கு சகல ஜாதி ஹிந்துக்களும் உளர். ஒரே மாகாணத்து ஹிந்துக்களுக் குள்ளே ஆசார விவகாரங்கள் மிகவும் வேற்றுமைப் படுகின்றன. மேலும் இங்கு மஹமதியரும், பலவகுப்புக் கிறிஸ்தவரும், பார்ஸிகளும், சீக்கரும், ப்ராம்ம ஸமாஜத்தாரும் பிறரும் சேர்ந்திருக்கின்றனர். பாரத ஜாதியைச் சேர்ந்த எல்லா வகுப்பு மனிதரும் இங்குளர். தனித்தனி வகுப்புகளுக்கு அவசியமான ஆசாரத்திருத்தங்களை எல்லா வகுப்புகளுக்கும் பொதுவாக இந்தஸபை எப்படி விவாதிக்கும்?

நமது வகுப்பைத் தவிர மற்றொரு வகுப்பின் வீட்டு வழக்கங்களையும், ஆசாரங்களையும், உணர்ச்சிகளையும், தப்பெண்ணங்களையும் நாம் எவரும் உணரமாட்டோம். அந்தந்த வகுப்பிற்குரிய சீர்திருத்தங்களை அந்தந்த வகுப்பினர் செய்து கொள்வதே பொருந்தும். தேசிய ஜனசபை தேச முழுமைக்கும் பொதுவான விவகாரங்களைக் கவனிக்கும். ஆசாரத் திருத்தங்கள் முதலிய வகுப்பு விவகாரங்களை வகுப்புக்கள் கவனிக்க வேண்டும். இந்த தேசிய ராஜ்ய சபை ஆசார சீர்திருத்த விஷயங்களை வாதிக்காத படியால், இங்குள்ள பிரதிநிதிகள் ஆசாரத் திருத்த விஷயத்தில் ராஜீய விஷயங்களுக்கு ஸமமான அல்லது அதிகமான சிரத்தை பாராட்ட வில்லையென்று நினைத்து விடக்கூடாது.

இந்தப் பிரதிநிதிகளின் வகுப்பினர் ஆங்காங்கே தத்தமக்கு வேண்டிய சீர் திருத்தங்களைச் செய்து கொள்ள முயலாதிருக்கிறார்களென்றும் கருதலாகாது. ஒவ்வொரு வகுப்பிலும் உயர்ந்த நிலைமை பெற வேண்டி எத்தனை கஷ்டமான பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன என்பதைக் கண்ணையும் காதுகளையும் திறந்து கொண்டுள்ள மனிதன் எவனும் எளிதாக உணரலாம். நமக்கு கிடைத்திருக்கும் உயர்ந்த கல்வியினால் இந்தப் பயன் விளைந்திருப்பது ஸஹஜமே.''

தாதாபாய் நவ்ரோஜியின் பேச்சு, முக்கியமான சமூக சீர்திருத்தப் பிரச்னையைத் தட்டிக் கழிப்பதாகவே உள்ளது. குறிப்பாக அவர், ஆசார சீர்திருத்தங்களை ''புறக்கணிப்பதாக நீங்கள் குறை கூறுவீராயின், காமன்ஸ் சபையார் கணித சாஸ்த்ர, வேதாந்த சாஸ்திரங் களின் ஸுக்ஷ்ம விசாரணை நடத்த வில்லையென்று அந்த சபையார் மீது குறை கூறுவதையொக்கும்'' என்று கூறுமிடத்தில் உதாரண பலவீனமும் சேர்ந்துக் கொள்கிறது.

காங்கிரஸ் தலைவர்களின் இந்த மாதிரியான பிற்போக்குச் சிந்தனையில் இருந்து தேசியவாதிகள் விடுபட, பேரறிஞர் மகாகோவிந்தரானடே ஒரு வழி வகுத்தார். ஆண்டுதோறும் நடக்கும் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலிலேயே அடுத்த நாள் ''தேசிய சமூக மாநாடு (National social conference) எனும் பெயரில் சமூக சீர்திருத்தப் பிரசாரத்திற்கு வழி வகுத்தார்.

இதற்கான தொடக்கமும் 1887-ல் சென்னையில் நடைபெற்ற மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டில் நிகழ்ந்தது.

''தங்களுடைய சொந்த மூடநம்பிக்கைகளிலும், சமூகக் கொடுமைகளிலும் தலையிடப் பெற்று முடங்கிய ஒருவன் ஆட்சியாளர்களிடமிருந்து உரிமைகளையும், சலுகைகளையும் பெறப் போராட வருவான் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்?'' இந்த எதிர் வினாவை ரானடே தொடுத்தார். ரானடேயின் சமூக சீர்திருத்த முயற்சிக்கு சென்னையின் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. சுப்ரமணிய ஐயர் பலத்த ஆதரவளித்தார்.

எப்படியோ, காங்கிரஸ் வளர்த்த தேசியம், சமூக சீர்திருத்தத்தையும் வளர்த்ததில் முன்னோடியாய் இருந்தது.

தாதாபாய் நவ்ரோஜியின், ''இந்தியாவின் ஏழ்மையும், பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்'' (The poverty of India and the unbritish rule in India) எனும் நூல் இந்திய தேசியத்திற்கு பொருளாதார அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் பொருளாதாரக் கொள்கை காரணமாக இந்தியச் செல்வம், பிரிட்டனுக்கு எப்படி உறிஞ்சப்பட்டு செல்கிறது என்பதை இந்த நூலில் விளக்கியுள்ளார். 'வற்றடிக்கும் கொள்கை' (Drain theroy) யைப் பற்றி விரிவாக தாதாபாய் நவ்ரோஜி ஆய்வு செய்துள்ளார். இந்த 'Drain theory' என்னும் சொல்லாட்சி, நவ்ரோஜியி

னுடைய தன்று. இவருக்கு முன்பே இந்தியாவின் நல்லெண்ணம் கொண்ட சில பரிட்டிஷ் அரசு நிருவாகிகள், வர்த்தகர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், இந்திய தேசியத் தலைவர்களுள் நவ்ரோஜி இந்தப் பொருளாதாரச் சுரண்டலை ஆய்வு நெறியில் விரித்தெழுதியவராவார். இத்தகைய சிந்தனையின் முன்னோட்டத்தை தமது தலைமையுரையிலும் குறிப்பிடத் தவறவில்லை, தாதாபாய் நவ்ரோஜி.

வறுமை ஒழிப்பிற்கும், 'இந்திய மயமாக்கும் உத்தியோகக் கொள்கைக்கும்' ஓரளவு தொடர்புண்டு என்பதையும் தலைமையுரையில் தொட்டுக் காட்டுவது, நயமாயுள்ளது. தாதாபாய் நவ்ரோஜ் பேசுகிறார்.

''நமது தேசம் வறுமையில் மூழ்கியிருப்பது பற்றி வருந்துகிறோமென்பது நாம் இங்கு பேசப் போகிற விஷயங்களில் அதிமுக்யமானது. நாம் உத்தியோகங்கள் வேண்டுமென்று கேட்பது இங்கிலீஷ் படித்த சிலருடைய திருப்திக்காக மாத்திரமேயென்று பலர் கருதுகிறார்கள். இதை நீங்கள் நேரே ஆராய்ச்சி செய்தால், நம்மவர் மேல் ஸ்தானங்கள் பெறுவதினின்றும் ஜனங்களுடைய தரித்திரம் குறைய ஹேதுவுண்டாகுமென்பதை எளிதில் உணர்வீர்கள். இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஸர். எபெலின் பேரிங் என்பவர் இந்தியா ஜனங்கள் மிகவும் கொடுமையான வறுமையிலே வருந்துகிறார்கள்'' என்று சொன்னார்... இந்தியாவின் வறுமையை நான் ஆரம்பத்தில் உலகறியக் கூறி அன்னிய உத்தியோகஸ்தரின் நியமனம்

அவ்வறுமைக்குள்ள காரணங்களில் ஒன்றென்று காட்டியபோது என்னைப் பலர் பரிஹாஸம் செய்தார்கள். இப்போது அதனை அதிகாரிகளே அங்கீகாரம் செய் கிறார்கள்.

''தீர்வை விஷயத்தையும் ஸர்க்கார் வரும்படிக் குள்ள ஆதரங்களின் விஷயத்தையும் யோசிக்கும்போது இந்தியாவின் நிலைமை வெகு விசித்திரமானது. ஜனங்கள் பழைய வழக்கங்களைக் கைக்கொண்டு புதுமைகளை விரும்பாதவர்கள். ஆதலால் புதுத் தீர்வை போடும் விஷயத்தில் மிகவும் அதிருப்தி காட்டுகிறார்க ளென்ற ஒரு காரணத்தால் மாத்திரமன்று; ஆட்சியின் குணமும் ஒரு காரணம்; அது அன்னியர் வசத்தில் இருக்கிறது. எல்லா முக்ய உத்தியோகங்களையும் அன்னியர் வஹிக்கிறார்கள், சேனையிலும் அதிகத் தொகையாக இருக்கிறார்கள். சட்ட சபைகளில் நமது பிரதிநிதிகளுக்கிடம் கொடுத் தால், அவர்கள் நமது செல்வத்தையும் க்ஷேமத்தையும் வேரறுக்கும் காரணங் களை எடுத்துக் காட்டி அவற்றைத் தீர்ப்பதற்குரிய மருந்தை அதிகாரிகளுக்குத் தெரிவிப் பார்கள். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நமக்கேற்பட்ட நன்மை களும் நம்மை ஆள்வோரின் மேலான கொள்கை களும் மேன்மேலும் வறுமையாகிய படுகுழியில் நமது தேசம் அழுந்திக் கொண்டே போவதனால் விழலாய் விடும் என்பது திண்ணம். ஒரு காலத்தில் என்னை எல்லாரும் அழு மூஞ்சியென்று சொல்லிப் பழித்தனர். இப்போது நமது நாட்டின் வறுமையை அதிகாரிகளே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

எனவே நாடு முழுவதும் பரவியிருக்கும் வறுமை யையும் அதனை நீக்குவதற்கு அவசியமான முதற்படி களையும் பற்றி நம்முடைய கொள்கைகளை எடுத் துரைத்தல் இந்த ஜன சபையின் உரிமையும் கடமையுமாகும்."

தாதாபாய் நவ்ரோஜியின் வழியிலே ரானடே ரமேஷ் சந்திர தத்தர், வில்லியம் டிக்பை, ஜி. சுப்ரமணிய ஐயர் ஆகியோர் தேசிய பொருளாதார நூல்களை எழுதி, வறுமை ஒழிப்பிற்கு பிரிட்டிஷ் ஆட்சி மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளுக்கு கோரிக்கைகள் விடுத்தனர்.

''பசியும் வறுமையும் ஆடுகளைக் கூட ஓநாய் களாக மாற்றி விடுகின்றன'' எனும் புரட்சிக் கருத்தை ஒரு முறை ஹ்யூம் வெளியிட்டபோது, மிதவாதத் தேசியத் தலைவரான தாதாபாய் நவ்ரோஜி, ஹ்யூமின் தீவிரவாதக் கருத்தை எதிர்த்து பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டார்.

ஹ்யூம், ஏப்ரல், 1892-ல் லண்டனில் இருந்த பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதங்களில் பின்வரும் கருத்தை வெளியிட்டார். (அவ்வமயம் சோஷலிஸ்ட் களின் இரண்டாம் அகிலம் லண்டனில் கூடியது என்பதும் குறிப்பிடத்தக்கது)

*''மக்கள், அதாவது இந்திய மக்கள் மிக்கப் பொறுமையுடன் சாதுக்களாக உள்ளனர். பத்து வருடங்களுக்கு முன்னர் பிரெஞ்சு மக்கள், மன்னரையும், பிரபுக் களையும் கொலை செய்வதற்கு முன்பு இப்படித்தான் இருந்தனர். பசியும் வறுமையும் ஆடுகளைக் கூட ஓநாய்களாக மாற்றிவிடுகின்றன.''*

இரண்டாம் காங்கிரசின் சிறப்பைக் குறித்து 1888-ல் வெளிவந்த 'ஆரிய ஜன ஐக்கியம் அல்லது காங்ரெஸ் ஜனசபை' என்னும் நூல் பெருமையுடன் எழுதியுள்ளது. காங்கிரஸ் மாநாட்டையும், பண்டைக் கால பாரத மன்னர்களின் ராஜசூய யாகத்தையும் ஒப்பிட்டு, முன்னதே போற்றுதலுக்குரியது என சாற்றியுள்ளது இந்தத் தமிழ் நூல்:

''க்ஷத்திரியர்கள் ராஜ்யமாண்ட காலத்தில் ராஜசூய யாகம் செய்யப் படுவதுண்டு. அப்போது பரத கண்டத்தில் ஆண்டு வந்த சகல அரசர்களும் பேரரசரது சபைக்கு வந்து மரியாதை செலுத்திப் போவர் என்று பழைய நூல்களிற் கேட்டதுண்டு. அப்போதும் அரசர்கள் கூட சக்கரவர்த்திக்குத் தங்கள் அடக்கத்தை நிரூபிக்கக் கூடினார்களே யன்றி தேசாபிமானத்தாலும் ஆகிய சுதரின் க்ஷேமத்துக்காகவும் கூடியவர்களல்ல. இந்தக் காங்ரெஸ் சபையோ, அரசர்கள் கூட்டியதல்ல. தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு பொது க்ஷேமத்தின் பொருட்டு திரவிய சரீர சுக நஷ்டங்களைக் கவனிக்காது கூடின கூட்டம்.

நளன், இராமன், தர்மபுத்திரன், அசோகன், விக்கிரமாதித்தான், இவர்கள் இராஜ சக்கிரம் சுழன்ற காலத்திலும் இத்தகைய ஜனப் பொதுசபை கூடியதே இல்லை. காங்ரெஸ் சபையின் பிரஸ்தாபம் பரவவே, இரண்டாவது கூட்டம் தகைமையிலும் கீர்த்தியிலும் உயர்ந்தது.''*

---

* ஆர்யஜன ஐக்கியம் அல்லது காங்ரெஸ் ஜனசபை - க. சுப்பிரமணிய ஐயர், 1888; பக்கம்., 30-33

ராஜசூய யாகத்தையும், காங்கிரஸ் மகாசபையையும் ஒப்பிட்டுத் தமிழில் ஒரு கவிதையையும் சுதேசமித்திரன் வெளியிட்டுள்ளது. 1895.ல் சென்னையில் நடைபெற்ற பத்தாவது காங்கிரசின் பொழுது இந்தத் தமிழ்க் கவிதை வெளியிடப்பட்டது; தலைப்பு, ''காங்கிரஸ் கூட்டத்தின் காக்ஷி'' கவிதை, வருமாறு:

*குருகுலம் விளங்கவந்த குந்தியின் மைந்தர்மேனான்*
*விரிபுன லுலகிற்செய்த வேள்வியா மிராசசூயம்*
*தருவளர் சென்னைகாங்ரெஸ் தசமியர்ய்க் கூடிநின்ற*
*ஒருபெருங் கூட்டத்திற்கிங் கொக்குமோ வுலகில்ம்மா!*

பாரத சமுதாயத்தின் மேல்மட்ட வருக்க ஒற்றுமையின் ஆரவாரம் இது, என்று ஒதுக்கி விடுவதைவிட, பல மாநிலங்கள், பல மொழிகள், பலவேற்றுமைகள் யாவும் ஒன்றுபட்டு ஒரு நாடு எனும் தேசிய உணர்வு பெறத் தொடங்கியதின் பெருமிதக்குரலாக எடுத்துக்கொள்ளலாம்.

மக்களை நாடிச் செல்ல வேண்டும் என்ற முயற்சி, சென்னை காங்கிரசில் (1887-ல்) தலையெடுத்தது.

❖

★ சுதேசமித்திரன் - வாரமிருமுறை - ஜனவரி 4-1-1895, பக்.6.

# மூன்றாம் காங்கிரஸ் - சென்னை- 1887

சென்னையில் மே, 1887-ல், சென்னையில் நடைபெறப்போகும் காங்கிரஸ் மாநாட்டிற்கான வரவேற்புக் குழுவை அமைக்க புகழ்பெற்ற ராஜா சர் டி. மாதவரஸ் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. 120 பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இவர்களுள் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஹுமாயுன் ஜாபகதூர், சி.ஐ.இ, சவலை ராமசாமி முதலியார் சி.ஐ.இ., மேதகு எஸ். சுப்பிரமணிய ஐயர், மேதகு ராஜ டி. ராமாராவ், மேதகு திரு பி. சென்ட்ரல் ராவ் பந்துலு, சி.ஐ.இ., பி. சோமசுந்தரம் செட்டியார், ரங்கய்ய நாயுடு, ஜி. மகாதேவ செட்டியார், என்.சுப்ரமண்யம், தவசி முத்துநாடார், பி. லோவர், பி.எச்.செஸ்டர் கான்பகதூர் ஹாஜி முகமது அப்துல்லா பகதூர் ஷா, சாகேப், முகமது நிஜாமுதீன் கான் பகதூர், மேதகு ராஜா ஜி-என்-கஜபதிராவ், பி. அனந்தா சாருலு, டாக்டர் எஸ். புல்னே ஆண்டி, முதலானோர்.

இந்தக் கூட்டத்தில் 25 பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பெற்றது.

காங்கிரசின் வரலாற்றில் சென்னை காங்கிரஸ் 1887, புதுத்திருப்பம் தரமுயன்ற, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் விஷக்கண் பார்வைக்கு இலக்காகிய பலவகைப் பட்ட தனிச் சிறப்புகளைக் கொண்டது.

## *காங்கிரஸ் கீதம்*

சென்னையில் முதன் முறையாகக் காங்கிரஸ் கூடியபோது காங்கிரஸ் கொள்கைகளையும், அவற்றிற்கு உழைப்பவர்களைப் பற்றியும் விளக்கி இசைப் பாடல்களைப் படைத்தார் சேலம் பகடால நரசிம்மலு நாயுடு, (1854-1922). நாத நாமக்கிரியா ராகத்தில் அமைந்த பாடல்கள் 16 பக்கங்களில் 1800 பிரதிகள் அச்சிடப்பெற்று வழங்கப் பெற்றன. இந்த வெளியீட்டின் பெயர் " காங்கிரஸ் கீதம்"* Poems on congress!

காங்கிரஸ் இயக்கத்தின் போர் முரசாக சென்னையில் 'இந்து' வோடு சேர்ந்து ஒலித்த சுதேசமித்திரன் எழுச்சி மிக்க தலையங்கத்தை எழுதியது. காங்கிரஸ் வரலாறு பற்றிய தமிழ் மூலாதாரங்களின் தேவை, அரிதாக உள்ளது எனும் கருத்தால் சுதேசமித்திரன் தலையங்கம் சற்று விரிவாகவே தரப்பட்டுள்ளது.

24-12-1887 சுதேசமித்திரனில் வந்த தலையங்கத்தின் பெரும் பகுதி வருமாறு

---

★ தமிழகத்தில் பிரம்மசமாஜம் -1992 பெ.சு. மணி. ப.193

''கல்கத்தா, பம்பாய் இரண்டும் ஐசுவரியத்தில் மிகுந்த நகரங்கள். வங்காளத்தில் ஐசுவரியம் மிகுந்த பெரிய ஜமீன்தாரர்கள் எத்தனையோ பேர்களிருக் கிறார்கள். பம்பாயில் இராஜ ஐசுவரியம் பெற்ற வர்த்தகர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இவர்களைப் போல ஐசுவரியம் படைத்த வியாபாரிகளாவது, வங்காளத்திலுள்ளவர்களைப் போல் மிக ஐசுவரியம் படைத்த பெரிய ஜமீன்தார்களாவது மிகுதியாக இங்கே இல்லை. ஆகையால், கல்கத்தா, பம்பாய்வாசிகள் அவர்களுடைய ஐசுவரிய மிகுதியால் செய்யக் கூடியது இவ்விராஜ தானியில், ஜனங்களுடைய ஒற்றுமை யாலும், அவர்கள் ஒன்றுகூடி குழுக்களாயிருந்து, ஊக்கமும், தேசாபிமானமும் காட்டி உழைப்பதிலுமே கைகூடத் தக்க தாயிருந்தது. நமது இராஜதானிய சாமான்ய ஜனங்களும், குடிகளும் காங்கிரஸ் சபையின் முக்கியத்தையும் அதன் உபயோகத்தையும் நன்கு யறியும்படிச் செய்து காங்கிரஸ் விஷயமாய் அவர் களுடைய அனுதாபத்தைக் கைப்பற்ற வேண்டியது அவசியமாயிற்று. இதற்காகக் காங்ரெஸ் கமிட்டியார் தமிழிலும் தெலுங்கிலும் காங்கிரெஸ் சரித்திரம் தெளிவாய்விளங்க, வினா விடைகளாகச் சிறு புத்தகங்கள் அச்சடித்துக் கிராமங்கள், பட்டணங்கள் தோறும் எல்லா மூலை முடுக்குகளிலும் இறைத்து வந்தார்கள்... நமது இராஜ தானியிலுள்ள பயிரிடும் குடிகளும், வர்த்தகர்களும், மிகப் பின்னடைந்துள்ள சிலவிடங்களிலன்றி மற்றெங்கும், இம்மகா சபையின் உபயோகத்தையும் அதன் முக்கியத்தையும் மிக எளிதிலறிந்து கிரகித்துக் கொண்டு அச்சபை விஷயத்

தில் சிரத்தையும் அனுதாபமும் காட்டி வந்ததே; அநேக கிராமங்களில் குடிகள் ஒரு அணா முதல் காங்கிரஸ் சபைக்குக் கையொப்பம் செய்து வந்ததைப் பார்த்த எவர்தான் காங்கிரஸ் சபை சாமன்ய ஜனங்களுடைய அனுதாபமும் ஆதரவும் பெற்றதில்லை என்று சொல்லத் துணிவார்கள். பயிரிடுங் குடிகளின்றி, வர்த்தகர்களும், வியாபாரிகளும், கடைக்காரர்களுங்கூட இது விஷயத்தில் மெச்சத்தக்க சிரத்தையெடுத்துக் கொண்டவர்களாகக் காட்டினார்கள். இப்படி காங்ரெஸ் கமிட்டியார் சாமன்ய ஜனங்கள் மனத்தைத் தொட்டு அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமென்று செய்த பிரயத்னம் மிக மேலாய்ப் பலித்தது. யாவரும் மிக சந்தோஷப் படத் தக்கதாயிற்று... இக்காங்கிரஸ் சபையானது நம்மவர் எல்லாராலும் எங்கிருந்த போதிலும் நன்கு மதிக்கப்பட்டு வரும் விஷயம் சிங்கப்பூர் தீவிலுள்ள இவ்விராஜதானி வியாபாரிகள் தாங்களே சுயமாக காங்கிரஸ் விஷயமாய்ப் பெருமுயற்சி யெடுத்துக் கொண்டு கையொப்பம் சேர்த்தனுப்பியதையும், புதிதாய் ஜயிக்கப்பட்ட மாண்டலே நகரிலிருந்துஸ்தல காங்கிரஸ் கமிட்டியார் கையொப்ப உதவி பெற்றதையும் பார்க்க ஸ்பஷ்டமாய் விளங்கும்... இனி, இம்மகாசபைக்கு வரும் பிரதிநிதிகளைப் பற்றிப் பேச இவ்விராஜதானியிலிருந்து மட்டும் சுமார் 250 பிரதிநிதிகள் வருவார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது. இவர்களில் 70-பெயர்களுக்கு மேல் நமது சகோதரர்களான மகமதியச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பார்கள்... இவ்விராஜதானிக்குப் பிறகு பெங்காள

இராஜதானிலிருந்து அதிகமான பிரதிநிதி வருவார்கள். இதுவரையில் அவ்விராஜதானியில் 150 பெயர்கள் பல விடங்களினின்றும் பிரதிநிதிகளாக நியமிக்கப் பட்டிருக் கிறார்களாம்.... சுதேச வர்த்தகர்கள் மட்டும் அடங்கிய "பெங்கால் நாஷனல் சேம்பர் ஆப் காமர்ஸ்" என்னும் சுதேசவர்த்தகச் சங்கத்தார் இந்தியாவின் வர்த்தகத்தை விருத்தி செய்யும் விதத்தைப்பற்றிக் காங்கிரஸ் சபையார் யோசிக்கும் படி வர்த்தக விஷயங்களில் கைதேர்ந்தவர்களான சிலரைத் தங்களுக்குப் பிரதிநிதிகளாகப் பொறுக்கி யனுப்பி யிருக்கிறார்கள்... இது இவ்வருஷத்துக் காங்கிரஸ் சபையில் ஒரு முக்கிய மான புது அம்சம்... ஜாதியாசாரம் பார்க்கும் பிரதிநிதி களுக்கும் பிரத்தியேகமாக ஒரு பங்களாவில் அவர் களுடைய ஜாதியாசாரங்களுக்கு ஏற்றபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன... 27-ந் தேதியில் பிரதிநிதி களின் நல் வரவைக் கோரி யழைக்கும் மீட்டிங்கும், 28, 29, 30 - ந் தேதிகளில், காங்கிரஸ் சபையார் வேலை நடத்தக் கூடும் கூட்டங் களும் "மக்கேஸ் கார்டன்" என்னும் தோட்டத்திலுள்ள பங்களாவுக்குப் பக்கத்தில் போடப்படும் ஒரு பெரிய கொட்டாய் போட்ட பந்தலின் கீழ்க் கூடப்படும். அப்பந்தல் 130 அடி நீளம் 95 அடி அகலம் விஸ்தீரண முள்ளதாக இருக்கிறது. நமது கவர்னராகிய கன்னிமாராப் பிரபுவும் சென்ற வருஷம் கல்கத்தாவில் டப்ரின் பிரபு அவர்கள் செய்தது போல ஒரு நாள் தம் தோட்டத்தில் சந்தோஷச் சபை கூடப் பிரதிநிதிகளை அழைத்துபசரிக்கப் பிரியமுள்ளவ ராயிருப்பாரென்று நம்பப்படுகிறது.

காங்கிரஸ் கூடும் விஷயமாய் இவ்விராஜதானியில், ஹிந்துக்கள், மகம்மதியர்கள், யூரேஷியர்கள், ஐரோப்பியர்கள் முதலான எல்லா வகுப்பார்களும் மிக அனுதாப முடையவர்களாகக் காட்டி, வேண்டிய ஒத்தாசை செய்து வந்திருப்பதை யறிய யாவரும் மெத்த சந்தோஷமுள்ளவர்களாயிருப்பார்கள்.''*

சுதேசமித்திரனின் தலையங்கம், காங்கிரஸ், சாமான்ய ஜனங்களிடமும் குடிகளிடமும் நெருக்கங் கொள்வதை வரவேற்று மகிழ்ந்தது.

தேசியம் என்றால், அது மக்கட் தொகையின் பங்கேற்பை குறிப்பதாக அமையவேண்டும் என்னும் நிலையை சென்னை காங்கிரஸ் முதன் முறையாக தோற்றுவிக்க முயன்றது. இதைத்தான் சுதேச மித்திரனும், பெயருக்கு ஏற்ப, பொருத்திக் கூறுகிறது.

காங்கிரஸ் வளாக்கத் தொடங்கிய தேசியத்தில், முஸ்லீம்கள் சேராமல் ஒதுங்க வேண்டும் எனும் எதிர்ப்புக் குரலை எழுப்ப முஸ்லீம் தலைவர்களை ஏகாதிபத்திய வெறிபிடித்த வெள்ளையர் சிலர் தூண்டினர். இவர்களுள் அலிகார் கல்லூரியின் தலைவர் தியோடர்பெக் முக்கியமானவர். இவர் அலிகார் கல்லூரியின் புரவலர் சையத் அகமதுகானை, காங்கிரசுக்கு எதிராகப் பேசவும், எழுதவும் வைப்பதில் பக்கத்துணையாய் நின்றார்.

தியோடர்பெக்கின் சூழ்ச்சியை எதிர்த்து கல்கத்தாவில் இருந்து வெளிவந்த 'ஸ்டேட்ஸ்மென்

★ குமரிமலர் - மறு வெளியீடு - நவம்பர் 1969

அன்ட் பிரண்ட் ஆப் இந்தியா' (Statesman and friend of India) எனும் பத்திரிகை எழுதிவந்தது. வெள்ளையர் நடத்திய இந்தப் பத்திரிகை எழுதி வந்தது. வெள்ளையர் நடத்திய இந்தப் பத்திரிகை காங்கிரசை ஆதரித்தது. இதன் சில கட்டுரைகள் தொகுக்கப் பெற்று 'தி கம்மிங் காங்கிரஸ் அட் மெட்ராஸ்' (The comming Congress at Madras) என்ற தலைப்பில், ஒரு சிறு வெளியீடாக டிசம்பர் 1887 - ல் வந்தது. அதில் ஒரு பகுதி வருமாறு.

''சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவ கொள்கைக்கு கோரிக்கைகள் விடுப்தில் தவறில்லை. ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் நலம் பயக்கும் புத்திசாலித் தனமான கோரிக்கை, இது. சென்னை காங்கிரஸ் கேட்கப்போவது, 'புரட்சி' அன்று, சீர்திருத்தமே. நமது நலன்களுக்கும், அவர்களது நலன்களுக்கும் இது மிக அவசியம். காங்கிரஸ் பிரதிநிதிகளின் முயற்சிகள் வெற்றியடைய கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.''*

தேசிய திருவிழாவாக சென்னை காங்கிரஸ் அமையவேண்டும் என ஆர்வலர்கள் முடிவு செய்தனர். டிசம்பரில் கூடவிருக்கும் காங்கிரஸ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்த மார்ச் மாதத்திலேயே திட்டங்கள் தீட்ட தலைவர்கள் கூடினர். இவர்களது பெரும் முயற்சி களைப் பற்றி அறிவோம்:

''காங்கிரஸ் சபை நிறைவேறுவதற்காக நமது சென்னை ராஜதானி ஜனங்கள் மூன்று மாதகாலம் பட்ட

* The Comming Congress at Madras - 1887 - P 11

சிரமம் விசேஷமாக வியக்கத் தக்கது. இந்த 30,000 ரூபாய் செலவும் உ 362 பிரதிநிதிகளும் சிரமமில்லாமல் கிடைத்தல் கூடுமோ? சென்னையிலும் மற்ற முக்கியமான இடங்களிலுமுள்ள தேசாபிமானிகள், கும்பகோணத்தில் மார்ச்சு மாதத்தில் அதாவது காங்கிரஸுக்கு ஒன்பது மாதத்துக்கு முன்னதாக கூடினபோதே, செய்ய வேண்டிய பிரயத்தனங்களைப் பற்றிக் கலந்து ஆலோசித்தார்கள். உடனே சென்னையில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கமிட்டியில், ராஜா ஸர். மாதவராய், ஹுமாயுன் - ஜா - பஹாதர், ஆனரபில் சென்ஸ்லராவ் பந்துலு, ஸர். சவலை ராமசாமி முதலியார், ஆனரெபில் சுப்பிரமணியய்யர், ரங்கய்ய நாயுடு, அனந்தாசாருலு, மகாதேவ செட்டியார் முதலிய பெரிய மனிதர்கள் சேர்ந்திருந்தார்கள். இவர்கள் ஆலோசித்து, வெளி ஜில்லாக்களில், அங்கங்கே, தங்களைப்போல, கமிட்டி யேற்படுத்தும்படி எழுதினார்கள். ஜில்லா பிரதான ஸ்தலத்தில் மாத்திரமல்ல, தாலுகா ஸ்தலத்திலும் கூட, கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. இவர்கள் அங்கங்கே காங்கிரஸ் சபையின் தாற்பரியங்களையும், தேசத்துக் குண்டாகக்கூடிய நன்மைகளையும் ஜனங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். மீட்டிங்குகள் கூடி ஜனங் களுக்கும் பிரசங்கம் செய்தார்கள். தங்கள் சினேகிதர் களையும், உழைக்கும்படி எச்சரித்தார்கள். சென்னை வீரராகவாசாரியாரவர்களால் எழுதப்பட்ட ''காங்கிரஸ் வினா - விடை'' என்ற சிறு புஸ்தகத்தில் 30,000 பிரதிகள் அச்சடித்து எங்கும் பரவ வழங்கினார்கள்.

இப்படி ஓயாது எங்கும் காங்கிரஸின் பெயர் ஓங்கி விளங்கும்படி சர்வவித முயற்சியும் செய்யப்பட்டது.

ஜனங்கள் கண்ணை விழித்தார்கள். இப்பேர் பட்ட கூட்டங்கூடச் சேருமாவென்று திகைத்தார்கள். தங்களுக் குண்டாகக் கூடிய நன்மைகளை எண்ணிக் களித்தார்கள். உற்சாகமும் ஊக்கமும் கொண்டார்கள். எந்த நாளும் தங்கள் மனதுக்குத் தோன்றியிராத தேசாபிமானமும் சுஜனாபிமானமும் அப்போது உதித்தன. சிறு கிராமங்களிலும் கூட காங்கிரஸின் பிரஸ் தாபம் பரவி, மீடிங்கு கூடி பிரதிநிதி நியமித்தார்கள்.*

சென்னையில் காங்கிரசின் பெயரை கிராம மக்கள் அறியவும், புரிந்து கொள்ளவும் முயற்சியெடுக்கப் பட்டன என்பதை மேலேயுள்ள மேற்கோள் தெரிவிக் கிறது. இதற்கான தனிப் பொறுப்பு சுதேசமித் திரனையே சேரும். கிராமங்களில் உள்ள மக்கள் புரிந்துகொள்ளு மாறு காங்கிரசின் அரசியல் நடப்புகளை எளிய தமிழில் எழுதி, காங்கிரசை அவர்கள் கருத்தில் நிலை நிறுத்தியது.

நிதி திரட்டுதல் என்பது மாநாட்டின் அடிப்படை யாகும். இந்தப் பணியில் சென்னை காங்கிரஸ், முந்திய இரு காங்கிரசுகளைப் போலல்லாமல் ஒரு தனி வழியைப் பின்பற்றியது; மக்களை அணுகியது. முப்பதாயிரம் ரூபாய் நிதி திரட்ட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. 'காங்கிரஸ் வினா - விடை'

★ ஆர்ய ஜன ஐக்கியம் அல்லது காங்கிரஸ் ஜன சபை - க. சுப்பிரமணிய ஐயர். 1888, பக். 37.

வெளியீடு, நிதி திரட்டும் பணியில் உறுதுணையாய் விளங்கி பெருந்தொகையை சாமானிய மக்களிட மிருந்து வசூல் செய்த சாதனையை நிகழ்த்தியது.

காங்கிரஸின் உத்தியோக பூர்வமான அறிக்கை, சென்னை காங்கிரஸின் இந்த அரியசாதனையைச் சிறப்பாகப் பாராட்டியுள்ளது.

''காங்கிரசின் செயலாளர்களுள் ஒருவரான திரு. மு. வீரராகவாசாரியார் எழுதிய 'காங்கிரஸ் வினா - விடை'யின் முப்பதினாயிரம் பிரதிகள் வழங்கப் பட்டன. இந்தப் பிரதிகளைப் பெற்றுக் கொண்ட கையொப்பக்காரர்களின் பெரும் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடும் பொழுது இந்தச் சிறு வெளியீடு வியக்கத்தக்கச் சாதனை புரிந்துள்ளது தெரிகிறது.''

முந்தைய இரு காங்கிரசுகளுக்கு முறையே மூவாயிரம் ரூபாய், பதினாராயிரம் ரூபாய் செல வாயிற்று. இந்தத் தொகை பெருமளவு பெரும் பணக் காரர்களிடமிருந்து 50 ரூபாய் முதல் 2500 ரூபாய் வரை ஒவ்வொருவரிடமிருந்து வசூல் செய்யப்பட்டது. ஆனால், மூன்றாம் காங்கிரசில் தலைக்கு ஓர் அணா முதல் ஒன்றரை ரூபாய் வரையில் எட்டாயிரம் சிறு சந்தாதாரர்களிடமிருந்து 5,500 ரூபாயும், தலைக்கு ஒன்றரை ரூபாய் முதல் முப்பது ரூபாய் வரை எட்டாயிரம் ரூபாயும் திரட்டப்பட்டன. வரவேற்புக் குழுவினர் வியப்பெய்தினர்.

**பெரும்பாலும் தமிழ்பேசும் சென்னை மக்களிடமிருந்து வந்த தொகை இது.** (அழுத்தம்

நூலாசிரியரால் இடப்பட்டது) குமாஸ்தாக்கள், ஓட்டல் உரிமையாளர்கள், சிறு வர்த்தகர்கள், குற்றேவல் புரிவோர், மருத்துவம் பார்ப்போர், கைவினைஞர்கள், அரசாங்க ஊழியர்கள், ஏன், அன்றாட கூலி வேலை செய்வோர் உட்பட பலர் நிதி உதவியவர்களில் அடங்குவர். இந்த 'வினா - விடை' மாண்டலே, ரங்கூன், சிங்கப்பூர், கிழக்கில் உள்ள சிறு தீவுகள் முதலான இடங்களையும் சென்றடைந்தது. எங்கேயோ தூரதேசங்களில் வசிப்பவர்கள் எந்தவிதப் பயனும் எதிர்பாராமல் அன்போடு தாய் நாட்டின் தேவைக்கு அனுப்பி வைத்த தொகை பல நூறு ரூபாய்களாகும். வினா - விடையின் மொழியைப் புரிந்து கொள்ள இயலாதவர்கள் கூட, அதனை மதித்து நன்கொடையை அனுப்பி வைத்தனர்.

கடந்த காங்கிரசின் (சென்னை) புதுமையான, ஊக்கமளித்த மிகச் சிறந்த அம்சம் யாதெனில், பொது மக்களும் அயல் நாடுகளில் வாழ்பவர்களும் மனமுவந்து நன்கொடை அனுப்பி, ஆதரவளித்ததே யாகும்.''* பெருந்தொகை அளித்த பிரமுகர்களின் பட்டியல் வருமாறு.

மைசூர் மகாராஜா 1000 ரூ., திருவாங்கூர் மகாராஜா 500 ரூ, கொச்சி மன்னர் 500 ரூ, விஜயநகரம் மகாராஜா 1000 ரூ, வெங்கடகிரி ராஜா 500 ரூ, பொப்பிலி ராஜா 200 ரூ, ராஜா கஜபதிராம் 325 ரூ, திருப்பதி மஹந்து 500 ரூ, முத்துகுமாரசுவாமி முதலியார் 250 ரூ, சண்முக ராஜ முதலியார் 200 ரூ,

* Report of the Third India National Congress held at Madras. 1887 P.12

தவசிமுத்து நாடார் 500 ரூ, ராஜா சர்.டி. மாதவராவ் 200 ரூ, சர். எஸ். ராமசாமி முதலியார் 200 ரூ, மேதகு எஸ். சுப்பிரமணிய ஐயர் 400 ரூ, ஜி. மகாதேவ செட்டியார் 200 ரூ, பி. தியாகராய செட்டியார் 200 ரூ, ராமகிருஷ்ணய்யர் 200 ரூ, மகமது அப்துல்லா பாதுஷா சாஹப் 200 ரூ, ஏ. சபாபதி முதலியார் 200 ரூ, பி. அனந்தாச்சாருலு 200 ரூ, ஏ. தனகோட்டி முதலியார் 300 ரூ, பி. ரங்கய்ய நாயுடு 400 ரூ.

மேற்கண்ட பட்டியலையும், 'காங்கிரஸ் வினா - விடை' மூலம் திரண்ட நிதிப் பட்டியலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சென்னை காங்கிரஸ், தமிழறிந்த சாமான்ய மக்களிடமிருந்து சில்லரையாகப் பெற்ற தொகையே காங்கிரசின் உண்மையான வளர்ச்சிக்கு உதவியது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

அடுத்த சென்னை காங்கிரசுக்கு வந்த பிரதிநிதி களைப் பற்றி ஆராய்வோம்.*

| மாநிலம் | பிரதிநிதிகள் |
|---|---|
| சென்னை | 362 |
| பம்பாய் - சிந்து | 99 |
| பஞ்சாப் | 9 |
| வடக்கு மாநிலங்கள் | 45 |
| மத்திய மாநிலங்கள் | 13 |
| மத்திய மாநிலங்கள் | 79 |
| வங்கம் - பீஹார் | 607 |

* Congress Cyclopaedia Volume I K Iswara Dutt P 31

''760 பிரதிநிதிகள் இந்த ஜன சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டோர். அவர்களில் 607 பேர் மாத்திரமே வந்திருந்தனர்'' என சுதேசமித்திரன் வெளியிட்ட காங்கிரஸ் மகா சபை சரித்திரம் குறிப்பிடுகிறது.

இந்த 607 பிரதிநிதிகள், பின்வருமாறு பிரித்து வகுக்கப்பட்டனர்.*

| | |
|---|---|
| ஜமீன்தார், ஜாகீர்தாரர் | 60 |
| சொற்ப கிருஷிகர் | 95 |
| வர்த்தகர், கடைக்காரர் | 144 |
| ஸ்வல் வாத்தியார் | 95 |
| பத்திராசிரியர் | 42 |
| தொழிலாளிகள் | 17 |
| வைத்தியர் | 8 |
| வக்கீல், பாரிஸ்டர் பென்ஷன் ஜட்ஜுகள் | 206 |

மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கினராக வக்கீல், பாரிஸ்டர், ஜட்ஜுகளின் வர்க்கமாக இருப்பதைக் கவனிக்க.

இந்த வருக்கம் ஆட்சியாளரின் கடைக் கண் பார்வையில் பட்டு சட்டமன்ற அவைகளிலும், நீதி மன்றங்களிலும் பொறுப்புகளை விரைவில் கைப்பற்ற, காங்கிரஸ் பிரவேசத்தைப் பயன்படுத்திக் கொண்டது.

இந்தப் போக்கைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. ஜி.

* ஆரிய ஜன ஐக்கியம் அல்லது காங்ரெஸ்வரலாறு 1888. பக். 35

சுப்பிரமணிய ஐயர் ஒரு துணைத் தலையங்கம் எழுதினார். இதன் தலைப்பே, ''வக்கீல்! வக்கீல்! எங்கும் வக்கீல்!''

''இப்போழ்து புதிய நிபந்தனைகளின்படி இச் சென்னை சட்ட நிரூபண சபைக்கு மெம்பராக வேண்டுமென்று பிரயத்தனப்படும் சுதேசிகள் அநேகமாய் எங்கும் வக்கீல்களே! வடக்கே சுப்பராவும், ஜெம்புலிங்க முதலியாரும் வக்கீல்களே, சேலம் ஜில்லா விஜயராகவாசாரியாரும், தஞ்சை ஜில்லா சாமிநாதய்யரும்,கல்யாண சுந்தரய்யரும் வக்கீல்களே! அநந்தாசார்யரும் வக்கீலே. இப்படி எங்கும் வக்கீல்கள், அச்சபைக்கு நியமிக்கப்பட்டுவந்தால் கவுரவம் அச்சபைக்குக் குறைவுபடும்... மேலும் கவர்ன் மெண்டார் இங்கு ஜனங்களுக்காகச் செய்யப்படும் வேலைகளையெல்லாம் வக்கீல்களே செய்து முடிக்கிறார்களென்று சொல்லி வருகிறார்கள். இச் சமயத்தில் அங்குமிங்குமுள்ள மற்ற தொழிலாளிகளை நமது தேசத்தார் சட்ட நிரூபண சபைக்கு நியமிக்க வேண்டும். இப்படிச் செய்தால் தான் அச்சபை கவுரவப் படும்... பி.ஏ.பி.எல்.களும், வக்கீல்களும் போதுமான வரையில் சட்ட நிரூபண சபையில் இருக்கிறார்கள். ஆனால், விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இந்த விஷயங்களில் விசேஷ அனுபவமும், இவைகளை விருத்தி செய்வதற்கேற்ற ஆலோசனை சொல்லத் தக்கவர்களும் சட்ட நிரூபண சபையில் ஒருவர் கூட இல்லை.''*

★ சுதேசமித்திரன் 5-5-1893 - பக் 378

காங்கிரஸின் வரலாற்றை வருக்கக் கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்யும் பொழுது மேலும் பல விளக்கங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

''இடை நிலை மாற்றத்தில் இந்தியா'' எனும் நூலில் (India in Transition) தோழர் எம்.என். ராய், ''காங்கிரசின் விடுதலைப் போராட்டத்துடன் வருக்கப் போராட்டமும் நடைபெற்றுக் கொண்டே வந்திருக்கிறது. முன்னதன் ஆரவாரம் பின்னதை மறைத்து விடமுடியாதது'' என்ற கருத்தோட்டத்துடன் காங்கிரஸி வரலாற்றை ஆய்வு செய்துள்ளார்.

காங்கிரசின் உத்தியோக பூர்வமான அறிக்கையில் உள்ளபடி சென்னை மாநிலப் பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை 361, இடங்களின் பெயரும், பிரதி நிதிகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு வகுத்துத் தரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| சென்னை நகரம் | 106 | திருநெல்வேலி | 8 |
| கஞ்சம் | 4 | கடப்பை | 5 |
| விசாகப்பட்டணம் | 6 | கர்னூல் | 14 |
| கோதாவரி | 2 | பெல்லாரி | 17 |
| கிருஷ்ணா | 4 | அனந்தபூர் | 8 |
| நெல்லூர் | 8 | கோயம்புத்தூர் | 22 |
| செங்கற்பட்டு | 25 | சேலம் | 20 |
| வடார்க்காடு | 16 | நாமக்கல் | 5 |
| தென்னார்க்காடு | 12 | மலபார் | 15 |
| தஞ்சாவூர் | 38 | மைசூர் | 4 |
| திருச்சிராப்பள்ளி | 13 | செகந்திராபாத் | 1 |
| மதுரை | 10 | | |

மொத்தம் - 361

இந்த 361 பிரதிநிதிகளில் இந்துபிராமணர்கள் 138, இந்துக்கள், 138 (இவர்களுள் பெரும்பான்மையோர் செட்டிகள், செட்டியார்கள், முதலியார்கள்), முஸ்லீம்கள் 51, சுதேச கிறிஸ்துவர்கள் 11, கிறிஸ்துவர் - யூரேஷியர்கள் 10, பார்சி 1 (மலபாரில் இருந்து வந்தவர்)

## சென்னை மாநிலப் பிரதிநிதிகளில் பத்திரிகை ஆசிரியர், பத்திரிகைகள் முதலானவற்றைப் பற்றிய அட்டவணை வருமாறு

| பத்திரிகை ஆசிரியர் | பொறுப்புகள் |
| --- | --- |
| 1. ஜி.சுப்பிரமணிய ஐயர் பி.ஏ. திருவல்லிக்கேணி, சென்னை-5 | ஆசிரியர் - ஹிந்து ஆங்கில, வார மும்முறை இதழ் 1400 பிரதிகள் சுதேசமித்திரன் தமிழ், வார இருமுறை இதழ், பிரதிகள் 100 |
| 2. மு. வீரராகவாசாரியார், பி.ஏ., | மானேஜர் - ஹிந்து, சுதேச மித்திரன் |
| 3. ஏ.சி. பார்த்தசாரதி நாயுடுகாரு திருவட்டீஸ்வரன் பேட்டை, சென்னை, | ஆசிரியர், ஆந்திர பிரகாசிகா - தெலுங்கு வார இதழ் பிரதிகள் - 800 |
| 4. ராவ்சாஹுப் எஸ்.பி. நரசிம்மலு நாயுடுகாரு, கோயம்புத்தூர் | ஆசிரியர், தி கிரசெண்ட் |
| 5. என். ரங்கய்ய கவுண்டர் கோயம்புத்தூர் | மானேஜர், கலாநிதி செய்திப்பத்திரிகை |
| 6. டாக்டர். எஸ். புல்னே, எம்.டி., எழும்பூர் | ஆசிரியர் ஈஸ்டர்ன் ஸ்டார் |
| 7. வி.ஜே. மாணிக்கவேலு முதலியார், பிராட்வே, சென்னை. | பதிப்பாளர், ஐரீஷ் பிரஸ் உரிமையாளர் |
| 8. ராவ்சாஹுப் எஸ்.எம். சுந்தரம் ஐயர் பி.ஏ., மதுரை | உரிமையாளர் மதுரா மொயில் ஆங்கில வாரஇதழ் பிரதிகள் 250 |
| 9. கான் சாஹெப் ஷேய்க் மொய்தீன் சாஹெப், சேலம் | உரிமையாளர் சேலம் பேட்ரியாட் பிரஸ் |

| | |
|---|---|
| 10. கே. சுப்பா ராவ் | துணை ஆசிரியர் ஹிந்து |
| 11. எம்.என். ஸ்ரீரங்கராஜாசார்யா திருவல்லிக்கேணி | ஆசிரியர் - லோகானந்த சமாஜ் பத்ரிகா |
| 12. சையத் முர்துஸா சாஹெப் இராயப்பேட்டை | உரிமையாளர் ஆசிரியர் ஜராய்தாய் ரோஜ்கார் ஹிந்துஸ் தானி வார இதழ், பிரதிகள் 800 |
| 13. ஜி. வெங்கடசுப்பா ராவ், பி.ஏ., விசாகப்பட்டணம் | ஆசிரியர் - பிரகாசிகா, தெலுங்கு, மாதமிரு முறை, பிரதிகள் 300. |
| 14. வி. மாதவராய் நாயுடு, பி.ஏ., விசாகப்பட்டணம். | துணையாசிரியர், தெலுங்கு ஹார்ம் ஆங்கில வார இதழ் பிரதிகள் - 400 |
| 15. வி. நீலமேகாசாரியார் கும்பகோணம் | ஆசிரியர் - குடந்தை மித்திரன் |
| 16. ராவ்சாஹெப் சி. குன்ஹி கிருஷ்ண மேனன், பி.ஏ., மலபார் | ஆசிரியர், உரிமையாளர், கேரள பத்ரிகா |

பொதுவாக காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆங்காங்கு உள்ள பல அரசியல், இலக்கிய கலாசார தொழில்துறை அமைப்புகளின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னை மாநிலத்தின் இத்தகைய அமைப்புகளின் பெயர்கள் வருமாறு.

1. சென்னை பட்டதாரிகள் சங்கம் - சென்னை
2. சென்னை மகாஜனசபை - சென்னை
3. மெட்ராஸ் மெடல் டிரேடிங் கம்பெனி
4. கொச்சின் ரிபார்ம் அசோசியேசன்
5. அஞ்சுமான் - முப்த் -இ- இஸ்லாம்.
6. திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம்
7. தென்னிந்திய வர்த்தக்க கம்பெனி
8. மியூட்சல் இம்ரூவ்மெண்ட் சொஸைடி - திருவல்லிக் கேணி.

9. லோகானந்தாசமாஜ் - திருவல்லிக்கேணி
10. மத்வர்சபா
11. தேச சபா
12. ஹிந்துநிதி - புரசைவாக்கம்
13. சாணார் முன்னேற்றச் சங்கம்
14. விவேக விருத்திசபா - முத்தியால்பேட்டை
15. பெர்ஹம்பூர் அசோசியேசன்
16. மசூலிப்பட்டணம் ஹிந்து டிபேட்டிங் சொஸைடி
17. மகாஜனசபை - விசாகப்பட்டணம்
18. மகா ஜனசபை - விஜயநகரம்
19. வித்தியாபிவிர்த்தினி சபா - விஜயநகரம்
20. மகாஜனசபை - குண்டூர்
21. ரேட் பேயர்ஸ் அசோசியோசன் - நெல்லூர்
22. மகாஜனசபை - ஓங்கோல்
23. சித்தூர் நேடிவ் அசோசியேசன்
24. மகாஜனசபை - திருப்பாப்புலியூர்
25. தஞ்சாவூர் பீப்பிள்ஸ் அசோசியேசன்
26. விக்டோரியா ஜுப்லி லைப்ரரி
27. தஞ்சாவூர் ரேட் பேயர்ஸ் அசோசியேசன்
28. திருவாடி - ஜுப்லிரீடிங்ரம்
29. நாகப்பட்டிணம் மெர்சன்ட்ஸ் அசோசியேசன்.
30. மகாஜனசபை - திருவிடமருதூர்.
31. கும்பகோணம் கைவினைஞர்கள் சங்கம்
32. கும்பகோணம் கிளப்
33. கோட்டையூர் சபை

34. ஸ்ரீரங்கம் பேட்ரியாடிக் அசோசியேசன்
35. மதுரை யூனியன் கிளப்
36. சர்வஜனசபா
37. கடப்பை லிடரி அசோசியேசன்
38. மகாஜனசபை - பீலர்
39. மகாஜனசபை - பீலர்
40. பீப்ள்ஸ் அசோசியேசன் - பெல்லாரி
41. கோயம்புத்தூர் எஸ். டி. ஆர். சபா
42. மகாஜனசபை - சத்தியமங்கலம்
43. எஸ். ஜே. எஸ். பாலக்காடு
44. உத்தரகேரளா சபா
45. மைசூர் ரேட்பேயர்ஸ் அசோசியேசன்
46. கொச்சின் ரிபார்ம் அசோசியேசன்.

இந்த அமைப்புகளைத் தவிர, தனிப்பட்ட முறையில் பல நகரங்களின், பொதுக் கூட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தஞ்சாவூரில் இருந்து ஆர். ராமசாமிபிள்ளை எனும் தமிழ்ப் புலவரும், திருச்சி - சத்தியமங்கலத்தில் இருந்து 'பிரேம கலாவத்யம்' எனும் நாவலை எழுதிய எஸ்.வி.குருசாமி சர்மாவும், ராமநாதபுரம் மன்னர் பாஸ்கரசேது பதியும், பிரபல வழக்கறிஞர் ஏர்ட்லி நார்ட்டனும், பிற்காலத்தில் ஜஸ்டீஸ் கட்சியின் தலைவராக விளங்கிய பி. தியாகராய ரெட்டியாரும், அறிஞர் பூண்டி ரங்கநாத முதலியாரும், 'சித்தாந்த தீபிகை' பத்திரிகையை பிற்காலத்தில் தொடங்கிய ஜே. எம். நல்லசாமிப்பிள்ளையும் மாநாட்டில் பிரதிநிதி

களாகவும், பார்வையாளர்களாகவும் கலந்துக் கொண்டனர்.

கும்பகோணம் சங்கர மடத்தின் அருள் திரு. சங்கராச்சாரியாரின் சார்பில் ஒரு பிரதிநிதியும், தருமபுர ஆதீன கர்த்தர் சார்பில் ஒரு பிரதிநிதியும் காங்கிரஸ் மாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆங்கிலமே மோதி ஒலித்த காங்கிரெஸ் மாநாட்டில், தமிழில் தேர்ந்த பொருளறிவோடு பேசி, ஹ்யூம் உட்பட அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்ற கும்பகோணம் மூக்கன் ஆசாரி ஒரு பிரதிநிதியாகக் கலந்துக் கொண்டது தனியொரு சிறப்பாகும். ''காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க் குரல்'' எனும் அடுத்துவரும் தலைப்பில் மூக்கனாசாரியின் சாதனைகள் கூறப்பட்டுள்ளன.

ஆங்கிலம் தவிர, இந்திய மொழிகள் பலவற்றிலிருந்தும் சுமார் மூன்னூறு கடிதங்களும், தந்திகளும் மாநாட்டை வாழ்த்தி வந்திருந்தன.

மாநாட்டின் மற்றொரு சாதனை, இதுவரை நாற்புற சுவர்களின் மத்தியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு முதன் முறையாக 130 அடி நீளமும், 92 அடி அகலமும் வாய்ந்த மாநாட்டுப் பந்தலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டுகளிக்கும் வண்ணம் சென்னை காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது.

ஒரு முஸ்லீம் தலைமை ஏற்க, முஸ்லீம்களும் திரளாக சென்னை காங்கிரசில் கலந்துகொண்டு, காங்கிரஸ் ஓர் இந்து காங்கிரஸ் என்ற எதிர்ப்

பிரச்சாரத்தை முறியடித்த பெருமையும் சென்னை காங்கிரசிற்கு உண்டு. இந்த காங்கிரசில், இந்து முஸ்லீம் உறவிற்கு தரும சங்கடமான ஒரு நிலையை தோற்றுவிக்கும் வண்ணம் ஒரு தீர்மானம் வரயிருந்தது; பசு வதைத் தடுப்புத் தீர்மானமே, அது. சுரேந்திரநாத் பானர்ஜியின் ஒரு விளக்கம், தருமசங்கடத்தைத் தவிர்த்தது. ஒரு குறிப்பிட்ட வகுப்பு அல்லது சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு இசைவற்றதாக உள்ள எந்த ஒரு தீர்மானத்தையும் காங்கிரஸ் ஒப்புக் கொள்ளக்கூடாது எனும் நடைமுறையை காங்கிரஸ் பின் பற்றிவருவதால் பசுவதைத் தடுப்புத் த்தீர்மானத்தை காங்கிரஸ் ஏற்கத் தேவையில்லை என விளக்கம் தந்தார், சுரேந்திரநாத் பானர்ஜி; தீர்மானமும் அநுமதிக்கப் படவில்லை.

ராஜா ஸர். டி. மாதவராவ் தலைமையில் 120 உறுப்பினர்கள் கொண்ட வரவேற்புக் குழு மாநாட்டின் வெற்றிக்கு பாடுபட்டது. திரு. மாதவராவ் பல சமஸ்தானங்களில் திவானாக பணி புரிந்து, சிறந்த நிருவாகி எனப் புகழ் பெற்றவர். ஆங்கிலேயர்களின் அரசியல், பொருளாதார சாத்திரங்களிலும், ஆங்கில மொழியிலும் ஆழ்ந்த புலமை எய்தியவர்.

இவர் தமது வரவேற்பு உரையில் வழக்கம்போல் ஆங்கிலேயே ஆட்சியின் புகழ் பாடப்பட்டது. காந்த சக்தியோடு, இரும்பு பற்றிக் கொள்வதுபோல், பிரிட்டனுடன், இந்தியா ஈர்ப்புண்டது எனக் குறிப்பிட்டார்.

மூன்றாவது காங்கிரசின் தலைவராக பொறுப் பேற்ற பம்பாய் மாநில முஸ்லீம் தலைவர் பத்ருதீன்

தியாப்ஜியின் தலைமையுரையில், ''காங்கிரசும் மகம் மதியரும்,'' எனும் தலைப்பில் அமைந்தச் சொற்பெருக்கு, மாநாட்டுச் சொற்பொழிவுகளில் தனிச் சிறப்பும் கொண்டது. ''இந்தியர்களின் அரசியல் உறுதிப்பாடுகளின் அடிப்படைமீது எழுப்பப்பெற்ற தேசிய இனப்பண்புதான், நான் விரும்புவது,* எனக் கூறி காங்கிரசின் தேசிய ஒற்றுமைக் குறிக்கோளை நினைவுப்படுத்தினார், தியாப்ஜி.

காங்கிரஸ் கூட்டங்களில் முஸ்லீம்கள் கலந்து கொள்ளக் கூடாது என அலிகார் இயக்கத்தலைவர் சையது அகமதுதான் கனல் தெறிக்க பிரசார்ரம் செய்த காலத்தில், தியாப்ஜி காங்கிரசில் முஸ்லீம்கள் சேர்வது, வரவேற்க வேண்டியது என பதிலளித்தார். சென்னை காங்கிரசின் குறிப்பிடத்தக்கச் சிறப்புகளில் இதுவும் ஒன்று.

''காங்கிரசும் மகம்மதியரும்'' எனும் பொருளில் பத்ருதீன் தியாப்ஜி பேசியதில் ஒரு பகுதி வருமாறு;

''மஹமதியப் பெருவகுப்பினர் சென்ற இரண்டு வருஷத்துகள் கூட்டங்களிலும் கலக்காமல் இருப்பது நமது ஜனசபையின் பிரதிநிதித் தன்மைக்கு பங்கமென்று சிலர் சொல்லுகிறார்கள். சில மஹமதியர் மாத்திரமே அங்ஙனமே சில நிரந்தரமற்ற காரணங்களை ஒட்டி விலகியிருந்தனர். எனினும், இந்த வருஷத்துக் காங்கிரஸ் சபை விஷயத்தில் அந்தத் தூஷணை சொல்வதற்குச் சிறிதேனும் ஏதுமில்லையென்று

★ Evolution of the Congress - u.c. Gopalan 1934 P 5

நம்புகிறேன். என்னுடைய சொந்த அபிப்ராயம் மாத்திரமே யன்றிப் பம்பாய் அஞ்ஜுமான் இஸ்லாம் சங்கத்தின் *காரியதரிசியென்ற முறைமையிலும்* நான் சொல்லுவது யாதெனில் பாரததேசத்து ஹிந்து, மகம்மதியர், கிறிஸ்தவர், பார்ஸிகள் என்ற வகுப்பினருடைய நிலைமையை உத்தேசித்தாலும், இதுவரை அவர்களுக்கிடையே நிகழ்ந்து வந்திருக்கும் பரஸ்பர சம்பந்தங்களை உத்தேசித்தாலும் எந்தக் காரணம் பற்றியும், பொது நலத்தைக் கருதியே காரியங்களில், எல்லாரும் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய விவகாரங்களில் ஒரு பகுதி மாத்திரம் பிரிந்து நிற்கத் தக்க யாதொரு ஏதுவுமில்லை. இதைப் பகிரங்கமாக அறிவிக்கும் பொருட்டாகவே நான் என் உடம்பு சொஸ்தமில்லாத நிலைமையில் இந்த சபையின் கண்ணே அக்ராசனம் வஹிக்க உடன் பட்டேன். பம்பாய் மாகாணத்திலுள்ள நாங்கள் இந்தக் கொள்கையைத்தான் அனுசரிக்கிறோம். இனி வங்காளம், சென்னை, வடமேற்கு மாகாணங்களிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளின் தொகையையும் குணத்தையும் ஸ்தானத்தையும் கருதுமிடத்தே பாரத தேச முழுமையிலும், சிற்சில முக்கியஸ்தர் தவிர மற்றப்படி மகம்மதியர் அத்தனைபேரும் என்னுடைய கொள்கையையே தழுவி நிற்கிறார்கள் என்று நம்ப இடமுண்டாகிறது. (கேளுங்கள், கேளுங்கள்; கரகோஷம்)''*

இரண்டாம் காங்கிரசில் தாதாபாய் நவ்ரோஜி சமூக சீர்திருத்தம் சம்பந்தமாக வெளியிட்ட கருத்து, காங்கிர

★ காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம், முதல் பாகம் இரண்டாம் பதிப்பு - சுதேசமித்திரன் வெளியீடு. பக்.49-50

சின் சமூக சீர்த்திருத்தவாதிகளைத் திருப்திப்படுத்த வில்லை. காங்கிரஸ், சமூக சீர்திருத்ததிலும் பங்கு கொள்ள வேண்டும் என இவர்கள் தொடர்ந்து வலி யுறுத்தி வந்தனர். இதனால் சென்னை காங்கிரசிலும் பத்ருதீன் தியாப்ஜி சமூக சீர்திருத்தம் பற்றி தாதாபாய் நவ்ரோஜியின் பேச்சின் ஒரு பகுதியை மீண்டும் மேற்கோளாக தமது பேச்சில் எடுத்தாண்டார்.

ஹ்யூமின் ''உத்தியோகப்பூர்வமான காங்கிரஸ் அறிக்கை'' பத்ருதீன் தியாப்ஜி, சமூகசீர்திருத்தம் பற்றி கருத்து சொல்ல வேண்டியதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

> *''எதிர்ப்பாளர்களை அமைதிப்படுத்த சென்ற காங்கிரசின் அதிகாரபூர்வமான விளக்கத்தின் ஒரு வரியைக் கூட மாற்றவோ, சேர்க்கவோ தேவையில்லை எனக் கருதப் பட்டது. ஆனால் அந்த எதிர்ப்பாளர்களோ தொடர்ந்து தங்கள் தாக்குதல்களைத் தொடர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத் துடன் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சமீப காங்கிரசில் கூட திரு. பத்ருதீன் தியாப்ஜி இந்த விஷயமாக மீண்டும் ஒரு முறை விளக்கமளிக்க கட்டாயப் படுத்தப்பட்டார்.''**

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரத்தின் முதல் பாகத்தில் 'காங்கிரஸ் சபையும் ஆசாரத் திருத்தமும்'' என்ற தலைப்பின் செய்தி வருமாறு.

---

★ Report of the Third Indian National Congress held at Madras - P.7

" இந்த ஜனசபை ஆசாரத்திருத்த விஷயத்தை ஊக்கத்துடன் விவகரிக்கவில்லையென்று குற்றங் கூறுதல் பிழையென்று தாதாபாய் நவுரோஜி சொல்லியதை, தியாப்ஜி சாஹெப் எடுத்துக்காட்டி அதற்கு முகாந்தரம் தாதாபாய் நவுரோஜி சொல்லியதைத் தாம் மேலும் விளக்கிக் கூறுகிறார். ஆசாரத்திருத்த விஷயமாவது வெவ்வேறு ஜாதி, வெவ்வேறு மதம், வெவ்வேறு வகுப்பு வெவ்வேறு மாகாணத்துக்கு வெவ்வேறு மாதிரியாக இருக்கிறது. ஜன சபையோ எல்லாருக்கும் பொது. ஆதலால் இதில் எல்லாருக்கும் பொதுவாக ராஜ்யத் திருத்த விஷயத்தை மாத்திரம் விவரிப்பதே பொருந்துமென்று காட்டுகிறார்.

"உங்களுடைய ஆராய்ச்சிக்குப் பல விவகாரங்கள் கொண்டு வரப்படும். அவற்றை விவாதிப்பதில் எல்லோருக்கும் கவுரவமுண்டாகத் தக்க தோரணையுடன் விவாதிப்பீர்களென்று நம்புகிறேன், மேலும் கேட்பதில் நிதானமும், ஆக்ஷேபிப்பதில் நியாயமும், வார்த்தைகளில், யதார்த்தமும் முடிவுகளில் தர்க்க வலிமையும் காண்பீர்களானால் ராஜாங்கத்தார் தயவு கூர்ந்து கவனித்து நமக்கு நியாயம் செலுத்துவார்கள் என்பதில் ஸந்தேகமில்லை."*

காங்கிரஸ் "எல்லாருக்கும் பொதுவான ராஜ்ய திருத்த விஷயத்தை மாத்திரம்" கவனிக்கும் என மீண்டும் வற்புறுத்தப்பட்டதால், சமூக சீர்திருத்த வாதிகளான காங்கிரஸ் அன்பர்கள் அரசியல் சீர்திருத்த

★ Report of the Third Indian National Congress held at Madras P.51-52

மாநாடு நடைபெற்று முடிந்த பிறகு அதே இடத்தி லேயே சமூக சீர்திருத்த மாநாட்டையும் நடத்தும் முற் போக்கான முடிவை சென்னையில் எடுத்து, அதன்படி முதல் சீர்திருத்த மாநாட்டையும் 1887-ல் சென்னையி லேயே நடத்தித் தொடக்கி வைத்தனர்.

தேசியம், சமூக சீர்திருத்தத்திற்கும் பொறுப் பேற்றது, என்பதை சென்னை காங்கிரஸ் உணர்த்துகிறது.

அடுத்து இங்கிலீஷ் படித்த வருக்கம், பிரிட்டிஷ் விசுவாசிகளே, ராஜத்துரோகிகள் அல்லர் என்பதையும் பத்ருதீன் தியாப்ஜி தெளிவுப்படுத்தினார்.,

இந்திய மக்களை பிரிட்டிஷ் ஆட்சியிடம் விசுவாசம் காட்டத் தூண்டியும், பிரிட்டிஷ் ஆட்சியின் நற்பயன்களை அடுக்கிக் கூறி, நன்றிப் பெருக்குடன் மகிழ்ந்தும் காங்கிரஸ் தலைவர்கள் பிரசாரம் செய்து வந்த நிலையையே, பிரிட்டிஷ் அதிகார வருக்கமும், ஆங்கிலோ - இந்திய ஏடுகளும் 'ராஜத்துரோகம்' எனச் சீறியது. காரணம் இதுதான். இந்தியாவை ஒரு நாடாக (Nation) உருவாக்குவதிலும், அரசியல் பால பாடத்தைக் கற்பிக்க எடுத்த முயற்சிகளிலும் காங்கிரஸ் ஈடு பட்டதின் எதிர்கால விளைவை அவர்கள் நன்கு மதிப் பிட்டனர்.

இவர்களுக்கு பதில் அளித்து பத்ருதீன் தியாப்ஜி பேசினார்.

''அப்பால் ஸ்ரீமான் பத்ருதீன் தியாப்ஜி இங்கிலீஷ் படித்த வகுப்பினரை ராஜத்துரோகிகள் என்று கூறுதல் தவறென்று பேசுகிறார். பிரிட்டிஷ் ராஜ்யத்தின்

அருமை பெருமைகளை இங்கிலீஷ் படித்த வகுப்பினர் அறிந்ததுபோல் இதர வகுப்பினர் அறிய நியாயமில்லை யென்பதை எடுத்துக் காட்டுகிறார். நல்ல ரஸ்தாக்கள், ரயில் பாதைகள், தந்தி, தபால் ஆபீஸ், பள்ளிக்கூடம், காலேஜ், யூனிவர்ஸிடி, ஆஸ்பத்திரி இவற்றால் விளையும் நன்மைகளை கிருஷிகர் அறிவதைக் காட்டிலும் இங்கிலீஷ் படித்த வகுப்பினரே நன்றாக அறியக் கூடுமென்பதாகத் தெரிவிக்கிறார். ''நாளை - அதைக் கடவுள் தடுப்பாராக - ருஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்கும் இந்த ராஜ்யத்தைக் காட்டிலும் இங்கிலீஷ் ராஜ்யம் சிறந்ததென்ற விஷயம் யாருக்குத் தெரியும்? படித்த வகுப்பினருக்கா? பாமரருக்கா?'' என்று கம்பீரமாக வினவுகிறார். பின்பு நம்மை ராஜத்து ரோகிகளென்று சொல்பவர்கள் தாமே பிரிட்டிஷ் ஸர்க்காருக்குப் பெரிய தூஷணை ஏற்படுத்துகிறார்க ளெண்கிறார். *ஒரு தேசத்தில் படித்தவர்கள், சரித்திரம்,* ராஜீய சாஸ்திரம் தெரிந்தவர்கள், - அத்தனை பேரும் ராஜத்துரோகிகளென்றால், அந்த ராஜ்யம் சுத்த மோசம்; ஒன்றுக்கும் உதவாத ராஜ்யம் என்று அர்த்தமாகும். அந்த ராஜ்யத்துக்கு அதனால் இகழ்ச்சி ஏற்படுமேயன்றிப் படித்த கூட்டத்தார் ஒரு நாளும் இகழ்ச்சிக்குரியராக மாட்டாரென்பதை சுட்டிக்காட்டுகிறார். ஆனால் நாம் ராஜத்துரோகிகள் அல்லோ மென்றும் **பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு இங்கிலீஷ் படித்த சுதேசிகளே** சரியான **மூலபலமென்றும்** முடிவுரை சொல்லு கிறார். (அழுத்தக் குறியீடு இந்நூலாசிரி யருடையது).

*காங்கிரசின் தோற்றத்திற்கு ருஷ்ய படையெடுப்பு அச்சுறுத்தல் ஒரு காரணமா?*

ருஷ்ய அச்சுறுத்தல் பெற்றெடுத்த குழந்தையா காங்கிரஸ்? எனும் ஓர் ஆய்வுக் கூறும் உள்ளது. 1889, டிசம்பர் 26-ல் பம்பாயில் கூடிய ஐந்தாவது காங்கிரசிற்கு தலைவர் வில்லியம் வெட்டர்பர்ன் (1836-1918). இவருடைய தலைமையுரையில் ருஷ்ய படையெடுப்பின் அச்சுறுத்தல் பற்றியும் அதன் எதிர்வினை எவ்வாறு இருந்தது என்பதும் பின்வருமாறு விளக்கப்பெற்றுள்ளது.

''ஜன சபை விஷயத்தில் அவநம்பிக்கைப்படும் ஆங்கிலேயரிடம் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். இந்த ஜன சபையை ஏற்படுத்தினோர் பிரிட்டிஷ் ராஜ்யத்தினிடம் மிகுந்த பற்றுதலுடை யவர்கள், இதைவிட்டு ருஷ்யாவின் ஆட்சிக் கீழ்ப் புகுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள். இங்கிலீஷ் ராஜ்யம் நாகரீகமானது. ருஷியர் ஆட்சி கொடுங் கோன்மை, ருஷியா நம்மீது படையெடுத்து வர வேண்டுமென்ற உத்தேசங்கள் கொண்டிருப்பதைப் பற்றி நான் ஒரு இந்திய நண்பருடன் பேசிக் கொண் டிருக்கையிலே அவர் சொன்னார்.

''இந்தியா ருஷியரின் கீழ்பட்டால் உங்களுக்குக் கஷ்டமில்லை. நீங்கள் கப்பல்களில் ஏறிக்கொண்டு தொலைவிலே உள்ள உங்கள் நாட்டுக்குச் சென்று சௌக்கியமாக வாழ்வீர்கள். நாங்கள் ஸகல சுதந்திரங் களையும் நாட்டையும், எதிர்காலத்து நம்பிக்கையையும் இழந்து வருந்துவோம்'' என்றார்.

ஆனால், வெறும் வாய்ச்சொல் அதிகப் பயன்படா தென்றும் செய்கைகளில் அந்த அபிமானத்தைத் தெரிவித்தால் மாத்திரமே நம்பலாமென்றும் சிலர் கூறலாம். இந்தியாவின்மீது படையெடுக்க வேண்டு மென்று யோசனைகள் செய்யும் போதெல்லாம் ருஷிய சேனாபதிகள் அங்ஙனம் தாம் படையெடுத்து வருகையில் இந்தியர்கள் ஒரு பக்கம் கிளம்பிக் கலகம் நடத்துவார்களென்றும், அதுவே தமது வெற்றிக்கு முக்கிய உதவியாகுமென்றும் நம்பியிருக்கிறார்களென்பது ஸகலருக்கும் தெரிந்தவிஷயம். 1885 -ல் அவர்கள் இந்த யோசனையைக் கொஞ்சம் ப்ரயோகம் பண்ண உத்தேசித்து இந்தியர்கள் என்ன செய்கிறார்கள் பார்ப் போமென்று தாம் படையடுப்பதும்போல நடித்துக் காட்டினார்கள், அப்போது இந்தியாவில் கலகம் தோன்றி யிருந்தால் நமது நிலைமை பலவீனப் பட்டிருக்கும். ருஷியர் பெரிய மகிழ்ச்சி கொண்டாடி யிருப்பார்.'' ஆனால், இங்கிலாந்தின் கஷ்டத்சையை இந்தியா தனக்கு அனுகூல தசையென்றெண்ண வில்லை. சுதேசீயப்பத்திரிகைகள் பெருங் கூச்சலிட்டு இங்கிலாந் துக்குப் பண உதவியையும் ஜன உதவியும் செய்ய வேண்டுமென்று கூற நாடுமுழுவதும் நமக்கு அனு கூலமான கிளர்ச்சியுண்டாயிற்று.''*

இந்த 'இங்கிலீஷ் படித்த சுதேசிகளை' ஆங்கில அதிகார வருக்கத்தினில் சிலரும், ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளும் நம்ப முன்வரவில்லை.

★ காங்கிரஸ் மகா சபையின் சரித்திரம் முதல் பாகம், சுதேசமித்திரன் வெளியீடு, 1929-பக்.85-87.

எளிய இந்தியப் பாமர மக்கள் இதைப்பற்றியெல்லாம் சிந்திக்கும் நிலையிலும் வைக்கப்படவில்லை. ''இங்கிலீஷ் படித்த சுதேசிகள்'' முன் இருந்த உடனடிக் கவலையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சந்தேகத் தைப் போக்குவதிலேயே இருந்தது. ஆகையால் மீண்டும் மாநாடுகளிலும், வெளியீடுகளிலும் தங்கள் நிலைமையை எடுத்துக் கூறிவந்தனர்.

1887-ம் காங்கிரசில் மொத்தம் பதினொன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஹ்யூம், சுரேந்திர நாத் பானர்ஜி, பாபு காளிசரண் பானர்ஜி, நரேந்திரநாத் ஸேன், பண்டித மதன்மோகன் மாளவியா, அம்பிகா சரண் மஜூம்தார், அச்வினி குமார் தத்தர், உமேஷ் சந்திர பானர்ஜி, பிபின் சந்திரபால் முதலான பல தலைவர்கள் விவாதங்களில் கலந்துகொண்டனர்.

முதல் நாள் 41 பேர்களும், இரண்டாம் நாள் 25 பேர்களும், மூன்றாம் நாள் 47 பேர்களும், நான்காம் நாள் 44 பேர்களும் பேசினர்.

விவாதங்களில் பங்குகொண்ட பிரதிநிதிகள் வருமாறு: பி. சோமசுந்தரம் செட்டியார், என். சுப்பிரமணியம், வழக்கறிஞர் ஏர்ட்லி நார்ட்டன், சி. சங்கரன் நாயர், சேலம் எஸ். ராமசாமி முதலியார், ராவ் சாஹேப், சபாபதி முதலியார், ராவ் சாஹேப் டி.எம். மூக்கணாச்சாரி, சுந்தரம் சாஸ்திரி, அண்ணாசாமி ஐயர், ரங்கய்ய நாயுடு.

சென்னை காங்கிரசின் முதல்நாள் கூட்டம் டிசம்பர் 27-ந் தேதி செவ்வாய்க்கிழமை, பிற்பகல்

தொடங்கியது. மாதவராவ், உமேஷ் சந்திர பானர்ஜி, எஸ். சுப்பிரமணிய ஐயர், ராஜா ராம்பால் சிங், தியாப்ஜி ஆகியோர் பேசினர்.

இரண்டாம் நாள் கூட்டத்தில் லக்னோவில் இருந்து வந்த ஹமீது அலி என்பவர் சென்னையைப் பற்றி முன்பு ஒருசமயம் சுரேந்திரநாத் பானர்ஜி குறை கூறிப் பேசியதை நினைவூட்டி மறுத்துப் பேசினார்.

சுரேந்திரநாத் பானர்ஜி கல்கத்தா இந்தியன் அசோசியேஷன் சார்பில் அகில இந்திய அடிப்படையில் ஒரு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்தியன் சர்விசின் தேர்விற்கான வயது வரம்பு 21-ல் இருந்து, 19 ஆகக் குறைக்கப்பட்டதை எதிர்த்து, அகில இந்திய அடிப்படையில் எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தொடங்கவே, இந்தச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். அரசியல் கிளர்ச்சிக்கு ஆதரவு தேடி ஒரு பொதுக் கருத்தை உருவாக்க இந்தியாவின் பல பாகங்களுக்குச் சுற்றுப் பயணம் சென்ற முதல் அரசியல்வாதி சுரேந்திரநாத் பானர்ஜி.

1877-ல் லாகூர், அமிர்தசரஸ், மீரட், டெல்லி, அலிகார், ஆக்ரா, லக்னோ, கான்பூர், அலாகாபாத், சூரத், பூனா முதலான இடங்களுக்குச் சென்றுவிட்டு சென்னை வந்தார். இந்தச் சமயத்தில்தான் சென்னையில் தமது கிளர்ச்சித் திட்டத்திற்கென ஆதரவு இல்லை என்ற நோக்கில், சென்னை மாநிலத்தை ''இருளடைந்த மாநிலம்'' (Benighted province) என வருணித்தார்.

மேற்கூறப்பட்ட ஹமீது அலி சென்னையை 'இருளடைந்த மாநிலம்' எனக் குறிப்பிட்டதை தமது பேச்சில் மறுத்தார். 'இருளடைந்த' என்பது தவறான பிரயோகம் என எடுத்துரைத்தார்.

சென்னையைச் சேர்ந்த ஒருவர் எடுத்துரைக்க முன்வராத சூழலில், லக்னோ நகரைச் சேர்ந்த ஹமீது அலி சென்னை மாநிலத்திற்கு கற்பிக்கப்பட்ட களங்கத்தை நீக்க முன்வந்தது நன்றியுடன் நினைக்கத் தக்கச் சிறப்பல்லவா?

ஹமீது அலியின் பேச்சிற்கு பயன்கிட்டியது. சுரேந்திரநாத் பானர்ஜியின் வாயினாலேயே, ''சென்னை, 'இருளடைந்த' மாநிலம் இல்லை; மற்ற சகோதர மாநிலங்களுக்கு ஒளிகாட்டும் மாநிலம்' எனத் தமது பேச்சில் குறிப்பிட்டார்.*

'இருளடைந்த மாகாணம்' என்று குறிப்பிடப் பட்டதை பாரதியார் சென்னையின் காங்கிரஸ் மிதவாதக் கட்சியைத் தாக்குவதற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

1907 பிப்ரவரி 2-இல் 'இந்தியா' வார இதழில் ''The Madras Moderates - சென்னையில் பழைய கக்ஷியார்'' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் ''இருளடைந்த மாகாணம்'' எனும் சொற்றொடரைப் பயன்படுத்தி மிதவாதக் காங்கிரஸ் கட்சியை பின்வருமாறு விமர்சனம் செய்துள்ளார்.

---

★ Report of the third Indian National Congrees held at Madras. P 83

''மற்ற மாகாண வாசிகளாகிய பழைய கக்ஷியார், புதுக் கக்ஷியாரின் முறைகளை மனப்பூர்வமாய் ஒப்புக் கொள்ள முடியவில்லை. ஆதலால் இவர்கள் தங்கள் மனசாட்சி கூறியபடியே பழைய கக்ஷியில் இருப்பதற்கு அவர்களை ஒருவரும் குறைகூற முடியாது. தங்களுக்கே தங்கள். கக்ஷி பயனற்றுதென்று தோன்றினால் ஒருவருடைய சிபார்சுமின்றி தாமே புதுக்கக்ஷியில் வந்து விழுவார்கள். ஆனால் மற்ற மாகாணவாசிகளால் 'இருளடைந்த, மாகாணம் என்றதைக் கேட்கக் கூடிய பாக்கியம் பெற்ற நமது சென்னையில் நாம் முன்கூறியபடியே ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யரும் அவரைப் பின்பற்றியொழுகும் சிலரும் தவிர, மற்றபெரும் பெயர்களெல்லாரும் தாங்கள் பழைய கக்ஷியைச் சார்ந்த பரம சாதுக்களென்று சொல்லிக் கொண்டு வீட்டிற்குள் தூங்குகின்றார்கள்''

1907 ஏப்ரல் 27-ஆம் 'இந்தியா' இதழில் சென்னையில் பழைய கட்சியார் 'புதுக் கட்சி'த் தலைவ ராகிய விபின சந்திரபாலருக்கு 'உபகாரம்' செய்யாமல் விலகியிருந்ததைக் கண்டித்து எழுதிய பொழுது'' சென்னை இருளடைந்த மாகாணம்'' என்று சொல்லப்படுவது இந்தப் போலி மாந்தர் மனத்துள் அடங்கியிருக்கும் இருளைக் கருதியே போலும்'' என்று குறிப்பிட்டுள்ளார், பாரதியார்.

தீர்மானங்களின் மீதான விஷயங்களைத் தொடக்கி வைத்தவர், சுரேந்திரநாத் பானர்ஜி. காங்கிரசின் முக்கிய அரசியல் கோரிக்கையான ''பிரதிநிதித்துவ அமைப்பு'' பற்றிய தீர்மானம் - கடந்த இரண்டு

காங்கிரஸ் சபைகளிலும் நிறைவேற்றப் பட்டது. நிறைவேற்றப்படுவதற்கு முன்பு சுரேந்திரநாத் பானர்ஜி தமது கருத்துகளை கேட்டார் பிணிக்கும் ஆங்கிலமொழிப் புலமையில் விளக்கினார். தொடக்கவுரையே மின்னியது:

''காங்கிரஸ் சபையின் கொடியை விரித்துப் பறக்க விடுகிறோம். இந்தக் கொடியிலே, 'இந்தியாவிற்கு பிரதிநிதியாட்சி வேண்டும்' எனும் வீறார்ந்த சொற்கள் பொன்னென மின்னுகின்றன; இவற்றை எவரும் அழிக்க முடியாது.''

கிரேக்கம், இத்தாலி முதலிய நாடுகளின் விடுதலைப் போராட்டங்களையும், இவற்றிற்கு பிரிட்டிஷ் ஆதரவுகாட்டியதையும் எடுத்துரைத்த சுரேந்திரநாத் பானர்ஜி இந்தியா மட்டும் பிரிட்டிஷ் அன்னையின் அரவணைப்பில் சுகம் காண முடியும் என்று 'திருப்தி' யுற்றார். அவர் பேசினார்;

''இத்தாலி' விடுதலைக்குப் போராடிய காலத்தில், இங்கிலாந்து தனது நேசக் கரத்தை நீட்டியது: உலக தேசிய நாடுகளிடையே தனக்கு ஓர் இடம் தேடிக் கொள்ள உறுதி கொண்ட கிரேக்கத்திற்கு, இங்கிலாந்து செவிலித் தாயாய் உதவியது. நாம் இத்தாலியர்களோ, கிரேக்கர்களோ இல்லை. ஆனால் அவற்றிற்கும் மேம்பட்டவர்கள். நாம் பிரிட்டனின் குடிமக்கள். (கேளுங்கள், கேளுங்கள், கரகோஷம்) இங்கிலாந்து, நம்மை அதாவது சொந்தப் புத்திரர்களாக ஏற்றுக் கொண்டு அரவணைத்துக் கொண்டது.

காங்கிரசின் அமைப்பிற்கான விதிமுறைகளைப் பற்றி ஆய்ந்து அறிக்கை அளிக்க முப்பத்திரெண்டு பேர்களைக் கொண்ட குழு அறிவிக்கப்பட்டது. இதில் எஸ். சுப்பிரமணிய ஐயர், எஸ். ஏ. சுவாமிநாத அய்யர், சபாபதி முதலியார், சேலம் சி. விஜயராகவாசாரியாரும் அடங்குவர்.

ஐந்தாவது தீர்மானமும், எட்டாவதுதீர்மானமும் சற்று உணர்ச்சிப் பொறிகள் மின்னித் தெறிக்க விவாதிக்கப்பட்டன. ஐந்தாவது தீர்மானம், பிரிட்டிஷ் அரசுக்கு சோதனைக் காலத்தில் உதவுவதற்கு காப்புப் படை (A System of voluntering crops) யைப் பற்றியதாகும். 'எல்லா மக்களும் ஆயுதம் தரிக்க இடங்கொடுக்க வேண்டும்' என்பது ஆறாவது தீர்மானமாகும். ரஷ்ய படையெடுப்பு அச்சத்தால் பிரிட்டிஷ் அரசுக்கு துணையாக நிற்கவேண்டும் எனும் ராஜ விசுவாசத்தால் இந்தத் தீர்மானங்கள் மீது விறுவிறுப்பான விவாதம் நடைபெற்றது.

ஐந்தாம் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியவர் புகழ் பெற்ற நீதிபதி சங்கரன்நாயர். (1854-1934) இவர் 1897-ல் அம்ராவதி காங்கிரசின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1887-ம் காங்கிரசில் தகுதி வாய்ந்த இந்தியர்களை ''காப்புப் படை''யில் அனுமதிக்க வேண்டும் என வாதாடினார்.

---

★ Report of the third Indian National Congrees held at Madras, P.86.

''காங்கிரஸ் மகா சபையின் சரித்திரம் - முதல் பாகத்தில்'' திரு. சங்கரன் நாயரின் சொற்பொழிவு இடம் பெற்றுள்ளது.

''ஐந்தாந் தீர்மானத்தைப் பற்றி ஸ்ரீ சங்கரன் நாயர் பேசினார். ராஜ்யங்களின் குழப்ப நிலையையும், இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் யுத்தம் நேரிடக் கூடுமென்பதையும் எடுத்துக்காட்டி 'இந்தியாவின் நாகரீகத்தை வடநாட்டுக் கொள்ளைக்காரர் அழித்துவிட இடங்கொடுக்கலாமா?' என்று சங்கரன் நாயர் கேட்டார். மேலும் அவர் சொன்னதாவது:

'சண்டை வரும்போது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு ஜயம் உண்டாகக்கடவது என்று பிரார்த்தனை செய்து கொள்ளும் சுதந்திரம் மாத்திரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்ஙனம் நாம் ஜபம் பண்ணுவதானால் நமக்கேனும் அவர்களுக்கேனும் அதிகப் பயனுண்டென்று தோன்றவில்லை. நாம் இப்போது அனுபவிக்கும் ஸமாதானம் நாம் ஆயுதமெடுக்க மாட்டாமையால் நம்மிடமிருந்து பறிபோக நேரிட்டால் என்ன செய்வோம்? இந்தியா தன்னையும் அவர்களையும் உதவி செய்து காக்காவிடின் மகாயுத்தத்தின் முடிவு யாதாகுமென்பதை ஆங்கிலேயரே சொல்ல வாயற்றிருக்கிறார்களென்பதை உத்தேசிக்கு மிடத்து, நமது நிலைமை சாதிக்க முடியாததாகிறது. இப்போது நம்முடைய உதவி பெறுமாறு இங்குக் காப்புப் படை அமைப்பார்களென்றும், பின்னிட்டுப் பச்சாத்தாபப்பட இடம் வைத்துக் கொள்ள மாட்டார்களென்றும், நம் பொருட்டாக மாத்திரமே

யன்றி, அவர்கள் பொருட்டாகவும் நம்புகிறோம். நேற்று ருஷியரும் துருக்கிஸ்தானிகளுக்கு ருஷியரே ஆயுதங்கள் கொடுத்துத் தம் பொருட்டாகப் பழக்கு கிறார்கள். ருஷியரிடமுள்ள விசுவாஸத்தைக் காட்டிலும் நமக்கு ஆங்கிலேயரிட முள்ள விசுவாசம் குறைவா? ஆபத்து ஸமயத்தில் நமது ராஜ பக்தியை நம்ப இட மில்லையென்று சொல்லுவோர் பொய்யே சொல்லு கிறார்கள்.''*

ராவ்சாஹெப் சபாபதிமுதலியார் எட்டாவது தீர்மானமான 'ஆயுத தரிப்புச் சட்டத்தை'த் திருத்த வேண்டுமென முன் மொழிந்து பேசினார். இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்தவர் திரு. விபின் சந்திர பால்.

திரு. சபாபதி முதலியாரைப் பாராட்டி ஒரு சமயம் திரு. ஜி. சுப்ரமணிய ஐயர் பின்வருமாறு எழுதினார்.

''அவர் பெருத்த வியாபாரி. இத்தேசத்துப் பயிரிடுங் குடிகளுக்காக எவ்வளவோ அவர் பாடுபட்டு வந்தார். சீமை கலப்பைகளையும் சீமையந்திரங் களையும் இத்தேசத்திற்கு வர வழைத்து ஆசாரத்திற்குக் கொண்டு வந்தவர் அவரே. விடாமல் காங்கிரஸ் சபைக்குச் சென்று பணத்தைச் செலவு செய்து அச்சபை யாரால் அவர் வெகு கௌரவத்தைப் பெற்றவர்.''*

---

★ Report of the third Indian National Congrees held at Madras, P 58 - 59.

★ சுதேசமித்திரன் - வாரமிரு முறை 5-5-1893. பக்.737

இந்தச் சட்டம், ஓர் அவமானச் சின்னம் என்றும், இதனால் பயிர் செய்யும் குடிகளுக்கு.ப் பெரிய கஷ்டங்கள் விளைகின்றன என்பதையும், காட்டு மிருகங்களும் கள்ளரும் நம்மைக் கொல்லாதபடி தடுக்க ஆயுதங்கள் அவசியமென்பதையும் திரு. சபாபதி எடுத்துக் கூறினார்.

''நம்மீதும், நமது ராஜபக்தியின் மீதும் ஐயம் கொள்வதுதான் என் மனதை கொன்றலைக்கின்றது. (கேளுங்கள்)... சிப்பாய்க்கலகம் வரையில், சிப்பாய்க் கலகத்தின்பொழுது, சிப்பாய்க் கலகத்திற்குப் பின்பு, நாம் ஆயுதங்களை வைத்திருந்தோம், இதற்குப் பிறகு நாம் என்ன செய்து விட்டோம்? ஆயுதமேந்துவதைத் தடை செய்வானேன்.''*

விபின் சந்திரபாலர், நாவன்மையும், நகைச் சுவையும் மிளிர வழி மொழிந்து பேசினார்.

''என்னுடைய மக்கள் விசுவாசமும், பிரிட்டிஷ் ஆட்சியின் விசுவாசமும் ஒன்றே. ஆகவே நான் பிரிட்டிஷ் ஆட்சி விசுவாசி. என்னுடைய மக்களின் பிரச்னைகளின் தீர்விற்கு கடவுளின் கைக் கருவியாக இந்த பிரிட்டிஷ் ஆட்சி இருப்பதால், நான் ஒரு பிரிட்டிஷ் ஆட்சியின் விசுவாசி. (கைத்தட்டல்; பிரதிநிதித்துவ ஆட்சி அமைப்பை நான் விரும்புவதால், நான் ஒரு பிரிட்டிஷ் ஆட்சியின் விசுவாசி. நான் ஒரு தீவிரவாதி, ஜனநாயகவாதி; ஆனால் என்னுடைய தீவிர வாதமும், ஜனநாயக உணர்வும் சேர்ந்தே பிரிட்டிஷ்

★ Report of the Third Indian National Congress P. 148.

ஆட்சியின் உண்மையான நண்பனாக ஆக்கியுள்ளது. (கைத்தட்டல்)

என் மட்டில் எனது உருக்குப் பேனாவும், கருக்கு நாவும்போதும். வேறு ஆயுதம் வேண்டாம். ஆனால் இந்த ஆயுதச் சட்டத்தால் பல்லாயிரம் ஜனங்கள் ஆணும் பெண்ணும் வருஷந்தோறும் புலி, சிறுத்தைகளுக்கு இரையாகி மடிகிறார்கள். இனியேனும் ஜனங்கள் அவ்வாறு சாகாமல் காப்பாற்றும் பொருட்டு அந்தச் சட்டம் ஒழிய வேண்டுமென்று கேட்கிறேன். மேலும் அந்தச் சட்டம் கொள்கையில் பிழையானது; பயனில் தீயது; ராஜாங்கத்துக்குத் தற்கொலைச் செய்கை போன்றது; ஆதலாலும் அதை ஒழிக்க வேண்டுமென்று கேட்கிறேன்.''

சென்னை காங்கிரசில் 'ரஷ்ய அபாயம்' பற்றி பலர் பேசியதைப் போலவே விபின் சந்திரபாலரும் பேசினார்.

''இந்தியமக்கள் ராஜ விசுவாச மற்றவர்கள்'' அதிருப்தி கொண்டுள்ளார்கள் என்று கூறப்படுவதை ரஷ்ய ஆட்சியாளர்கள் கவனத்தில் வைத்திருக்கிறார்கள் என்பதை அறியவேண்டும். ரஷ்யர்கள் துணிந்து இந்தியா மீது படையெடுத்தால், அதற்கு ஒரு தூண்டு தலாக அமைவது இந்த ஆயுதச் சட்டம், என்பதை மீண்டும் கூறுகிறேன்.''

ஆயுதச் சட்டத்தை (Arms act) முழுவதுமாக எதிர்க்க வேண்டாம் என்ற ஒரு குரலும் காங்கிரசில் எழுந்தது. சென்னைப் பிரதிநிதி வழக்கறிஞர் சுந்தரம்

சாஸ்திரி என்பவர் எதிர்த்தார். ''ஆயுதமேந்தும் உரிமை கிடைத்து விட்டால் போக்கிரிகளுக்கு கொண்டாட்ட மாகி விடும். தகுதி வாய்ந்தவர்களுக்கே அந்த உரிமை வேண்டும்'' எனக் கூறினார். ஆனால் அவையில் இவர் பேச்சிற்கு எதிர்ப்பு தோன்றியது. நாங்கள் இந்தச் சட்டத்தில் இருந்து விடுபட விரும்புகிறோம்'' என கூக்குரல் எதிரொலித்தது.

காரசாரமான இந்த விவாதத்தில் ஒரு சிறிய மோதல் ஏற்பட்டது. ஆயுதச் சட்டத்தின் விதிகளை நன்கு ஆய்ந்த பிறகு ஒரு முடிவிற்கு வரலாம் என ஹ்யூம் ஆலோசனை கூறினார். பாபு திரைலோக்ய நாத்மித்ரா என்பவர், சுரேந்திரநாத் பானர்ஜியை நோக்கி , ''தங்களிடம் சட்டத்தின் நகல் உள்ளதா?'' எனக் கேட்டார்.

''சட்டத்தின் நகலைவிட மேலானதொன்றை வைத்துள்ளேன். இங்கே வைத்திருக்கிறேன்'' என்று தலையைச் சுட்டிக் காட்டினார், சுரேந்திரநாத் பானர்ஜி.

ஹ்யூம் தாம் மீண்டும் தமது கருத்தை வலியுறுத்துவதாகக் கூறினார். சேலம் ராமசாமி முதலியார், ஹ்யூமை ஆதரித்துப் பேசினார். அண்ணாசாமி அய்யர் என்பவர் சமரசமாக ஒரு திருத்தம் கொடுத்தார். எழுத்து மூலம் தரப்படும் கோரிக்கைக்கு உள்ளூர் முனிசிபல் சபை போன்ற அமைப்புகளின் பரிந்துரை பெறப்பட்ட பிறகு, ஆட்சியாளர் இது சம்பந்த மாக முடிவு செய்யலாம் என ஒரு திருத்தம் கொணர்ந் தார். சுரேந்திரநாத்பானர்ஜி, இந்தத் திருத்தத்தை ஒப்புக் கொண்டார்.

அம்பிகாசரண் மஜூம்தார் எனும் வங்கமாநில காங்கிரஸ் தலைவர் பிரதேச மொழிகளில் நடைபெறும் பத்திரிகைகளை கடுமையாகச் சாடினார். பிரதேச மொழிப் பத்திரிகை ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடம் சிறைதான் என்றும் 'வாய்வீச்சு' வீசினார். பிற்போக்குத் தனமான இவர் பேச்சிற்கு சபையில் பலத்த எதிர்ப்பு தோன்றியது. 'இல்லை', 'இல்லை' என்றும் 'உட்கார்', 'உட்கார்' என்றும் கூவினார்கள். கிண்டலும், கேலியும் நிறைந்திருந்தது. அம்பிகாசரண் மஜூம்தார் தமது பேச்சை, வாபஸ் வாங்கமாட்டேன் என பிடிவாதமாக் கூறனார். தலைவர், தலையிட்டு அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றார்.

ஆங்கில மொழிச் சொற்பொழிவுகளின் நயங்களை ரசித்த கூட்டத்தினருள் சிலர், தர்மரங்க ராஜா என்பவர் தட்டுத் தடுமாறி ஆங்கிலத்தில் பேசியதை எள்ளி நகையாடினர்.

தர்மரங்கராஜா தமது பேச்சில் குறிப்பிட்டதாவது ''நான் ஒரு விவசாயி. ஆகவே, நான் பிழையற்ற ஆங்கிலத்தைப் பேசுவேன் என எதிர்பார்க்க வேண்டாம். நான் இன்னும் ஒரு மாணவன். சைதாப்பேட்டை விவசாயக் கல்லூரியில் படிக்கிறவன். வங்காளம், பம்பாய், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் பல இடங்களில் இருந்தும் வந்து இந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள். இவர்கள், என்னைத் தங்களது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து இந்தப் பேரவையில் பேசச் சொன்னார்கள் (பலத்த சிரிப்பு.)''*

★ Report of the third Indian National Congress P 143

இவரின் அவையடக்கப் பேச்சையும் பொருட் படுத்தாது சிலர் இவரை நோக்கி, 'மீண்டும் பள்ளிக்கே செல்லுங்கள்' எனக் கிண்டல் செய்து உட்கார வைத்தனர்.

இந்தச் சூழ்நிலையில் சென்னை காங்கிரசில் தஞ்சாவூரில் இருந்து பிரதிநிதியாக வந்த ராவ்சாஹெப் மூக்கண்ணாசாரி என்பவர் தமிழில் பேசினார். 'தொழிற்கல்வி' பற்றிய காங்கிரசின் தீர்மானத்தின் மீது பொருட்செறிவுடன் சொற்பொழிவு நிகழ்த்தினார். ஹ்யூம், காங்கிரஸ் அறிக்கையில் இவரைப் புகழ்ந்து குறிப்பிட்டுள்ளதே இவரது பேச்சாற்றலுக்கு சிறந்த சான்று.

பேச்சாற்றலுக்காக மட்டுமல்ல, இவர் பாராட்டப் பட வேண்டியது காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க்குரல் இவருடையதே என்பதும் தனியாகக் குறிப்பிட்டுப் பாராட்டப்பட வேண்டும்.

இலண்டனில் இருந்து வெளிவந்த இரு ஆங்கிலப் பத்திரிகைகள் சென்னை காங்கிரசில் நடைபெற்ற விவாதங்களைப் பற்றி கருத்துகளை வெளியிட்டன.

ஈஸ்டர்ன் பிரஸ் எனும் ஏடு, காங்கிரசில் 'ரஷ்ய அபாயம்' பற்றிப் பேசப்பட்டதைக் குறிப்பிட்டது.

''சுதேசிகள் ஆங்கில ஆட்சியில் நன்கு நடத்தப் பட்டு நிர்வகிக்கப்பட்டு திருப்தியுற்றால், ரஷ்ய ஆக்கிர மிப்பு பற்றியும் அச்சம்கொள்ளத் தேவை யில்லை. ஆனால், நாம் சுதேசிகளால் வெறுக்கப்படத் தொடங்கப்

பட்டால் நமது இந்திய சாம்ராஜ்யத்தின் நாட்கள் எண்ணப்பட்டு விடும்.''

சென்னை காங்கிரஸ், 'இந்தியாவின் குரலை' பிரிட்டனில் கேட்க வைத்தது என்று 'கிளொவ் செஸ்டர் ஜர்னல்'' என்னும் ஏடு எடுத்துரைத்தது.

> *''இதுவரை இந்திய விவகாரங்களைப் பற்றி ஒன்றும் அறியோம் என்று கூறி இங்கிலாந்து தனது தவறுகளையும், கண் மூடித்தனத்தையும் வாதிட்டு வந்தது. இனி அவ்வாறு சமாதானம் கூறத் தேவயில்லை. இந்தியாவின் குரல் கேட்கத் தொடங்கி விட்டது.''*

1887-ல் நடைபெற்ற காங்கிரஸ், ''தேசிய அமைப்பு'' என்ற பெயருக்கேற்ற நிலையை அடைந்தது என்று ஓர் அறிக்கை அச்சத்துடன் குறிப் பிட்டது.

காங்கிரசின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து, பத்தொன்பது பக்கங்கள் கொண்ட ஓர் அறிக்கையை ஜெனரல் செஸ்னி என்பவர் தயாரித்தார், கவர்னர்ஜெனரல் டப்ரின் பிரபுவின் பார்வைக்கு இந்த அறிக்கை வைக்கப்பட்டது.

''1885-ல் பரிசோதனை வடிவத்தில் இருந்த காங்கிரஸ் 1887-ல் - காங்கிரஸ் சபையில் வருணிக்கப்பட்டதைப் போல் - முக்கியமான தேசிய அமைப்பாக விளங்கியது... எனவே அடுத்து வரும் காங்கிரஸ் சபைக் கூட்டங்களைத் தடை செய்ய

வேண்டும்'' என்ற பரிந்துரை இந்த அறிக்கையில் இடம் பெற்றது.

காங்கிரசின் தோற்றத்திற்கு வாழ்த்து கூறிய டப்ரின் பிரபுவே, சென்னை காங்கிரசின் வளர்ச்சியைக் கண்டு 'விழித்துக்' கொண்டார். ஒருமுறை பிரம்ம சமாஜத் தலைவர் பிரதாப்சந்திர மஜூம்தாரரிடமும், ''தாம் ஒரு ஐரிஷ்காரரென்றும் 'இந்திய விவகாரங்களில் தமக்கு அக்கறையுண்டு'' என்றும் கூறியவர், டப்ரின்.

ஆனால், 1887-க்குப் பிறகு காங்கிரசைத் தாக்கத் தொடங்கிவிட்டார். காங்கிரஸ், ஒரு சிறுபான்மை கூட்டம், எங்கிருக்கிறது என்று நுண்ணோக்காடி கொண்டுதான் தேடிப்பார்க்க வேண்டும் என்று இகழ்ச்சியுடன் சாடினார். டர்பின் பிரபுவின் மொழியில் காங்கிரஸ் ஒரு "Microscopic Minority" ஆகும். அதிகார வருக்கம் இனிமேல் எவ்வித உதவியும் செய்யக்கூடாது என்றும் கட்டளை பிறப்பித்தார்.

இவ்வாறு டப்ரின் பிரபு, எதிரியாக மாறியதைக் கண்டு ஆங்கிலம் படித்த வருக்கம் குமுறியது.

கல்கத்தா பத்திரிகை 'இந்தியன் மிர்ரர்' தொடர்ந்து பல நாட்களுக்கு டப்ரின் கருத்தைக் கண்டித்துத் தலையங்கம் எழுதியது.

சென்னை காங்கிரசில் கலந்துகொண்டு பேசிய பிரபல வழக்கறிஞர் எர்ட்லி நார்ட்டன் ''டப்ரின் பிரபுவிற்கு ஒரு பகிரங்கக் கடிதம்'' எனும் ஒரு சிறு வெளியீட்டை எழுதி வெளியிட்டார். இந்த வெளியீடு, அவரது பொது வாழ்க்கைப் புகழை உயர்த்தியது.

காங்கிரஸ் தலைவர் ஹ்யூம், தமது நண்பர் டப்ரின் பிரபுவின் மனமாற்றத்தை குறிப்பிட்டு, சென்னை காங்கிரசில் தலைமைவகித்த பத்ருதீன் தியாப்ஜிக்கு ஒரு கடிதம் எழுதினார்.

5-11-1888-ல் எழுதப்பட்ட இந்தக்கடிதம் கூறுவதாவது.

*"டப்ரின் பிரபு இப்பொழுது நமக்கு எதிராக இருக்கிறார், முதலாவதாக அவர் பயந்துவிட்டார். காங்கிரஸ் வெறும் ஆலோசனை அமைப்பாக இருக்கும் வரை, டப்ரின் தமக்கு எது பொருந்துகிறதோ அதை ஏற்கவும், பிடிக்காதவற்றை ஒதுக்கவும் மிக விரும்புகிறார்."*

சென்னை காங்கிரஸ், ஏகாதிபத்தியவாதிகளின் நீண்ட கால நுட்பமான அரசியல் நோக்கில் திட்ட வட்டமான ஒரு மாறுதலை ஏற்படுத்திவிட்டது.

காங்கிரசின் களம், பிரசார உத்திகள் பற்றிய புதுமையான முயற்சிகளும் சென்னை காங்கிரசின் சிறப்பம்சங்கள்.

இவற்றுள் **'காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க் குரல்'** நமது கருத்தை கவர்கின்றது.

❖

# காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க் குரல்

"காங்கிரஸ் ஆங்கிலம் கற்றவர்களின் ஓர் அமைப்பாகவே ஆரம்ப காலத்தில் விளங்கியது என்று ஒரு பொதுக்கருத்து நிலவியது. முதல் இரு காங்கிரசு களைப் பெற்றுத்த வரையில் இது உண்மையாய் இருக்கலாம். ஆனால் 1887- சென்னை காங்கிரசைப் பொறுத்தவரையில் அவ்வாறு இல்லை."*

இவ்வாறு வங்க வரலாற்று ஆசிரியர்களான பிமேன் பிஹாரி மஜும்தார், பக்த பிரசாத் மஜும்தார் இருவரும் சென்னை காங்கிரசைப் பாராட்டியதற்குக் காரணத்தையும் குறிப்பிட்டுள்ளனர்.

தஞ்சையைச் சேர்ந்த மூக்கண்ணாசாரி தமிழில் பேசியதையே இந்த ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆங்கில பட்டதாரிகளுக்கு மட்டும் சுற்றறிக்கை அனுப்பி காங்கிரசை உருவாக்கிய ஹ்யூம், சென்னை காங்கிரசின் ஆங்கிலம் அறியாதப் பிரதிநிதிகளைப்

★ Congress and Congress men in Pre - Gandhian Era. - 1967 - P.15.

பற்றியும், பேச்சாளர்களைப் பற்றியும் குறிப்பிட வேண்டி நேரிட்டது.

'இந்தியன் மிர்ரர்' ஆசிரியருக்கு 1888-ல் ஹ்யூம் ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் அவர் குறிப் பிட்டதாவது.

> *''கடந்த காங்கிரசில் (சென்னை 1887) கலந்துக் கொண்ட பிரநிதிகள், பேச்சாளர்கள் பலருக்கு அவர்களுடைய தாய்மொழிகளில் மட்டும் அறிமுகம் உண்டு. 97 உறுப்பி னர்கள் கொண்ட மாநில காங்கிரஸ் குழுக் களை எடுத்துக் கொண்டால், மூன்றில் ஒரு பங்கினர் ஆங்கிலம் அறியாதவர்கள், இன் னும் கீழ்மட்ட அமைப்புகளில் ஆங்கிலம் அறிந்தவர்கள், விதிவிலக்காகவே இருக் கிறார்கள்.''*

ஹ்யூம் தமது காங்கிரஸ் அறிக்கையில் தமிழில் விஷய ஞானத்தோடு பேசிய மூக்கண்ணாசாரி யாரையும் குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் வரலாற்றில் தனிச் சிறப்புக் கொண்ட முதல் தமிழ்ச் சொற்பொழி வாற்றிய திரு. மூக்கண்ணாச் சாரியாரை, ஹ்யூம், உத்தியோகபூர்வமான அறிக்கையில் குறிப்பிட் டிருந்தும், திரு. பட்டாபி சீதாராமய்யா எழுதிய காங்கிரஸ் வரலாற்றில் மூக்கண்ணாச்சாரியின் விவாதத் திறமை வாய்ந்த முதல் தமிழ்ப் பேச்சு பற்றிய பாராட்டுரை இடம் பெறவில்லை. இதே மாதிரியாக காங்கிரசின் பல வரலாற்று நூல்களிலும் இடம் பெறவில்லை.

சுதேசமித்திரன் வெளியிட்ட காங்கிரஸ்வரலாற்றில் - பாரதியார் எழுதியது - முக்கண்ணாச்சாரியாரின் சொற்பொழிவின் சுருக்கம் இடம் பெற்றுள்ளது. ஆனால், இதில் கூட இவரது பேச்சு, முதல் தமிழ் பேச்சு, என்னும் குறிப்பு இல்லை.

திரு. டி. எம். முக்கண்ணாசாரியாரைப் பற்றிய குறிப்புகள் ஹ்யூமின் காங்கிரஸ் அறிக்கையில் உள்ளன. இவருக்கு 'ராவ்சாஹேப்' என்ற பட்டமிருந்தது, இந்து மதத்தினர், இரும்பு வியாபாரி, தஞ்சை முனிசபல் சபை உறுப்பினர், கும்பகோணம் கைவினைஞர்கள் சங்கத்தின் சார்பில் தஞ்சையில் 12-12-1885-ல் நடைபெற்ற கூட்டத்தில் காங்கிரசிற்கு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது பிரதிநிதி எண் 212, இவருடன் எஸ்.வி. அய்யாசாமி பத்தரும், என். வைத்தியலிங்க பத்தரும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களது பிரதிநிதிகள் எண்கள் முறையே 213-214.)

சென்னை காங்கிரசின் ஏழாவது தீர்மானம், தொழிற் கல்வியைப் பற்றியது. (Tehnical Education). இந்தத் தீர்மானம் சேலம் எஸ். ராமசாமி முதலியாரால் முன் மொழியப் பட்டு, சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வர் ஜான் ஆடம் என்பவரால் வழிமொழியப்பட்டு, ஷேய்க் காதிர் பக்ஷ் (ஔத்) என்பவரால் ஆதரிக்கப்பட்டது.

தீர்மானத்தின் அமைப்பு வருமாறு;

''ஜனங்களின் வறுமையை உத்தேசித்து தேசத்தின் நிலைமைக் கேற்றபடி தொழிற் கல்வி முறையை விஸ்தாரமாக அமைக்கவும், உள்நாட்டுத் தொழில் சாமான்களை ராஜாங்கக் காரியங்களுக்கு உபயோகித்து தேசிய கைத்தொழில்களை உற்சாகப் படுத்தவும், நாட்டுத் தொழிலாளிகளின் திறமையையும் பயிற்சியையும் இப்போதைக் காட்டிலும் அதிகமாக உபயோகப்படுத்தவும், ராஜாங்கத்தாரைத் தூண்ட வேண்டும்.

இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் முப்பதாம் தேதியன்று காலை 11 மணிக்குத் தொடங்கியது. இந்த விவாதத்தில் கலந்துக்கொண்டுதான் திரு. டி. எம். மூக்கண்ணாசாரி தமிழில் பேசினார். காங்கிரஸ் அறிக்கையில் இவரது பெயருக்குக் கீழே - அடிக்குறிப்பில் பின்வருமாறு செய்தி தரப்பட்டுள்ளது.

''ஐரோப்பாவில் கல்வி எனக் கூறத்தகுந்த எந்தக் கல்வியையும், கைவினைஞர் பெற்றவரில்லை. இந்த நற்குடியாளர், தஞ்சாவூர் குடிமக்களில் மிக்க பிரபல மானவர், தஞ்சாவூர் முனிசபல் சபையின் உறுப்பினர் என்ற வகையில் நாளும் ஓயாது உழைப்பவர், பொது மக்களுக்கு தொண்டு புரிவதில் கருத்தாய் இருப்பவர். தஞ்சாவூர் மாவட்டம் முழுவதிலும் இருந்து கும்ப கோணத்தில் கூடிய கைவினைஞர்கள் கூட்டத்தில் இவரும், மற்ற இருவரும் முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.*

---

★ Report of the Third Indian National congress P 57

இந்த விவாதத்தைப் பற்றி அறிக்கை விரிவாகக் குறிப்பிடும் பொழுது, திரு. மூக்கண்ணாசாரியாரின் பேச்சை மட்டும் தனியாகப் பாராட்டியுள்ளது.

''நீண்ட, புரியும்படியான, கருத்தைக் கவர்ந்த முக்கிய அம்சமாக'' இருந்தது என பாராட்டுரை குறிப்பிட்டது.

தமிழின் ''சொல்லுந்திறமை''க்கு ஆங்கிலேயர் ஹியூம் அளித்த பாராட்டுரையை அப்படியே ஆங்கிலத்தில் அளிப்பது அவசியமல்லவா?

"But perhaps the most interesting feature in the debate was a long, sensible, matter of fact speech in Tamil by Mr. Mookanasari of Tanjore."

காங்கிரஸ் பிரதிநிதியாக கன்னித் தமிழில் உரையாற்றிய திரு. டி.எம். மூக்கண்ணாச்சாரியின் தமிழ் மூலம் நமக்கு கிடைக்கவில்லை. ஆங்கில மொழியாக்கத்தின் சுருக்கம் காங்கிரசின் அறிக்கையில் அளிக்கப் பட்டுள்ளது. இதன் தமிழாக்கம் வருமாறு.

''தலைவர் அவர்களே! சனவான்களே! கல்கத்தா, பம்பாயில் நடைபெற்ற இரு காங்கிரஸ் மாநாடுகளிலும் குறிப்பிடத்தக்க குறைபாடு ஒன்று தெரிந்தது. இந்திய மக்கட் தொகையில் உத்தியோகஸ்தர்கள், தொழில் துறையாளர், வர்த்தகர்கள், விவசாயிகள் ஆகியோர் நான்கு முக்கிய வகுப்புகளாகும். இவர்களுள் தொழில் துறையாளர் (Industrial) அந்த காங்கிரஸ் மாநாடுகளில் போதுமான அளவு பிரதிநிதித்துவம் பெறவில்லை. ஆனால் அந்தக் குறைபாடு, இந்தக் காங்கிரசில்

நீங்கியது. கனவான்களே! இந்தத், தொழில் துறையாளர் பிரதிநிதிகளில் நான், ஒருவன். தஞ்சாவூர் மாவட்ட அனைத்துத் தொழில் துறையாளர் சார்பில் கும்ப கோணத்தில் முறையாகத் தேர்ந்,தெடுக்கப்பட்ட மூவர், பிரதிநிதிகளாக வந்துள்ளோம்.

இந்த அவையின் முன்னுள்ள தொழிற்கல்வியைப் பற்றிய விவாதம் நாட்டிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகுப் பிற்கு பெருமளவு நன்மை பயக்கும் இந்த விவாதத்தில் நான் சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டவன்.

நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக காங்கிரஸ் இதய பூர்வமாய் பாடுபடுகிறது என்பதில் ஐயமில்லை. கனவான்களே! புகழொளி மிக்க ராஜதந்திரி ராஜா சர்.டி. மாதவராவ் அவர்கள், நடுநிலைமையுடன் பணியாற்றும் நீதிபதி திரு. முத்துசாமி ஐயர் போன்ற ஆயிரக் கணக் கானவர்கள் உயர்ந்த பொறுப்பான பதவிகளை அலங் கரிக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். **ஆனால் இது மட்டுமே நாட்டின் வளர்ச்சிக்கு நம்மை வழிப் படுத்தும் என நாம் எதிர்ப்பார்ப்பது முற்றிலும் பொருந்தாது.** (அழுத்தம் இந்நூலாசிரியரால் இடப் பட்டது). அல்லது, தொழில் துறை முற்றிலும் இல்லாத நிலையில், வர்த்தகமோ, விவசாயமோ நாட்டின் வளர்ச்சிக்கு நம்மை வழிப்படுத்தாது. ஏன் என்றால், வர்த்தகத்திற்கும், விவசாயத்திற்கும் முதன்மையான தூண்டுதல் அளிப்பது தொழில் துறையே. ஆக, நாட்டின் வளர்ச்சிக்கு முதற் காரணமாக விளங்கும் தொழில் துறையின் முக்கியத்துவத்தை இந்த உலகத்தில் யாரே மறுக்கத்

துணிவார்கள்? ஐரோப்பிய நாடுகள் தற்காலம் உண்மை யிலேயே மகிழ்ச்சியில் திளைக்கும் வளர்ச்சிக்கு தொழில் துறையல்லவா உதவியுள்ளது?

ஆகையினால், கனவான்களே! நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவுள்ள கலைகளும், தொழில்களும் நலிந்து தேய்ந்து ஒழிந்து போகாமல் காப்பாற்ற வேண்டியது நமது முக்கியக் கடமை யல்லவா? நாட்டின் பல பாகங்களிலும் கலைகளும், தொழில்களும் ஊக்கமுடன் வளர்க்கப்பட வேண்டும் என்பதிலும் நாம் கருத்தாக இருக்கவேண்டும். கருணையும், பெருந்தகைமையும் வாய்ந்த நமது ஆட்சி, நாட்டின் தொழில் துறை முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, தொழிற்கல்விக்கான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி, பெருமளவில் மக்கள் பயன்பெற விரிவாகப் புகுத்த முன்வருவதில் கால தாமதம் செய்யக்கூடாது.

கனவான்களே! நமது நாடு இன்று நெருக்கடி யான நிலையில் உள்ளது; வரிவிதிப்பு உயர்ந்து விட்டது; முறையான முன்னேற்றத்திற்கான மூலாதாரங் கள் பற்றாக்குறையாக உள்ளன. இந்த நாட்டின் செல்வம் தொடர்ந்தாற்போல் வெளியேறிக் கொண் டிருக்கிறது.

இந்த ஆட்சி, நாட்டின் தற்பொழுதைய நிலைமை யைக் கண்டு பிடிவாதமாக அலட்சியம் காட்டி வருமாயின் இந்த ஆட்சி இப்பொழுது கூட நெருக்கடி நிலையை உணர்ந்து கடுமையான முயற்சிகளை விரைந்து எடுத்து நாட்டைக் காப்பாற்றத் தவறினால்,

நாட்டில் உள்ள எஞ்சிய சிறுசெல்வமும், இந்த நாட்டை முழுமையான அழிவில் ஆழ்த்திவிட்டு, தொலைவில் உள்ள நாடுகளிடம் சென்றடையும். நாட்டை எதிர் நோக்கியுள்ள இந்தப் பேரழிவைத் தவிர்க்க, கனவான்களே! நாம் ஆட்சியிடம் முறையிடுவோம். தொழிற் கல்வி நிலையங்கள் நாடெங்கும் நிறுவப் பட்டு நன்கு நடத்தப்பட வேண்டும். இந்தியர்களுக்குத் தேவைப்படும் இயந்திரப் பொருட்கள் இங்கேயே உற்பத்தி செய்யப்பட இயந்திரப் பொருட்கள் இங்கேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு உற்பத்தியில் ஈடுபடுவோர்களுக்கு தேவைப் படும் பயிற்சி, செய்முறைகளைப் பற்றிய படிப்பு முதலான வற்றிற்கு இங்கேயே ஏற்பாடு செய்ய வேண்டும்.

நாடு முழுவதுமாக இத்தகைய தொழில் நிலையங்களை நிறுவ இயலவில்லையென்றால், முக்கிய நகரங்களிலாவது நிறுவுமாறு நாம் ஆட்சியிடம் கேட்க வேண்டும். இதற்குரிய மூலதனத்தை ஆட்சி யாளர் தருவதானாலும் சரி, அல்லது ஆட்சியாளரின் உத்தரவாதத்தின் பேரில் தனியார் தருவதானாலும் சரி, ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தொழில் நிலையங்களின் நிருவாகம், சென்னை கலைப் பள்ளியைப் போன்று (Madras School of arts) அரசாங்கத்திடமே முழுவதுமாக இருக்கவிடக் கூடாது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும், மேற் பார்வையிலும் உள்ள சுதேச முதலாளிகளின் நிருவாகத் தில் விடப்பட வேண்டும்.

இந்த நிலையங்களில் உற்பத்தியாகும் பண்டங்களை அரசாங்கம் வாங்கி ஊக்குவிக்க வேண்டும். இந்த முயற்சிகள் வெற்றியடைந்தால் மேலும் பல வெளியூர் நகரங்களில் நிலையங்களை நிறுவி விரிவுப்படுத்த வேண்டும்.

சுதேச கைவினைஞர்கள், தொழில் துறையாளர்களை ஊக்கப்படுத்த, அரசாங்கம் ஆங்காங்கு பொருட் கண்காட்சிகளை நடத்த வேண்டும். பொருட்காட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் திறமையைப் பாராட்டிப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்குவதற்கு திட்டங்கள் வகுக்க வேண்டும். இதற்காக எல்லா ஸ்தல ஸ்தாபனங்களும், முனிசபல் சபைகளும் 'பரிசு நிதி' ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

காங்கிரசின் இந்த வழியில் சாதனைகள் காண பாடுபடவேண்டும். இதனால், அழிந்துவரும் தொழில்கள் உயிர்பெற்று, முன்னேறத் தூண்டுதல் கிடைப்பதுடன், நாடும் சுயபலத்தில் நிற்க உதவும். உலக நாடுகளில் நாம் இழந்த இடத்தை மீண்டும் பெறமுடியும்.

தொழிற்சாலைகளும், தொழிற்பட்டறைகளும் (Factories and Workshops) பெருகிவிட்டால், கனவான்களே! நமது நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் கௌரவமாக வேலை வாய்புகள் பெறுவர். வேலைவாய்ப் பற்ற இந்த மக்கள் உயிர்வாழப் போராடுகிறார்கள்.

இந்த நாடடின் நானூற்றைம்பது இலட்ச மக்கள், அனாதைகளாக இருக்கிறார்கள்; அரசாங்கம் ஒப்புக்

கொண்டக் கணக்கிலேயே ஒரு நாளுக்கு ஒரு வேளைச் சாப்பாடு கூட இம்மக்களுக்குக் கிடைப்பதில்லை! இந்த அனாதைகளுக்கு சிறுவாயளவு உணவேனும் தரக் கூடிய வேலைவாய்ப்புகளை, உண்டாக்கித் தரும் கலைகளும், தொழில்களும் வளர்ந்தோங்கும் நன்னாளை நாம் எதிர் பார்ப்போமாக.

கனவான்களே! உங்கள் பொன்னான நேரத்தை நான் வெகுவாக எடுத்துக் கொண்டேன்: பொறுத் தருள்வீர்; உங்கள் முன்னே பேசியதில் அற்ப விஷயங்கள் ஏதேனும் இருந்தால் பொருட்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டு எ௳ உரையை முடித்துக் கொள்கிறேன்.''*

1929-ல் சுதேச மித்திரன் வெளியிட்ட காங்கிரஸ் 6ஆம் நாட்டின் சரித்திரம் முதல் பாகம்'' எனும் நூலில் தமிழாக்கம் வெளிவந்தது.

திரு. மூக்கண்ணாச்சாரியாரின் அன்றையப் பேச்சை இன்று படிக்கும் பொழுது கூட உணர்ச்சித் துடிப்பு ஏற்படுகிறது.

காங்கிரசின் பெரும்பாலான பிரதிநிதிகள், இங்கிலீஷ் படித்தவர்களுக்கு, பதவி வாய்ப்புகள் தரக் கூடாதா? இங்கிலீஷ் படித்தவர்களின் ராஜவிசுவாசத்தை சந்தேகிக்கலாமா? ரஷ்ய அபாயம் ஏற்பட்டால், நாங்கள் ஓடி வர மாட்டோமா என்றெல்லாம் முழக்கமிட்ட முப்ப தாயிரம் பேர் கொண்ட காங்கிரஸ் பந்தலிலே, ஒரு தமிழ்ப் பிரதிநிதி, அனாதைகளை, ஒருவாய்ச் சாப்பாட்டிற்கு

★ The Report of the Third Congress P 146 - 147

ஏங்கும் அனாதைகளை, நாட்டின் தொழில வளர்ச்சியை, தொழிற் கல்வி! மக்கட் திரட்சியை சென்றடைய வேண்டும் எனும் பேராவலை உள்ளமுருக வெளிப் படுத்தி உணர்த்தினாரே!

**என்ன பெருமை! என்ன பெருமை! அந்த முதல் தமிழ்க் குரலுக்கு! பெருமை, தமிழுக்கு மட்டுமா? எடுத்துக்கொண்ட பொருளின் விளக்கத்திற்கும் அல்லவா!**

**உத்தியோகங்கள் பெறுவது மட்டுமா, வளர்ச்சி யின் அடையாளம், தொழில் துறையின் பெருக்கம் தானே வளர்ச்சியின் அடையாளம் எனச் சாற்றி னாரே, மூக்கண்ணாச்சாரியார். அவர் காங்கிரசின் இலட்சியங் களைத்தான் குறிப்பிட்டார் என்றாலும், அதில் விழுந்த அழுத்தம், எழுந்த உணர்ச்சி அலைகள் அல்லவா, சிறப்பெய்துகின்றன.**

தமிழில் அரசியல் பேசவராது என சமீப காலம்வரையில் போலிப் பெருமை பேசிய வருக்கத்தை நினைவில் கொண்டு, 1887-ல் வருடத்தின் மூக்கண்ணாச்சாரியின் அரசியல் பேச்சை மதிப்பிடுங்கள்.

பாரதியார் மொழிபெயர்த்து வெளியிட்ட 'பாரத ஜன சபை வரலாறு'' எனும் நூலில் மூக்கண்ணாச் சாரி யாரின் பேச்சின் பின்வரும் பகுதி வெளிவந்துள்ளது.

''தொழிற் கல்வியைப் பற்றிய ஏழாந் தீர்மானத்தை ஒட்டிப் பேசியவர்களில் தஞ்சாவூர் மூக்கண்ணாச்சாரி ஒருவர். ஸ்ரீமான் மூக்கண்ணாச்சாரியார் செய்த பிரசங்கத்தில் பின் வருமாறு கூறினார்.

'நமது தேசத்தில் ஆலைகளும் தொழிற் கூடங்களும் ஏற்பட்டால் இப்போது யாதொரு வழியுமின்றி உடம்பிலே உயிரை நிறுத்த வழிதெரியாமல் தியங்கித் தவிக்கும் ஏழைகளுக்கெல்லாம் யோக்கியமாக உழைத்து ஜீவனம் செய்ய வழி உண்டாகும். கனவான்களே! இந்தியாவின் கலைகளும், தொழில்களும் ஒப்புக் கொள்ளும் கணக்குப்படி இப்போது நாளொன்றுக்கு ஒருவேளைகூட முழு ஆஹாரம் கிடைக்காதபடி கஷ்டப்படும் நானூற்றைம்பது லக்ஷம் ஜனங்களுக்கு, ஒருவேளை ஆகாரமேனும் கிடைக்கக் கூடிய காலம் எப்போது வருமோ தெரியவில்லையே, என்று மூக் கண்ணாச்சாரியார் வருத்தப்பட்டார்.''

திரு. மூக்கண்ணாசாரியரின் ''வருத்தத்தை'' சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து கூறப்பட்டுள்ளதாவது.

''இவ்விஷயத்தைப் பற்றி ''பாரத பூமி விடுதலைக்குப் பட்டபாடு' என்ற தமது காங்கிரஸ் சரித்திர நூலில் ஸ்ரீமதி அன்னி பெஸண்ட் ஆங்கில பாஷையில் ஷெல்லி யென்ற கவிராயன் விடுதலைத் தெய்வத்தை நோக்கி எழுதிய பாட்டொன்றிலிருந்து பின்வரும் வரிகளைப் பெயர்த்தெழுதியிருக்கிறார்;

*ஷெல்லியின் பாட்டு (விடுதலைத் தெய்வமே)*

'' உழைப்பவர் தெல்லாம் உணவுநீ யாவாய்
ஆங்கில நாட்டில் இன்றுநாம் காணும்
சோற்றுப் பஞ்சம், சுதந்திர தேவியே-
நின்னுடை இன்னருள் நிலவு நாடுகளில்
தோன்றா தம்ம, தோன்றா தம்ம''

என்பது. இதிலே 'ஆங்கில நாட்டில்' என்பதைப் 'பாரத நாட்டில்' என்று அன்னி பெசண்ட் மாற்றி வாசிக்கும்படி சொல்லுகிறார்.'

ஹ்யூமின் காங்கிரஸ் அறிக்கையிலும், மூக் கண்ணாசாரியின் உணர்ச்சி மிக்கத் தவிப்பை, வருத்தத்தை வெளிப்படுத்தும் கருத்துகளின் குறிப்புரையைக் காண்கிறோம்.

காங்கிரசில், வறுமையைப் பற்றிய மூக் கண்ணாச்சாரியின் பேச்சை காங்கிரஸ் அறிக்கை விமர்சனத்திற்கு எடுத்துக் கொண்டது.

''திரு. மூக்கண்ணாசாரியாரின் இறுதிச் சொற் களை வைத்துப் பார்க்கும் பொழுது, ஒரு விளக்கத்தை நாம் தருவது வழுவாகாது. சொந்தச் சகோதரர்களின் அரைவயிற்றுப் பட்டினியைப் பற்றி பரிவு காட்டாத காரணத்தால் இதுவரை இவ்விஷயம் பற்றி சிறிதளவே பேசப்பட்டுள்ளது.

இந்தக் கொடிய வறுமை ஆண்டிற்கு ஆண்டு அடித்தளத்து மக்களை கொன்றழித்து வருகிறது. ஒரு வேளை பெரும்பான்மையினர் சமூக ஏணியில் ஊர்ந்து மேலே செல்வதாக இருக்கலாம். டப்ரின்பிரபுவின் நிருவாகம் ஏற்பட்ட காலத்தில் இருந்து வரிவிதிப்புகள் பெருகிவிட்டன. ஆட்சியின் முரட்டுத்தனமான போக்கி னால் இந்திய மக்கள் ஏமாற்ற முற்றனர். தங்களைச் சுற்றியுள்ள வறுமையை மட்டுப் படுத்த பொருளாதார வசதிகளைப் பெறவில்லை. நிருவாகத்தில் தங் களுடைய சக்தி வாய்ந்த குரல் கேட்பதற்கான பிரதி நிதித்துவம் பெற்றால்தான் வழி பிறக்கும் என உண்மையாக நம்புகிறார்கள்.''

இந்திய மக்களின் வறுமையைக் குறிப்பிட்டு மூககண்ணாசாரியார் 1887-ல் புலம்பியதைப் போலவே, ஹ்யூமும் 1886-ல் புலம்பியுள்ளார்.

கல்கத்தாவில் 1886-ல் ''ஒரு முதியவனின் நம்பிக்கை'' (The old man's hope) என்னும் நூலை ஹ்யூம் எழுதி வெளியிட்டார். பத்தொன்பது பக்கங்கள் கொண்ட இந்தச் சிறு வெளியீட்டில் இந்திய மக்களை வாட்டும் கொடிய வறுமையைப் பற்றிய அவரது மனக்குமுறலை கேட்கிறோம்.

''ஓ! நன்றாக உண்டு களிப்பவர்களே'' எனத் தொடங்குகிறது ஹ்யூமின் மனக்குமுறல்-

*''உழைப்பு! உழைப்பு! உழைப்பு! பட்டினி! பட்டினி! பட்டினி! நோய்! நோய்! நோய்! துன்பம்! துக்கம்! ஐயகோ! ஐயகோ! என் சொல்வேன்? துக்கமயமான அவர்களது குறுகிய வாழ்வின் ஆதார சுருதிகளே இவைகள் தான்! இந்த ஐந்நூறு லட்ச மக்கள் பிறக்காமல் இருந்தாலே எவ்வளவு நன்மையாய் இருந்திருக்கும்! அல்லது இவர்கள் அத்தனை பேர் கழுத்துகளிலும் கருங்கற்களை கட்டி ஆற்றிலே மூழ்கடித்து விடுவதும் ஒரு வகையில் மேலானதாய் இருக்கும்.''**

இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு பார்க்குமிடத்து 1887-ம் காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க்குரல், 'தேசியக் குரலில்'' தனியொரு வரலாற்றைத் தொடங்கி வைத்தது.

★ The old man's hope - 1886 - Calcutta P 2 (தமிழாக்கம் - பெ.சு.மணி)

காங்கிரஸ் பிரதிநிதியான மூக்கண்ணாசாரி தமிழில் பேசியதுபோல, 1888-ல் காங்கிரஸ் பிரதிநியாக முதன் முதலில் அலகாபாத் காங்கிரசில் கலந்து கொண்ட லாலாலஜபதி ராய் இந்துஸ்தானி மொழியில் பேசினார். காங்கிரஸ் மாநாட்டின் தலைவர் ஜார்ஜ்யூல் (1879-1892) இது குறித்து பின்வருமாறு தமது தீர்ப்பைக் (Ruling) கூறினார்.

''ஆங்கிலத்தில் பேச முடிந்தவர்கள் ஆங்கிலத்திலும் பேசவேண்டும் ஏன் எனில் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் பிற எந்தமொழியை விடவும் ஆங்கிலத்தைப் புரிந்துக்கொள்வார்கள். உண்மையிலேயே ஆங்கிலத்தில் பேச இயலாதவர்களைத் தவிர பிறருக்குத் தவிர மற்றவர்க்கு விதி விலக்கு இல்லை'' இந்தத் தீர்ப்பிற்கு அவையினர் ''மிகவும் சரியானது'' என்று ஆரவாரம் செய்தனர்.★

## *1917-ல் மூக்கண்ணாச்சாரி*

நீதிக்கட்சியின் திராவிடன் 'இதழில் (செப்டம்பர் 27, 1917-பக்.2) மூக்கண்ணாச்சாரி பற்றிய பின்வரும் குறிப்பு வெளிவந்துள்ளது.

*ஐயா,*

*கோகலே பிரசங்கத்தில் நடந்த பிராமணரல்லாதவர்களின் சுயாட்சி பிரேரனைரையை ஆதரித்துப் பேசிய கனம் மூக்கண்ணாச் சாரியரவர்கள் இம்மாகாணத்திலுள்ள 15*

★ P. 35 Congress, Cylopaedia - The Pre - Gandhi Era K Iswaradutt.

லக்ஷம் விஸ்வ கர்மாக்கள் காங்கிரசும் மூஸ்லீம் லீக்கும் இராஜப் பிரதிநிதியுமான சட்ட சபை மெம்பர்களில் 19 பெயர்கள் ஆலோசனை செய்திருக்கிற திருத்தங்களையும் அங்கீகரிக்கிறார்களென்று, 15 லட்சம் விஸ்வகர்மாக்களில் 8 லட்சம் விஸ்வ கர்மாக்களுடைய ஆதரணையையாவது, அல்லது அங்குள்ள கிளைச் சங்கங்களின் ஆதரணையையாவது அவர் அடைந்திருக்கின்றனரா?''

நீதிக் கட்சியின் பிராமணரல்லாதார் இயக்கப் பிரசாரத்திற்குப் பதிலடி கொடுக்க காங்கிரஸ் நோக்கத்துக்கு முரண்படாத வகையில் தென்னாட்டுப் பிராமணரல்லாதவர்களின் நலன்களை நாடுவதற்காக சென்னை மாகாணச் சங்கம் 1917 - செப்டம்பரில் சென்னை கோகலே மண்டபத்தில் நிறுவப் பட்டது. இந்தக் கூட்டத்தைக் கண்டனம் செய்து சென்னை நீதிக்கட்சியின் 'திராவிட' நாளிதழ் செப்டம்பர் 20, 1917-இல் எழுதியது. மூக்கண்ணாச் சாரியார் கலந்துக் கொண்ட பிராமணரல்லா தார் கூட்டம் முற்கூறிய சென்னை மாகாணக் கலத்திலும் நோக்கிற்குரிய, கூட்டமாக இருக்கலாம். திராவிடன் இதழின் மேற் காணும் குறிப்பு மூக்கண்ணா சாரிமீது பாய்ந்துள்ளதெனலாம். 'சுயாட்சி பிரேரனை என்பது 'ஹோம்ரூல்' (பெசண்ட் அம்மை யாரின்) பிரேரனையைக் குறிப்பதாகும்.

# சுய அரசாட்சி - வினா - விடையும் காங்கிரஸ் - வினா விடையும்

''தமிழகத்தில் தமிழ் மொழியின் வாயிலாக தேசிய விழிப்பிற்கு மூலகாரணங்களாக விளங்கியவை இரு அரிய அரசியல் வெளியீடுகள்.

ஒன்று 1883-ல் வெளிவந்த முதல் தமிழ் அரசியல் வெளியீடான சுய அரசாட்சி வினா - விடை; இதன் ஆசிரியர் தேசபக்தர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் பி. ஏ (1855-1916)

மற்றொரு அரசியல் வெளியீடு, காங்கிரஸ் மகாசபையின் சார்பில் வந்த முதல் தமிழ் அரசியல் வெளியீடான ''காங்ரெஸ் வினா - விடை''; இதன் ஆசிரியர் முடும்பை வீரராகவாசாரியார் பி.ஏ., (1857-1906)

இந்த இரு நூல்களின் ஆசிரியர்களும் ஒரு கால கட்டம் வரையில் புகழார்ந்த அரசியல் இரட்டையர்களாக செயற்கரிய செய்தனர். ரிப்பன் பிரபு தமது நாள் குறிப்பில் இவ்விருவர் அறிவாற்றலைப் பாராட்டி எழுதியுள்ளார். திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின்

அறிவாற்றலும், திரு. மு. வீரராகவாசாரியாரின் நிர்வாக ஆற்றலும் சென்னையில் இந்து ஆங்கில இதழ் மூலம் தேசியப் பணிகளில் இணைந்து எடுத்த செயலுக்கு வெற்றியை ஈட்டித் தந்தன. 1887- ம் சென்னை காங்கிரசின் வரவேற்புக் குழுவின் செயலாளர்களாகத் தொண்டாற்றி, மாநாட்டின் வெற்றிக்கு திரைக்குப் பின்னால் சுறு சுறுப்புடன் பாடுபட்டனர்.

''*காங்ரெஸ் வினா-விடை*''*யின்* அமைப்பு தொடக் கத்தில் 'சுய அரசாட்சி வினா - விடை' யைத் தழுவியது.

இரண்டின் ஒப்பாய்விற்கு முன்பாக'சுய அரசாட்சி வினா - விடை' யை வெளியிட்ட; ''உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபையைப் பற்றியும். நூலாசிரியரைக் குறித்தும் அறிவோம்.

## *உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை*

''உபயோகமான அறிவைப் பரவுச் செய்யும் சபை' பாமர மக்களுக்குத் தேவைப்படும் பொது அறிவு சம்பந்தமான செய்திகளை வழங்குவதற்காக தேசிய மனப்பான்மை கொண்டவர்களால் 1883-ல் அமைக்கப் பட்டது. திருவல்லிக்கேணியில் இதன் அலுவலகம் இருந்தது. அக்காலத்தில் சென்னையில் பொது வாழ்க்கைத்துறையின் மையமாக திருவல்லிக்கேணி சிறப்பெய்தி இருந்தது. இச்சபையின் செயலாளர்களில் ஒருவர், இரட்டையரில் ஒருவரான மு. வீரராகவாசாரி யார்.

இச்சபை எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதை 'சுய அரசாட்சி - வினா - விடை' நூலின் பின்புற அட்டையில் உள்ள அறிவிப்பு மூலம் அறியலாம்:-

''உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை'' நமது தேசத்திலுள்ள சாதாரண ஜனங்கள் துரைத்தன விஷயமாயும், கைத் தொழில் விஷயமாயும் புரிந்து கொள்ள வேண்டிய உபயோகமான விஷயங் களைத் திரட்டி, கூடிய திரவிய சகாயத்துக்குத் தக்கபடி அடிக்கடி சிறிய புத்தகங்களாகவும் பத்திரிகைகளாகவும் எல்லோருக்கும் விலையின்றிக் கொடுக்க வேண்டு மென்ற கருத்துடன் மேற்குறித்த பெயர் கொண்ட ஓர் சபை சென்னப்பட்டணம் திருவல்லிக்கேணியில் இப்போது ஏற்படுத்தியிருக்கிறது.''

"The society for the diffusion of useful knowledge" எனும் பெயரில் ஓர் அமைப்பு (உபயோகமான அறிவைப் பரப்பும் சபை) இங்கிலாந்தில் 1826-ல் பிரவ்காம் (Brougham 1778-1860 என்பவரால் கல்வியறிவு பெற இயலாத நிலையில் இருந்த ஏழை - எளிய மக்களுக் காகத் தொடங்கப்பெற்றது. மலிவு விலையில் சிறு - சிறு நூல்கள் வெளியிடப்பெற்றன.

இந்தியாவிலும் ''The Society for Acquisition for the General knowledge'' எனும் ஓர் அமைப்பு ஏற்படுத்தப் பட்டது. வங்க மறுமலர்ச்சியின் முன்னோடிகளில் ஒருவரும், ஆங்கிலத்தில் முதன் முதலில் தேசியப் பாடலை இயற்றியவருமான ஹென்றி லூயிஸ் விவிலியன் டிரோஜியா எனும் புகழ் பூத்த கவிஞன் (1809 1831) மாணவர்கள் 'டிரோஜியன்ஸ்' என்று பெயர்

பெற்று இளயவங்கம்'' (Young bengal) என்றும் புகழ் பெற்றனர். இவர்கள் 1842-ல் முற்கூறிய அமைப்பை நிறுவினர். சமூக, பண்பாட்டு நூல்களைக் கற்பிக்கவும், பல தலைப்புகளில் விவாதங்களை ஊக்கு விக்கவும் பாடுபட்டனர். இவர்கள் பழமைவாதத்தையும், மூட நம்பிக்கைகளையும், இந்து சமயச் சடங்கரச் சாரங் களையும் கடுமையாக எதிர்த்தார்கள்.

சென்னையில் நிறுவப் பெற்ற உபயோகமான அறிவைப் பரப்பும் சபை 'ஆங்கிலம் படித்தவர்கள் தமிழ் மட்டுமே அறிந்த ஏழை எளிய மக்கள் கற்றறிய அரசியல் அறிவு பெற - பாடுபட வேண்டும் எனும் நோக்கத் திற்கு ஊக்கமளித்தது. சென்னை 'விவேக சிந்தாமணி' எனும் புகழ் பூத்த தமிழ் மாத இதழின் ஆசிரியர் சி.வி. சுவாமி நாதய்யர், திருவல்லிக் கேணியில் இயங்கிய ''(Diffusion of knowlege agency) யில் செயலாளராகப் பணி யாற்றினார். 'விவேகசிந்தாமணி'யில் வெளிவந்த கட்டுரைகள் சிலவற்றை சிறு நூல்களாக வெளியிட்டு வந்தார்.

1897-ல் 'விவேகசிந்தாமணி'யில் வெளிவந்த 'கோல்பாட் சரித்திரம், வணிக வியாபாரி கடையிலிருந்து முதல் மந்திரிஸ்தானத்து வந்த ஒரு வாலிபன் கதை'' எனும் பிரெஞ்சு அரசனின் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டார். தம்முயற்சியை விளக்கி'' அறிவைப் பரவச் செய்யும் ஏற்பாடு'' எனும் தலைப்பில் விவேகசிந்தமணி'யின் முதல் இதழல் (1892-மே) எழுதியுள்ளார் ஆசிரியர்.

சுதேசமித்திரன் பத்திரிகை மூலம் இச்சபைக்கு பேராதரவை திரு. ஜி. சுப்பிரமண்ய ஐயர் அளித்து

வந்தார். இந்தச் சபையாரின் நோக்கங்களில் ஒன்றான ''சாதாரண ஜனங்கள் துரைத்தன விஷயமாயும் புரிந்துக் கொள்ள வேண்டிய... விலையின்றி கொடுப்ப தற்காக'', ''சுய அரசாட்சி வினா - விடை''யை திரு. ஜி. சுப்பிரமண்ய ஐயர் இயற்றித்தந்தார்.

சென்னை மாநிலத்தில் தேசியம் காலூன்றவும், அதன் களம் விரிவடையவும் 'இந்து'வும், ''சுதேச மித்திரனும்' சொல்லற்கரிய தொண்டுகளை செய் துள்ளன. இரண்டின் வரலாறுகளுமே தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாறுகளே. இந்த இரு தேசியப் பத்திரிகைகளையும் தொடங்கி வைத்து, ஆசிரியராக சாதனைகள் புரிந்தவர் திரு. ஜி. சுப்பிரமண்ய ஐயர்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழகத்தின் புதிய விழிப்பிற்கு ஆதிகர்த்தாக்களுள் ஒருவராக, திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரைக் குறிப்பிடுகிறார்.

இவர் வாழ்க்கையை ஆழ்ந்து ஆய்வோமானால் தேசப்பற்று, சமூகச் சீர்திருத்தப்பற்று, மொழிப்பற்று மூன்றும் இணைந்த முதல் தேசபக்தராக மதிப்பீட்டில் தேர்ந்து நிற்பவராகத் தெளியலாம். தமிழில் சிறு - சிறு அரசியல் வெளியீடுகளைக் கொண்டு வந்து தமிழ் மக்களிடம் பரப்ப வேண்டும் எனும் தேசியப் பணி, ''சுய அரசாட்சி வினா - விடை'' வெளியீட்டில் இருந்து தொடங்கியது.

திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் பெயரில் உள்ள தமிழ் வெளியீடுகள் (மொழி பெயர்ப்புகள் உட்பட) பலவற்றின் பட்டியல் வருமாறு.

1. சுய அரசாட்சி வினா - விடை 1883
2. ஜப்பான் சரித்திரம் - 1903
3. இந்தியா - அதன் அரசியலும் வருங்கால நிலையும் - 1905
4. பாரிசால் கொடுமைகள் - 1906
5. இந்தியர் ஆட்சி பற்றி இருவர் அபிப்பிராயம் - 1907
6. காங்கிரசின் பிரஸங்கங்கள் - 1907
7. சென்னை சுதேசிநிதி - தொழில் சங்கம் பாகம் 1 - 1908
8. இந்திய கவர்ன்மெண்டில் திருத்தங்கள் முதலியன - 1908
9. சுதேசியம், ஸ்வராஜ் பற்றி புகழ் மிக்க இந்தியர்களின் பேச்சுகளும் கட்டுரைகளும் - 1908
10. ஜனநிர்மாணம் - 1909
11. ஆசார சீர்திருத்த வியாசங்கள் - 1914
12. அலஹாபாத் பேச்சு -

*'பிரசங்க யாத்திரை'யில் அரசியல் சிறு வெளியீடுகளை வழங்குதல்*

தமிழில் அரசியல் அரிச்சுவடியை அளித்ததில் மட்டும் முதல்வரென்பதோடு, இந்த வெளியீடுகளை கையில் கூடவே கொண்டுபோய் மக்களிடையே வழங்க 'பிரசங்க யாத்திரை'யை மேற்கொண்டதிலும் இவரே முதல்வர் என்பதையும் 'தமிழகத்தின் தேசியவரலாறு காட்டுகிறது.

இந்தப் பழக்கம் அவரிடம் நெடுங்காலம் இருந்தது. கப்பலோட்டிய வ.உ.சி., தியாகி சுப்பிர மணிய சிவா ஆகியோர் மீது போடப்பட்ட வழக்கு பற்றிய காவல்

துறையின் ரகசியக் குறிப்பில், கைவசம் அரசியல் வெளியீடுகளைக் கொண்டு போய் கூட்டம் முடிந்ததும் வழங்கும் இவரது பழக்கம் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தமது மேடைப் பேச்சை முடித்துக் கொண்டு சிறு சிறு அரசியல் தமிழ் வெளியீடுகளை மக்களிடையே வழங்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார் என்பதற்கு பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையின் சான்று உள்ளது.★

இவ்வாறு ஜி. சுப்பிரமணிய ஐயர் வெளியிட்ட சிறு வெளியீடுகளில் அமெரிக்க அரசியல் தலைவர் பிரெய்ன் என்பவரைப் பற்றியதொன்றாகும். இந்த வெளியீடு பிரிட்டிஷ் ஆட்சியின் கவனத்தைக் கவர்ந்தது. பிரெய்னின் முழுப் பெயர் பிரெய்ன் வில்லியம் ஜென்னிங்கஸ் (1860-1925) என்பதாகும். இவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர். இவர் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். பாரதியார் இவரைப் பற்றி தமது 'இந்தியா' இதழில் 'பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவுகளை நன்கு எடுத்துக் காட்டி கண்டனை புரிந்த அமெரிக்க ஞானி மிஸ்டர் பிரெய்ன்'' என்று பாராட்டியுள்ளார். தூத்துக்குடியில் வ.உ.சி.க்கு ஆதரவாக ஜி. சுப்பிரமணியர் சொற்பொழி வாற்றிய பிறகு வழக்கம் போல் கைப்பையில் இருந்த துண்டுப் பிரசுரங்களை மக்களிடையே வழங்கினார். இந்த வெளியீடுகளை புலனாய்வுத்துறைக்கு அனுப்பி வைத்து மாவட்ட நீதிபதி பின்வரும் குறிப்பையும் இணைத்திருந்தார்.

★ (G.O No. 1542, (Confidential, Dated 3-10-1911)

"I enclose a book which is being distributed by G. Subramania Iyer after his lectures. It is published by his own press for sale nominally, but really is given away at his political meetings and the object is apparent. It contains (i) A Tamil translation of a speech made by Byran of America attacking British administration, (ii) Mr. Morley's Budget speech. The object, of course of the book is to show that English administration' is a failure, and that the money of the country is going out of it to England and that any form of Government is better than the existing one, and that even Mr. Morley has no intention of keeping faith with the queen's proclamation; (iii) Life work of Bryan (iv) Life of Mr. Morley The ignorant Hindu reader imagines that Bryan is qualified to criticise and that he is English instead of being what he is an American demagogue and openly hostile to England The first page of the contents of the book is instructive reading and likely to cause disloyalty....

1. "Russian rule better than English"

2 "Death rate speedily rising under British administration"

3 "Proclamation never earied out"

4. Wealth of India drawn off to England and people starving.

(Page 85, G O 1542 - Confd 1, Dated 3-10-1911)

மேற்காணும் நான்கு கருத்துகளை சற்று ஆய்வோம்.

ரஷ்ய ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சியைக் காட்டிலும் சிறந்தது எனும் முதல் கருத்து பற்றிய குறிப்பிற்கு ஒரு

பின்னணி உண்டு. 'ரஷ்ய அபாயம்' 'இந்தியாவில் ஆங்கிலக் கல்வி கற்றோர் அதிருப்தி'' இரண்டையும் இணைத்துச் சிந்திக்கப்பட்டது. 'அதிருப்தி'க்கு ஒரு வடிகால் அமைத்துக் கொடுப்பதன் மூலம் 'ரஷ்ய அபாயத்தை' போக்கலாம் என காங்கிரஸை அமைக்கத் திட்டமிட்டோரும், இதற்கு உடந்தையாக பிரிட்டிஷ் ஆட்சியும் இருந்தது என்பதையும் நினைவு கூர்தல் வேண்டும். ஹ்யூமின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய வெட்டர்பர்ன் எழுத்தில் இந்தக் கருத்து கூறப்பட்டுள்ளது.

காங்கிரஸ் மகாசபையின் தலைவர்களும் ஆரம்ப காலத்தில் ஜார் கால ரஷ்ய ஆட்சியின் கொடுங்கோன்மையை மக்களிடையே பிரசாரம் செய்தனர்.

'' இங்லீஷ் ராஜ்யம் நாகரீகமானது,
ருஷ்ய ஆட்சியோ கொடுங்கோன்மை''

(பக்.86, காங்கிரஸ் மகா சபை சரித்திரம் - சுதேசமித்திரன் வெளியீடு 1920).

1887-ல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையில் பத்ருதீன் தியாப்ஜி தமது தலைமை யுரையில் ''ருஷ்யராஜ்யத்தைக் காட்டிலும் இங்லீஷ் ராஜ்யம் சிறந்ததென்ற விஷயம் யாருக்குத் தெரியும்? படித்தவருக்கா? பாமரருக்கா?'' எனக் கேட்டார். 1885-ல் பம்பாய் அசோசியேசன், பூனா சர்வ ஜனக சபை வெளியிட்ட 12 துண்டு பிரசுரங்களில் ''Why do Indians prefer British to Russian Rule?'' என்பதொன்றாகும். காங்கிரஸ் தோன்றியதற்கு கூறப்படும் பல காரணங்

களுள், 'ரஷ்ய அபாயம்' பற்றிய அச்சுறுத்தலும் ஒன்றாகும். **"Indian Freedom Struggle"** எனும் ஒரு நூலில் **"was the congress a child of Russo - Phobia?"** எனும் ஆய்வும் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் பார்க்கும்பொழுது, 1907-ல் வெளியிட்டுப் பரப்பப்பட்ட தமிழ்ப் பிரசுரத்தில் "ரஷ்யா ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சியைக் காட்டிலும் சிறந்தது" எனும் கருத்து பொதிந்திருந்ததும், இந்தக் கருத்து பரவ ஜி. சுப்பிரமணிய ஐயரின் வெளியீடு கருவியாய் அமைந்ததும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய சிறந்த செய்தியாகும். 'ரஷ்ய அபாயம்' எனும் புரளியைக் கிளப்பி பயமுறுத்தும் பாசாங்குத் தனத்தைக் கண்டித்து ஜி. சு. 4.4.1908-ஆம் சுதேசமித்திரனிலும் எழுதினார், 'மாடர்ன்ரெவ்யூ' இதழில் If Russia to rule over India? எனும் தலைப்பில் வெளிவந்த கட்டுரை, ரஷ்ய ஆட்சி, பிரிட்டிஷ் ஆட்சியைக் காட்டிலும் மேலானது என்பது ஐயத்திற்கு இடமில்லாமல் விளக்குகிறது என்பதையும் ஜி.சு. எடுத்துக்காட்டினார்.

"பிரிட்டிஷ் நிருவாகத்தில் இந்திய மக்களின் மரணவிகிதம் அதிகரித்துக் கொண்டுவருகிறது" எனும் செய்திபரவவும் ஜி. சுப்பிரமணிய ஐயர் முயற்சி செய்தார். கி.பி. 1860 முதல் கி.பி. 1900 வரையில் இந்தியாவில் பத்து பயங்கரப் பஞ்சங்கள் தோன்றி நாட்டைச் சுடுகாடாக்கின. 1906-ல் ஏற்பட்ட பஞ்சம் இங்கிலாந்தின் சரிபாதி ஜனத்தொகைக்கு ஈடான மக்களைக் கொன்று குவித்தது. (பக்.63 இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும். முதல் பதிப்பு 1973, பெ.சு.மணி).

மூன்றாவது கருத்தான ''பிரகடனம், செயல் படுத்தபடவில்லை'' என்பதாகும். 1857 புரட்சியைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பேரரசி விக்டோரிய மகாராணி இந்திய அரசு ஊழியத் துறையில் இந்தியர் நியமனங் களுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும்'' எனத் தமது பிரகடனத்தில் குறிப்பிட்டார். இதை பிரிட்டிஷ் அதிகார வருக்கம் புறக்கணித்தது. குறிப்பாக கர்சன் பிரபு புறக்கணித்து இழிவுபடுத்திப் பேசினார். கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி காலத்திலும் இத்தகைய பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டது. இதை நம்பி காங்கிரசுக்கு முந்திய தேசிய இயக்கங்களான மாநில அரசியல் அமைப்புகளும் ஏமாந்தன. 1904-ல் பம்பாய் காங்கிரசில் ஜி. சுப்பிரமணிய ஐயர் பேசும் பொழுது, 1858-பிரகடனத்தைபற்றி பின் வருமாறு கூறினார்.

''இந்தியர்களின் நிலைமை 1833-ல் இருந்ததைக் காட்டிலும் இப்போது மிகக் கேடாய்விட்டது. மகாராணி கொடுத்த வாக்குறுதிகளை லார்ட் லிட்டன் குடில தந்திரங்களால் பங்கப்படுத்தினார். லார்ட் கர்ஸனோ 1858-ம் வருஷத்தில் மஹாராணியின் விளம்பரத்தில் சொல்லப்பட்ட ஆட்சி முறையும் கொள்கைகளும் பிரிட்டிஷ் ஆட்சி முறைக்கும் கொள்கைகளுக்கும் பொருந்தியன அல்லவென்று வெளிப்படையாகச் சொல்லிவிட்டார். நமக்குச் சட்டத்தில் ஏற்பட்டிருக்கும் ஸ்வதந்தரங்களை நாம் எவ்வகையாலும் காக்க வேண்டும். அங்ஙனம் காக்குமிடத்து இங்கிலாந்து மாத்திரமேயன்றி உலகத்திலுள்ள தேசத்தார் அனை வருமே பாரத நாடு விடுதலை பெறுதல் அவசிய

மென்று கூறும்படி வேலை செய்யவேண்டும்.'' (பக்.437, காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம், சுதேசமித்திரன் வெளியீடு, 1920)

நான்காவதாகக் குறிப்பிட்ட ''இந்தியச் செல்வத்தின் வெளியேற்றமும், மக்கள் பட்டினியும்'' எனும் கருத்தைப் பரப்புவதின் வாயிலாக பொருளாதார உணர்வையும் வெளிப்படுத்திய ஜி. சுப்பிரமணிய ஐயரின் பொருளாதாரச் சிந்தனையின் செழுமையைக் காண்கிறோம். பொருளாதாரச் செய்திகளை விவாதிப்பதற்காக மட்டும் **''யுனைடெட் இந்தியா''** எனும் ஆங்கில வார இதழ் 1902-ல் தொடங்கினார். ஜி. சுப்பிரமணிய ஐயர். 1903-ல் வெளிவந்த "Some Economic aspects of British Rule in India"எனும் இவருடைய நூல் அத்துறையில் குறிப்பிடத்தக்கதாகும். பேராசிரியர் விபின் சந்திரா அவர்கள் ("The rise and Growth of Economic nationalism in India 1968") 1968 ஜி. சு. வின் முன்கூறிய நூலிற்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து ஆய்வு செய்து பாராட்டியுள்ளார். நான் நேரு மியூசியம் அண்ட் மெமேரியல் லைப்ரரி''யில் ஒரு சமயம் பேராசிரியரைச் சந்தித்து நேரில் பாராட்டியபொழுது ஜி.சு.வைப் பற்றியத் தனி ஆய்வு வேண்டும். இதற்கு நீங்கள் திட்டப்பணி குறித்து ஒரு வரைவை அளிக்கலாம். நான் பரிந்துரை செய்கிறேன்'' என்றும் ஆதரவுடன் குறிப்பிட்டார். ஜி.சு.வின் இந்தப் பொருளாதார ஆய்வு நூல் குறித்து செய்திகள் ''புதிய விழிப்பின் முன்னோடி ஜி. சுப்பிரமணிய ஐயர்'' எனும் நூலில் (1987) (ஆசிரியர் பெ.சு.மணி) ஆய்வு செய்யப் பெற்றுள்ளது.

"சுய அரசாட்சி வினா - விடை" எழுதப்பட்டதற்கு மூலகாரணம் அன்னாளைய இந்திய ராஜப்பிரதிநிதி ரிப்பன் பிரபுவின் 'ஸ்தல சுயாட்சி ஸ்தாபன திட்டம்" ஆகும். ஆரம்ப கால காங்கிரஸ் மாநாடுகளில் ரிப்பன் பிரபுவின் காலம், தேசிய எழுச்சிக்கு ஊக்கமளித்த காலம் என்றெல்லாம் பேசப்பட்டன. 1880-84க்கு இடைப்பட்ட நான்கு ஆண்டுகளில் ஆங்கிலம் கற்ற அரசியல் வருக்கத்தின் நல்லுறவைப் பெற்றார், ரிப்பன் பிரபு.

*அறிக்கை 1882 மே 18-ல் வெளி யிடப் பெற்ற ரிப்பன் பிரபு அறிக்கையின் - ஆங்கில மூலத்தின் ஒரு பகுதி வருமாறு.*

"Problem of public policy : "At the outset, the Governor - General in Council must explain that, advocating the extension of local self - government, he does not suppose that the work will be in the first instance better done than if it remained in the sole hands of the Government district officers. It is not, primarily, with a view to improvement in administration that this measure is put forward and supprted. It is chiefly desirable as an instrument of political and popular education His Excellency in Council has himself no doubt that, in course of time, as local knowledge and local interest are brought to bear more freely upon local administration, improved efficiency will in fact follow But at starting there will doubtless be many failures, calculated to discourage exaggerated hopes, and even in some cases to cast apparent discredit upon the practice of self - Government itself. If, however, the officers of Government itself. If, however, the

officers of Government only set themselves, as the Governor - General in Council believes they will, to foster sedulously the small beginnings of independent political life, it they accept loyally and as their own the policy of the Government, and if they come to realise that the system really opens to them a fairer field for the exercise of administrative tact and directive energy than the more autocratic system which it supersedes, then in may be hoped that the period of failures will be short, and that real and substantial progress will vey soon become manifest.

"It is not uncommonly asserted that the people of this country are themselves entirely indifferent to the principle of self - Government, that they take but little interest in public matters, and that they prefer to have such affairs managed for them by Government officers The Governor - General in Council does not attach much value to this theory. It represents no doubt the point of view which commends itself to many active and well intentioned district officers, and the people of India are, there can be equally no doubt, remarkably tolerant of existing facts. But as education advances, there is rapidly growing up all over the country an intelligent class of public spirited men, whom it is not only bad policy, but sheer waste of power, to fail to utilise. The task of administration is yearly becomming more onerous as the country progresses in civilisation and material prosperity The annual reports of every Government tell of an every - increasing burden laid upon the shoulders of the local officers. The cry is everywhere for increased establishment.

The universal complaint in all departments is that of overwork. Under these circumstances it becomes imperatively necessary to look around for some means of relief, and the Governor - General in council has no hesitation in stating his conviction, that the only reasonable plan open to the Government is to induce the people themselves to undertake, as far as may be, the management of their own affairs; and to develop, or create if need be, a capacity for self - help in respect of all matters that have not for Imperial reasons, to be retained in the hands of the representatives of Government.

"It if be said that the experiments hitherto made in this direction have not been encouraging, the Governor - General in Council must avow his belief that the principle has not as yet been, in any general or satisfactory fashion, fully and fairly tried. There is reason to fear that previous attempts at local self - Government have been too often overridden and practically crushed by direct, though well - meant, official interference. In the few cases where real responsibility has been thrown upon local bodies and real power entrusted to them, the results have been very gratifying. There is even now a vast amount of assistance rendered to the administration by Honorary Magistrates, members of Municipal Corporations and other Committees, and there is no antecedent improbability in the theory that if non - official auxiliary agency were more thoroughly organised and more fully trusted, there would be a speedy and marked improvement, not only in its amount, but in its efficiency

ரிப்பன் பிரபு அறிக்கையின் சாரம்சக் கருத்துகளுள் சில வருமாறு.

1. அரசியல் மற்றும் பொதுக் கல்வியைப் புகட்டும் சாதனம் என்பதே முக்கியமாகும்.
2. இந்தியர்களிடயே இயன்றளவு நிருவாகத்தை ஒப்படைக்க வேண்டும்.
3. அரசு அதிகாரிகள், சுதந்திரமான அரசியல் வாழ்க்கை தொடங்குவதற்கு கடினமாக உழைத்து வளர்க்க வேண்டும்.
4. நாட்டு மக்கள் சுய ஆட்சிக் கொள்கைகளில், ஆர்வமில்லாதவர்கள், அரசாங்கமே அனைத்தையும் கவனித்துக் கொள்ளும் என்று கூறப்படுவதை ஏற்க முடியாது.
5. ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் மீது அதிகரிக்கும் நிருவாகச் சுமையைக் குறைக்க மக்கள் நலப் பயிற்சி அளிக்கவேண்டும்.

ரிப்பன் அறிக்கையின் சாதகமான அம்சங்கள் சுய அரசாட்சி வினா விடையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளதை பிற்சேர்க்கையில் அறியலாம்.

ஸ்தல ஸ்தாபனத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஆலோசனை கூற அரசு ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டு நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர், பெரும்பான்மை உறுப்பினர்கள் கருத்தை ஏற்காமல், சட்டத்தைப் பற்றிய தமது மாற்றுக் கருத்துகளை வெளியிட்டார். தாலுகா போர்டுகளின் உப

தலைவர்களாக ஸ்தல அதிகாரிகளை நியமிப்பதை எதிர்த்தார். இதனால் அதிகாரியின் மனப் போக்கு பிரகாரம்தான் நிருவாகம் நடக்கும். நகரசபைத் தலைவருக்கோ உபதலைவருக்கோ ஊதியம் தருவதையும் எதிர்த்தார். இதனால் தீங்கான போட்டியும் பணப்பித்தும் மேலிட்டு பதவியின் மேன்மை மறைந்துவிடும் என்றார். (ப.47) மஹான் மணி ஐயர் - கே. சுந்தரராகவன்- அல்லயன்ஸ் வெளியீடு)

'ஸ்தல சுயாட்சி ஸ்தாபனத் திட்டம்' என்பதை விளக்கி ரிப்பன் பிரபு வெளியிட்ட அறிக்கையில் உள்ள மையக் கருத்து வருமாறு.

> *''நிருவாகத்தை முன்னேற்றமடையச் செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதுவதை விட, அரசியல் அறிவு புகட்டும் ஒரு கருவியாகவே இந்தத் திட்டத்தை முக்கிய மாகக் கருதவேண்டும்.''*

'மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன்' ரிப்பன் பிரபுவின் 'ஸ்தல சுயாட்சி ஸ்தாபன திட்ட'த்திற்கு ஆதரவைத் திரட்டுவதற்காக திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரை வெளியூர்களுக்கு அனுப்பி வைத்தது.

முதல் அரசியல் நூலும், முதல் அரசியல் பிரசங்க யாத்திரையும் இவ்வழியே திரு. ஜி. சுப்பிரமணிய ஐயருக்கு வாய்த்தன.

கிராமங்களில் வாழும் தமிழ் மக்கள் எளிய முறையில், பழகு தமிழில் 'ஸ்தல சுயாட்சி திட்டத்தை'

புரிந்துகொள்வதற்காக 'வினா - விடை' உத்தி ஆளப் பட்டது. இந்த வினா விடையின் உத்திக் கவர்ச்சி, காங்கிரஸ் வினா - விடையிலும், வெளிப்பட்டது.

இரண்டு வினா - விடைகளுமே தமிழ் மட்டும் புரிந்துக்கொள்ளக் கூடியவர்களுக்காக இயற்றப் பட்டன.

'சுய அரசாட்சி வினா - விடை'யில் 42 வினா - விடைகள் உள்ளன.

''காங்கிரஸ் வினா - விடை'யில் 56 வினா - விடைகள் உள்ளன.

பரிசோதனை முயற்சியில் வெளியிடப்பெற்ற சுய அரசாட்சி வினா - விடையின் அநுபவங்களைப் பயன்படுத்திக் கொண்டது, 'காங்ரெஸ் வினா - விடை.''

இரண்டும், இந்தியா ஒரு தேசம், இந்துக்கள், இஸ்லாமியர்கள் முதலானோர் மத வேறுபாடு பாராட்டாமல் ஒற்றுமையாய் பாடுபட வேண்டும், பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிற்கு எவ்வளவோ நன்மைகளை செய்துள்ளது, அந்த ஆட்சி நீடுழி வாழ வேண்டும் போன்றனவற்றை வலியுறுத்தி யுள்ளன.

இந்திய அரசாங்க அமைப்பை விளக்குவதில் 'சுய அரசாட்சி வினா - விடை'யை எழுத்திற்கெழுத்து அப்படியே பின்பற்றியுள்ளது காங்ரெஸ் வினா - விடை.

சில சான்றுகளைப் பார்ப்போம்,

**வினா :** இவருக்கு கவர்னர் ஜெனரல் என்ற பேர் வருவானேன்?

**விடை :** கவர்னர் ஜனரல் என்பதற்கு ''பொது வான அதிபதி'' என்று அர்த்தம். இவருக்குக் கீழே அனேக கவர்னர்கள் இருக்கிற படியாலும், இவர்களுக்கு மேலெல்லாம் பொதுவான மேலதிகாரத்தை இவர் செலுத்துகிறபடியாலும், இவருக்கு இந்தப் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வினா - விடை, சுய அரசாட்சி வினா - விடையில் உள்ளது.

இனி, காங்கிரஸ் வினா விடையில் மேலேயுள்ள சுய அரசாட்சி வினா - விடை அப்படியே எடுத்தாளப் பட்டுள்ளதைப் பார்ப்போம்-

**வினா :** கவர்னர் ஜெனரல் என்பதற்கு ''பொது வான அதிபதி'' என்று அர்த்தம். இவருக்குக் கீழ் இத் தேசத்திலேயே அனேக கவர்னர்கள் இருக்கிற படியாலும், இவர்களுக்கு மேல் எல்லாம் பொதுவாக மேலதிகாரத்தை இவர் செலுத்துகிற படியாலும் இவருக்கு இந்தப் பேர் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாதிரியில் சுய அரசாட்சி வினா - விடையின் 11, 12 - வது வினா - விடைகளும், காங்கிரஸ் வினா - விடையின், 12, 13வது வினா - விடைகளும் முழு அளவில் ஒத்துள்ளன.

இந்த வினா - விடைகளுக்குப் பிறகு, 'சுய அரசாட்சி வினா விடை', ஸ்தலஸ்தாபன அமைப்புப் பற்றிய பிரசாரத்திலும்; காங்கிரஸ் வினா - விடை, காங்கிரஸ் பற்றிய பிரசாரத்திலும் வழிபிரித்துக் கொள்கின்றன.

'சுய அரசாட்சி வினா - விடை' ஏன் எழுதப் பட்டது? என்பதற்கு நூலின் உள்ளேயே விடை யளிக்கப்பட்டுள்ளது.

**வினா** : ஆம் ஐயா! இப்போது எங்கே பார்த்தாலும் சுய அரசாட்சி என்று கூக்குரலிடுகிறார்களே இது தானா?

**விடை** : ஆம். இது இன்னதென்று உமக்கும் உம்மைப் போலொத்த மற்றவர்களுக்கும் தெரிய வேண்டுமென்றே இப்பொழுது இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

''காங்கிரஸ் - வினா - விடை'' இயற்றப்பட்டது ஏன்? என்பதற்கு, நூலின் முன்னுரையாக உள்ள பகுதியில் காரணம் கூறப்பட்டுள்ளது:-

*''என்றும் எங்கும் ஜனவாக்கியத் தையே பிரமாணமாகக் கொண்டு ஆங்கிலே யர்கள் அரசு முறைமையைச் செலுத்தி வருபவர்களான படியால் அவர்களித் தேசத்தில் அனுஷ்டித்து வரும் துரைத்தன முறைமையையும் அவர்கள் பிரஜைகளாகிய நாம் செய்யவேண்டிய கடமைகளையும் இந்த பரத கண்டத்திலுள்ள எவரும் அறிய வேண்டியது அவசியம். அவ்வெண்ணத் தைக் கொண்டே இச்சிறிய புத்தகத்தைப் பிரசுரஞ் செய்தேன்...''*

சமுதாயத்தின் பல பிரிவினர்களிடையே ஒற்றுமை ஏற்படாத வரையில் இந்தியர்களிடம் அதிகாரப் பொறுப்பைவிடக் கூடாது என இந்தியர்களின்

நலன்களுக்கு எதிராக கூறி வந்தோர்களின் கூற்றை மறுத்தும், ரிப்பன் பிரபுவின் உறுதியைப் பாராட்டியும் 'சுய அரசாட்சி வினா - விடை' விளக்கும் பகுதி, இது:-

"இன்றுங்கூட நமது ஜனங்களுக்கு தென் கலை வட கலை சண்டையும், பார்ப்பான் வெள்ளாழன் சண்டையும், ஹிந்து துலுக்கன் சண்டையும் விட வில்லையே.

தென்கலை மெம்பர்கள் வடகலை ஜனங்களுக்கு அநியாயமும், பிராமண மெம்பர்கள் சூத்திர ஜனங்களுக்கு அநியாயமும், ஹிந்து மெம்பர்கள் மகமதியர்களுக்கு அநியாயமும், செய்தால் கவர்ன்மெண்டார் கேட்பார்களா!

அதிலும், இப்படி நல்ல காலம் வருமென்று காத்துக் கிடந்தால் ஒருநாளும் வராது.

நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமானால் தண்ணீரிலிறங்கச் சொல்ல பயந்து முடியாது, என்று நினைத்தல்லவா இப்போது ரிப்பன்பிரபு மகாதயவு கூர்ந்து ஜனங்களுக்கு சொற்ப அதிகாரத்தையாவது கொடுத்துதான் பார்க்க வேண்டுமென்று, வெகு ஐரோப்பியர்கள் அவரைத் தடுத்தும், உறுதியாய் செய்து வருகிறார்."*

இந்தியாவின் அடிமைத்தனத்திற்கு ஒற்றுமையின்மையும், தேசாபிமானமும் இல்லாமையே என்பதையும் நூலினை கற்போர் உணரவும் ஒரு வினா - விடையை அமைத்துத் தந்துள்ளார் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர்.

---

★ சுய அரசாட்சி வினா - விடை; 1883 - பக். 24-25

*"... அப்படி நமக்குள் ஒற்றுமையும் தேசாபிமானமும் இருந்தால் 25 கோடி ஜனத்தொகை உள்ள நாம் சென்ற ஐந்நூறு வருஷகாலமாய் பராதீனர்களாய் வருவோமா?... ஒற்றுமையும் தேசாபிமானமும் எந்தெந்த வேலைகளுக்கு வேண்டுமோ அந்தந்த வேலைகளை ஜனங்களுக்குக் கொடுத்துப் பார்க்க வேண்டும்."*

ரிப்பன் பிரபுவின் சுய அரசாட்சி திட்டம், "சுவாதீன புத்தியும், பொது நன்மையை நாடும் குணமும், ஐக்கியமும், தேசாபிமானமும்" தோன்ற வழி வகுக்கிறது என சுய அரசாட்சி வினா - விடை பிரசாரம் செய்தது.

"காங்ரெஸ் - வினா - விடை, 'காங்கிரஸ்' மகா சபை, முற்கூறிய 'ஐக்கியம்', 'தேசாபிமானம்' முதலான வற்றிற்கு பொறுப்பேற்று அமைக்கப்பட்டுள்ளது என பிரசாரம் செய்தது.

'சுய அரசாட்சி வினா - விடையில்' ரிப்பன் பிரபு விற்கு அடுத்தபடியாக ஹ்யூம் பாராட்டப்பட் டுள்ளார். காங்கிரஸ் அமைப்பாளராக ஹ்யூம் புகழ் பெறுவதற்கு முன்பு 1883-ல் பாராட்டப்பட்டார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்:-

"இந்த மிஸ்டர் ஏ. ஹியூமுக்கு சுதேசிகளிடத்தில் மிகவும் அபிமானம். உத்தியோகத்தினின்று நீங்கியும் இங்கிலாந்துக்குப் போகாமல் இறக்குமளவில் இந்த தேசத்திலேயேயிருப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்.

இவர் சுவய அரசாட்சி விஷயமாய் "சுதேச புத்தி மான்களுக்குப் பொதுவாய் விண்ணப்பம்" என்று

'பயோனியர்' என்னும் பத்திரிகையில் பிரசுரம் செய்திருக்கிறார்.

இந்த விண்ணப்பத்தை சுதேச பத்திரிகைகள் அனைத்தும் தங்கள் பக்கங்களில் எடுத்துப் பதிப்பித்துப் பிரசுரம் செய்தன.''*

திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், அந்த விண்ணப் பத்தின் கடைசிப் பகுதியை தமிழில் வழங்கியுள்ளார். விண்ணப்பத்தின் இறுதியில் வெளிப்படும் உருக்கத் தையும் சுட்டிக் காட்டுகிறார்.

*''ஐயோ! உங்களை மனதாற நேசித்து நீங்கள் நீந்தினாலும் ஆழ்ந்தாலும் உங்களவர் களாகவேயிருப்பவர்கள் கூட இக்கடும் பரீக்ஷை எவ்விதமாய் முடியுமோவென்று ஆவலாய் சந்தேகப்பட்டு தத்தளிக்கிறார் களே'' என்று கேட்போர் மனமுருகும்படி (மிஸ்டர் ஏ.ஹியூம்) சொன்னார்.''**

'காங்கிரஸ் வினா, விடை'யில் ஹ்யூமைப் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால், ஹ்யூம், 'காங்கிரஸ் வினா - விடை'யைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். ஆக்லண்ட் கால்வின், டப்ரின் முதலானோர் 'காங்கிரஸ் வினா - விடை'யின் குரலையும், நோக்கத்தையும் தாக்கிய பொழுது, காங்கிரஸ் சார்பில் வெளிவந்தது என்ற காரணத்தால் காங்கிரஸ் வினா - விடையை ஆதரித்து ஹ்யூம் வாதாடினார்.

''சுய அரசாட்சி வினா - விடைக்கும்'', ''காங்ரெஸ் வினா விடைக்கும்'' அணுகு முறையில் ஒரு வேறு பாடும் உள்ளது. 'சுய அரசாட்சி வினா விடை'யில்

★ சுய அரசாட்சி வினா - விடை; பக். 41-42

★ மேற்படி நூல் - ப.43

ஹிந்து - இந்தியர் என்ற சொற்களில் பெரிய வேறுபாடு காணாமல் ஆளப்பட்டன. இந்த வினா - விடையில் 'ஹிந்து' என்ற குரலும், மனநிலையும் சற்று ஓங்கியுள்ளன. ஆனால், காங்ரெஸ் எனும் அமைப்பின் திட்டவட்ட மான கொள்கையை விளக்கும் வெளியீடாக காங்கிரஸ் வினா-விடை அமைந்ததாலும், காங்கிரசில்முஸ்லீம்கள் கலந்துக் கொள்ளக் கூடாது என தீவிர முஸ்லீம் தலைவர்கள் எதிர்ப்பு பிரசாரம் செய்ததாலும் காங்கிரசில் முஸ்லீம்கள் எதிர்ப்பிரசாரம் செய்ததாலும், காங்கிரஸ் வினா - விடையின் குரலிலும், மன நிலையிலும் 'ஹிந்து' என்ற உணர்வு ஒலிக்கவில்லை.

சுய அரசாட்சியின் வினா - விடையின் முதல் வினாவான, ''நீர் ஆர்?'' என்பதற்கு விடையாக அமைந்தது, ''நான் ஹிந்து'' என்பதே.

கடைசி வினாவின், விடையிலும் 'ஹிந்து' என்ற மனப்பான்மை ஒலிக்கிறது:-

''இது ஸ்திரப்பட்டு வேரூன்றி ஓங்கி வளர்ந்து பிற்காலத்தில் ஹிந்து ஜனங்கள் ஒரு தேசத்தாராய் ஒருமைப்பட்டு தங்கள் ராஜ்ஜியத்தைத் தாங்களே ஆண்டு கொள்ளும் திறமை யுண்டாய் ஐரோப்பிய ராஜ்யங்களை விட கீர்த்தியும் பலமும் ஐசுவரியமும் உண்டாய், ஹிந்து தேசமென்ற பேர் என்றைக்கும் குறையாத கடும் பகற் சூரியன் போல பிரகாசிக்கும் ஓர் காலத் துக்கு இப்போது இந்த சுவய அரசாட்சி வேராகுமா?''

இத்தகையப்போக்கு காணப்படுவதால் சுய அரசாட்சி வினா - விடை, 'ஹிந்து தேசியத்தின் குரலா?'' என்று கேட்டுவிட முடியாது.

வினா -விடையின் தொடக்கத்திலேயே இந்த ஐயம் எழாவண்ணம் விடை தரப்பட்டுள்ளது:-

''ஹிந்துக்களுக்கும் இவர்களுக்கும் (மகமதியர் களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும்) மதவித்தியாச மிருப்பி னும் ஒரே தேச ஸ்தர்களாகவும், தேசத்துக்குண்டாகும் நன்மை தீமைகளுக்கும், க்ஷேம, க்ஷாமங்கங்களுக்கும் பொதுவாய்ப் பாத்தியப் பட்டவர்களாயுமிருக்கிற படியால் இந்தியாவில் வசிக்கும் சகல ஜாதிமார்களும் சகோதர சம்பந்தமுள்ளவர்களாகவே பாவிக்கப்பட வேண்டும்.. மதவித்தியாசத்தோடு ஐக்கியமும், சத்திய மும், மன உறுதியும் வேண்டும். இல்லாத பட்சத்தில் நாம் 25 கோடி சங்கையுள்ள ஜாதியான போதிலும், அவ்வளவும் காக்கைக் கும்பலுக்குச் சமானந்தான்.''

இறுதியாக, இரண்டின் நடையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, காங்கிரஸ் வினா - விடையில் 'பழமொழிகள்' நிறைய ஆளப்பட்டுள்ளன. தமிழ் மொழியும் சற்று திருத்தமுற அமைய முயற்சியெடுக்கப் பட்டுள்ளது.

இரண்டும் 'பொதுமக்கள் கருத்து' என்பதை உருவாக்க வேண்டும் என்ற அரசியல் வழிச் சிந்தனைக்குத் தமிழில் ஆக்கம் அளித்தன என்ற ஒரே சிறப்பு மட்டுமே தமிழ்ச் சிந்தனையின் வாழ்த்திற்கும், வணக்கத்திற்கும் உரியது.

காங்கிரஸ் வினா - விடையின் ஆய்வும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்த வல்லது.

❖

" காங்கிரஸின் வினாவிடையும் கருதரிய மகிஷபுரி★
ஓங்குபிரதிநிதிச் சபையின் ஒப்புயர்வில்லா வமைப்பும்
தீங்கரும்பே எனவியற்றிச் சீரளித்த வுத்தமனே
பாங்குதிரு மாலடியில் பதிதேடச் சென்றனையோ!"

" ஓரிக்கு வில்லழகும் ஒப்புயர்வில்லாக் குணமும்
நீரொக்கு மனத்தழகும் நீள்கொடைசேர் கரத்தழகும்
பூரிக்கு முகத்தழகும் பூணூல்வாழ் மார்பழகும்
பாருக்குள் காண்பதென்றோ பகர்வீர ராகவனே!"

## வேறு

" பார்புகழ் பராபவக் கன்னி யிருபஃது
சீர்குறு பிறைச்சனி சதுர்த்தி கார்த்திகைநாள்
வறீர்புனல் பதத்தன்வளர் வைகுந்த நாட்டை
ஆர்புகழ முடும்பை வீரராகவ னடைந்தநாளே."

-"இந்துநேசன்"
தலையங்கம் 10-10-1906

மு. வீரராகவாசாரியார் மறைவு குறித்து 'சுதேசமித்திரன் (ஆசிரியர் ஜி. சுப்ரமண்ய ஐயர்) 8-10, 1906-ல் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு.

"மிஸ்டர் வீரராகவாசாரி யாரிடத்தில் அநேக நல்ல குணங்களிருந்தன. நேசர்களிடத்தில் வாஞ்சையும், ஜனங்களை அரவணைத்து சேர்ப்பதில் சக்தியும், பெருங் கார்யங்களை நிர்வகிப்பதில் சாமார்த்தியமும் உள்ளவர். உபகாரத்திலேயே திருஷ்டியுள்ளவர். இவரிறக்கும்போது 50 வயது மூன்று பிள்ளைகளையும்,

★ மகிஷபுரி - மைசூர்

இரண்டு பெண்களையும் சம்சாரத்தையும் தீராத் துயரத்துக் குள்ளாக்கி மாண்டுபோயினர். இந்தியாவின் எப்பாகத்திலும் இங்கிலாண்டில் கூட அவரையறிந்த பலர் இந்த சமாசாரத்தைக் கேட்டு துக்கப்படுவார்கள். காங்கிரஸ் மகா சபைக்கும். சென்னை மகாஜன சபைக்கும் ஆரம்ப காலத்தில் இரவு பகல் வேற்றுமை யின்றிப் பாடுபட்டவர்களில் மிஸ்டர் வீரராகவாசாரி ஒருவர், அவர் 'ஹிந்து'பத்திரிகையை விட்டு பொதுக் காரியங்களில் சேர்ந்து உழைக்க சக்தியில்லாதவரான போது அவருடைய உதவியை யிழந்த தேசாபிமானிகள் அவரில்லையேயென்று பலமுறை துக்கப்பட்ட துண்டு.''

1935 ஆகஸ்ட்டு சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் இவரைப் பற்றி வந்த சில செய்திக் குறிப்புகள் பின்வருமாறு.

1887- காங்கிரஸ் காரியதரிசி

1894 - மீண்டும் காங்கிரஸ் காரியதரிசி

1857 - பப்ளிக் சர்விஸ் கமிஷன் மெம்பர்

1903- இந்தியப் போலீஸ் கமிஷன், திருவல்லிக் கேணி விக்டோரியா மாணவர் இல்லம் கல்விக்கு நிறுவப்பட்ட சிறு கமிட்டியில் பொதுஜனங்களின் பிரதிநிதி. சென்னை சர்வ கலாசபை செனிட் சபையில் மெம்பர் (அந்நிய காலம் வரையில்). திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் கமிட்டி மெம்பர்.

*ஓர் அரியநூல்*

இவருடைய பின்வரும் ஓர் அரிய நூல் வெளி வந்துள்ளதாகத் தெரிகிறது. ''ஸ்திரி சம்போக நிர்ணயகாலம்'' - 10000 பிரதிகள் முதற் பதிப்பாக வெளி வந்துள்ளது. விலை ரூ.6 - சென்னை நெஷனல் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. மவுண்ட்ரோடு 1891. இந்த விளம்பரம் ''இந்து கைமை புனர்விவாக தீபிகை - 1870 - காசிவிசுவநாத முதலியார்'' - நூலின் பின்புற அட்டையில் வெளிவந்துள்ளது.

*பாரதியின் இரங்கல் உரை:*

மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார் திரு. மு. வீரராகவாசாரியாரின் மறைவு குறித்து இரங்கல் தெரிவித்து 13-11-1906-ல் 'இந்தியா' இதழில் எழுதினார்.

''சென்ற சனிக்கிழமை மாலை ஆத்துரிலே ஸ்ரீ மு. வீரராகவாசாரியார் இறந்துபோன விஷயம் எல் லோருக்கும் துக்கம் உண்டாக்கக் கூடியது. இறக்கும் பொழுது இவருக்கு வயது 50. சென்னையிலே, 25 வருஷங்களுக்கு மேல் அநேகப் பொதுக் காரியங்களி லே சம்பந்தப்பட்டு அரிய நன்மைகள் செய்துவந்த 'ஹிந்து' பத்திரிகை இவராலும் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யராலும்தான் முன்னிலைக்கு வந்தது. ஜி. சுப்பிர மணிய ஐயர் பத்ராதிபராகவும் இவர் மேனேஜராகவு மிருந்து பத்திரிகை நடத்தி வந்தார்கள். எத்தனையோ கஷ்டங்கள் ஏற்பட்டபோதிலும் அவற்றிற்கெல்லாம் சலித்து விடாமல் விடாமுயற்சியுடனும் உற்சாகத் துடனும் வேலை செய்வதில் ஸ்ரீ மு. வீரராகவாசாரியார்

மிகவும் திறமை வாய்ந்தவர். ஜனங்களை வசீகரிப்பதி லே இவருக்கிருந்த சாமார்த்தியத்திற்கு எல்லையே கிடையாது. எத்தனையோ கவர்னர்களும், பார்லி மெண்ட் மெம்பர்களும் இவருடன் உயிர்க்குயிரான நட்புப் பாராட்டி வந்தார்கள்.''*

சென்னை மகாஜன சபையின் செயலாளராகத் தொண்டாற்றியவர் திரு. மு. வீரராகவாசாரியார்.

1885-ல் இந்திய தேசிய காங்கிரஸ் பம்பாயில் தோன்றுவதற்கு உதவிய சென்னை மகாஜன சபை 16-5-1854-ல் சென்னை 'இந்து' பத்திரிகை அலுவலகத்தில் அமைக்கப்பெற்றது. இதன் தோற்றத் திற்கு பாடுபட்டவர்களுள் 'இந்து' பத்திரிகை ஆசிரியர் ஜி. சுப்பிரமண்ய ஐயர், மு. வீரராகவாசாரியார். பி. அனந்தாசாருலு. ரங்கய்ய நாயுடு, பாலாஜி ராவ், சேலம் ராமசாமி முதலியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். செயலாளர்களாக மு. வீரராகவாசாரியாரும், பி. அனந்தாசாருலும் தேர்ந்தெடுக்கப்பட்டன. அப் பொழுது வாரம் மும்முறையாக வெளிவந்துக் கொண் டிருந்த 'இந்து' இதழும், வாரம் ஒரு முறையாக வெளிவந்த 'சுதேச மித்திரன் இதழும் மகா ஜன சபை வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்றன.

முதல் மாநில மாநாடு சென்னை, பச்சையப்பன் ஹாலில் 29-12-1854 முதல் 2-1-1885 வரையில் நடைபெற்றது. மாநாட்டில் மூ. வீரராகவாசாரியார் ''இந்திய சட்டமன்றத் துறையும் இந்திய சட்டமன்றங் களும் எனும் கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதிப் படித்தார்.

## *சென்னை மகாஜன சபையில் பண்டிதர் க. அயோத்திதாஸ்*

1892 ஏப்ரல் மாதம் நடைபெற்ற சென்னை மகாஜன சபைக் கூட்டத்தில் அயோத்திதாஸர் ஓர் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இது குறித்து அவர் 'தமிழன்' இதழில் அக்டோபர் 21, 1908-இல் பின்வருமாறு விரிவாக எழுதியுள்ளார்.

''நேஷனல் காங்கிரஸ் கமிட்டியார் யாதொரு பகாரஞ் செய்யாவிட்டாலும் சென்னை மஹாஜன சபையோர் சிற்சில உபகாரங்கள் செய்யவில்லையோ வென்பவருமுண்டு. சென்னை மஹாஜன சபையோருபகாரத்தை இவ்விடம் விளக்குகின்றோம். 1892-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் மஹாஜன சபைகூடுவதாகவும் அக்கூட்டத்தில் ஏரிமராமத்துக்கள் கிணறுகளின் விருத்திகள் ரோடுகளின் மராமத்துக்கள் வெளி ஜில்லாக்களின் சீர்திருத்தங்களையும் பேசுவதுடன் பறையர்களுக்கான உபகாரங்களும் யோசிக்கப் போகிறபடியால் ஒவ்வோர் ஜில்லாக்களிலுமிருந்து பிரதிநிதிகள் வந்து அவரவர்களுக்குள்ள குறைகளை வெளியிட்டு சீர்திருத்தஞ் செய்துகொள்ளலாமென்றும் விண்ணப்பம் அச்சிட்டு பல ஜில்லாக்களுக்கும் அனுப்பியது போல் நீலகிரிக்கு எமக்குமோர் பத்திரிகை வந்து சேர்ந்தது. அவற்றை நாம் வாசித்து சாதி பேதமற்ற திராவிட கனவான்களுக்கு அறிக்கை செய்து ஒர் பெருங்கூட்டமியற்றி காங்கிரஸ் கமிட்டியாரவர்களுக்கு நாமனுப்பி

யுள்ள பொது நல விண்ணப்பத்தை அவர்கள் கவனியாது மஹாஜன சபையில் இவ்வேழைக் குடிகளைப் பற்றி ஏதோவாலோசிக்கப் போகிறார்களாம். அதற்காக இவ்வேழைக்குடிகளில்யாதாமொருவர் இக்குலத்தோருக்கென்று பிரதிநிதியாகச் சென்று காரியவாதிகளை யாலோசிக்க வேண்டுமென்று வழி சிலவு முதலியவைகளுக்கு உணவு உதவி புரிந்து எம்மை சென்னைக்கு அனுப்பி வைத்தார்கள்.

யாமிவ்விடம் வந்து சேர்ந்து விக்டோரியா டவுன் ஹாலில் கூடியுள்ள மஹாஜனசபை பிரதிநிதிகளுடன் யாமும் ஓர் பிரதிநிதியாய் உட்கார்ந்திருக்கிறோம்.

அக்காலத்தியச் சபையில் அக்கிரஸனாதிபதியாக வீற்றிருந்த ஆனரேபில் பி. அரங்கைய நாயுடு காரவர்கள் எழுந்து நின்று சில ஜில்லாக்களின் குறை களைச் சொல்லிக் கொண்டே வந்து (பறையர் பிரலாபம்) என்னும் வாக்கியத்தை பென்சிலா லடித்து இவர்களைப் பற்றிவேண்டிய வரையில் சில துரைகள் எழுதியிருக்கின்றார்கள். ஆதலின் இவாள் குறைகளை நாம் ஆலோசிப்பதில் யாது பயனுமில்லை யென்று பேசி வருங்கால் சபையின் காரியதரிசி ஸ்ரீ எம். விரராகவாசாரியவர்கள் அக்கிரா ஸனாதிபதியை நோக்கி நீலகிரியிலிருந்து அக்குலத்தாருக்கு ஒரு பிரதிநிதி வந்திருக்கிறாரென்று கூறினார்.

உடனே நாமெழுந்து சபையோருக்கு வந்தனங் கூறி, ஐயா, இக்குலத்தோரைப்பற்றி சில துரைமார்கள் உபகாரஞ் செய்கின்றார்களென்று கூறித் தாங்களெல்

லோரும் மவுனஞ்சாதிப்பது அழகன்று. உங்களாலேயே இக்குலத்தோர் தாழ்த்தப்பட்டு சீர் குலைத்திருக்கின்ற படியால் நீங்களே இவர்களை சீர்திருத்தி சுகம்பெறச் செய்ய வேண்டுகின்றேன்.

அயோத்திதாஸரின் வேண்டுகோள மகாஜன சபையாரால் எவ்வாறு எதிர்கொள்ளப்பெற்றது என்பதைப் பற்றி மேற்கொண்டு தகவல் இல்லை.''

## *''மைசூர் பிரதிநிதி சபையும் காங்கிரஸ் சபையும் வினா - விடை''*

தமிழில் இவர் இயற்றிய அரசியல் நூல்கள் இரண்டு. ''காங்கிரஸ் வினா - விடை''யோடு, ''மைசூர் பிரதிநிதி சபையும் காங்க்ரெஸ் சபையும் - வினா விடை'' என்பதும் இரண்டாவது நூலாகும். 1891-ல் வெளியிடப் பெற்ற இந்த நூல் இருபத்திரண்டு பக்கங்களைக் கொண்டது. விலை 0-1-6.

இந்த வினா - விடையில், 'காங்கிரஸ் வினா - விடை'யைப் பற்றிய குறிப்பையும் காண்கிறோம்.

> *''காங்கிரஸ் சபை செய்து வரும் வேலைகளைப் பற்றி இச்சென்னையில் பிரசுரமான வினா விடையில் எவ்வளவோ அறிந்திருக்கிறேன்.''**

மைசூர் ராஜ்ஜியத்தில் அமைந்த பிரதிநிதி சபையைப் போல, பிரிட்டிஷ் இந்தியாவிலும் பிரதிநிதி

★ மைசூர்பிரதிநிதி சபையும் காங்ரெஸ் சபையும் - வினா - விடையும், பக். 33.

சபைகள் அமைக்கப்பட வேண்டும் எனும் கருத்தும் இந்த வினா - விடையில் தெரிவிக்கப்பட்டது:-

*"கேளும் ஐயா. இச்சென்னை இராஜ தானியைக் கவர்ன்மெண்டார் ஐந்து பாகங் களாகத் தேச பாஷைப்படி பிரிக்க வேண்டும். அப்படி ஏற்படும் ஒவ்வொரு பிரிவிலும் மைசூரில் கூடிவரும் பிரதிநிதி சபையைப் போலசுமார் 300 - மெம்பர்கள் அடங்கிய ஓர் சபையை வருஷாவருஷம் கவர்ன் மெண்டாரே கூட்டவேண்டும்... இம்மாதிரி யாக ஒவ்வொரு இராஜதானியில் ஸ்தாபிக்கப் படும் சட்ட நிருபண சபைகளின் மெம்பர்கள் கவர்னர் ஜெனரலின் சட்ட நிருபண சபைக்கு சரிபாதிமெம்பர்களை நியமிக்க அதிகாரம் பெறவேணுமா."**

**மேலேயுள்ள மேற்கோளில், "தேச பாஷைப்படி பிரிக்க வேண்டும்" எனும் பரிந் துரையை குறிப்பாக நோக்க வேண்டும். மொழிவழி மாநிலக் கோரிக்கையின் முதல் தமிழ்க் குரலாக ஒலிப்பதல்லவா, இது?**

## பாரதியார் குறிப்பு

1906 அக்டோபர் 6ஆம் இந்தியா இதழில் பாரதியார் The Mysore representation assembly - மைசூர் பிரதிநிதி சபை" எனும் தலைப்பில் எழுதியுள்ளார். இந்தக் கட்டுரையில் சபையின் தோற்றத்தைப் பற்றி சில குறிப்புகளை

★ மைசூர்பிரதிநிதி சபையும் காங்ரெஸ் சபையும் - வினா - விடையும், பக். 23.

எழுதியுள்ளார். ''திவான் ரங்கசார்லு காலத்தில் தொடங்கிய இந்த சபை 'சர் சேஷாத்திரி ஐயரின் பலமான ஆட்சியின் போது சிறிது வல்லமை குன்றிப் போயிருந்தது. அம்பஸ்ஸர். ஆர்.வி. கிருஷ்ண மூர்த்தியின் காலத்தில் மறுபடியும் பிரபலமடையத் தொடங்கிற்று. ஜன உரிமைகளில் மிக அன்புடைய வரும் இருதய விசாலம் கொண்டவருமாகிய ஸ்ரீமாதவராவ் காலத்தில் அது இன்னும் ஊர்ஜிதமடையும் என்று எண்ணப்போதுமான இடமிருக்கின்றது. 1906 அக்டோபர் 1-இல் சபையில் மாதவராவ் பேசிய பொழுது 25 வருடங்களுக்கு முன் பிறந்ததனை இந்த சபை'' எனும் ஒரு குறிப்பைத் தந்துள்ளார். இந்தக் குறிப்பில் அடிப்படையில் சபை 1881-ல் தோன்றியிருக்கலாம் என கதை முடிகின்றது. ''மிகவும் சுருங்கிய உரிமைகளை யுடைய மேற்படி சங்கம் அதிகாரிகளின் இஷ்டத்திற்குத் தக்கபடி சில சில மாறுபாடுகளுக்கு உட்படாமல் வேலை செய்யும் திறமை கொண்டிருக்குமென்று நமக்குத் தோன்றவில்லை அதற்குத் தக்கபடி உரிமை களை ஏற்படுத்தி அவற்றை எந்த உத்தியோகஸ்தரா னாலும் மாறுபாடு செய்யமுடியாதபடி சட்டம் ஏற்படுத்தப் படுமாயின் இந்த சபை ஒரேவிதமான உபயோகத்தன்மை கொண்டதாக இருக்கும் என்று பாரதியார் கூறியுள்ளார்.

முற்கூறிய இரு நூல்களின் ஆசிரியர் என்பதி னாலும் மு. வீரராகவாசாரியாருக்கு பெருமை சேர்ந்தது. 'இந்துநேசன்' 10-10-1906-ல் இதழில் வெளியான இரங்கற் பாக்களில் ஒன்று, மு. வீரராகவாசாரியின் இருநூல்களும் குறிப்பிடப்பட் டுள்ளது.

*''காங்கிரசின் வினா - விடையும் கருதரிய மகிஷபுரி ஓங்கு பிரதிநிதி சபையின் ஒப்புயர்வில்லா வமைப்பும் தீங்கரும்பே எனவியற்றி சீரளித்த வுத்தமனே பாங்குதிரு மாலடியில் பதிதேடிச் சென்றனையோ.**

இந்தப் பாடலில் ''மகிஷபுரி ஓங்கு பிரதிநிதிச் சபையின்...'' எனும் குறிப்பு, ''மைசூர் பிரதிநிதி சபையும் காங்ரெஸ் வினா - விடை'' என்னும் நூலைக் சுட்டுவதாகும்.

❖

# காங்ரெஸ் வினா - விடை மூலம்

'**கா**ங்ரெஸ் வினா - விடை' நூல் மூ. வீரராக வாசாரியாருக்கு மட்டும் புகழைத் தேடித்தரவில்லை. சென்னை காங்கிரசுக்கு, தமிழருக்கு, தமிழ்மொழிக்கு, தமிழக அரசியல் வரலாற்றிற்கு ஆகியனவற்றிற்கும் புகழைத் தேடி தந்துள்ளது.

சென்னையில் 1887-டிசம்பரில் நடைபெற்ற காங்கிரசின் நிதி உதவிக்காகவும், காங்கிரஸ் மாநாட்டின் குறிக்கோள்களை அறிந்து, மாநாட்டிற்குத் திரளாக வர மக்களைத் தூண்டவும் "**காங்ரெஸ் 'வினா - விடை' அல்லது இத்தேசத்தில் வருஷா வருஷம் கூடி வரும் காங்ரெஸ் ஜனசபையின் சரித்திரம்**" முதன் முறையாக வெளியிடப்பட்டது.

காங்ரெஸ் வினா - விடையின் முதற்பதிப்பு பற்றிய செய்தியை முதன் முறையாக 25-12-1887-ல் சுதேசமித்திரனில் எழுதப்பட்ட தலையங்கத்தின் மூலமாக அறிகிறோம். தலையங்கத்தில் 'காங்ரெஸ் வினா - விடை' என்று நூலின் பெயர் குறிப்பிடப்பட வில்லையென்றாலும், "காங்கிரஸ் கமிட்டியால்

தமிழிலும் தெலுங்கிலும் காங்கிரஸ் சரித்திரம் தெளிவாய் விளங்க வினா - விடைகளாக சிறுபுத்தகங்களாக அச்சடித்துக் கிராமங்கள், பட்டணங்கள் தோறும் எல்லா மூலை முடுக்குகளிலும் இறைத்து வந்தார்கள்'' எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் தெலுங்கில் வினா - விடை வெளியீடுகள் வந்ததாக வேறெந்த நூல்களிலும் குறிப்பிடப் படவில்லை. ஹ்யூமின் காங்கிரஸ் அறிக்கை (1888)யில் தெலுங்கு வினா - விடை பற்றிய குறிப்பு இல்லை.

1888-ல் திரு. க. சுப்பிரமணிய ஐயரால் எழுதப்பட்ட 'ஆரியஜன ஐக்கியம் அல்லது காங்ரெஸ ஜனசபை' என்னும் நூலில் 'காங்ரெஸ வினா - விடை' என்று நூலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹ்யூம் தயாரித்த உத்தியோக பூர்வமான காங்கிரஸ் அறிக்கையில், "The tamil Congress Catechism" என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. காங்ரெஸ் வினா விடையின் ஆங்கில மொழியாக்கம், காங்ரெஸ் அறிக்கையில் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் உருது மொழியில், வெளிவந்த ''மௌல்வி பரீத்வுத்தீன் - கம்பக்கட்பூர் ராம் பக்ஷ் இருவரிடையே நடைபெற்ற உரையாடல்'' எனும் நூலின் பின்னிணைப்பும் உள்ளது. இந்த வெளியீட்டின் 25000 பிரதிகள் வடநாட்டில் வழங்கப்பட்டன.

பாரதிய வித்யாபவன் வெளியிட்டுள்ள 'இந்திய மக்களின் வரலாறும் - பண்பாடும்' எனும் தலைப்பில் வெளியிடப் பெற்ற பல தொகுதிகளின் இரண்டாம் தொகுதியில், 'காங்ரெஸ் வினா - விடை' ஏற்படுத்திய 'பரபரப்பு' குறிப்பிடப்பட்டுள்ளது.

''அந்தக் காலத்தில் வெளியான வெளியீடுகளில் இரு வெளியீடுகள் பரவலாக வழங்கப்பெற்று, போதுமான பரபரப்பை விளைவித்தன. 'காங்கிரஸ் - வினா - விடை' யும் 'மௌல்வி பத்ரிவுதீன் - கம்பக்ட்பூர் ராம் பக்ஷ் இடையே நடைபெற்ற உரையாடல்'' என்பதும் அந்த இரு வெயீடுகளாகும். அவைகள் நாட்டுப்புறப் பண்ணை மேலாட்சி முறையையும் அரசாங்கத்தின் கொடுங்கோன்மையையும், அவைகள் விளைவிக்கும் தீமைகளையும் விவரித்துள்ளன. இந்தத் தீமைகளுக்கு மாற்று பிரதிநிதித்துவ ஆட்சி அமைப்பே. இதற்காகத்தான் காங்கிரஸ் போராடுகிறது என்றும் அவைகள் வருணித்தன. இந்த வெளியீடுகள் அரசாங் கத்தைக் கடுமையாகத் தாக்கின.''

''காங்ரெஸ் வினா - விடை' போன்ற வெளியீடு கள், காங்கிரசின் அரசியல் இயக்கப் பிரசார முறைகளில் புதிய மாறுதல்களையும் புகுத்தின.

இங்கிலாந்தில் 1839 முதல் 1846- வரை நடை பெற்ற 'தானிய சட்ட எதிர்ப்பு சங்கத்தின்' (Anti corn league) போராட்ட முறைகள் காங்கிரசின் புதிய அரசியல் இயக்கத்திற்கு வழிகாட்டின என்ற ஒரு கருத்தும் கூறப்படுகிறது.

ஹ்யூம் - கால்வின் இடையே நடைபெற்ற விவாதத்தில், 'தானிய சட்ட எதிர்ப்பு இயக்கம், 'காங்கிரஸ் வினா - விடை'யோடு தொடர்புப் படுத்தப் பட்டுள்ளதால், இந்த இயக்கம் பற்றி சிறிது அறிவோம்.

1886-ம் ஆண்டு வெளிவந்த ஹ்யூமின் 'முதியவனின் நம்பிக்கை' (The old man's Hope) என்னும் நூலில், ஹ்யூம், பிரிட்டனில் நடைபெற்ற தானிய சட்ட எதிர்ப்பு இயக்கத்தின் கிளர்ச்சி முறைகளை விரிவாகக் குறிப் பிட்டு அம்முறைகளை காங்கிரஸ் பின்பற்றுமாறு பரிந்துரைத்துள்ளார்.

பிரிட்டனில் சிறுபான்மையான ஒரு பிரபுத்துவ கூட்டம் மக்களுக்கு சுலபமாக உணவு தானியங்கள் கிடைப்பதை தடை செய்தது; தானிய இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. மக்கள் தானிய இறக்குமதி வரியை நீக்குவதற்காக ஏழாண்டு காலப் போராட்டத்தைத் தொடங்கினர். பிரைட் (Bright) என்பவரும், ரிச்சர்ட் காப்டனும் (Richard cobden) போராட்டத்திற்குத் தலைமையேற்றனர். ஜான்பிரைட் (1811-1889) அரசியல் அறிஞர், சிறந்த பேச்சாளர், பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினராக 1843 முதல் 1869 வரையில் இருந்தார். முற்போக்கு சிந்தனையாளர் காப்டனுடன் இணைந்து போராடியவர். ரிச்சர்ட் காப்டன் (1804-1865) அரசியல், பொருளாதர அறிஞர், முற்போக்கு போராளி துண்டுப் பிரசுரங்கள் பலவற்றை எழுதி வெளியிட்டு கிளர்ச்சிகளை வழிநடத்தியவர்.

ஸர். வில்லியம் வெட்டர்பான் எழுதிய ஹ்யூமின் வரலாற்றிலும், 'தானிய சட்ட எதிர்ப்புக் கிளர்ச்சி' வழிமுறைகளை இந்தியா பின்பற்ற வேண்டும் என ஹ்யூம் வற்புறுத்தியது எடுத்துக் காட்டப்பட்டது.

''ரிச்சர்ட் காப்டனையும் அவருடைய வீரம் மிக்கத் தோழர்களைப் போன்றே நாமும் நமது சுதந்திரத்திற்

காகவும், நமது உரிமைகளுக்காகவும், நியாயத் திற்காகவும் பெரிய போராட்டத்தை நடத்தும் பொழுது அந்தப் போராட்டத்தில் இந்தப் புனிதத் திருநாட்டில் பிறந்த ஒவ்வொரு இந்தியனையும் நமது தோழனாக வும், துணைவராகவும் கொள்ள நாம் பெரு முயற்சி யெடுக்க வேண்டும்.''*

பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் அரசியல் பிரசார வெளியீடுகளுக்கு உள்ள ஆற்றலை, இதன் எதிர்கால விளைவை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முன்கூட்டியே கணித்தது.

ஹ்யூமின், ''முதியவனின் நம்பிக்கை'' வீரராக வாசாரியாரின் ''காங்ரெஸ் வினா - விடை'', உருது வெளியீடான, ''மௌல்லி பரூக்கத்தீன் ராம் பக்ஷ் உரையாடல்'' ஆகிய அரசியல் பிரசார சிறு வெளி யீடுகள், தானிய சட்ட எதிர்ப்புச் சங்கத்தின் பிரசார முறைகளை ஒத்திருந்தன என்று பிரிட்டிஷ் அதிகார வருக்கம் கருதியது.*

காங்கிரஸ் வினா - விடையின் பதிப்புகள், உள்ளடக்கம் பற்றிய ஆய்வு மேலும் இதன் சிறப்பை விரித்துரைக்கும்.

1887-டிசம்பர் 27, 28, 29, 30 தேதிகளில் நடைபெற்ற காங்கிரசின் நிதியுதவிக்காக நன்கொடை திரட்டப்பட, காங்கிரஸ் வினா விடை வெளியிடப் பட்டதாகக் குறிப்பிட்டுள்ளது, இதுதான் முதற்

★ Indian National Evolution -Ambika Charan Mazumdar - 1917 P 72

பதிப்பாக இருக்க முடியும். இதன் பக்கங்கள், வெளியிடப்பட்ட மாதம், பற்றிய விவரங்களை அறிய முடியவில்லை. 1888-ல் இந்தச் சிறு வெளியிட்டின் திருத்தமுற்ற விரிவாக்க மூன்றாம் பதிப்பு வெளி வந்தது. விலை அணா ஒன்று.

மூன்றாம் காங்கிரஸ் அறிக்கையில் (1888) இணைக்கப்பட்டுள்ள ஆங்கில மொழியாக்கம், மூன்றாவது பதிப்பாகும். இந்த ஆங்கில மொழியாக்கத் தில் மூன்றாம் காங்கிரசின் (1887) தீர்மானங்களும், பங்கு கொண்டோரைப் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன,

*மூன்றாம் பதிப்பு* -

''காங்ரெஸ் வினா விடை அல்லது இத்தேசத்தில் வருஷா வருஷம் கூடிவரும் காங்ரெஸ் ஜன சபையின் சரித்திரம்'' எனும் நூலின் மூன்றாம் பதிப்பு ஆங்கிலத் தில் எமது பார்வைக்குக் கிடைத்தது. திருத்தமுற்ற விரிவாக்கம் ''எனும் குறிப்பு மேலட்டை யில் உள்ளது. பதிப்பித்த ஆண்டு 1888 என உள்ளது. சென்னை நாஷனல் அச்சுக் கூடத்தில் (100 - மவுண்டு ரோட்டு, சென்னை) பதிப்பிக்கப் பட்டது. உரை நடைப் பக்கம் 40, விலை தபால் கூலி உட்பட 0-1-0 (ஓரணா) 500 படிகள் விலை 8.00; 1000 படிகள் விலை 30.00 நூல் அளவு நீளம் 10, செ.மீ., அகலம் 13 செ.மீ. வினாக்கள் 62.

மேலட்டையின் உட்புறத்தில் பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

''ஆங்கிலேய நாட்டாரித் தேசத்தைக் கைப்பற்றி அதை அவர்கள் ஆண்டு வருவதற்கு இத்தேசத்தார் செய்த தவப்பயனே காரணமாம் என்று எங்கும் ஜனவாக்கியத்தையே பிரமாணமாகக்கொண்டு ஆங்கி லேயர்கள் அரசு முறைமையைச் செலுத்தி வருபவர்க ளானபடியால் அவர்களித் தேசத்தில் அனுஷ்டித்து வரும் துரைத்தன முறைமையையும் அவர்களின் பிரஜை களாகிய நாம் செய்ய வேண்டிய கடமைகளையும் இந்த பரத கண்டத்திலுள்ள எவரும் அறிய வேண்டியது அவசியமாகும். அவ்வெண்ணத்தைக் கொண்டே இச்சிறிய புத்தகத்தைப் பிரசுரஞ் செய்தேனாகையால், சற்புருஷர்கள் சந்தோஷப்பட்டு பிழைகளைப் பொறுத்து வணிகர்கள் இதில் பல ஆயிரங்காபிகள் விலைக்கு வாங்கி இதை எங்கும் பரவச் செய்து இத்தேசத்து மகாஜனங்களுக்கு துரைத்தன முறையில் தியானத்தை உண்டாக்கி வருவார்களென்று பிரார்த்திக் கின்றேன். காபிகள் வேண்டுவோர் சென்னை மவுண்டு ரோட்டு நாஷனல் பிரஸ் அச்சுக் கூடத்தில் மானேஜருக் குப் எழுதிக் கொள்ளவும்.

இச்சிறு பெயரில் வெளியீட்டின் ''இத்தேசத்தில் வருஷா வருஷம் கூடிவரும் காங்ரெஸ் ஜனசபையின் சரித்திரம்'' என்று நீண்ட துணைத் தலைப்பு இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 1885-ல் காங்கிரஸ் தோன்றி மூன்றாம் ஆண்டிலேயே அச் சபைக்கு சரித்திரம் எழுதத்துணிந்தது மதிப்பிடத் தக்கதாகும். எனவே **காங்கிரஸ் சரித்திரம் தொடக்க காலத்திலேயே இந்தியமொழிகளில் தமிழில்தான் வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.**

*''ஆசிரியர்: எம். வீரராகவாச்சாரி; காங்கிரஸ் பற்றிய விளக்கம்: மூன்றாம் பதிப்பு: நேஷனல் பிரஸ்; சென்னை டிசம்பர் 1888, உரைநடைப் பக்கம் 40; விலை 1 அணா; புக் சைஸ் வி.8.10; தேசிய காங்கிரசின் எழுச்சி, குறிக்கோள், முன் னேற்றம் ஆகியவை பற்றிய விளக்கங்கள் கொண்ட இது மக்களுக்கு விநியோகிப்ப தற்காகப் பிரசுரிக்கப்பட்டதாகும். காங்கிரஸ் கட்சி ஆட்சிமுறைச் சீர்திருத்தங்களை அடைவதற்கு உதவும்படி மக்கள் யாவரும் இக்கட்சிக்குப் பொருள் உதவுமாறு உள்ள வேண்டுகோளுடன் முடிகிறது இச்சிறு நூல்.''*

''மைக்ரோ பில்ம்'' மூலம் நகல் செய்யப்பட்டு இந்நூலில் இணைக்கப்பட்டுள்ள ''காங்ரெஸ் வினா - விடை'', நான்காம் பதிப்பாகும்; திருத்தமுற்ற விரி வாக்கம் என்ற குறிப்பும் உள்ளது; பக்கங்கள் 44; வெளி வந்த ஆண்டு 1890; நூலின் தலைப்பு: ''காங்ரெஸ் வினா - விடை அல்லது இத்தேசத்தில் வருஷா வருஷம் கூடிவரும் காங்ரெஸ் ஜனசபையின் சரித்திரம்.''

இதைத் தவிர, 1888-ல் சென்னை ஜி. ஏ. நடேசன் கம்பெனியாரால் வெளியிடப்பட்ட ''இந்திய காங்கிரஸ் அதன் தோற்றம், வரலாறு, சட்ட விதிகள், குறிக் கோள்கள்'' என்னும் ஆங்கில நூலில் காங்கிரஸ் வினா - விடை பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

முதற் பதிப்பு முதல் நான்காம் பதிப்பு வரையில் உள்ள பதிப்புகளில் என்னென்ன செய்திகள் விடப்பட்

டுள்ளன, சேர்க்கப்பட்டுள்ளன என்பனவற்றையும் விரிவாக அறிய வாய்ப்பில்லை.

மூன்றாம் காங்கிரஸ் அறிக்கையில் உள்ள ''காங்ரெஸ் வினா - விடை'க்கும் நான்காம் பதிப்பான காங்கிரஸ் வினா - விடைக்கும் சற்று வேறுபாடு உள்ளது.

முன்னதில் நான்காம் காங்கிரஸ் பற்றிய (அலகாபாத் காங்கிரஸ்) அறிவிப்போடு முடிய, பின்னதில் ஐந்தாம் காங்கிரஸ் (பம்பாய் காங்கிரஸ் 1389) பற்றிய சிறு வருணனையோடு முடிகிறது.

காங்கிரஸ் வினா - விடையின் நோக்கம் 'பொது ஜனகியானம்'தான்; பொது விஷயங்களில் - அரசியலில் - மக்களுக்கு ஞானம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்பதுதான். நூலின் உள்ளே அவ்வப் பொழுது 'பொது ஜனகியானம் என்ற சொற்றொடர் ஆளப்படுகிறது.

இத்துடன் அமையாமல், காங்ரெஸ் பற்றிய செய்திகளை பிரதேச மொழிகளில் எடுத்தியம்ப வேண்டும் எனும் நோக்கமும் 'காங்கிரஸ் வினா - விடை'யின் வெளியீட்டிற்கு ஒரு காரணமாகும். இந்த நோக்கத்தை வினா - விடையின் வாயிலாகவும் தெளிகிறோம்:-

*''காங்ரெஸ் விஷயமாய் அப்போதைக் கப்போது செய்கின்ற கிரந்தங்களை மகா ஜனங்களுக்கு சுதேச பாஷைகளில் அறி வித்துக் கொண்டேயிருக்கவேண்டும்.''*

''காங்ரெஸ் வினா - விடை'யில் உள்ள செய்திகள் எப்படி பரவவேண்டும் என்பதைப் பற்றியும், இறுதியில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

''நீங்கள் இதைப் படித்துவிட்டீர்கள்; புரிந்து கொண்டீர்கள். உங்கள் நண்பர்களுக்கு படித்துக் காண்பியுங்கள்; அவர்கள் புரிந்துகொண்டார்களா என்பதைக் கவனியுங்கள். உங்கள் கிராமத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் படித்துக் காண்பியுங்கள்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரச்னைகள் முழு வதையும் புரிய வையுங்கள். உங்கள் கிராமத்தில் உள்ள ஒவ்வொருவரும் புரிந்து கொண்ட பிறகு, பக்கத்து கிராமத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் புரியவையுங்கள். அவர்கள் ஒவ்வொருவரும், மற்றவர் களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இது அவர்களது கடமையாகும் என்பதை வற்புறுத்தி கூறுங்கள். இவ்வாறு எடுத்துரைத்து ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் ஒருவர்கூட விடப்படாமல் அனைவரும் விவரமறிந்தோராவர்கள். உங்களுடைய முழக்கம், 'காங்கிரசுக்குஜே' என இருக்க வேண்டும். தங்களுக் குத் தாங்களே உதவி புரிந்து கொள்வதை மெய்ப்பிப்ப வர்களுக்கே இறைவன் உதவி செய்வார்.''★

மேலேயுள்ள விடை, தமிழில் உள்ள நான்காம் பதிப்பில் இல்லை.

44 பக்கங்கள் உள்ள காங்கிரஸ் வினா - விடையில் (நான்காம் பதிப்பு) 18 பக்கங்கள் வரையில் ஓர் அறிமுக அரசியல் போதனை இடம் பெற்றுள்ளது. எஞ்சிய 26 பக்கங்களில் தலைப்பில் உள்ளவாறு 'இத்தேசத்தில்

★ Report of the Third Indian National Congress held at Madras - Appendix - II P.204

வருஷா வருஷம் கூடி வரும் காங்ரெஸ் ஜன சபையின் சரித்திரம்' விளக்கமுறுகிறது.

'இந்தியா' எனும் ஒரு நாட்டை உருவகப்படுத்தி சிந்தையில் பதித்திட எடுக்கப்பட்ட ஆரம்ப கால முயற்சிகளை 'வினா - விடை'யில் காண்கிறோம். முதல் மூன்று வினாக்களைப் பாருங்கள். பாமரர்கள் மனதில் பதிய வைக்க வேண்டியச் செய்திகளைச் சொல்லும் முறையை நோக்குங்கள்:

வினா - 1 இந்தியா தேசமென்பது யாது?

வினா - 2 இப்போது இந்தத் தேசம் யாருடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறது?

வினா : 3 அவ்வளவு சிறிய தேசத்தார் இத்தனை பெரிதாகிய நமது தேசத்தை எப்படிக் கைக் கொண்டு ஆண்டுவருகிறார்கள்? ''கேழ்வரகில் நெய் ஒழுகுகின்ற தென்றால் கேட்பாருக்கு மதியில்லையா?'' என்றபடி இதென்ன ஆச்சரியம்!

மூன்றாவது வினாவிற்கு விடையளிக்கும் வகையில் பிரிட்டனில் நாடாளுமன்ற ஜனநாயக நெறிகள் எடுத்துக் கூறப்படுகின்றன.

மக்களுக்கு, கட்டுப்பாடு உணர்ச்சி முதல் தேவை யென்றும், ஆட்சியில் மக்கள் பிரதிநிதிகள் மக்கள் நலத்திற்காகதேர்ந்தெடுக்கப் படுகின்றார்கள் என்ற செய்தியும் பாமரர் செவிகளில் போட்டு வைக்கப் படுகிறது:-

''அத்தேசத்தார்,... இந்தப் பரத கண்டத்தாரை விட ஜனத் தொகையில் மிகக் குறைந்தவர்களேயென் றாலும், இத்தேசத்தாரை அவர்கள் அடக்கி ஆண்டு வருவது அவர்களுடைய கட்டுப்பாட்டாலேதான்... ஜன சௌக்கியத்திற்காகவே கவர்ன்மெண்டு ஏற்படுத்தப் பட்டிருப்பதென்பதை அத்தேசத்தார் அறிந்து, அதற்குத் தக்க விதமாய் அங்கு அவர்கள் பார்லிமெண்டு என்ற ஓர் பொதுச் சபையை உண்டாக்கி, அச்சபைக்குப் பிரதிநிதிகளை தாங்களே நியமித்து, அவர்களைக் கொண்டு துரைத்தனத்தைச் சார்ந்த எல்லா வேலை களையும் தாங்களே நடத்தி வருகிறார்கள்.''

''வாய் திறந்து பேசவும் கற்பித்தார்கள்'' ஆங்கிலேயர்கள் என குரு ஸ்தானத்தில் வைத்து பேசும் காங்கிரஸ் வினா விடை, பிரிட்டிஷ் ஆட்சியே சிறந்த ஆட்சி எனச் சாற்றிடும் பொழுது ரஷ்ய ஆட்சியைத் தூற்றுகிறது.

''அந்த அங்கிலேயே துரைத்தனத்தைப்போல சிறந்தது இந்தப் பூமியில் எங்குமில்லையே! மற்ற ருஷியா முதலிய கொடுங்கோன் மன்னர்கள் துரைத் தனங்களுக்குத் துரைத் தனமென்று பெயரிட்டு அழைப்பது 'உலக்கைக்கு தங்கப்பூண்கட்டியது' போலுமேயாம்.''

கருத்தில் அழுத்தம் விழ, பழமொழியின் ஆளுகைச் சிறப்பையும், கவனிக்க.

''இந்தியா கவுன்சில்'' என்றால் என்ன? அதனால் பயனில்லை என்பதையும்; சட்ட மன்றம் என்றால்

என்ன? அதனால் பிரதிநிதித்துவ ஆட்சி அமைப்புக்கு விண்ணப்பங்கள் போட்டு, வழி காணவேண்டும் என்றும் 'வினா - விடை' வாசகர்களுக்கு உணர்த்து கிறது.

இந்தியர்களையும் கொண்ட பிரதிநிதி சபை ஏன் வேண்டும் என விளக்கும் வினா - விடையின் ஒரு பகுதி வருமாறு.

''... நமக்கு விளைகின்ற பற்பல தீங்குகள் அவர்கள் காதுக்கு (பார்லிமெண்டு) எட்டுகிறதே யில்லை. மேலும் இங்குள்ள ஆங்கிலேய உத்தியோகஸ் தர்கள் தங்கள் மனம்போனபடி இத்தேசத்தை ஆண்டு வருகிறார்கள். அவர்கள் அன்னியர்களான படியால், நமது கஷ்ட நிஷ்டூரங்கள் அவர்களுக்கு எளிதி லெட்டுகிறதில்லை. ஓர் பிரதிநிதி சபையை நிரந்தரமா யேற்படுத்தி அந்தச் சபை மெம்பர்களைக் கொண்டு நமது தேசத்தாருக்குள்ள கஷ்ட - நிஷ்டூரங் களை இத்தேசத்திய கவர்னர் ஜெனரல் அறிகிறது மில்லை.

'வினா-விடை', சட்ட மன்றச் சீர்திருத்தம் வேண்டு மென வாதாடும் பொழுது, ''ஏழைக் குடிகள்'', ''பயிரிடுங் குடிகள்'' ஆகியோரின் பிரச்னைகளை அறிந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

'மேலோர்கள்'' கூடாரமான ஆரம்பகால காங்கிரசில், ''கீழோர்கள்'' பற்றிய சிந்தனைப் பொறி மின்னியது, வியப்பல்லவா? காங்கிரஸில் கூடிய 'மேலோர்கள்' யார்

என்பதையும் காங்கிரஸ் வினா - விடை கூறுவதைக் கேளுங்கள்.

''இப்போதுதான் இந்தப் பரதகண்டத்திலிருக்கும் அனேக ஜமீன்தாரர்களும், வர்த்தகர்களும், மிராசுதாரர் களும், இன்னும் மற்ற அனேக கனவான்களும் வருஷத்துக்கு ஒரு முறை ஓர் முக்கியப் பட்டணத்தில் கூடி சட்ட நிரூபண சபைகளின் சீர் திருத்தங்களைப் பற்றியும் இன்னும் சில முக்கிய இராஜாங்க விஷயங் களைப் பற்றியும் பேசி வரு கிறார்கள்.''

இவர்களைத் தவிர, மற்றப் பிரிவினரும், ''பொது விஷயத்தில் சிரத்தை'' காட்டத் தொடங்கியதையும் 'வினா - விடை' குறிப்பிட்டது.

*''பயிரிடும் குடிகளும், வியாபாரிகளும், மற்றச் சாதாரண ஜனங்களும் இத்தேசத்துப் பொது விஷயங்களைச் சுத்தமாய்க் கவனிக் காமல் தானிருந்தார்கள். ஆனால் அப்போது அவர்களில் அனேகர் ராஜாங்க விஷயங் களைப் பற்றிப் பத்திரிகைகளிலும், மகாநாடு களிலும் பேசி வருகிறார்கள்.''*

இந்தத் திருப்பத்தைத் தான் பிரிட்டிஷ் அதிகார வருக்கம் கூர்ந்து நோக்கியது. காங்கிரஸ் இயக்கம் சென்னையில் (1887-ல்) தந்த இந்தத் திருப்பத்தை பிரிட்டிஷ் அதிகார வருக்கம் ''முளையிலேயே கிள்ளி எறிய'' முடிவெடுத்தது. காங்கிரசை வெளிப் படை யாகவே மிரட்டியது. இந்த மிரட்டலுக்கு காங்கிரஸ் வினா - விடையும் களபலியாயிற்று.

காங்கிரஸ் இயக்கம், மக்கட் தொடர்பு கொள்ள வேண்டும், காங்கிரஸ் கட்சியில் மக்கள் வளர்ச்சி கொள்ள வேண்டும் என்பனவற்றிற்காக காங்கிரசைப் பற்றி அறிமுகப்படுத்துவதிலும், விளக்கிக் கூறுவதிலும், 'காங்ரெஸ் வினா - விடை' வெற்றி கண்டதும், விரோதிகளின் சீற்றத்திற்கு இலக்காகியது.

'வினா - விடை'யில் காங்கிரஸ் இயக்கம் எவ்வாறு விதந்தோதப்பட்டுள்ளது என்பதை பின்வருவன காட்டுகின்றன.

1. ''காங்ரெஸ் என்ற பதத்துக்குச் சங்கமென்று அர்த்தம்.''

2. ''அந்தக் காங்ரெஸினாலித் தேசத்தாருக்கேதாவது பலனுண்டா?

பலனுண்டு... இப்படி இத்தேசத்து முக்கிய சுதேசிகள் வருஷா வருஷம் ஒன்றுகூடி வருவதால்... பலர் கூடிப் பொது விஷயங்களைப் பற்றி பேசி வருவதால் எவருக்கும் அதிக கியானமும் உண்டாகும்.

3. ''ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களில் அனேகருக்கு அச்சபை பலப்படுவது இஸ்டமிராது; அவர்களில் அனேகர் பல குந்தகங்களை அதன்முன் வைப்பார்கள். இதற்கெல்லாம் பயப்படாமல் நமது தேசத்தார் அச்சபை விர்த்தியடையும் படி முயற்சி செய்து வருவார்களேயானால், அச்சபை ஏன் பலப்படாது?''

4. ''ஆங்கிலேய நாட்டுப் பார்லிமெண்டு முதல் முதல் இந்தக் காங்ரெஸ் மாதிரியாகத்தான் உண்டானது.

5. ''இப்படி மனது கலப்பதுதான் இந்தக் காங்கிரஸின் முதல் கருத்து. நமது தேசத்தாருக்குள் மனம் கலக்குமேயாகில் அவர்களுக்குள் அன்னியோன்னிய முண்டாகும்''

6. ''மூன்றாவது காங்ரெஸ் எப்போது கூடியது? ... அச்சபையின் வைபத்தைக் காதினால் கேட்பதினால் பயனில்லை. கண் குளிரப் பார்த்திருக்க வேணும். கண்ணால் கண்டவர்களெல்லாம் வெகு வியப்படைந் தார்கள்... அங்கு பேசிய பல பிரதிநிதிகளின் வாக்கு வல்லமையையும் கண்டு மிகவும் மனங்களித்துச் சென்றார்கள்.

7. ''இவ்விராஜதானியிலுள்ள ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும், காங்ரெஸ் கமிட்டி ஆபிசும், அதற்கு ஓர் காரியதரிசியும், அதைச் சார்ந்த வேலைகளை நடத்திவர ஓர் கமிட்டியும் ஏற்படுமேயாகில் பணமும் சேரும்; ஜனங்களுக்கு பொது விஷயத்தில் கியானமும் உண்டாகும்.

8. ''கிறிஸ்துவ மதத்தைப் பரவடிக்க ஆங்கிலேய நாட்டார் எங்கும் அனுப்புவது போல் காங்ரெஸ் கமிட்டியார் சில காங்ரெஸ் பாதிரிகளைக் கிராமங்கள் தோறும் அனுப்ப வேண்டும். அப்போதுதான் இராஜரீக விஷயங்களில் கியானமுண்டாகும்.''

9. ஐயா! இந்தக் காங்ரெஸ் சபையின் சரித்திரத்தையும் இச்சபையின் நோக்கங்களையும் நீர் சொல்லக் கேட்டுவெகு ஆனந்தமடைந்தேன். அவைகள் மிக மேலானவை என்பதற்குக் கேட்பானேன்?

10. ''பேரார்ந்திடு காங்ரெஸெனுஞ் சபையும் பெருமைப் பட வாழிய வாழியவே.''

11. ''நன்மையினளிக்குங் காங்ரெஸ் நாளுமிப் புவியில் வாழி.''

ஆங்கிலம் கற்றோர்களால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் திற்கு ஆபத்து, எனும் கூற்றை மறுத்து கல்கத்தா காங்கிரசில் தாதாபாய் நவ்ரோஜி பேசியதை முன்பு பார்த்தோம்.''

காங்ரெஸ் வினா - விடையும், ''இங்கிலீஷ் படிப்பாளிகளின்'' மீது தொடுக்கப்பட்டத் தாக்குதலுக்கு விடையளித்தது.

இந்த ''இங்கிலீஷ் படிப்பாளிகள்'' பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதை பொறுத்துக் கொள்ள முடியாமல், அவர்களை பொது மக்களிடமிருந்து பிரித்துக் காட்டி அவர்கள் அணுவை யொத்த ஒரு சிறு பான்மையினரே என்ற இகழ்ச்சிக் குரலில் பேசத் தொடங்கியது, பிரிட்டிஷ் அதிகாரவருக்கம்.''

இதற்கு 'காங்ரெஸ் வினா - விடை' பதில் அளித்தது:-

''இதுவும் பேச்சா? இங்கிலீஷ் படிக்க போதிலும் அந்த காங்ரெஸ் சபையில் சேர்ந்திருக்கும் சுதேசிகள், சுதேசிகளல்லவா? ... அங்கிலேய கவர்ன்மெண்டை இங்கிருந்து துரத்திவிட்டால் அவர்கள் படித்த இங்கிலீஷ் பாஷை உபயோகத்திற்கு வருமா?... இத்தேசத்தாருக்கு இங்கிலீஷ் படிக்கத் தெரியாமலிருந்த போதிலும்

தங்களுக்குள்ள குறைகளைச் சொல்ல வாயில்லையா? இங்கிலீஷ் படித்தவர்கள் காங்ரெஸ் சபையில் சேர்ந்தால் அவர்கள் சுதேசிகளல்லவா? அவர்களைத் தேசத்து மகாஜனங்களுடன் போக்குவரத்து. செய்யவில்லையா? இங்கிலீஷ் படித்தவர்களே ஆங்கிலேயர் ஆளுகைக்கு விரோதிகளானால் அப்புறம் உலகத்தில் தர்மமேது?''

பிரிட்டிஷ் ஆட்சியை வெளியேற்ற நினைப்பவனுக்கு, ''தெய்வம் சகாயம் செய்யுமா'', ''ஆங்கிலேயர்கள் நமது தேசத்தை என்றென்றைக்கும் ஆண்டு கொண்டு வரவேண்டும்'' என்றெல்லாம் காங்கிரஸ் வினா - விடை சாற்றிய போதும், பிரிட்டிஷ் அதிகார வருக்கம் காங்கிரஸ் வினா - விடையை நம்ப மறுத்தது.

பிரிட்டிஷ் அதிகார வருக்கத்தின் சீற்றம், கால்வின், டப்ரின் ஆகியோரின் கருத்துகளில் தீயுமிழ்ந்தது. கால்வின் ராஜப் பிரதிநிதி டப்ரின் பிரபுவிற்கு தமக்கும் - ஹ்யூமிற்கும் இடையே நிகழ்ந்த கடிதப் போக்குவரத்தை அனுப்பினார். கால்வின் நிலைப்பாட்டை அறிந்து மகிழ்ச்சியுற்ற டப்ரின் பிரபு கால்வினும் எழுதியக் கடிதத்தில் அவற்றை பிரிட்டன் நாடாளுமன்றத்தில் வழங்கப்பட மேலும் சில பிரதிகளை அனுப்புமாறு வலியுறுத்தினர்.

அக்டோபர் 28, 1888-ல் மேலும் டப்ரின் பிரபு எழுதியதாவது "The only remarks I have to make is that you have treated the silly impostor with too great courtesy and indulgence"

'காங்ரெஸ் வினா - விடை' பற்றிய மற்றுமொரு சம காலக் குறிப்பு Audi Alteram Partem என்னும் மிக

முக்கிய சிறு அரசியல் வெளியீட்டில் கிடைக்கிறது. ''ஆடி ஆல்டெரம் பார்டம்' என்னும் இலத்தீன் சொற்றொடர்க்கு, 'மறுபக்கத்தையும் கேட்கவும்' என்பது பொருளாகும்.

இவ்வரிய ஆவணம் கண்டெடுக்கப் பெற்று இந் நூலில் முதன் முறையாக ஆய்வு செய்யப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

It is most oftern used to refer to the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them

இந்த நூலின் முழு நீளப் பெயராவது: ''Audi Alteram partem - being on certain Aspects of the Indian National Congress Movement '' அறுபத்தாறு பக்கங்கள் கொண்ட இந்த அரிய நூல் ஆக்லண்ட் கால்வின் (வடமேற்கு எல்லைப் புற மாகாணத்தின் லெப்டினென்ட் கவர்னர்) அவர்களுக்கும் ஆலன் ஆக்டேவியன் ஹ்யூமிற்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட இரு மிக நீண்ட கடிதங்களின் தொகுப்பாகும்.

காங்ரெஸ் வினா - விடையின் அரசியல் முக்கியத்துவம், வரலாற்றுச் சிறப்பு இரண்டிற்கும் மேற்குறிப்பிட்ட நூலே முதற்சான்று.

காங்ரெஸ் வினா - விடைக்கு மட்டுமல்லாமல், இந்திய அரசியல் வரலாற்று ஆராய்ச்சிக்கும் மிகவும் பயன்படுவது, ''ஆடி ஆல்டரம் பார்டம்'' எனும் நூலாகும்.

தேசியத்தலைவர் லாலாலஜபதி ராயும் இந்தச் சிறப்பினைச்சுட்டிக் காட்டுகிறார்.

'ஸர் ஆக்லாண்டு கால்வினுக்கும், மிஸ்டர் ஹியூமுக்கும் நடந்த கடிதப் போக்குவரவு காங்கிரஸ் மகாசபை தோன்றிய வரலாறு முழுமையும் மிகத் தெளிவாக வெளியிடுவதால், இந்திய அரசியல் ஆராய்ச்சியில் தலையிடுவோர் எவரும் அதை அலட்சியம் செய்ய முடியாது.''*

இந்த ஹ்யூம் - கால்வின் கடிதங்களில் காங்கிரஸ் வினா - விடையை, கால்வின் பெயரிட்டு கடுமையாகத் தாக்கியும், ஹ்யூம், வினா - விடையை ஆதரித்தும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

கால்வின் மட்டுமன்று, டப்ரின் பிரபுவும் காங்கிரஸ் வினா - விடையை கடுமையாகக் கண்டித்தார். ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளும் சீறின.

முதலில் கால்வின் - ஹ்யூம், இருவரும் தம்முள் பரிமாறிக் கொண்டக் கடிதங்களைப் பார்ப்போம்.

8-10-1888-ல் கால்வின் பொதுவாக காங்கிரசை யும், குறிப்பாக காங்கிரஸ் வினாவிடை, 'உருதுமொழி வெளியீடு' ஆகிய இரண்டையும் கடுமையாக விமர்சனம் செய்து 20 பக்கங்களில் ஒரு நீண்ட கடிதத்தை ஹ்யூமிற்கு எழுதினார்.

13-10-1888-ல் கால்வினுக்கு பதில் அளித்து ஹ்யூம் 60 பக்கங்களில் மிக நீண்டதொரு கடிதத்தை எழுதினார்.

---

★ யுவ பாரதம் - தமிழாக்கம் - கல்கி; பக். 154

காங்கிரஸ் அறிக்கையோடு இணைக்கப் பட்டிருந்த காங்ரெஸ் வினாவிடையின் ஆங்கில மொழியாக்கத்தைத்தான் தனது கடிதத்தில் கால்வின் குறிப்பிடுகிறார் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கால்வின், காங்ரெஸ் வினா - விடை, பிரிட்டிஷ் அரசாங்க அமைப்பையும், பிரிட்டிஷ் அதிகாரிகளையும் குறை கூறுவதை கடிதத்தின் தொடக்கத்திலேயே சுட்டிக்காட்டினார்.

''தாங்கள் அனுப்பி வைத்த இரு வெளியீடு களையும் மீண்டும் மீண்டும் கவனத்துடன் படித்தேன். பிரிட்டிஷ் நிருவாகமும், ஆங்கிலேயே உத்தியோகஸ் தரைகளும் மக்களது வெறுப்பிற்கும், கோபத்திற்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். இது நியாயமற்றது, ஒதுக்கப் பட வேண்டியது, தவறானச் செய்தியாகும்... பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியா பெற்ற நன்மைகளைப் பற்றி ஒரு சொல்கூட இந்த வெளியீடுகளில் இல்லை. காங்கிரசை விமர்சனம் செய்பவர்கள் இந்த வெளியீடுகளின் கூறப்பட்டுள்ளதற்கு காங்கிரஸ் தலைவர்களையே பொறுப்பாக்குவார்கள்.''*

இங்கு ஒரு முக்கியக் குறிப்பை நினைவு கூர வேண்டும். கால்வினின் இந்தக் குற்றச் சாட்டிற்குப் பிறகு காங்கிரஸ் வினா - விடையின் நான்காம் பதிப்பில் பிரிட்டிஷ் ஆட்சியால் விளைந்த நன்மைகள் அடுக்கடுக்காகக் கூறப்பட்டுள்ளன. ஆங்கிலேயே உத்தியோகஸ்தர்கள் மீதான கண்டனங்களும்

குறைக்கப்பட்டுள்ளன. அப்படியும், 'ஆங்கிலேயப் பெருச்சாளிகள்'' என்ற பிரயோகங்கள் தொடர்ந்தன.

கால்வின் அடுத்து பின்வரும் வினாவிடையை மேற்கோளாக தமது கடிதத்தில் எடுத்துக்காட்டுகிறார்.**

**வினா:-** ஏன் ஐயா! பார்லிமெண்ட்டார் ஆங்கிலேய நாட்டிலுள்ளபடி இத்தேசத்திய கவர்னர் ஜெனரலுக்கு ஓர் பிரதிநிதி சபையை ஸ்தாபித்து அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு, இத்தேசத்து இராஜரீக வேலைகளை இங்கு நடத்தி வரும்படி ஆக்கியாபிக்கக் கூடாது? தங்களுக்கு ஓர் விதியும் நமக்கு மற்றோர் விதியும் ஏன்?

**விடை :-** ... நீர் சொல்லியபடி ஓர் பிரதிநிதி சபையை அந்நாட்டுப் பார்லிமெண்டு மெம்பர்கள் இங்கு ஸ்தாபிக்க வேண்டும். அம்மகாசபை மெம்பர்கள் நமது தேசத்திய கஷ்ட நிஷ்டூரங்களை அறிய வேண்டும். இப்போது அவ்வளவாய் இத்தேசத்து விஷயங்களை அவர்கள் கவனிப்பதில்லை.''

''இந்திய மக்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். இவர்களிடம் பிரிட்டிஷ் பார்லிமெண்டைப்பற்றி கூறுவதை நான் வருத்தத்துடன் மறுக்கிறேன்'' என கால்வின் மேலேயுள்ள ஒரு வினா விடையோடு தொடர்புப் படுத்திக் கூறுகிறார்.

தாய்மொழி மூலம் பாமரமக்களிடம் அரசியலை அறிமுகப்படுத்துவதில், உணர்ச்சி பூர்வமான விழிப்பு ஏற்படவாய்ப்பு இருப்பதால், இந்த பிரசார முறையைக்

★ Audi Alteram partem 1888. P. 4

★★ மேற்படி நூல் பக். 10

கால்வின் அறவே வெறுத்தார். தொடர்ந்து தமது கருத்தை வலியுறுத்தி எழுதினார்.

*''இந்த வெளியீடுகளைக் கடுமையாக கண்டித்து பலவிதமான சுதேசப் பத்திரிகைகள் எழுதியதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் தேசிய பத்திரிகைகள் கூலி பெற்றுக் கொண்டு சுயநலத்திற்காக எழுதுகின்றன எனக் கூறிவிடுவீர்கள். மதத்தாலும், இனத்தாலும் நமக்கு அந்நியரான இந்த மக்கள் கல்வி - கேள்வியற்றவர்கள், உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள். இவர்களிடம், குற்றச்சாட்டுகளையுடைய அந்த வெளியீடுகளைப் பரப்புவது புத்திசாலித் தனமும் அல்ல, நியாயமும் அல்ல.''*★*

வினா - விடை வெளியீடுகள் காங்கிரஸ் கட்சிக்கு துன்பம் விளைவிப்பன என்றும் தொடர்ந்து கால்வின் மிரட்டுகிறார்.

*'' இந்த வெளியீடுகள் எழுதப்படுவதோ அல்லது வெளியிடப்படுவதோ காங்ரெஸ் கட்சியின் நலன்களுக்கு ஒரு கெட்ட காலமாகவே அமையும் என எண்ணுகிறேன். விரிவஞ்சி இத்துடன் விடுகிறேன்.''*★★*

சென்னை காங்கிரஸ் அறிக்கையைப் படித்த பிறகு காங்கிரசின் மீது தமக்கிருந்த பரிவுபோய் அதிர்ச்சியடைந்ததாகவும் கால்வின் தமது கடிதத்தில் கூறுகிறார். வினா - விடையில் இருந்தும், ஹ்யூமின்

★ மேற்படி நூல்; பக். 11

★★ மேற்படி நூல் பக். 11

அலஹாபாத் பேச்சில் இருந்தும் நிறைய மேற்கோள் களை கடிதத்தில் எடுத்தாண்டு கண்டித்துள்ளார்.

*"உங்களுடைய அலஹாபாத் பேச்சில் இருந்து மேற்கோள்கள் காட்டி எழுதுவதற்கு அநுமதிக்க வேண்டும். நகைப்பிற்கிட மானது, முட்டாள்தனமானது, என எதைப் பற்றி யாவது குறிப்பிட வேண்டுமானால், காங்ரெஸ் வினா - விடையைத்தான் கூற வேண்டும்."***

காங்கிரஸ், ஆங்கிலம் படித்தோர் சேர்ந்து பழக உதவும் ஒரு தனிக் குழுவாக (Club) இருக்க வேண்டும்; ஆரவார சபையாக மாறக்கூடாது என பிரிட்டிஷ் அதிகார வருக்கம் கருதியது. இந்த நோக்கில்தான் முதல் இரு காங்கிரசு களைப்பற்றி பரிட்டிஷ் அதிகார வருக்கம் கவலைப்படவில்லை; மூன்றாம் காங்கிரஸ் - சென்னை காங்கிரஸ் - ஆரவார சபையாக மாறிய பொழுதுதான் கவலையேற்பட்டது. "வினா - விடைகள்" தோற்று வித்த அச்சமும், அந்தக் கவலைக்குக் காரணம். காங்கிரஸ் தனது போக்கில் ஏற்படுத்திக் கொண்ட இந்த பிரசார முறையை கைகழுவ வேண்டும் என்று கால்வின் இறுதியாகக் கூறி கடிதத்தை முடித்தார்.

*"இதற்கு முந்தைய காலத்தில் காங்கிர சிற்கு தனிப் பண்பளித்த மனப் பான்மைக்கு காங்கிரஸ் திரும்ப வேண்டும். போர்க் குணமும், குரோதமும் வாய்ந்த வெளியீடு களை கொண்டு வருவதை அடியோடு கைவிட வேண்டும்."*****

★ மேற்படி நூல்; பக். 14

★ மேற்படி நூல். பக். 18.

சர். ஆக்லன்ட் கால்வின் கடிதத்திற்கு பதில் அளிப்பதில் ஹ்யூம் காலதாமதம் செய்யவில்லை. அக்டோபர் 12 - ம் தேதியில் கிடைத்த கடிதத்திற்கு அடுத்த நாளிலேயே ஒவ்வொரு பகுதி, பகுதியாகக் குறிப்பிட்டு விரிவாக பதில் அளித்தார்.

''இங்கிலீஷ்மென்'', ''பயனீர்,'' 'சிவில் அன்ட் மிலிடரி கெஜட்'' ஆகிய மூன்று பத்திரிகைகளும் காங்கிரஸ் எதிர்ப்பு பிரசாரத்தில் கனல் கக்கின. ஹ்யூம், இந்தப் பத்திரிகைகளின் பொய்யுரைகளையும், பழிப்புரைகளையும் மறுத்து, கால்வினுக்கு உண்மை நிலையை எடுத்துரைத்தார்.

கல்வி கேள்வியற்ற பாமரமக்களிடையே காங்ரெஸ் வினா விடை பரவலாக வழங்கப்பட்டதைக் குறைகூறிய கால்வினுக்கு ஹ்யூம் அளித்த பதில் வருமாறு.

> *''தாங்கள் எடுத்துக் காட்டிய வினா - விடையின் மேற்கோள்களை நான் மீண்டும் அதிகக் கவனத்துடன் படித்தேன். ஒரே ஒரு சொல்லைக் கூட மாற்றியமைக்க வேண்டியதில்லை என்பதைக் கண்டேன். அவை சென்னையில் மிஸ்டர். வீரராகவாசாரியால் எழுதப்பட்டு, நான் சிம்லாவில் இருக்கும் பொழுது, கமிட்டியின் ஒப்புதலோடு பதிப்பிக்கப் பெற்றது; என்னுடைய பார்வைக்கு வராமல், வழங்கப்பட்டன. பொதுவாகப் பார்க்கப் போனால் எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை எனக் கூறலாம்.*

*இந்த வெளியீடுகள், எந்த வருக்கத்துக் காக எழுதப்பட்டதோ, அவர்களை மட்டுமே சென்றடையும். முதலாவதாக ஆங்கிலம் படித்த வருக்கம், இரண்டாவதாக பலவகைப் பட்ட வணிகர்கள், கடைக்காரர்கள், மூன்றாவதாக வசதிபடைத்த விவசாயிகள், கைவினைஞர்கள் ஆகிய இவர்கள் கிளர்ச்சி மனப்பான்மையில்லாத மக்கள், சமய - இன்பேதங்கள் உண்மையில் இந்தக் கேள்வி யோடு தொடர்புடையன அல்ல.''**

ஹ்யூம் இவ்விடத்தில் கால்வினது அச்சத்தைப் போக்க முயற்சி செய்துள்ளார். மத்திய தர வகுப்பினர் வரையில் தான் வினா - விடைச் செய்திகள் செல்லும் என 'அபயம்' அளிக்கிறார் ஹ்யூம்.

'வினா - விடை'யின் குரலில் பிரிட்டிஷ் ஆட்சி யிடம் அன்பில்லை எனும் வாதத்தை மறுக்க ஹ்யூம் காங்கிரஸ் வினா விடையில் இருந்து மேற்கோள் களைத் திருப்பித் தந்தார்.

''பலவகைப்பட்ட சுதேசபத்திரிகைகள் காங்கிரஸ் வினா - விடையைக் கடுமையாக கண்டித்துள்ளன'' என்ற கால்வினது வாதத்திற்கு ஹ்யூம் விடையளித்தார்.

''அத்தகைய கண்டனங்களை நானும் படித்தேன். ஆனால் அதைவிட வினா - விடை வெளியீடுகளை நூறு மடங்கு ஆதரித்து பத்திரிகைகள் எழுதி யுள்ளதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

★ மேற்படி நூல் பக். 48

*ஆதரவு, எதிர்ப்பு என்ற இரு நிலைகளுக்கும் நான் முக்கியத்துவம் அளிப்பதில்லை யென்றாலும், வாதமென வந்துவிட்டதால் பதில் அளிக்கிறேன். இரண்டு தரப்புகளையும் கவனித்தப்பிறகு ஒரு முடிவிற்கு வரவேண்டுமானால், அந்த முடிவு கேள்விக்கிடமில்லாமல் வெளியீடுகளுக்கு ஆதரவான நிலையே அல்லாமல், எதிர்ப்பு நிலையில்லை என்ற முடிவிற்கு வருவோம்.''**

வினா - விடையின் மூலம் மக்களை விழிப்படையச் செய்யும் முயற்சிகளை கால்வின் எதிர்ப்பு தெரிவித்ததற்கு ஹ்யூம் அளித்த பதிலில் உண்மை நிலையைச் சுட்டிக் காட்டுகிறார்.

''ஆங்கிலக் கல்வி பெறாத இந்த மந்தமான, எழுத்தறிவற்ற மக்கள் அரசாங்கத்தைப் பற்றி மிக்கத் திருப்தியுடன் இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். இந்த நினைப்பில் அவர்களிடம் சென்று அதிருப்தியைத் தூண்டுவது வெட்கக் கேடானது எனக் கூறுகிறீர்கள். அவர்களே அடையாளம் தெரிந்து கொள்ளாத குறைகளை அவர்களிடம் சென்று எடுத்துரைப்பதும், இந்த வெளியீடுகளும் அருவருப்பு தரத்தக்கன! என்றும் சொல்கிறீர்கள். ஆனால் உண்மை நிலைவேறு. இந்த மக்கள் கீழைநாட்டிற்குரிய பண்பின் வழி மதி நுட்பம் வாய்ந்தவர்கள். நாம் பல நல்ல ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்பதை ஒப்புக்

★ மேற்படி நூல் பக். 46

கொண்டே கூறினாலும், இவர்கள் கடுமையாக அதிருப்தி கொண்டுள்ளார்கள். எரியும் நெருப்பில் மேலும் நெய் சொரிவதற்குப் பதிலாக, அவர்கள் நம்பிக்கையுடன் நாட்டு நடப்புகளை புரிந்துக் கொள்ளவும், சட்டதிட்டத்திற்கு உட்பட்ட வழியில் அவர்களது அதிருப்திக்கு ஒரு கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.''*

ஹ்யூம் அளித்த விளக்கத்தில் அவர் சற்று கீழிறங்கி தமது நிலையை விளக்கியுள்ளது வெளிப்படுகிறது. ''காங்கிரஸ், மக்களின் உணர்ச்சி உள்ளுக்குள் குமுறி அபாயத்தை விளைவிக்காமல், அவ்வுணர்ச்சி பொங்கி குமுறி வழிவதற்குரிய ஒரு சாதனமேயாகும்'' என ஹ்யூம் கூறியதும் இந்தச் சமயத்தில்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

''வினா விடை வெளியீடுகள், மக்களது குறைகளை போக்கிக் கொள்ள துணைபுரிவன'', என்றும் ஹ்யூம், கால்வினுக்கு குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

''வினா - விடை வெளியீடுகளுக்கும், காங்கிரசிற்கும் அவற்றின் ஆசிரியர்களுக்கும் உள்ள உறவையும் ஹ்யூம், கால்வின் எழுப்பிய வினாவிற்கு, விடையாக அளித்துள்ளார்.

*''காங்கிரஸ் இயக்கத்தின் விதிமுறைப்படி துண்டுப் பிரசுரங்கள், குழுக்களின் சம்மதத்தைப் பொதுவாகப் பெறுகின்றன. இவ்வளவுதான். ஆனால், வெளி*

★ மேற்படி நூல் பக். 53

*யீடுகளில் உள்ள எல்லா விவரங்களுக்கும் தனிப்பட்ட ஆசிரியரே பொறுப்பு.''**

தமது கடிதத்தின் இறுதியில் ஹ்யூம், காங்கிரசின் வரலாற்றுப் பாத்திரத்தை அந்தரங்க சுத்தியுடன் கருத்துச் செறிவு மணக்கக் குறிப்பிடுகிறார்.

*''காங்கிரஸ் இயக்கம், தேசிய சக்தியின் முழு உருவமாகும். எல்லா வழிகளிலும் தேசிய மறுபிறப்பைக் (National Regenaration) கொண்டு வரும் ஒரு கருவியாக, காங்கிரஸ் உள்ளது என நான் நம்புகிறேன். உலக வரலாற்றில் ஈடுயிணை யற்றது, இது.''***

## டப்ரின் பிரபுவும் காங்ரெஸ் வினா-விடையும்

வினா - விடை வெளியீடுகளைக் கண்டு அச்சமுற்று ஆவேசமாகப் பேசியவர்களுள் கவர்னர் - ஜெனரல் டப்ரின் பிரபுவும் ஒருவர்.

வடக்கே லக்னோ நகரத்தில் இருந்து வெளிவந்த 'பயனீர்' எனும் பத்திரிகை 1888-ல் ''இந்திய தேசிய காங்கிரசின் ராஜத்துரோகம்'' எனும் நூலை வெளி யிட்டது, வினா - விடை நூல்களின் எதிரொலியாகும்.

பொதுவாக காங்கிரசையும், குறிப்பாக காங்ரெஸ் வினா விடையையும் டப்ரின் பிரபு ஒரு சொற் பொழிவில் தாக்கினார். 30-11-1888-ல் கல்கத்தாவில் நிகழ்த்திய 'புனித ஆண்ட்ரூஸ் விருந்து சொற்

---

★ மேற்படி நூல் பக். 53

★★ மேற்படி நூல் பக். 58

பொழிவில் (St Andrews Dinner Speech) இந்தத் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

தமது பேச்சின் நகல் ஒன்றுடன், ஒரு கடிதத்தையும் இந்திய அரசுச் செயலாளர் கிராஸ் பிரபுவிற்கு 3-12-1888-ல் அனுப்பிவைத்தார், டப்ரின் பிரபு.

காங்கிரஸ் வினா - விடை, பிரிட்டிஷ் அதிகாரிகளை இழிவாகவும், பழி கூறியும் பிரசாரம் செய்கிறது என தமது கடிதத்தில் குறிப்பிட்டார்.

*“அடக்கமில்லாத காங்கிரஸ்காரர்கள், ஹ்யூமின் முட்டாள் தனமான, ஆட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். தமிழ் வினா - விடை போன்ற வெளியீடுகள் அவதூறுகளையும், பழிப்புரைகளையும் பரப்புகின்றன; இவைகளையெல்லாம் திடசித்த மற்ற மக்கள் வியப்போடு கவனித்து வருகிறார்கள்.”*

இதற்குமுன் 4-11-1888- ல் கல்கத்தா பேச்சொன்றில் காங்கிரஸ் வினா - விடையின் பெயரை மறைமகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

*“இந்த நாட்டில் முடியாட்சியின் பொது உத்தியோகஸ்தர்கள் மீது மக்களுக்கு வெறுப்பு தோன்றும்படி தூண்டுகிறார்கள்.”*

டப்ரின் பிரபுவின் குற்றச்சாட்டிற்கு சுதேசமித்திரன் தகுந்தபதிலை வாதத்திறமையோடு அளித்தது. டப்ரின் பிரபுவின் புனித ஆண்ட்ரூஸ் விருந்துச் சொற்பொழிவின் மூன்று முக்கியக் கருத்துக்களை சுதேசமித்திரன் மறுத்துள்ளது.

8-12-1888-ல் வெளிவந்த இந்த மறுப்புரையின் ஆங்கில மொழியாக்கம் 'மெட்ராஸ் நியூஸ் பேப்பர்ஸ் ரிப்போர்ட்டில்' உள்ளது. இந்த ஆங்கில மொழி யாக்கத்தின் தமிழ்மொழி பெயர்ப்புதான் கீழே எடுத் தாளப்பட்டுள்ளது.

டப்ரின் பிரபுவின் முதல் குற்றச்சாட்டு வருமாறு:

''மொத்த மக்கள் தொகையின் ஒரு சதவிகிதம் பிரிவினராகக்கூட இல்லாத 'இங்கிலீஷ் படிப்பாளிகள்', இந்திய மக்களின் பிரதிநிதிகள் ஆகமாட்டார்கள்.''

இந்த முதல் குற்றச்சாட்டை சுதேசமித்திரன் பின்வருமாறு மறுத்தது.

''முதல் குற்றச்சாட்டில் பொருள் இல்லை. கல்வியும் நல்ல ஒழுக்கமும், செல்வச் செழிப்பும், மதிப்பும் மிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் மக்களின் பிரதிநிதிகள் இல்லையென்றால் வேறு யார் பிரதிநிதி யாகக் கூடும்? பலதரப்பட்ட மதங்களைச் சார்ந்தவர் களும், பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களுமான சுதேசிகள், அவர்கள் நாட்டில், மக்கள் பிரதிநிதிகளாக கருதப்பட மாட்டார்கள் என்றால், விரல்விட்டு எண்ணக் கூடிய ஐரோப்பிய அதிகாரிகள்தானா, இந்திய மக்கள் பிரதிநிதிகள்? இல்லையெனில் 8000 மைல்களுக்கு அப்பால் உள்ள 'இந்தியா கவுன்சில்' உறுப்பினர்களா, இந்திய மக்களின் பிரதிநிதிகள்? இவர்களும் இல்லை யென்றால், இந்தியாவைப் பற்றி எதுவுமே அறியாத பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களா இந்திய மக்களின் பிரதிநிதிகள்?''

இரண்டாவதாக டப்ரின் பிரபு, காங்கிரஸ், அரசியல் பிரச்னைகள் விவாதிப்பதற்கு தகுதியடைய வில்லை, சமய சீர் திருத்த விஷயங்களை விவாதிக் கட்டும் என யோசனை கூறினார். சுதேசமித்திரன் இதற்கு அளித்த மறுப்பு, வருமாறு.

''சமய, சமூக சீர்திருத்த விஷயங்களை விவாதிக்க காங்கிரஸ்காரர்களுக்குத் தகுதி அளிக்கும் டப்ரின் பிரபுவின் எதிர் வாதத்திலேயே அதன் தோல்வியும் உள்ளது. மேற்படி தகுதியைக் கொண்டு அரசியல் விஷயங்களையும விவாதிக்க காங்கிரஸ்காரர்களுக்கு சமமானதகுதி உண்டென்றாகிறது.''

காங்கிரஸ் வினா - விடையைப் பற்றிய டப்ரின் பிரபுவின் கருத்தை சுதேசமித்திரன் ஏற்கவில்லை. அது கூறுகிறது:

''டப்ரின் பிரபுவின் மூன்றாம் கருத்து, ஆதார மற்றது. ஹ்யூமோ, 'காங்ரெஸ் வினா - விடை'யை எழுதியவரோ அல்லது மற்றெவருமோ அரசாங்கத்தை பழித்துப்பேசவில்லை. இங்கிலீஷ் படிப்பாளிகள், இங்கிலீஷ் அரசாங்கம் பலமாக காலூன்ற அல்லவா பாடுபடுவார்கள். இங்கிலீஷ் ஆட்சியை அகற்றினால் அவர்களுக்குத்தானே அது அழிவைத் தரும். முட்டாள்தனமான எண்ணம் அல்லவா, இது ?''

''காங்கிரஸ் வினா - விடை''யை அதன் ராஜ பக்தியை மட்டும் வைத்துக் கொண்டு, குறைத்து மதிப் பிடக் கூடாது ; ராஜபக்தியும், தேசபக்தியும் இரண்டுமே இணைந்த தேசியபிரசாரம் மிக நீண்டகாலமாக இந்திய அரசியலில் நிகழ்ந்து வந்தது.

''இராஜபக்தி சிறக்கச் சிறக்க நாட்டிற்கு நன்மையும், நாகரிகமும் பெருகும்... இராஜபக்தியில்லாதவர்கள் தேச பக்தியில்லாதவர்களென்பது எமதுகொள்கை. ஆங்கில ஆட்சி நீடூழி வாழ்க.'' இந்தக் குரல் 1918-ல் ஒலித்தது என்பதை நினைவு கூர வேண்டும்.*

'வினா - விடைகள்' பாமரமக்களிடையே அரசியல் விழிப்பை ஏற்படுத்துகிறது என காலின் கடிதம் தெளிவுபடுத்தியது.

பிரிட்டிஷ் அதிகாரிகள் மீது வெறுப்பு தோன்ற 'வினா - விடை'கள் பிரசாரம் செய்தன என டப்ரின் பிரபு கூறினார்.

> *''தமிழ் காங்கிரஸ் வினா - விடை இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றிலேயே முதன்முறையாக பொது மக்களை காங்கிரசில் சேருமாறுவேண்டுகோள் விடுத்தது. ..வினா - விடை தமிழில் வழங்கப்பட்டதால் இது வரை முன்னுதாரணம் கூறமுடியாத அளவில் பெரும் ஊக்கம் பிறந்தது.''*

இவ்வாறு காங்கிரஸ் வினா - விடைக்கு புகழ் மாலை சூட்டுவது தமிழ் உள்ளம் அன்று. ''காங்கிரஸும் - காங்கிரஸ் காரர்களுக்கும்'' (Congress and Congressmen in the PreGandhian Era) என்னும் சிறந்த வரலாற்று நூலின் ஆசிரியர்கள். ஒரு சரித்திரப் புதையலைக் கண்டெடுத்த மகிழ்ச்சித் திளைப்பில் சாற்றினர்.

காங்கிரசை அடக்கி ஒடுக்க பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் முன்வந்ததேன் என்பதற்கும் மேற்படிநூல் காரணம் காட்டுகிறது.

★ 'தேசபக்தன்' - 7-12-1918; ஆசிரியர் திரு.வி.க.

*"இத்தகைய விமர்சனம் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளை வெறுப்படையச் செய்ததோடு, புண் படுத்தவும் செய்தது. ஒளிவு மறைவில்லாத இதைப் போன்ற பேச்சைக் கேட்டு, அவர்களுக்கு பழக்கமில்லை. காங்கிரஸ் தலைவர்கள், மக்களிடையே அவர்கள் தாய் மொழியில் நேர்முகமாக வேண்டுகோள் விடுத்ததே, பிரிட்டிஷ் அதிகாரிகளை அச்சுறுத்தியது. சிறுபான்மையினரான படித்தவர்களின் ஆரவாரங்களை அவர்களால் பொருட்படுத்தமல் இருக்கமுடியும். ஆனால் காங்கிரஸ் புறநகர்ப் பகுதிகளில் உள்ள லட்சக் கணக்கான பாமர மக்களின் ஆதரவை நாடிய போது இயக்கதை ஒடுக்க முடி வெடுத்தனர்."**

மக்கள் கவர்ச்சியாக பிரசாரம் செய்தல், தாய் மொழியைத் திறமையாக அரசியலில் பயன் படுத்துதல், பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கண்டு பயப்பட வேண்டாம் என அச்சமின் மையை வளர்த்தல், மேலை நாட்டு அரசியல் அமைப்புகளின் நன்மைகளை எடுத்துக்கூறி அவைகளைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுதல், அந்தச் சிந்தனை வழியே இந்தியாவில் படிப்படியாக முன்னேற அரசியல் இயக்கத்தை பலப்படுத்த வற்புறுத்தல், ஊர்தோறும் கட்சிக் கிளைகள் அமைக்க ஊக்கமளித்தல், இவையாவும் உண்மையான அரசியல் வேலைகளாகும்.

இந்த உண்மையான அரசியலை காங்கிரஸ் வினா - விடைவித்திட்டு வளர்க்கத் தோன்றியது. ஆனால் அதிகார வருக்கத்தின் மிரட்டலுக்கு அன்னாளைய

★ Congress and Congressmen in the Pre Gandhian Era - 1967. P 14

காங்கிரஸ் பணிந்துவிட்டது. சென்னை காங்கிரஸில் தலைமை வகித்த பத்ருதீன் தியாப்ஜி போன்றோர் காங்கிரஸ் சபை கூடுவதை ஐந்தாண்டுகளுக்கு நிறுத்தி வைக்கலாம் என ஹ்யூமிற்கு ஆலோசனை கூறவும் செய்தனர்.

காங்கிரஸ் தன் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வேறுவழிகளை நாடாமல் கைவிட்டதேன்? என்ற கேள்வி எழலாம்? இதற்கு ஹ்யூம் அளித்த பதில்: ''செயல் புரியக் கூடிய ஆண்மக்கள் இல்லாமையே.''*

காங்கிரஸ் வினா விடையின் புரட்சி நோக்கு, திலகர் சகாப்பதத்தில் வீறுகொண்டது.

தேசிய வரலாற்றில் காங்கிரஸ் வினா - விடைக்கு முதலிடம் தரப்பட வேண்டும். திரு பட்டாபி சீதா ராமய்யாவின் காங்கிரஸ் வரலாற்றில் இடம் பெறா விட்டாலும் பரவாயில்லை.

இனி எழுதப்படப் போகும் காங்கிரஸ் நூற்றாண்டு நிறைவு வரலாற்று ஆய்வு நூலிலாவது காங்கிரஸ் வினா - விடையின் அரசியல், மொழி, மக்கட் தொடர்பின் முக்கியத்துவம் இடம் பெற வேண்டும்.

''காங்கிரஸ் வினா - விடை'' யின் மூலம் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளதின் நோக்கமும் இதுவே.

அகில இந்திய தேசியத்தின் தலைமை ஏதாவது காங்கிரஸ் வினா - விடையை காங்கிரசின் நூற்றாண்டு நிறைவாண்டான 1985-க்குள் இந்தியா முழுவதும் அறியவைக்க முன்வரவேண்டும்.

---

★ யுவபாரதம் - லாலா லஜபதிராய், தமிழாக்கம் கல்கி - பக். 170.



காங்ரெஸ் வினா - விடை

ஆசிரியர்

**திரு. மு. வீரராகவாசாரி,** பி.ஏ.,

(1857-1906)

# காங்ரெஸ் வினா - விடை

அல்லது

# இத்தேசத்தில் வருஷா வருஷம் கூடிவரும் காங்ரெஸ் ஜன சபையின் சரித்திரம்

இஃது

**மு. வீரராகவசாரியாரால்**

இயற்றப்பட்டது.

Fourth Edition

Revised and Enlarged

**விலை அணா ஒன்று**

சென்னை

நேஷனல் அச்சுக் கூடத்தில் பதிப்பக்கப்பட்டது.

100, மவுண்டு ரோட்டு,

1890

# பொது ஜன நிதி

## அதன் நோக்கங்களும் அதை நடத்தி வருவதற்கான விதிகளும்

1. பொது ஜன நிதிக்காக கொடுக்கப்படும் எல்லா நன்கொடைகளும் மஹா ஜன சபையின் அக்கிராசனாதி பதியும், இரண்டு காரியதரிசிகளும் ஆகிய இவர்கள் பெயரால் ஆர்பதனட் கம்பெனியாரிடத்தில் வட்டிக் கிடப்பட்டு வரும்.

2. பொது ஜன நிதியின் காரிய விசாரணை அந்தக் காலத்துக்குச் சபையின் காரிய விசாரணையைப் பார்த்து வரும்படி நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டியாரால் சபையாருடைய அதிகாரத்துக்குட் பட்டு நடத்தப்பட்டு வரும்.

3. அந்நிதியின் காரிய விசாரணைகளை நடத்து வதற்காகக் கூடப்பட்ட மீட்டிங்கில் குறைந்தது 12 மெம்பர்கள் கூடியிருக்க வேணும்; ஆனால், சபையின் கமிட்டியார் இவ்விராஜாதானி முழுமையு மட்டுமாவது இந்தியா முழுமையும் பொதுவாகவாவது சம்பந்தப் படாத எந்த விஷயத்திலாவது மேற்படி நிதியை உபயோகப்படுத்தப் பாத்திரர்களாக மாட்டார்கள்.

4. அக்கமிட்டியார் மேற்படி நிதியை உபயோகப் படுத்த வேண்டிய முக்கிய விஷயம் பின்வருபவை களாக இருக்க வேண்டும்.

(ஏ) இத்தேசத்தில் பிரதிநிதி ஸ்தாபனங்களை ஏற்படுத்துதல்;

(பி) இந்திய ஜன சமூக முழுமையும் ஏகமாய்ச் சம்பந்தப் பட்டுள்ள குறைகளுக்குப் பரிஹாரம் தேடல்;

(ஸி) இத்தேச க்ஷேம விஷயங்களில் ஆங்கிலேய பார்லிமெந்து சபை மெம்பர்களுடையவும், அனுதாபத்தையும் ஒத்தாசையையும் சேர்த்துக் கொள்ளுமாறு இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்படும் அல்லது ஆரம்பித்து நடத்தப்படும் எந்த முயற்சிக்காவது உதவி செய்தல்;

*(டி) இந்தியா மகா ஜனங்களின் பொதுஜன அபிப்பிராயத்தைப் பலப்படுத்தி ஒருமைப் படுத்த வேணுமென்றும், இந்தியா மகா ஜனங்கள் பிரிந்திருக்கும் பல பிரிவுகளுள்ளும் ஒற்றுமையையும் கூட்டு வேலையையும் விர்த்தி பண்ண வேணுமென்றும் நோக்கங்கொண்ட எந்த ஏற்பாட்டுக்காவது ஒத்தாசை செய்தல்;*

5. இந்த விதிகள் சபையின் மெம்பர்களில் 15 - பெயர்கள் யுள்ள ஒரு மீட்டிங்கிலொழிய மற்றப்படி மாற்றப்படமாட்டார்.

ஆங்கிலேய நாட்டா ரித்தேசத்தைக் கைப்பற்றி அதை அவர்கள் ஆண்டு வருவதற்கு இத்தேசத்தார் செய்த தவப் பயனே காரணமாம். என்றும் எங்கும் ஜன வாக்கியத்தையே பிரமாணமாகக் கொண்டு அங்கிலேயர்கள் அரசு முறைமையைச் செலுத்தி வருபவர்களான படியால் அவர்களித் தேசத்தில் அனுஷ்டித்து வரும் துரைத்தன முறைமையையும் அவர்கள் பிரஜைகளாகிய நாம் செய்ய வேண்டிய கடமைகளையும் இந்தப் பரத கண்டத்திலுள்ள எவரும் அறிய

வேண்டியது அவசியம். அவ்வெண்ணத்தைக் கொண்டே இச்சிறிய புத்தகத்தைப் பிரசுரஞ் செய்தேனாகையால், சற்புருஷர்கள் சந்தோஷப்பட்டு பிழைகளைப் பொறுத்து தணிகர்கள்-இதில் பல ஆயிரங் காபிகள் விலைக்குவாங்கி இதை எங்கும் பரவச்செய்து இத்தேசத்து மகா ஜனங்களுக்கு துரைத்தன முறைமையில் கியானத்தை உண்டாக்கி வருவார்களென்று பிரார்த்திக்கின்றேன்.

காபிகள் வேண்டுவோர் சென்னை மவுண்டு ரோட்டு நாஷனல் பிரெஸ் அச்சுக் கூடத்தின் மானேஜருக்கு எழுதிக் கொள்ளலாம்.

**வினா** : இந்தியா தேசமென்பது யாது?

**விடை** : இந்தியா தேசமென்பது நமது தேசத்தார் சொல்லிவரும் பரதகண்டமேயாம். அதுவெகு விஸ்தீரணமானது. வடக்கே ஹிமயகிரி முதல் தெற்கே கன்னியாகுமரி வரையிலும் பரவியிருக்கின்றது. அதின் கிழக்கு எல்லை பங்களாக் குடாக் கடலே. மேற்கு எல்லை அரேபியா சமுத்திரமேயாம். அதன் வடக்கேயிருந்து தெற்கு வரையில் சுமார் 1600-மயில் விஸ்தீரணமுள்ளது. கிழக்கு மேற்கு அளவும் சற்றேறக் குறைய இவ்வளவேதான். இதின் பரப்பு மொத்தம் 15 - லக்ஷம் சதுர மயில். இங்கு வசிக்கும் ஜனங்களின் தொகை 25 கோடியே 60 லக்ஷம்.

வினா : - இப்போது இந்தத் தேசம் யாருடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றது?

**விடை :** - மேற்சொல்லிய வெகு விஸ்தீரண முடைய நமது இந்தியா தேசமானது ஐரோப்பக் கண்டத்தில் ஓர் சிறிய தீவாகிய அங்கிலேயே தேசத் தாருடைய ஆளுகைக் குட்பட்டிருக்கின்றது. அந்த அங்கிலேய தேசத்தின் விஸ்தீரணம் ஸக்ஷத்து 20 ஆயிரத்து சதுர மயில். அங்குள்ள ஜனத் தொகை மூன்றரை கோடிதான்.

**வினா** - அவ்வளவு சிறிய தேசத்தார் இத்தனை பெரிதாகிய நமது தேசத்தை எப்படிக் கைக் கொண்டு ஆண்டுவருகிறார்கள்? ''கேழ்வரகில் நெய் ஒழுகுகின்ற தென்றால் கேட்பார்க்கு மதியில்லையா'' என்றபடி இதென்ன ஆச்சரியம்!

**விடை :** - அவர்கள் இத்தேசத்தை ஆண்டு வருவது சிறிதும் ஆச்சரியமல்ல. அவர்களிடத்திலுள்ள பற்பல நற்குண நற்செய்கைகளே அவர்களை முன்னுக்குக் கொண்டுவருகின்றன. மேலும், அத்தேசத் தார் இந்தப் பரதகண்டத்தாரை விட ஜனத் தொகையில் மிகக் குறைந்தவர்களே யென்றாலும், இத்தேசத்தாரை அவர்கள் அடக்கி ஆண்டுவருவது அவர்களுடைய கட்டுப்பாட்டாலேதான். அத்தேசத்தில் (மற்ற அரசர்களைப் போல) அரசனுக்கு விபரீதமான அதிகாரம் கிடையாது. ஜன சௌக்கியதற்காகவே கவர்ன்மெண்டு ஏற்படுத்தப்பட்டிருப்பதென்பதை அத்தேசதார் அறிந்து, அதற்குத் தக்க விதமாய் அங்கு அவர்கள் பார்லி மெண்டு என்ற ஓர் பொதுச் சபையை உண்டாக்கி, அச்சபைக்கு பிரதிநிதிகளை தாங்களே நியமித்து, அவர் களைக் கொண்டு துரைத்தனத்தைச் சார்ந்த எல்லா

வேலைகளையும் தாங்களே நடத்தி வருகிறார்கள். அந்தப் பார்லிமெண்டு சபைக்கு அங்கங்குள்ள பட்டணத்தாரும், மாகாணத்தாரும் நிர்ணயப்படி மெம்பர்களைத் தக்க காலங்களில் நியமித்துக் கொண்டு வருகிறார்கள். அப்படி அச்சபைக்கு ஜனங்களால் நியமிக்கப்படும் மெம்பர்கள் அடிக்கடி ஜனங்களின் அபிப்பிராயத்தோடு கலந்து அந்தப் பார்லிமெண்டில் எல்லா வேலைகளையும் நடப்பித்து வருகிறார்கள்.

**வினா :-** அந்தச் சபை மெம்பர்கள் அங்கிலேய நாட்டு ஜனநோக்கத்தை எப்படி அறிகிறார்கள்?

**விடை : -** அச்சபையின் மெம்பர்கள் தங்கள் முன் பிரஸ்தாபத்துக்கு வரும் ஒவ்வொரு விஷயத் திற்கும் ஜன நோக்கத்தை எப்படி அறிகிறார்க ளென்றால், அத்தேசத்தில் அங்கங்கு ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பலசங்கத்தார் கூட்டும் மகாகூட்டங்கள் செய்யும் தீர்மானங்களினாலேதான். அத்தேசத்தில் எவ்விதச் சட்டம் ஏற்படுத்த வேணுமானாலும், அச்சபை யார் உத்தரவின்றிச் செய்யப்படமாட்டாது. அங்கு எப்படிப் பட்ட விரிவிதிக்க வேண்டுமானாலும் சரி, அவர்களுடைய அனுமதி வேண்டும். மகாராணியாரின் மந்திரிமார்கள் இராஜரீக விஷயமாய்ச் செய்யும் எல்லா ஏற்பாடுகளுக்கும் பார்லிமெண்டுமெம்பர்கள் அனுமதி பெறவேண்டும். மந்திரிமார்கள் பார்லிமெண்டு மெம்பர்களுக்கு உத்தரவாதிகளாகவும், பார்லி மெண்டு மெம்பர்கள் அத்தேசத்து மகா ஜனங்களுக்கு உத்தர வாதிகளாகவும், எல்லோரும் ''நன்று, நன்று'' என்று சொல்லும்படி வெகு விமர்சையாய் அத்தேசத்து

இராஜாங்க வேலைகளெல்லாம் நடத்தப்பட்டு வருகின்றன. அப்பேர்ப் பட்ட தர்மராஜ்யத்தின் பார்வை யில் நாமிருக்கிறோம்.

**வினா :** - அதுதான் துரைத்தனம். அந்த ஆங்கி லேய துரைத் தனத்தைப் போல சிறந்தது இந்தப் பூமியில் எங்குமில்லையே! மற்ற ருஷியா முதலிய கொடுங்கோன் மன்னர்கள் துரைத்தனங்களுக்குத் துரைத்தனமென்று பெயரிட்டு அழைப்பது உலக் கைக்கு தங்கப் பூண்கட்டியது போலமேயாம். ஆனால், அந்த மகாதேசத்தாரால் இந்தியா தேசம் எவ்விதமாய்' ஆளப்பட்டு வருகின்றது?

**விடை** :- மகாராணியாரின் மந்திரிமார்களும், பார்லிமெண்டு மெம்பர்களும், இத்தேசத்துவிஷயங் களை ஆங்கிலேய நாட்டிலிருந்து மேல்விசாரணை செய்துவருகிறதாகச் சொல்லப்படுகின்றது. மகாராணி யார் தமது மந்திரிகளில் ஒரு வரை இந்தியா செக்ரிடேரி (அதாவது காரியதரிசி) யாக நியமித்து, இவருக்குத் தனியாய் வேறே பதினைந்து ஆங்கிலேயே மந்திரி களை நியமகஞ் செய்துக் கொடுத்து, இந்த செக்ரிடேரி தம்மந்திரிகளுடன் ஆலோசித்து, இந்தியாவில் நடக்க வேண்டிய சகல விஷயங்களையும் நடத்தி வருகிறார். அந்தச் சபைக்கு இந்தியா கவுன்ஸில் என்று பெயர்.

**வினா** :- இது சரிதான் ஐயா! அந்த இந்தியா கவுன்ஸில் மெம்பர்கள் இத்தேசத்து விஷயங்களைச் சரியாய் கவனித்து வருகிறார்களா? அங்கிலேய நாட்டி லிருந்து கொண்டு இத்தேசத்தை அவர்கள் எப்படி

ஜனவாக்கியப்படி ஆண்டுவரக் கூடும். இது முடியா வேலை அல்லவா?

**விடை:-** நீர் சொல்வது உண்மையே. அந்தச்சபை இருந்தும் இல்லாதது போலத்தான். அச்சபையில் இத்தேசத்து ஜனங்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மருந்துக்குங்கிடையார். எல்லோரும் இங்கேயிருந்து உபகாரச் சம்பளம் வாங்கிக் கொண்டு அந்நாட்டுக்குத் திரும்பிப்போன அங்கிலேய பெருச்சாளிகளேயாம். அவர்களுள் நமது தேசத்தார் ஒருவருமில்லை. ஆனதினாலேதான் அச்சபை பயனற்றதென்று நான் சொல்லியது.

**வினா :-** சுதேச மெம்பர்களில்லாமலும், பிரதிநிதிகளில்லாமலும் இருக்கப்பட்ட இச்சபையில் ஜனவாக்கியம் எப்படி வெளியாகும்? அங்கிலேய நாட்டில் மட்டில் பிரதிநிதி சபை ஸ்தாபித்து அதைக்கொண்டு இராஜாங்க வேலைகளையெல்லாம் நடத்திய அங்கிலேயர், இத்தேசத்து மேல்விசாரணைக்காக இந்த இந்தியா கவுன்ஸிலை ஏற்படுத்தி வைப்பானேன்? அங்கிலேய நாட்டுப் பார்லிமெண்டு மெம்பர்கள் இத்தேசத்து விஷயங்களைப் பைசல் செய்வதுபோய் இந்தியா கவுன்ஸில் என்ற பிராரப்தகர்மம் ஒன்று என்னத்துக்கு, ஐயா?

விடை : நீர் சொல்வது முற்றுஞ் சரியே. அந்த இந்தியா கவுன்சில் இத்தேசத்துக்கு ஓர் பெரிய பிராரப்தமே. அந்தச் சபையில் முதுமைப் பருவமுள்ள அங்கிலேயர் சிலர் பலவருஷ காலமாய் மிக்க சம்பளம்

வாங்கிச் சுகமாய் பிழைத்து வருவதால், அச் சபைக்குவேர் அதளபாதாளம் வரையில் பலமாய் ஊன்றிப் போயிருக்கின்றது. நமது தேசத்தாரும், இன்னும் அனேக அனேக ஆங்கிலேயரும் அச்சபையைப் பார்லிமெண்டார் எடுத்துப் போடவேண்டுமென்று பல வருஷங்களாக முறையிட்டு வருகிறார்கள். காலம் வரும்பொழுது அது தனக்குத்தானே தொலைந்து போகும்.

**வினா** :- இந்தியாவின் துரைத்தனக் காரியத்தை இந்தியாவிலிருந்து யார் பார்த்து வருகிறார்கள்? அதுதான் நமக்கு முக்கியமானது. ஆதலினால் அதைப் பற்றி தெளிவாய்ச் சொல்லும், ஐயா.

**விடை** :- கவர்னர் - ஜெனரல் என்றும், ராஜப் பிரதிநிதியென்றும் அர்த்தம் கொள்ளும் வைஸ்ராய் என்னும் பட்டப்பேருள்ள ஒரு உத்தியோகஸ்தர் இந்த தேசத்திலிருந்தே பரிபாலித்து வருகிறார். இந்தியா முழுமைக்கும் இவரே அதிகாரி.

**வினா** : இவருக்கு பிரதிநிதி சபை உண்டோ?

**விடை** : அவருக்கு பிரதிநிதி சபை கிடையாது. ஆனால், சில அங்கிலேயே உத்தியோகஸ்தர்களை உயர்ந்த சம்பளத்துக்கு ஏற்படுத்தி வைத்துக்கொண்டு அவர்கள் ஆலோசனையைக் கொண்டு இத்தேசத்தை அந்த கவர்னர் - ஜெனரல் ஆண்டு வருகிறார். அச் சங்கத்துக்கு ஆலோசனைசங்கமென்பது பெயர்.

**வினா** : அந்த ஆலோசனை சங்கத்தின் மந்திரிகள் எவர்கள்?

**விடை :** அவர்கள் எவர்களெனில் 1. அரசிறை மந்திரி, 2. சட்ட நிரூபண மந்திரி, 3. மராமத்து, ரயில், கால்வாய் முதலானவைகளின் மந்திரி, 4. இராணுவ மந்திரி, இவர்களில் ஒவ்வொருவரும் அவரவர் இலாகாவுக்கு முக்கிய அதிகாரிகள். ஆனால், எந்த டிபார்ட் மெண்டானாலும், ஒவ்வொருவர் உத்தரவையும் கவர்னர் - ஜெனரல் உள்பட எல்லோரும் சேர்ந்தே செய்யவேண்டும். கவர்னர் - ஜெனரல் சகலத்துக்கும் தலைவரென்றாலும், அவர் இந்த மந்திரிகளை யோசனை கேட்காமல் யாதொரு உத்தரவு முதலானவை களும் தாமாகவே செய்வது கூடாது. ஆகிலும் சில விசேஷ சமயங்களில் மாத்திரம் அவர் இவர்கள் அபிப்பிராயத்தை மீறிச் செய்யலாம். ராச்சியத்தில் கலகம் முதலானவை உண்டான காலமானாலும், க்ஷேமம் முதலான காலமானாலும், தமது சபை யாருடைய யோசனையை நடப்பது யோக்கியமல்ல வென்றாவது, அப்படி அனுசரிப்பதால் மோசம் வருமென்றாவது தோன்றினாலும், அப்போது மாத்திரம் தமது மந்திரிகளுடைய அபிப்பிராயத்தை மீறி நடக்கலாம். இப்படி கவர்னர் - ஜெனரலுடன் கூடிய ஆலோசனை சங்கத்துக்குத்தான் 'இந்தியா கவர்ன் மெண்டு' என்று பெயர்.

**வினா :-** அச்சங்கத்தில் சுதேசிகளுண்டோ?

**விடை :-** சுதேசிகள் கிடையார். எல்லாரும் அங்கி லேயர்களே. அங்குள்ள எல்லா அங்கிலேய மெம்பர் களும் மாதம் மாதம் சம்பளம் வாங்குகிறவர்களே. ஆனால் அச்சபையன்றி ''சட்ட நிரூபண சபை'' என்று

ஓர் சபை கவர்னர் - ஜெனரலுக்கு உண்டு. அச்சபை மெம்பர்கள் இத்தேசத்தில் செய்யப்படும் எல்லா சட்டங்களுக்கு பெயருக்கு மட்டில் காரண பூதர்கள் மற்ற எல்லா திட்டங்களுக்கும், நியமனங்களுக்கும் ஒட்டுத் தாவுகளுக்கும் கவர்னர் - ஜெனரலே மூலபுருஷர்.

**வினா :** அச்சபையின் மெம்பர்கள் எவர்கள்?

**விடை :** மேற்சொல்லிய ஆலோசனை சங்கத்தின் சம்பளம் வாங்கும் அங்கிலேயே உத்தியோகஸ்தர் களும், சம்பளமில்லாத சில அங்கிலேயரும், சில சுதேச கனவான்களும் அச்சபை மெம்பர்கள். இச்சபை யாருக்கு கவர்ன்மெண்டார் இத்தேசத்தில் அப் போதைக்கப்போது செய்யும் சட்டங்களுக்கு அனுமதி கொடுக்க அதிகாரமுண்டு. வேறு எவ்வித அதிகாரமும் கிடையா.

**வினா :** சரிதான். இந்த சட்ட நிரூபண சபை அலங்கார சபையோ?

**விடை :** ஆம், ஆம், அது மெய். அது அலங்கார சபையே. இத்தேசத்தில் வரிவிதிக்கவும், சிப்பந்திகளை வைக்கவும் எடுக்கவும் அக்கிரமங்களை எடுத்துப் பேசவும் இன்னும் மற்றத் திட்டங்களைச் செய்யவும் அச்சபை மெம்பர்களுக்கு எவ்வளவேனும் அதிகாரம் கிடையாது. அச்சபை மெம்பர்கள் கவர்னர் - ஜெனரல் ''வா'' என்று அழைக்கும்போது வரணும், ''பேர்'' என்று சொல்லும்போது போகவேணும்.

**வினா -** அவருக்கு கவர்னர் - ஜெனரல் என்று பெயர் வருவானேன்?

**விடை :-** கவர்னர் - ஜெனரல் என்பதற்கு ''பொதுவான அதிபதி'' என்று அர்த்தம். இவருக்குக் கீழ் இத்தேசத்திலேயே அனேக கவர்னர்கள் இருக்கிற படியாலும், இவர்களுக்கு மேல், எல்லாம் பொதுவாக மேலதிகாரத்தை இவர் செலுத்துகிறபடியாலும் இவருக்கு இந்தப்பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**வினா :-** அவருக்குக் கீழான கவர்னர்கள் யாவர்?

**விடை :** பங்காளம், பம்பாய், சென்னை பட்டணம், வடமேற்கு மாகாணங்கள், (அயோத்தியா) பஞ்சாபு, மத்திய மாகாணங்கள், பர்மா இவைகளேயாம். இந்த மாகாணங்களெல்லாம் ஒவ்வொன்றிலும் கவனர் - ஜெனரலின் உத்தரவுகளுக்கும், தீர்மானங்களுக்கும் அடங்கினவைகள்.

ஒரு மாகாணம் மற்றொரு மாகாணத்து அதிகாரி களுக்கு அடங்கினதல்ல. பம்பாய், சென்னை பட்டணம், இந்த மாகாணங்களின் அதிகாரிகளுக்கு கவர்னர்கள் என்று பேர். இந்த இரண்டு கவர்னர் களுக்கும் ஆலோசனை சபை ஒன்றும், சட்ட நிரூபண சபை ஒன்றும் உண்டு. பங்காளத்து அதிகாரிக்கும் வடமேற்கு மாகாணங்கள் அதிகாரிக்கும் உதவி கவர்னர்கள் (இங்கிலீஷில் ''லெப்டினெண்ட் கவர்னர்'') என்று பேர். இவ்விருவருக்கும் ஆலோசனை சபை யில்லை, சட்ட நிரூபணசபை மட்டும் உண்டு. பஞ்சாப் அதிகாரிக்கு உதவி கவர்னர் என்று பேரிருந்தும், ஆலோசனை சபையுமில்லை; சட்ட நிரூபண சபையுமில்லை. மத்திய மாகாணங்களின்

அதிகாரிக்கு கம்மிஷனர் என்று பேர். இவர் மற்றவர் களை விடக் கீழான அந்தஸ்தும் குறைந்த சம்பளமும் உள்ளவர். பர்மா நாட்டின் அதிகாரிக்கும் உதவி கவர்னர் என்று பெயரே.

**வினா** : அந்த இந்தியா கவர்ன்மெண்டார் இத்தேசத்தில் எம்மாதிரியான அதிகாரத்தைச் செலுத்தி வருகிறார்கள்?

**விடை** - 1. அன்னிய தேசத்தாரோடு போக்கு வரவு செய்தல், யுத்தம் அல்லது சமாதானம் செய்தல்.

2. சட்டம் செய்தல். (அங்கங்குள்ள கீழ் கவர்ன் மெண்டார் செய்யும் சட்டத்துக்கும் இந்தியா கவர்ன் மெண்டாரின் அனுமதி வேண்டும்).

3. வரிபோடுதல்.

4. தேசத்தில் வசூலாகும் தொகைகளைப் பொதுச்செலவுக்கு இவ்வள வென்றும், அந்தந்த மாகாணங்களின் சொந்தச் செலவுக்கு இவ்வள வென்றும் விபாகித்தல்.

5. பொதுவாய் ராஜரீகம் நடத்தும் தோரணையை ஒழுங்கு படுத்தல்.

6. கீழ்கவர்ன்மெண்டுகள் செய்யும் சில நடவடிக்கைகளின் பேரில் செய்யப்படும் அப்பீல்களை விசாரித்தல்.

7. கடன் வாங்குதல்.

**வினா** : அங்கங்குள்ள கவர்னர்கள் செய்ய வேண்டிய வேலை என்ன?

**விடை** :- இந்தியா கவர்ன்மெண்டார் விபாகித்துக் கொடுத்த பணத்தைக் கிரமப்படி செலவு செய்து, அவர்களுக்கு வருஷா வருஷம் அந்தந்த கவர்னர்கள் கணக்கு ஒப்பு விக்க வேணும். மேலும் தங்கள் மாகாணங்களைச் சார்ந்த வேலைகளையும் நடத்தி தரவேணும். அங்கங்கு விதிக்கப்பட்ட வரிகளை வசூல் செய்யவேணும்.

**வினா** : ராஜ்ஜியத்தின் பொதுச் செலவுகளா னவை எவை?

விடை :- 1. சைனியச் செலவு,

2. பெரிய நீர் பாய்ச்சல் வேலைகளின் செலவு.

3. இரும்புப் பாதைகளின் செலவு,

4. தபால், தந்தி இந்த இலாகாக்களின் செலவு.

5. சிவில்விஷயங்களின் செலவுகள்.

இந்தப் பொதுச்செலவுகளுக்காக இந்தியா கவர்ன்மெண்டால் சில வரும்படிகளைத் தங்கள் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**வினா** : சரிதான். எல்லா வேலைகளுக்கும் இத் தேசத்தில் கவர்னர் - ஜெனரலே உத்தரவாதி. இப்படி எல்லா அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்துவிட்டு, இந்தியா கவுன்சிலும், பார்லிமெண்டு சபையும் இத் தேசத்து விஷயங்களைக் கவனிப்பதாக ஏட்டில் மட்டும் எழுதி வைத்துவிட்டு மற்றப்படி உள் வயணத்தில் எல்லா வேலைகளையும் கவர்னர் - ஜெனரலே செய்து வருகிறார் போலும்?

**விடை** :- ஆம், இது வாஸ்தவமே. இப்படியெல்லாம் கவர்னர் - ஜெனரல் தம்மிஷ்டப்படி செய்து வருவது கூடாதென்றும், அனேக சீர்திருத்தங் களை அங்கிலேய பார்லிமெண்டால் இத்தேசத்தில் இப்போது செய்து முடிக்கவேணுமென்றும், இல்லா விடில் இத்தேசத்தாருக்கு எவ்விதக்ஷேமமும் உண்டாகவே மாட்டாதென்றும் 'நாம் ஓயாமல் அங்கிலேய நாட்டு பார்லிமெண்டு மெம்பர்களிடத்தில் அலறிவர வேண்டும்.

**வினா** : ஏன் ஐயா! பார்லிமெண்டார் அங்கிலேய நாட்டிலுள்ளபடி இத்தேசத்திய கவர்னர் - ஜெரலுக்கு ஓர் பிரதி நிதி சபையை ஸ்தாபித்து அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு இத்தேசத்து இராஜரீக வேலைகளை இங்கு நடத்தி வரும்படி ஆக்கியாபிக்கக் கூடாது? தங்களுக்கு ஓர் விதியும் நமக்கு மற்றோர் விதியும் ஏன்?

**விடை** : இதுமெத்த நல்ல கேள்வி. இத்தேசத்தால் சுகப்பட்டு, அங்கிலேய கவர்ன்மெண்டும் நீதி வழுவாமல் இத்தேசத்தைப் பல்லாண்டு பல்லாண்டாய் ஆண்டுவர வேணுமானால், நீர் சொல்லியபடி ஓர் பிரதிநிதி சபையை அந்நாட்டுப் பார்லிமெண்டு மெம்பர்கள் இங்கு ஸ்தாபிக்க வேண்டும். அம் மகாசபை மெம்பர்கள் நமது தேசத்திய கஷ்ட நிஷ்டூரங் களை அறிய வேண்டும். இப்போது அவ்வளவாய் இத்தேசத்து விஷயங்களை அவர்கள் கவனிப்ப தில்லை.

**வினா** : அப்படியானால், நமது தேசத்து ஜனங்களின் குறைகளை ஏன் அந்தப் பார்லிமெண்டு மெம்பர்கள் சமாளிப்பதில்லை?

**விடை** : அந்த மகாசபை மெம்பர்கள் நமது தேசத்து விஷயங்களை யோசித்து நமக்கு ஹிதம் செய்யவேணுமென்று எண்ணங் கொண்டவர்க ளென்றாலும், அவர்களுக்கு முதல் முதல் இத்தேசத்து விஷயங்களைக் கவனிக்க சாவகாச மில்லை. அப்படிச் சாவகாசமிருந்த போதிலும், அவர் களுக்குத் தேச விஷயம் ஒன்று மத்தனை சரியாய்த் தெரியாது. நமக்கு விளைகின்ற பற்பல தீங்குகள் அவர்கள் காதுக்கு எட்டுகிறதேயில்லை. அவைகள் உள்ளது உள்ளபடி அவர்கள் செவிகளுக்கு எட்டுமே யாயின், (சூரியனைக் கண்ட பனிபோல்) இத்தேசத் தாரின் துக்கங்கள் தொலைந்து நமது கலி நீங்கிவிடும். இப்போது நமது தேசத்தார் படும் கஷ்டங்களின் லக்ஷத்தில் ஒரு பாகமும் அங்கிலேய நாட்டிலிருக்கும் மகாஜனங்களுக்குத் தெரியாது. மேலும், இங்குள்ள அங்கிலேய உத்தியோ கஸ்தர்கள் தங்கள் மனம் போனபடி இத்தேசத்தை ஆண்டு வருகிறார்கள். அவர்கள் அன்னியர்களான படியால், நமதுகஷ்ட நிஷ்டூரங்கள் அவர்களுக்கு எளிதி லெட்டுகிறதில்லை. ஓர் பிரதிநிதிசபையை நிரந்தரமா யேற்படுத்தி, அந்தச் சபை மெம்பர்களைக் கொண்டு நமது தேசத் தாருக்குள்ள கஷ்ட - நிஷ்டூரங் களை இத்தேசத்திய கவர்னர் - ஜெனரல் அறிகிறது மில்லை. ஆதலினாலே தான் நமது கஷ்ட - நிஷ்டூரங் களுக்குக் கதிமோக்ஷம் இன்னுங் கூடக் கிடைக்காமலேயிருக்கிறது.

**வினா** :- எப்படி எப்படிச் செய்தால் நமது குறைகள் அங்கிலேயர்களுக்கு எட்டி நமது தேசத்தில் பிரதிநிதி சபைகள் ஏற்பட்டு நமக்கு க்ஷேம முண்டாகும்?

**விடை** :மேற்குறித்த வினாவுக்குப் பதில் சொல்ல வேண்டுமானால் ஏடிடங் கொள்ளாது; சொல்லி முடிக்க வருஷகாலமும் போதாது. ஆனபோதிலும், ஒருவாறு சுருக்கிச் சொல்லுகிறேன். கேளும், முதல் முதல் இத்தேசத்தார் எல்லா இராஜரீக பொது விஷயங்களை கவனித்து அவைகளைப் பற்றித் தங்கள் அபிப்பிராயங் களை அடிக்கடி மாநாடுகளினாலும், பத்திரிகைகள் மூலமாயும் இடை சோராமல் வெளிப்படுத்திக் கொண் டேயிருக்க வேணும். இத்தேசத்து எல்லாப் பொது விஷயங்களையும் யோசிக்கும் பொருட்டு (ஜனங் களால் நியமிக்கப்பட்டு இப்பொழுது அங்கிலேய நாட்டில் ஸ்தாபனமாயிருக்கும் பார்லிமெண்டுபோல்) ஓர் மகாசபை இந்நாட்டிலும் ஸ்தாபிக்க நமது தேசத்தார் முயலவேண்டும். அந்தச் சபைக்கு இத்தேசத்தாரே மெம்பர்களை நியமித்து வர வேண்டுமென்று ஆங்கி லேய பார்லிமெண்டினின்று நாம் உத்தரவு பெற வேண்டும்.

அந்தச் சபையார் செய்யும் தீர்மானங்களுக்கு இத்தேசத்திய கவர்னர் - ஜெனரலும், கவர்னர்மார்களும் உள்பட வேண்டுமென்று பார்லிமெண்டு மெம்பர்கள் அனுமதிகொடுக்க வேணும். இப்படி கவர்னர் - ஜெனரலுக்கு ஓர் சபையும், இந்தியாவிலுள்ள ஐந்து இராஜதானி கவர்னர்களுக்கும் ஐந்து சபைகளும்

ஏற்பட்டு, இங்கு ''சட்டம் செய்வதிலும், வரிகள் விதிப்பதிலும், இத்தேசத்துப் பணத்தைச் செலவிடு வதிலும், அந்தச் சபைகளின் அனுமதியின்றி இத் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் ஒன்றும் செய்யப் படாது'' என்று ஏற்பட்டால்தான், நமது தேசம் க்ஷேமப் படும். மேற்சொல்லியபடி சில சீர்திருத்தங்களை இத் தேசத்தில் செய்துமுடிக்க வேணுமென்று அங்கிலேய நாட்டு மகா ஜனங்களுக்குத் தந்தி மூலமாயும், பத்திரிகைகள் மூலமாயும், பிரதிநிதிகள் மூலமாயும் நாம் விடாமல் முறையிட்டுக் கொண்டே வரவேண்டும். இவ்வாறு நமது தேசத்தார் செய்துவந்தால்தான் நமது முறைகள் அங்கிலேய நாட்டார் செவிக்கெட்டும். அப் பொழுதுதான் அத்தேசத்து மகா ஜனங்கள் நமது தேச விஷயங்களில் சிரத்தை யெடுத்துக் கொள்ளுவார்கள். பின்புதான் இத்தேசத்தில் பிரதிநிதிகள் சபை உண்டாகும். இப்போது அப்படிப்பட்ட சபைகள் நமது புத்திரர்கள், பௌத்திரர்கள் காலத்திலாவது அவைகள் இத்தேசத்தில் ஸ்தாபனமாகும்.

**வினா** : பார்லிமெண்டை ஒத்த சபைகள் இத் தேசத் துக்குக் கிடைக்கும்போது பார்த்துக் கொள்ளு வோம். இப்போது ஆங்கிலேயர் தங்கள் தேசத்தில் மட்டில் எல்லா ராஜரீக விஷயங்களையும் ஜன வாக்கியத்தின்படி நடத்தி வரும்படி எவ்வளவோ ஏற்பாடுகள் செய் திருக்கிறார்களே! இங்கும் ஏதாவது அம் மாதிரியான ஏற்பாடுகள் அவர்கள் செய்திருக் கிறார்களா?

**விடை** : ஆம், இங்கும் சில ஏற்பாடுகள் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

ஆனால், அவை வெகு புராதனமானவை யாதலால், இக்காலத்துக்கு அவை ஏற்றவையல்ல. மகாராணி அவர்களித் தேசத்தைக் கைப்பற்றியபோது இவ்விஷயமாய் சில ஏற்பாடுகள் செய்தார்கள். அவைக ளெல்லாம் இப்போது பயனற்றவையாயிருக்கின்றன.

**வினா** - ஏன் ஐயா! அந்த ஏற்பாடுகளெல்லாம் இப்போது பயனற்றவையென்று சொல்லுகிறீர்கள்?

**விடை :** இந்திய தேசமிப்போது 50 - வருஷங் களுக்கு முன்னிருந்த மாதிரியாகவா இருக்கிறது? அங்கிலேயராதீனத்துக்கு வந்தபின் இத்தேசம் எவ்வளவோ விர்த்தியடையவில்லையா? குட்டிச் சுவற்றில் முட்டிக்கொள்ள வெள்ளையெழுத்தா? தபாலாபிசுகளென்ன, தந்தி ஆபீசுகளென்ன, ரயில் ரோட்டுகளென்ன, பாடசாலைகளென்ன, வைத்திய சாலைகளென்ன, நியாயஸ்தலங்களென்ன, இவைக ளெல்லாம் அங்கிலேயராளுகையில் இத்தேசத்தாருக்குக் கிடைக்க வில்லையா? இப்போதும் பூர்வகாலத்தில் அங்கிலேயர்களிங்கு ஏற்படுத்திய விதிகளை என்றும் சிரஞ்சீவியாக வைத்துவிட்டு அவைகளாலிப்போது ஜனவாக்கியத்தை எப்படி அறியலாம்? காலத்துக்குத் தக்க கோலம் அவர்களும் போட வேண்டாமா? இத்தேசத்தார் அங்கிலேயர்களின் கிருபையினால் கியானத்திலும், படிப்பிலும், இராஜதந்திரத்திலும் விர்த்தியடைந்து வீண் சச்சரவுகளை யெல்லாம் விட்டு விட்டு அன்னியோன்னியப்பட்டு இருக்கிறார்கள். அவர்களிப்போது மேன்மேலும் உயர்ந்த பேறுகளைப்

பெறவேணுமென்றால் அங்கிலேயர்களவைகளுக்கு இடையூறு சொல்லலாமோ?

**வினா** - அப்படி அவர்கள் இத்தேசத்தாருக்கு இடையூறாய் நிற்பது எவ்வளவுந் தகாது. ஏனெனில், உலகத்திலுள்ள எல்லா சிருஷ்டி வர்க்கங்களும், தினே தினே விர்த்தியடைய வேணுமென்பதுதான் பராபரனுடைய ஆக்கினை. அப்படி இத்தேசத்தார் விர்த்தியடைந்து வர நமது அதிகாரிகள் மட்டில் இத்தேசத்தில் சுமார் 30 வருஷங்களுக்கு முன் செய்த பழைய ஏற்பாடுகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் காலத்துக்குத் தக்கபடி மாற்றிக்கொண்டு வர வேண்டியது அவசியமல்லவா? ஆனாலித்தேசத்திய ஜனங்களின் அபிப்பிராயத்தை அறியும்படி என்ன ஏற்பாடுகள் முன் கவர்ன்மெண்டார் செய்தார்கள்?

**விடை** : நான் முன்னமேயே கவர்ன்மெண்டார் இத்தேசத்தில் சட்ட நிரூபண சபையென்று சில சபைகளை ஸ்தாபித்திருப்பதாகச் சொன்னேனே. அவைகளிலுள்ள சில சுதேச மெம்பர்களைக் கொண்டு கவர்ன்மெண்டார் இத்தேசத்து ஜனங்களின் நோக்கங்களை அறிந்து வருகிறார்கள் போலும். ஆனால் அச்சபைகள் அநேகமாய் இத்தேசத்துக்கு இப்போது பார்த்தவர்களுக்கும் டம்பமாகத் தோன்றும் படி மேலுக்கு அலங்காரமாயிருக்கின்றனவேயன்றி, அச்சபையாருக்கு எவ்வளவும் சுவாதீன அதிகாரம் கிடையாது.

**வினா** : அச்சபைகள் இப்படி கவைக் கற்றிருப்பானேன்? இத்தேசத்தாரில் சிலர் அச்சபைகளில்

மெம்பர்களாக விருக்கின்றார்களே? ஏனவர்கள் இத் தேசத்தாருடைய குறைகளை எடுத்து அதிகாரிகளுக்குச் சொல்லப்படாது? அவர்கள் இத்தேசத்தாருக்குக் கூடியவரையில் நியாயம் செய்யும்படி அதிகாரிகளுடன் ஏன் போராடலாகாது?

**விடை** : அச்சபைகள் இப்படி கவைக் கற்றிருப் பானேன்? இத்தேசத்தாரில் சிலர் அச்சபைகளில் மெம்பர்களாக விருக்கின்றார்களே? ஏனவர்கள் இத் தேசத்தாருடைய குறைகளை எடுத்து அதிகாரிகளுக்குச் சொல்லப்படாது? அவர்கள் இத்தேசத்தாருக்குக் கூடியவரையில் நியாயம் செய்யும்படி அதிகாரிகளுடன் ஏன் போராடலாகாது?

**விடை** : இது நல்ல கேள்வி ஐயா! அச்சபையி லுள்ள நமது தேசத்தார் கிரமப்படி நமது தேசத்தாரால் நியமிக்கப்பட்டவர்களானால், அவர்களால் இத்தேசத் தாருக்கு ஹிதமுண்டாகும். கவர்ன்மெண்டார் தங் களுக்கு வேண்டியவர்களையே அச்சபைக்கு மெம்பர் களாக நியமித்துக் கொள்ளுகிறார்கள். அதனாலே தான் அச்சபையின் மெம்பர்களின் கவர்ன்மெண்டு முக்கிய உத்தியோகஸ்தர்களாடும் ஆட்டங்களுக்கெல்லாம் உட்பட்டு அவர்கள் 'வா' என்று அழைக்கும் போது வந்து, 'போ' என்று சொல்லும்போது போய் அவர் களுடன் கூடவே ஒக்கப்பாடி வருகிறார்கள். ஏதாவது கவர்ன்மெண்டு மெம்பர்களுக்குக் குறுக்காய்ப் பேசினால், தங்களை அச்சபையினின்று நீக்கிவிடுவார் களென்ற பயங்கொண்டு அச்சபையிலுள்ள சுதேச மெம்பர்கள் சொல்லுவதற்கெல்லாம் ''சிவா சிவா''

என்று (கோயில் மாடுகள் போலத்) தலை ஆட்டி வருகிறார்கள். இப்படி கவர்ன்மெண்டு உத்தியோகஸ் தர்கள் காலாலிடும் வேலைகளைத் தலைமேல் வைத்து முடித்துவரும் சுதேசிகளுக்கு அவர்கள் ராய்பஹதூ ரென்றும், கே.ஸி.எஸ்.ஐ. என்றும் ஸி.எஸ்.ஐ. என்று பட்டங்களையும் கொடுத்து வருகிறார்கள். மேலும் கவர்ன்மெண்டார் அச்சபைக்கு நியமிக்கும் சுதேசிகளில் அநேகருக்கு இத்தேசத்து ஏழைக்குடிகளின் சுதேசிகளில் அநேகருக்கு இத்தேசத்து ஏழைக்குடிகளின் சுக துக்கங்கள் தெரியாவாம். அவர்களில் அனேகர் நெற் பயிரை ''கொள்ளு காய்த்த மரம்'' என்று சொல்லும் படியான ஞானம்தான் அவர்களுக்குண்டு. அவர்களில் சிலருக்கு கிராமங்களில் கோஷபாத பூமியுங் கிடையாது.

பட்டணங்களை விட்டுக் கிராமங்களுக்கு அவர்களில் சிலர் போனதும் கிடையாது. அப்படிப் பட்டவர்கள் அச்சபைகளிலிருந்தால் இத்தேசத்துப் பயிரிடுங் குடிகளுக்கு அச்சபைகளாலென்ன பயன்? அவர்களினால் கவர்ன்மெண்டாருக்கும் இத்தேசத் தாரின் சுகதுக்கங்கள் என்னமாய் வெளிப்படும்? மேலும், சுதேச மெம்பர்களுக்கு அச்சபையில் மூச்சு விடக்கூட அதிகாரம் கிடையாது. இங்குள்ள கவர்ன் மெண்டு உத்தியோகஸ்தர்கள் என்ன செலவு செய்தாலும், சரி, எவ்வித சண்டைகளில் தலை யிட்டாலும் சரி, என்னென்ன வரிகள் இத்தேசத்தார் மீது விதித்தாலும் சரி, இச்சட்ட நிரூபண சபையினருக்கு அவைகளைப் பற்றிபேச அதிகாரம் கிடையாது.

**வினா** - இப்படிப்பட்ட அலங்கார சபைகளைக் கொண்டு (மண் குதிரையை நம்பி ஆற்று வெள்ளத் திலிறங்குவது போல) இத்தேசத்தார் எப்படிக் கடைத் தேறலாம்?

**விடை** : கடைத்தேற முடியாதென்பது வாஸ்த வமே. ஏனெனில், அச்சபை மெம்பர்களின் நியமன விஷயமாய் இத்தேசத்துச் சனங்களுக்கு எவ்வளவும் சுதந்திரமில்லை. கவர்ன்மெண்டார் தங்களுக்கு வேண்டியவர்களை அச்சபையில் மெம்பர்களாக நியமித்து வருவதால், இத்தேசத்து ஜனங்களுக்கு அவர்களால் என்ன நன்மை உண்டாகும்? உண்டாகவே மாட்டாது- கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டவர்கள் ''வாத்தியார் சொல்லுகிறபடி தர்ப்பயாமி'' என்ற வண்ணமாய் அனேகமாய்க் கவர்ன்மெண்டாருக்குச் சாதகமாய் பேசுவார்களேயன்றி, ஜனங்களுக்குச் சாதகமாய் பேச இவர்களுக்கு நாவெழுமா? எழாதே! ஆனதினாற்றான் இச்சபைகளைச் சீர்திருத்தும்படி நமது தேசத்தார் வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும். இதுவிஷயத்தில் நாம் விடாமுயற்சிசெய்து வருவோ மாயின், அங்கிலேய நாட்டார் நமது கருத்துக்கு இணங்கி இவைகளை சீர்திருத்தி விடுவார்கள். மேலுமிப்போது இத்தேசத்திய பல கவர்னர் - ஜெனரல் களும் கவர்னர்மார்களும் அவைகளைச் சீர்திருத்த வேணுமென்று பிரயத்தனப் பட்டாலும், அங்கிலேய நாட்டார் அனுமதியின்றி அவர்களால் ஒன்றும் செய்ய முடிகிறதில்லை. இத்தேசத்திய விஷயங்களெல்லாம் மாமூல்படி செய்யப்பட்டு வருகின்றன. அந்த மாமூல்

பிசாசை மாற்ற எவர்களால் தான் முடியும்? மாமூலை மாற்ற இத்தேசத்தில் வெகு பலாட்டிய கவர்னர் - ஜெனரல்களாக விருந்த லார்ட் மேயோ, நார்த் புரூக்கு, லார்ட் ரிப்பன், டப்ரின் முதலிய பிரபுக்களாலும் முடியாமற் போயிற்றே? ஆனால் மேற்சொல்லிய புராதன சபைகளை சீர்திருத்தும்படி நாம் விடாமுயற்சி செய்து வருவோமாகில், இத்தேசத்திலினிவரும் அதிகாரிகளுக்கும் நமது விடாமுயற்சி உப பலமாகவே யிருக்கும்.

**வினா :** அப்படியிருக்க, ஏனித்தேசத்தார் அச்சபை களைச் சீர்திருத்த முயலுகிறதில்லை?

**விடை :** இத்தேசத்தார் அவ்விஷயமாய் அதிக சிரத்தையெடுத்துக் கொள்ளுகிறதில்லையென்பது வாஸ்தவமே. பயிரிடும் குடிகளும், வியாபாரிகளும், மற்றச் சாதாரண ஜனங்களும் இத்தேசத்துப் பொது விஷயங்களைச் சுத்தமாய்க் கவனிக்காமல் தானிருந் தார்கள். ஆனால் இப்போது அவர்களில் அனேகர் ராஜாங்க விஷயங்களைப் பற்றிப் பத்திரிகைகளிலும் மகாநாடுகளிலும் பேசிவருகிறார்கள். இப்போதுதான் இந்தப் பரதகண்டத்திலிருக்கும் அனேக ஜமீன்தாரர் களும், வர்த்தர்களும், மிராசுதாரர்களும், இன்னும் மற்ற அனேக கனவான்களும் வருஷத்துக்கு ஒருமுறை ஓர் முக்கிய பட்டணத்தில் கூடி சட்டநிரூபண சபைகளின் சீர்திருத்தங்களைப் பற்றியும் இன்னும் சில முக்கிய இராஜாங்க விஷயங்களைப் பற்றியும் பேசி வருகிறார்கள். பம்பாயில் 1885-ம் வருஷத்தில் சுமார் 70 பேர் கூடி இத்தேசத்து முக்கிய பொது விஷயங்களைப்

பற்றி பேசினார்கள். 1886-ம் வருஷத்தில் கல்கத்தாவில் அவர்களில் அனேகரும், இன்னுஞ் சிலரும் அக்கருத்தை கொண்டே கூடினார்கள். சென்ற டிசம்பர் மாதக் கடைசியில் வடக்கே ஹிமாலயமுதல் தெற்கே கன்னியாகுமரி பரியந்தமுள்ள முக்கிய பட்டணங் களிலிருந்து சுமார் 607 சுதேசிகள் இச்சென்னையி லொன்று கூடி இத்தேசத்துப் பற்பல பொதுவிஷயங் களைப் பற்றி யோசித்துக் கடைசியில் சில தீர்மானங் களைச் செய்தது எவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படிக்கூடிவரும் மகாசபைக்குக் காங்ரெஸ் என்ற இங்கிலீஷ் பெயரை வைத்திருக்கிறார்கள். காங்ரெஸ் என்ற பதத்துக்குச் சங்கமென்று அர்த்தம்.

**வினா** : அந்தக் காங்ரெஸினாலித் தேசத்தாருக் கேதாவது பலனுண்டா?

**விடை** : பலனுண்டு. இப்போது இந்தியா தேசத்து ராச்சியபார விஷயத்தில் இத்தேசத்தாருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அங்கிலேயர்கள் நம்மைக் குழந்தைகள் போலப் பாவித்து எல்லாம் தாங்களே நடத்தி வருகிறார்கள். இப்படி நாம் வருஷா வருஷம்கூட்டங் கூடித் துரைத்தன விஷயங்களைப் பற்றிப் பேசி வருவோமாகில், நமது கவர்ன்மெண்டா ருக்கும் இத்தேசத்தை ஜனாபிப்பிராயப்படி ஆண்டு வருவது எளிது. அவர்களின் உட்கருத்து என்றும் இத் தேசத்தாருக்கு ஹிதம் செய்ய வேண்டிய தென்பதுதான். இப்படி இத்தேசத்து முக்கிய சுதேசிகள் வருஷா வருஷம் ஒன்றுகூடி வருவதால் அவர்கள் மனமெல்லாம் கலந்து அவர்களுக்குள் அன்னியோன்னியமுண்டாகும்.

கண்ணால் காணக்கூடாதவர்களை யெல்லாம் அச்சங்கத்துக்கு வரும் ஒவ்வொருவரும் ஓரிடத்தில் காணலாம். பலர் கூடிப்பொது விஷயங்களைப் பற்றி பேசிவருவதால் எவருக்கும் அதிக கியானமும் உண்டாகும். மேலும், அவர்களுக்குள் பல நூற்றாண்டு களாகக் குடிகொண்ட குரோதம், பகை, பொறாமை முதலிய துற்குணங்களெல்லாமிப்படிக் கூடிவருவதால் பறக்குமே. அச்சபை விடாமல் கூடி ''இத்தேசத்தில் பிரதிநிதி சபைகளைக் கவர்ன் மெண்டார் ஸ்தாபித்து இராஜ்ஜிய வேலைகளை நடத்தி வரவேணும்'' என்று விடாமல் முறையிட்டு வந்தால் (அழுகிறபிள்ளைக்கு தாய் முலைகொடுப்பதுபோல்) நமது கருணையுள்ள அங்கிலேய துரைத்தனத்தார் நமது பிரார்த்தனைகளுக்கு இணங்குவார்கள்.

**வினா** : இப்படி நமது தேசத்தாரிங்குள்ள முக்கிய பட்டணங்களில் வருஷா வருஷம் கூட்டம் போடுவது நமது கவர்ன்மெண்டாருக்கு விரோதமல்லவா?

**விடை** : ஒருக்காலும் விரோத மில்லை. அவர்கள் நமது அபிப்பிராயங்களை அறிய வெகு ஆசைப் பட்டவர்களாக விருக்கிறார்கள். இப்படி கூட்டம் போடவும், அவைகளில் வாய் திறந்து பேசவும் நமக்கு கற்பித்தவர்கள் அங்கிலேயர்களே. இதற்காக நம்மை விரோதிப்பார்களேயானால் பின்பு உலகத்தில் நீதி ஏது?

**வினா** : அப்படியிருக்க ஏன் அந்தக் காங்ரெஸ் சபையை நமது தேசத்தார் பலப்படுத்தக் கூடாது?

**விடை :** அவசியம் பலப்படுத்த வேண்டியதே. இத்தேசத்திலுள்ள அனைவரும் அச்சபையைப் 'பலப் படுத்த வேணும்'' என்று வாயால் சொல்லித் திரிந்தா லென்னாகும். எல்லாரும் அவ்வேலையைத் தங்கள் வேலையாகவே பாவித்து விடாமுயற்சி செய்து அச்சபையாரின் கருத்தை இத்தேசத்து மஹா ஜனங்களுக்கு அறிவித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அங்கங்கு விடாமலிவ் விஷயமாய்ப் பிரசங்கங்கள் நமது தேசத்தார் செய்து கொண்டே வரவேணும். இப்படியெல்லாம் செய்து அச்சபையின் நோக்கத்தை இத்தேசத்து மகா ஜனங்களுக்கு நமது தேசத்தார் அறிவித்து வருவார்களேயாகில், கடைசியில் அச்சபைக்கு வாக்குவலிமை யதிகப்படும்.

**வினா :** இப்படி எல்லாம் நாம் முயற்சி செய்து அந்தக் காங்ரெஸைப் பலப்படுத்தினால் கவர்ன் மெண்டார் அதை மதிப்பார்களா?

**விடை :** இப்படி எல்லாம் நாம் முயற்சி செய்து அந்தக் காங்ரெஸைப் பலப்படுத்தினால் கவர்ன மெண்டார் அதை மதிப்பார்களா?

**விடை :** கவர்ன் மெண்டார் அதை மதிக்கக் கேட்பானேன்? இந்த அங்கிலேய கவர்ன்மெண்டார் உலகத்திலுள்ள மற்றக் கவர்ன் மெண்டாரைப் போலல்ல. ஜனவாக்கியத்திற்கு இணைந்து இராஜநீதி செலுத்துவதே அவர்கள் லக்ஷணம். ஆனால் அங்கிலேய உத்தியோகஸ்தர்களில் அனேகர் பல குந்தகங்களை அதன் முன்வைப்பார்கள். இதற்

கெல்லாம் பயப்படாமல் நமது தேசத்தார் அச்சபை விர்த்தியடையும்படி முயற்சி செய்து வருவார்களே யாகில், அச்சபை ஏன் பலப்படாது? மகா ஜனத்தின் வலிமைக்கு முன் எவர்தான் நிற்பார்கள்? மகாஜன வாக்கியம் பிரம்மா அஸ்திரமல்லவா? அதைத் தடுக்க எவரால் முடியும்? இப்போது இத்தேசத்திற் கூடம் காங்ரெஸ் சபை வருஷா வருஷம் கிரமப்படிகூடி அங்கு பிரஸ்தாபத்துக்கு வரும் விஷயங்களைக் குறித்து அச்சபைமெம்பர்கள் ஆறத்தீர யோசித்துத் தகுந்த தீர்மானங்களைச் செய்து வருவார்களேயாகில், கவர்ன் மெண்டார் அச்சபையில் செய்யப்படும் தீர்மானங் களுக்கு உட்பட்டே நடப்பார்கள். அங்கிலேயே நாட்டுப் பார்லிமெண்டு முதல் முதல் இந்தக் காங்ரெஸ் மாதிரியாகத்தான் உண்டானது. சிறு விதையிலிருந்து ஓர் மகா பெரிய விருக்ஷம் உண்டாவது போல், சிலர் கூடி முதல் முதல் அங்கிலேய நாட்டில் பல நூற்றாண்டு களின் முன் ஏற்படுத்திய சபைதான் இப்போது மகா பார்லிமெண்டு சபையாக வடிவெடுத்திருக்கிறது.

**வினா** : அப்படியானால் நமக்கு மட்டில் ஏன் அங்கிலேயே துரைத்தனம் பொது ஜனசபையை ஒன்று ஸ்தாபித்து அச்சபைக்கு பிரதிநிதிகளை நியமிக்கும் அதிகாரத்தை நமக்கு கொடுக்கவில்லை?

**விடை** : நமது தேசத்தார் கேட்டுக் கொண்டால் தானவ்வதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். நமது ஜனங்கள் தூங்கி வீழ்ந்து கொண்டு "இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன" என்று சொல்லி அப்பேறுகளையெல்லாம் பெறும்படி

எவ்வித முயற்சியும் செய்யாமல் பொது விஷயங்களில் கியான சூன்னியர்களாயிருந்தால் என்னமாய் அவைகள் நமக்குச் சித்திக்கும்? அங்கங்கு உலகத்திலுள்ள தேசங்களில் பார்லிமெண்டு சபைகள் ஸ்தாபனமா வதற்காக அந்தத்தேசத்தில் எத்தனையோ மகான்கள் தங்கள் பிராணைன்களை விட்டார்கள், எவ்வளவோ பெயர்கள் பணத்தை எள்ளாக விதைத்தார்கள்; எத்தனை யோ பெயர்கள் தேகத்தைக் கழுவாய்க் கரைத்தார்கள்; எத்தனையோ மகான்கள் ஜெயிலுக்குப் போய் அதை வீடாக நினைத்துபடாத பாடும் பட்டார்கள். அப்படியிருக்க, இத்தேசத்தாருக்கு அந்த மகா பேறு எளிதில் கிடைத்து விடுமா? மேலும் இங்கு படிப்பு விர்த்தியாக ஆக இத்தேசத்தாரும் பொது விஷயங் களிலக்கறை யெடுத்துக் கொள்ள வேணும். தூக்கத் தையும், சோம்பலையும், பொறாமையையும், நமது தேசத்தார் விட்டு விட்டு இத்தேச விர்த்தி விஷயமாய் பிரயத்தனம் செய்வார்களேயாகில் அவர்களுக்கும் (அங்கிலேய நாட்டு பார்லிமெண்டு போல்) பிரதிநிதி சபைகள் நாளாவட்டத்தில் கிடைக்கும்.

**வினா :** அங்கிலேய நாட்டு பார்லிமெண்டைப் போல் ஆங்கிலேய நாட்டு ஆதினத்துக்குட் பட்ட மற்றெல்லாத் தேசங்களிலும் ஆலோசனை சபை உண்டோ?

**விடை :** இது மெத்த நல்ல கேள்வி. உலகத்தி லுள்ள எல்லா நாகரீக துரைத் தனத்தாரும் அங்கங்கு ஓர் மந்திரா லோசனை சபை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவர்களனுமதிப்படியே எல்லா துரைத்தன வேலை

களும் அங்கங்கு நடத்தப்பட்டு வருகின்றன. எங்குமிந்த அனுஷ்டானம் வழங்கிவர அங்கிலேய மகாராணி அவர்களின் ஆதீனத்துக்குட்பட்ட எல்லா நாடுகளிலும் மந்திராலோசனை சபைகளிருக்கக் கேட்பானேன்? பிரதிநிதிகள் சபையில்லாமல் இராஜாங்க வேலைகளை நடத்தும் படியாய் எங்கும் அங்கிலேயே மகாஜனங்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அங்கிலேயே துரைத் தனத்துக்கு குட்பட்ட கனடா, வெஸ்து இந்தியா தீவு, ஆஸ்திரேலியா கண்டம் முதலிய வெல்லாவிடங் களிலும் பார்லிமெண்டை ஒத்த பிரதிநிதிகள் சபை உண்டு. அங்கங்குள்ள ஜனங்கள் அச்சபைக்கு பிரதி நிதிகளைத் தாங்களே நியமித்து இராஜரீக விஷயங்களை மேற்போட்டு நடத்தி வருகின்றார்கள்! மகாராணி அவர்கள் அந்தந்த நாட்டு கவர்னர் - ஜெனரல்களை மட்டில் நியமித்து அவர்களை அங்கங்குள்ள பிரதிநிதி சபைகளின் மெம்பர்களுக்கு இணைந்து இராஜ்ஜியத் தை ஆண்டுவர உத்தரவு கொடுத்து விடுகிறார்கள்.

**வினா :** அக்காட்டு பிரதேசங்களிலெல்லாம் பிரதிநிதி சபைகளிருக்க இத்தேசத்தில் மட்டும் ஏன் கிடையாது, சொல்லும்?

**விடை :** இது நமது தௌற்பாக்கியமே. நமக்குப் பூராவாய் பிரதிநிதி சபைகள் இப்போது அவசிய மில்லை. நமது சட்ட நிரூபண சபைகளைக் கவர்ன் மெண்டார் சீர்திருத்த விடுவார்களாகில் அது போது மானதே. இந்த ஓர் சீர்திருத்தத்தை மட்டில் கவர்ன் மெண்டார் இத்தேசத்திலிப்போது செய்து முடிப் பார்களே யாகில் நமக்கும் எவ்வளவோ நன்மை

விளையும். அங்கிலேய துரைத்தனத்துக்கும் புகழுண்டாகும்.

**விடை :** முதல் காங்ரெஸ் எப்போது கூடியது? அதின் விவரமென்ன?

**விடை :** இத்தேசத்தில் முதல் காங்ரெஸ் 1885 வருஷம் டிசம்பர் மாதக் கடைசியில் பம்பாய்ப் பட்டணத்தில் கூடியது. அச்சபைக்கும் பம்பாய் இராஜதானியிலிருந்தும், பங்களா இராஜதானியிலிருந்தும், அலஹாபாத்து, பஞ்சாப்பு இவ்விடங்களிலிருந்தும் அனேகர் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். அங்கு வந்த எல்லாச் சுதேசிகளும் ஒரே இடத்தில் தங்கி மூன்று நாள் இத்தேசத்து இராஜநீதிகளில் சிலவற்றை எடுத்துப் பேசி அவைகளைப் பற்றிப் பல தீர்மானங்களைச் செய்தார்கள். அச்சபையில் ஒருவருடைய அபிப்பிராயத்தை மற்றொருவர் செம்மையாக அறிந்து கடைசியில் அங்கு வந்திருந்த எல்லாரும் மனம் கலந்தார்கள். இப்படி மனது கலப்பதுதான் இந்தக் காங்ரெஸின் முதல் கருத்து. நமது தேசத்தாருக்குள் மனம் கலக்குமேயாகில், அவர்களுக்குக்குள் அன்னியோன்னியமுண்டாகும். அப்படி நாமெல்லோரும் அன்னியோன்னியப் படுவோமாகில் கவர்ன்மெண்டாரும் நம்மோடு அன்னியோன்னியப் படுவார்கள்.

**வினா :** முதல் காங்ரெஸில் நடந்த தீர்மானங்களெவை?

**விடை :** முதல், காங்ரெஸில் நடந்த தீர்மானங்களெவையெனில்,

1. மகாரணி அவர்கள் ஓர் கமிஷனை இத்தேசத்துக்கு அனுப்பி அக்கமிஷன் இத்தேசத்துச் ஜனங்களின் குறைகளை நேராகக் கேட்க வேணும்.

2. அங்கிலேயே நாட்டிலித்தேசத்து இராஜ நீதிகளை மேல் விசாரணை செய்துவரும் இந்தியாக் கவுன்ஸிலை எடுத்துபோட்டும் பார்லிமெண்டு மெம்பர்கள் தங்களில் சிலரை ஓர் கமிட்டியாக நியமித்து, அவர்களைக் கொண்டு மகாராணி அவர்கள், மந்திரி, இத்தேசத்து விஷயங்களை நடத்திவரவேணும்.

3. இத்தேசத்துச் சட்ட நிரூபண சபைகளைச் செம்மைப் படுத்தி அச்சபைகளுக்கு இத்தேசத்து ஜனங்கள் தாங்களே சில பிரதிநிதிகளை அனுப்பி, அப்பிரதிநிதிகள் இத்தேசத்து வரும்படியைக் கிராமப்படி வினியோகப் படுத்தவும், சட்டங்கள் செய்யவும், இன்னும் பற்பல அதிகாரங்களை அவர்களுக்கு கொர்டுக்கவும் வேணும்.

4. ஸிவில் ஸெர்விஸ் பரிக்ஷை அங்கிலேய நாட்டில் நடப்பதன்றி, அதே மாதிரியாய் இந்தியாவிலும் ஓர் பரிக்ஷை ஏற்படுத்த வேணும், அதுமன்றி மேற்படி பரிக்ஷைக்கு இப்போது ஒழுங்குப்படி போகத் தகும் சிறுவர்களின் வயதுக்கிரமமாகிய வயதை 23. ஆக, உயர்த்தி நமதுதேசதாருக்குச் சகாயம் செய்யும்படி உத்தரவு கொடுக்கவேணும்.

5. இத்தேசத்துக் கவர்ன்மெண்டார் இராணுவங்களை அதிகரிப்பித்தும் பணச் செலவு செய்வது அயுக்தம் என்றும் தீர்மானித்தார்கள்.

6. இத்தேசத்தில் ஜனங்கள் வரி அதிகமாய்க் கட்டிவருகிறார்களென்றும் அவைகளைக் குறைக்கும் படி வேண்டிய மார்க்கத்தைக் கவர்ன்மெண்டார் தேட வேண்டிய தென்பதும் ஓர் தீர்மானம்.

7. இந்தியா கவர்ன்மெண்டால் பர்மாவைத் தங்களுடைய ஆதீனத்துக் குட்படுத்திக் கொண்டால் அவர்களித் தேசத்து ஜனங்களின் சுகங்களை நாடிப் பல ஏற்பாடுகளைச் செய்ய அவர்களுக்குச் சாவகாசமில்லா மல், அவ்விராச்சியத்தை இந்தியா கவர்ன்மெண்டார் ஆதீனத்தில் மகாராணியவர்கள் வைக்கக் கூடாது என்பவையே.

**வினா-** மேற் சொல்லிய தீர்மானங்களைப் பற்றி இத்தேசத்துக் கவர்ன்மெண்டார் ஏதாவது கவனித்தார் களா?

**விடை :** ஓ! கவனித்தார்கள். ஆறாவது தீர்மானத் தைப் பற்றி அப்போழ்தே நமது தேசத்துக் கவர்னர் - ஜெனரலாகிய டப்ரின் பிரபு சிலாகித்துப் பேசினார். மேலும், அந்தத் தீர்மானத்தில் கண்ட விஷயங்களைப் பற்றியும்,

4-வது தீர்மானத்தில் சொல்லப்பட்ட விஷயங் களைப் பற்றியும் விசாரித்துத் தமக்கு ரிபோர்டு செய்யும் படி இரண்டு கமிட்டிகள் ஏற்படுத்தினார். இத்தேசத்துக் கவர்ன்மெண்டார் முதல் காங்கிரெஸில் செய்த தீர்மானங்களைப் பற்றிக் கவனித்திருப்பதன்றி, அங்கிலேய நாட்டில் பிரசுரமாகும் பத்திரிகைக ளெல்லாம் அந்தக் காங்கிரெஸைப் பூஷித்துப் பேசின.

மேலும், அங்கிலேய நாட்டில் அக்காலத்தில் மந்திரியாக விருந்த மிஸ்டர் கிளாட்ஸ்தன், சாம்பர்லோன் முதலிய வர்களும் அந்தக் காங்ரெஸைச் சிலாகித்தார்கள். இவர்க ளெல்லாம் அந்தக் காங்ரெஸைப் பற்றிப் பூஷித்துப் பேச இத்தேசத்துப் பிரியர்களாகிய ரிப்பன் பிரபு, மிஸ்டர் ஸ்லாக், ஸர் உல்லியம் ஹண்டர், ஸர் உல்லியம் வெட்டர்பர்ன், மிஸ்டர் கெயின் முதலிய ஜனோப காரிகள் இதைப் பற்றிப் பூஷிக்கக் கேட்பானேன்?

**வினா** - இரண்டாவது காங்ரெஸ் எப்போது கூடியது?

**விடை** - இரண்டாவது காங்ரெஸ் சென்ற 1886-ம் வருஷம் டிசம்பர் மாதக் கடைசியில் கல்கத்தாவில் கூடியது.

**வினா** - முதல் காங்ரெசுக்கு மிரண்டாவது காங்ரெசுக்கு முள்ள வித்தியாசங்களை விவரமாய்ச் சொல்லும் ஐயா?

**விடை** - இரண்டாவது காங்கிரெசைப் பற்றி விவரித்துப் பேச வேணுமானால் எவ்வளவோ காலம் பிடிக்கும். ஆனால் அதைப் பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். கேளும், பம்பாய்ப் பட்டணத்தில் கூடிய காங்ரெசுக்கு மொத்தம் வந்த மெம்பர்களின் சங்கியை 72, கல்கத்தாவில் கூடிய காங்ரெசுக்கு மொத்தம் வந்தவர்களின் சங்கியை - 436, பம்பாயில் கூடிய காங்ரெசுக்கு மெம்பர்கள் ஜனங்களால் முன்ன தாகவே கும்பு கூடித் தங்களுக்குப் பிரதிநிதிகளாக நியமித்துக் கொண்டார்கள். முதல் காங்ரெஸை விட

இரண்டாவது காங்ரெஸ் சபை விஷயத்தில் இத்தேசத்து ஜனங்கள் அதிக சிரத்தை யெடுத்துக் கொண்டார்கள்.

**வினா** - இரண்டாவது காங்ரெஸ் செய்த தீர்மானங்களெவை?

விடை - அங்கு செய்த தீர்மானங்களெவை யெனில் -

1. மகாராணியவர்கள் அரசாஷியின் 50-வது வருஷப்பூர்த்தியானதால் அவர்களுக்குச் சோபனோபசாரங் கூறுதல்.

2. இந்தியா மகாஜனங்கள் வரவர வறுமை யடைந்து வருவதற்கு முக்கிய காரணம் இங்கு பிரதிநிதி சபைகளில்லாமைதான்.

3. சட்ட நிரூபண சபைகள் சீர்மைப்படுத்த வேண்டியது அவசியமென்றும், அவைகளில் அதிக மெம்பர்களிருக்க வேணுமென்றும், அச்சபை மெம்பர்களில் பாதிப் பெயர்களை இத்தேசத்தாலே நியமிக்க வேணுமென்றும், அவர்கள் கவர்ன் மெண்டுத் தியோகஸ்தர்களைத் துரைத்தன காரியங்களைப் பற்றியும், வரவு செலவு கணக்கு முதலிய அரசிறை சம்பந்தமான விஷயங்களைப் பற்றியும் கேள்வி கேட்க அதிகாரம் பெற வேண்டுமென்று மெடுத்துக் காட்டப் பட்டன.

4. பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் முன் விசாரணை யிலிருக்கும் விஷயமாக கவர்ன்மெண்ட் ஸெர்விஸ் பரிசைக்ஷயை இங்கிலாந்தில் நடத்துவது போல

இந்தியாவிலும் நடத்த வேணுமென்றும், அதற்குப் போகிறவர்களது வயது நிர்ணயத்தை 19-க்கு மேல் 23-க்குள் இருக்கத் தக்கதாக உயர்த்த வேணுமென்றும், சுதேசிகளையும், அங்கிலேயர்களையும் தாரதம்மிய மின்றி ஒரே அந்தஸ்துப் பெற்று அந்த ஸெர்விஸில் நியமித்து வர வேணுமென்றும் தீர்மானித்தார்கள்.

5. ஜூரிகளைக் கொண்டு இத்தேசத்து எல்லாக் கிரிமினல் கேசுகளையும் ஜட்ஜுகள் விசாரணை செய்ய வேணுமென்றும், ஜூரிகள்தீர்மானமே நிலைமரமாக விருக்க வேணுமென்றும் ஓர் தீர்மானம் செய்தார்கள்.

6. இத்தேசத்தில் ரெவினியூ மாஜிஸ்திரேட்டதிகாரங்களைப் பிரித்து வெவ்வேறாதிகாரிகளைக் கொண்டு அவ்வேலைகளை நடத்தி வரவேணு மென்றும் தீர்மானம் செய்தார்கள்.

7. இத்தேசத்தால் சண்டை முதலிய ஆபத்துக் காலத்தில் தேசத்தைக் காத்துக்கொண்டு அங்கிலேய துரைத்தனத்தாருக்குத் தக்க உதவி செய்யும்படி அவர்கள் வாலண்டியர்களாகப் பட்டாளங்களில் சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெறும்படி கவர்ன்மெண்டார் அனுமதி கொடுக்க வேண்டுமென்றுத் தீர்மானம் செய்யப்பட்டது.

**வினா** - முதல் காங்ரெஸில் முறையிடப்பட்ட விஷயங்களைப் பற்றியே இரண்டாவது வருஷத்திய காங்ரெஸிலும் ஏன் சொல்லவேணும்?

**விடை** - ஏனெனில், அங்கு செய்த தீர்மானங்கள் வெகு முக்கியமானவை. அந்தத் தீர்மானங்களின்படி கவர்ன்மெண்டார் சில ஏற்பாடுகளை இங்கு செய்து

முடிப்பார்களேயாகில், இத்தேசத்தாருக்கும் சுகிர்த முண்டாகும். ஆங்கிலேயருக்கும் பெருமை உண் டாகும். 'அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்' என்பது போல, நாம் அடிக்கடி நமக்கு வேணும் விஷயங் களைக் கேட்டு வந்தால்தான் அவைகளை நமக்கு ஆங்கிலேய துரைத்தனத்தார் கடைசியில் கொடுப் பார்கள். ஆங்கிலேயர்கள் அனேக வருஷங்களாய் இத்தேசத்தைத் தங்களிஷ்டப்படி ஆண்டு வந்து அவர்கள் பல உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்று அதிக சம்பளம் வாங்கிச் சுகித்து இருக்கிறார்கள். இப்போது அவ்வேலைகளைச் சுதேசிகளுக்கும் கொடுத்து இத்தேசத்தைச் சுதேசிகள் அபிப்பிராயப் படியும் ஆண்டுவர வேணுமென்றும் நாம் சொல்லி அவர்களைக் கட்டாயப்படுத்த முயன்றால் அம்முயற்சி எளிதில் பலனைத்தருமா?

**வினா** - இரண்டாவது காங்கிரஸில் செய்த தீர்மானங்களை இத்தேசத்திய கவர்ன் மெண்டாராவது ஆங்கிலேய நாட்டு மகா ஜனங்களாவது கவனித் தார்களா?

**விடை** - கவனித்தார்கள். கல்கத்தாவிற் கூடிய காங்கிரெஸுக்குப் போன மெம்பர்களில் சிலரைக் கவர்னர் - ஜெனரல் ஒரு நாள் பிரத்தியேகமாய்த் தமது மாளிகைக்கு வரவழைத்து அவர்களுடன் வெகு நேரம் அவ்விஷயங்களைப் பற்றியும் பேசினார். மேலும், அச்சபையில் நடந்த எல்லா நடவடிக்கைகளையும் ஓர் பெரிய புத்தகமாக அச்சிட்டு அதில் 5000 - புத்தகங்கள் அங்கிலேயே நாட்டில் வினியோகப்படுத்தப்பட்டன.

அப்புத்தகங்களையெல்லாம் இரண்டாவது காங்கிரஸ் சபாநாயகராகிய மிஸ்டர் தாதாபாய் நவுரோஜி என்னும் பம்பாய் நேசர் தாமே நேரில் அத்தேசத்திற்குப் போய் வினியோகப் படுத்தினார். மேலும், மிஸ்டர் கிளாட்ஸ்டன், மிஸ்டர் மார்லி, மிஸ்டர் சாம்பர்லேன், லார்ட்ரிப்பன் முதலிய கனவான்கள் இந்த ரிப்போர்ட் களைக் கண்டு வெகு சந்தோஷப்பட்டதாகக் கேள்விப் படுகிறோம். இப்போது அங்கு ஜர்லாண்டு நேச விஷயமாய்த் தங்கள் கவனத்தைப் பூர்ணவாய்ச் செலுத்தி வருவதால், இத்தேச விஷயங்களைக் கவனிக்க அவர்களுக்குச் சாவகாசமில்லையென்று அவர்கள் சொன்னார்களாம். இப்போது அங்கிலேய நாட்டிலுள்ள நமது தேசத்துப் பிராண நேசர்கள் இத்தேசத்து விஷயங்களைப் பற்றித் தற்காலத்தில் கவனிக்கா விடிலும், அவர்கள் அவைகளைக் கவனிக்க வேண்டிய காலம் சீக்கிரத்தில் வருமென்றும், அது வரையில் இத்தேசத்தார்விடா முயற்சி செய்து வருஷா வருஷம் இப்படிக் காங்ரெஸ்ஃச் சபை கூட்டிக் கொண்டே வர வேண்டியதென்றும் அவர்கள் சொல்லுவதாகத் தெரிய வருகிறது. மேலும், இத்தேசத்து மகா ஜனங்கள் பொது விஷயங்களில் அக்கறையெடுத்துக் கொள்ளும்படி வேண்டிய ஏற்பாடுகளை இத்தேசத்திய புத்திசாலிகள் செய்ய வேணுமென்றும் அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

**வினா** - மூன்றாவது காங்ரெஸ் எப்போது கூடியது?

**விடை** - மாமூல் போலவே சென்ற 1887-டிசம்பம், மீ. 27, 28, 29, 30- களில் இச்சென்னையில்

அம்மகா சபை கூடியது, அச்சபையின் வைபவத்தைக் காதினால் கேட்பதினால் பயனில்லை. கண்குளிர பார்த்திருக்க வேணும். கண்ணால் கண்டவர்களெல்லாம் வெகு வியப்படைந்தார்கள். பலவிடங்களிலுமுள்ள நமது தேசஸ்தர்கள் வந்திருந்து கண் குளிரக் கண்டு ஆனந்தமடைந்தார்கள். அங்கு பேசிய பல பிரதிநிதிகளின் வாக்கு வல்லமையையும் கண்டு மிகவும் மனங்களித்துச் சென்றார்கள்.

**வினா** - ஐயோ! நான் அந்த மகாசபையைப் பார்க்கக்கொடுத்து வைக்காத பாவியானேனே! ஆனபோதினும் நீர் கண்ணால் கண்டவைகளையும் காதினால் கேட்டவைகளையும் கொஞ்சம் விவரித்துச் சொல்லும் கேட்போமையா?

**விடை** - அச்சபை மாமுல் போல் சென்ற 1887 வருஷம் டிசம்பர் மாதம் 27, 28, 29-ந் தேதிகளில் இச்சென்னையில் கூடிற்று. 20ந் தேதி முதல் கூட்டம் கூட்டமாகப் பலபாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கொண்டே இருந்தார்கள். 609-பிரதிநிதிகளில் 390க்கு அதிகமாக சென்னை ராஜதானியிலிருந்தும், பம்பாய் ராஜதானியிலிருந்து 99-பிரதிநிதிகளும், வங்காளத்திலிருந்து 62-ம், பேகாரிலிருந்து 17-ம், வடமேற்கு மாகாணத்திலிருந்து 29-ம், அயோத்தியிலிருந்து 16-ம் மகாராஷ்டக தேசமாகிய மத்திய இந்தியாவிலிருந்து 13-ம், பஞ்சாப்பிலிருந்து 9-பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். இந்த அறுநூறு பெயர்களில், ஜமீன்தார், தாலூக்தார், ஜாகீர்தார்கள் 61, வர்த்தகர்கள் 144, ஸ்கூல் வாத்திமார்கள் 95,

பத்திராசிரியர்கள் 42, தொழிலாளிகள் 17, வைத்தியர்கள் 8, வக்கீல்களும், பாரிஸ்டர்களும், பென்ஷன் ஜட்யர்கள் 8, வக்கீல்களும், பாரிஸ்டர்களும், பென்ஷன் ஜட்ஜுக் களும் 206, மற்றச் சுவற்ப கிருஷிகள் செய்பவர்கள் 95.

**வினா-** இந்தக் காங்ரெஸ் சபைக்கு வந்தவர் களில் முக்கியமானவர்கள் எவர்கள் ஐயா?

**விடை -** எல்லோரும் முக்கியமானவர்கள்தான். இத்தேசவிர்த்தியை நாடிப் பல ஆயிரம் மைல் தூரத்தி லிருந்து சொந்தப் பணம் செலவு செய்து கொண்டு வந்தவர்களே எல்லாரும் கவர்ன் மெண்டாரிடத்தில் வெகு கித்தாப்பு பெற்றுப் பல சுதேச அரசர்களிடத்தில் மந்திரி வேலையும் பெற்றிருந்த ராஜா ஸர். டி. மாதவராயர் அச்சபைக்குப் பிரதிநிதியாக வந்திருந்தார். மேலும் முதல் தினத்தில் அந்தச் சபைக்கு அக்கிரா சனாதிபதியாக வீற்றிருந்து இங்கு வந்தவர்களை வாழ்த்தினார். இச்சென்னையில் திப்புசுல்தான். வம்சத்தைச் சேர்ந்தவராகிய ஆனரெபில் ஹுமாயுன் ஜாபகதூர் பிரதிநிதியாக வந்திருந்தார். இச் சென்னை யில் பெருத்த வியாபாரியாகிய கான் பகதூர் ஹாஜி முகமது அப்துல்லா பாக்ஷா சாயப்பும் எல்லா வேலை களையும் மேற்போட்டுக் கொண்டு அச்சபைக்கு ஓர் பிரதிநிதியாக வந்திருந்தார். பம்பாயி லிருந்து அனேக பிரபுக்களும் கல்கத்தாவிலிருந்து அனேக ஜமீன்தார் களும் வந்திருந்தார்கள்.

**வினா -** என்ன? மகமதியர்களும் அச்சபைக்கு வந்திருந்தார்களா? மகமதியர்களிச் சபையில் சேருகிற தில்லையென்று சொன்னார்களே?

**விடை** - 83, மகமதியர்கள் அச்சபைக்கு வந்திருந் தார்கள். ஆனாலித்தேசத்திலுள்ள சில மகமதியர் களுக்கு இந்த காங்ரெஸ் சபையில் சேர இஷ்டமில்லை. வடக்கே வெகு பெயர் பெற்ற மகமதிய கனவானாகிய ஸர் சையது ஆமெத் என்பவரும் அவர் கக்ஷியைச் சார்ந்தவர்களும் அச்பைக்கு விரோதிகள். அவர்களிப் போது இந்தக் காங்ரெஸுக்கு விரோதமாய்ப் பேசி, அச்சபையை அடக்கும்படி வேண்டிய பிரயத்தனங் களையும் செய்துவருகிறார்கள். அவர்களைச் சில அங்கிலேயர்கள் தூண்டி விட்டு நமக்கும் அவர்களுக் கும் சண்டையை மூட்டி விட்டு உள்ளுக்குள்ளே அவர்களுக்கு உதவியாகவே இருக்கிறார்கள்.

**வினா** - ஏன் ஐயா, அவர்கள் இச் சபையின் விர்த் திக்கு பல இடையூறுகளை உண்டாக்கி வர வேணும்? சொல்லுகிறவர்கள் சொன்னாலும் கேட்பாருக்கு மதியில்லையா?

**விடை** - மதியில்லையே! நமது தேசத்தாரிந்தத் தாழ்மையான ஸ்திதிக்கு வந்திருப்பது நமக்குள் ஒற்றுமையில்லாததினால்தான். அந்த மகமதியர்களுக்கு இப்போது ஓர் பெரும் பீதியைச் சில ஆங்கிலேயர் உண்டாகியிருக்கிறார்கள். ''ஏற்கனவே இத்தேசத்தில் படிப்பிலும், கியானத்திலும் ஹிந்துக்கள், உங்களை விட மேலானவர்கள். சட்ட நிரூபண சபைக்கும், கவர்ன்மெண்டுத்தியோகத்துக்கும், படிப்பையும், கியானத்தையுமே உத்தேசித்துக் கவர்ன் மெண்டார் நியமித்து வந்தால் உங்களுக்கு ஒரு வேலையும் கிடைக்க மாட்டாது.'' என்று சில ஆங்கிலேயர்கள்

சொல்லி அவர்களைக் கலைத்துக் கொண்டிருக் கிறார்கள். கவர்ன்மெண்டார் தயையினால் இதுவரை யில் அவர்கள் முன் வந்திருப்பதினால் இப்படிப்பட்ட புதிய நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தினால் தான் தாங்கள் பின் விழுவார்களாம்.

**வினா** - என்ன ஐயா! இதுவும் பேச்சா; எத்தனை காலம் பிறர் தயையினால் பிழைக்கலாம்?

**விடை** : அவர்களிந்த பேச்சை வெகு நியாயமாகக் கொண்டு கூத்தாடி வருகிறார்கள். அதற்கு நாமென்ன செய்யலாம்? இங்கிலீஷ் தெரியாமற் போனால் சட்ட நிரூபண சபையில் மெம்பர்களாகவிருந்து கவர்ன் மெண்டாருக்கு ஆலோசனை சொல்வதற்கென்ன? ஸர் சையது ஆமெத்துகான் பகதூருக்கு அங்கிலேய பாஸை தெரியாதே! அவர் சட்ட நிரூபண சபையில் மெம்ப ரல்லவா? ஜனங்களுடைய சுக துக்கங்களை அறியும்படி இன்னுஞ் சில சுதேசிகளைச் சட்ட நிரூபண சபையில் கவர்ன் மெண்டார் நியமித்துக் கொள்ளவேண்டு மென்று சொல்வதற்கு இப்படிச் சொல்லுவது சரியே யல்ல.

**வினா** - இத்தேசத்தை மகமதியர்களின் ஆண்ட காலத்தில் ஹிந்துக்கள் உயர்ந்த வேலைகளைப் பெற்று வர வில்லையா?

**விடை** - ஹிந்துக்கள் அப்படி முற்காலத்திலிருந் தார்களென்பது வாஸ்தவமே. டில்லி சக்கர வர்த்தி யாகிய அக்பருக்கு ஹிந்துக்கள்தான் மந்திரிகள். மைசூர் இராஜ்யத்தில் ஹைதரும், திப்பு சுல்தானும்

இராஜ்ஜியபாரம் செய்து வந்த காலத்திலும் ஹிந்துதான் மந்திரி. தோடர்மல், ஹிந்துவல்லவா? பூர்ணையா அசல் பிராமணனல்லவா! நம் இருவருக்குள் மத விஷயத்திலென்ன பேதமிருந்தாலும் என்ன? ஹிந்துக் களும் மகம்மதியர்களும் இத்தேசத்துக் குழந்தைகளே; இருவரும் ஆங்கிலேய அரசரின் பிரஜைகளே; பொது விஷயங்களுக்கும் மதவிஷயத்துக்கும் என்ன சம்பந்தம்? மகமதியர்கள் படிப்பிலும், கியானத்திலும், ஹிந்துக்களை விடப் பின்னடைந்தவர்களான போதிலுமென்ன? காலம் செல்லச் செல்ல எல்லாரும் இந்த மகத்தான அங்கிலேயருடைய ஆளுகையில் சீர்பட மாட்டார்களா? மேலும் அங்கிலேய கவர்ன் மெண்டார் நமது மத விஷயங்களில் பிரவேசிக்கிறதே இல்லை. ஹிந்துக்களுக்கு மனுதர்ம சாஸ்திரமே பிரமாணம், மகமதியர்களுக்குக் கொறானே பிரமாணம். அப்படியிருக்க சட்ட நிரூபண சபைகளில் ஹிந்துக்கள் அதிக மிருந்தாலென்ன? மகமதியர் களதிகமாகலிருந்தா லென்ன? நமது கவர்ன் மெண்டாருக்கு இத்தேசத்து முக்கிய விஷயங்களில் தக்க யோசனை ஹிந்துக்களும் சொல்லுவார்கள். மகம்மதியர்களும் சொல்லுவார்கள். மகம்மதியர்களுக்கு கியான முண்டாக உண்டாக அவர்களும் கண் திறந்து நம்முடன் சேருவார்கள். அதற்குக் காலம் வரவேணும்.

வினா - இந்த மூன்றாவது காங்ரெஸ் சபையில் நடந்த தீர்மானங்களெவை?

விடை - அச்சபையின் தீர்மானங்கள்

1. காங்ரெஸ் சபை வருஷா வருஷம் கூடி வருவதற்கு வேண்டும் விதிகள்.

2. சட்ட நிரூபண சபைகளைச் சீர்திருத்தல் வெகு அவசியம்.

3. ரிவினியூ வேலைகளையும், மாஜிஸ்திரேட்டு வேலைகளையும் பிரிப்பது வெகு அவசியம்.

4. இராணுவங்களில் சுதேசிகளுக்கும் உயர்ந்த வேலைகளைப் பெறும்படி அவர்களை இராணுவ பாடசாலைகளில் கற்பித்தல் வெகு அவசியம்.

5. வாலண்டியர் பட்டாளங்களில் சுதேசிகளையும் கவர்ன்மெண்டார் சேர்த்துக் கொள்ளும்படி உத்தரவு செய்ய வேணும்.

6. இன்கம் டாக்சு வரி ஆயிரம் ரூபாய்க்கு மேல் வரும்படி பெறுகிறவர்களிடத்தில்தான் வசூல் செய்ய வேணுமென்றும், இப்படிச் செய்வதினால் கவர்ன் மெண்டுக்கு ஏதாவது வரும்படி குறைந்தால் இங்குள்ள இறக்குமதி சரக்குகள் மீது வரிகள் விதித்து வசூல்செய்யவேணுமென்றும் ஓர் தீர்மானம்.

7. அங்கங்கு கவர்ன்மெண்டார் கைத்தொழில் பாடசாலைகளை ஸ்தாபிப்பது வெகு அவசியம்.

8. இத்தேசத்திலுள்ள கனவான்கள் துப்பாக்கி, கத்தி முதலிய ஆயுதங்களை வேணுமானால் வைத்துக் கொள்ளலாமென்று சட்டங்களிலிடம் கொடுக்க வேணும்.

**வினா** - இவைகளெல்லாம் மிக மேலான விஷயங்களேயாம். எல்லா மனுக்களையும்விட சட்ட நிரபண சபை சீர்திருத்த வேணுமென்ற கோரிக்கை வெகு முக்கியமானது. இப்படியெல்லாம் வருஷா வருஷம் காங்ரெஸ் சபையார் கேட்பதற்கு ஆங்கிலேய கவர்ன்மெண்டார் என்ன பதில் சொல்கிறார்கள்?

**விடை** : கவர்ன்மெண்டார் அச்சபையார் கேட்கும் அம்சங்களுக்கு நேராக பதில் சொல்லுகிறதில்லை. ஆனாலவர்கள் மொத்த அபிப்பிராயமென்னவெனில், ''இந்த காங்ரெஸ் சபையார் சொல்லும் அபிப்பிராயங் களித்தேசத்து மகாஜனங்களபிப்பிராயங்களல்ல. அவர் களுக்கு இவைகளை யோசிக்கத்தக்க கியானமு மில்லை. இங்கிலீஷ் படித்த சில சுதேசிகள் கூடிக் கொண்டு இப்படியெல்லாம் கூத்தாடி வருகிறார்கள்'' என்பதுதான். இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்துக்கொண்டு அந்த இங்கிலீஷ் பாஷை படித்த வர்கள் இத்தேசத்தை விட்டு அங்கிலேயரைக் கிளப்ப முயலுகிறார்களென்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

**வினா** : இதுவும் பேச்சா? இங்கிலீஷ் படித்த போதிலும் அந்த காங்ரெஸ் சபையில் சேர்ந்திருக்கும் சுதேசிகள் சுதேசிகளல்லவா? அந்த இங்கிலீஷ் படித்தவர்களே இத்தேசத்தில் அங்கிலேயர்களுக்கு விரோதிகளாக விருந்து அவர்களைக் கிளப்பிவிட முயன்றால் பின்பு அவர்களுக்கு எவர்களால்தான் க்ஷேமமுண்டாகும். அங்கிலேய கவர்ன்மெண்டை இங்கிருந்து துரத்திவிட்டால் அவர்கள் படித்த இங்கிலீஷ்பாஷை உபயோகத்திற்கு வருமா? அப்படிச்

சொல்லத்தான் நாவு எழுமா? அப்படிப்பட்ட எண்ணத்தை உடையவனுக்குத் தெய்வம் சகாயம் செய்யுமா? தர்மம் அவன் தலையைக்காக்குமா?

**வினா :** இப்படியெல்லாம் அங்கிலேயர்கள் இந்த காங்ரெஸ் சபையார் கோரிக்கைகளுக்கு விருத்தம் சொல்லி வருகிறார்களே, நமக்கு அவைகள் கிடைப்ப தெப்படி?

**விடை :** இப்போது அவைகள் எல்லாம் நமக்குக் கிடைப்பது கடினமே. தூங்குகிறவனைத் தட்டி யெழுப்புவது எளிது; கண்களை மூடிக்கொண்டு தூங்குகிறவனைப் போலிருப்பவனை எழுப்புவது மிகக் கடினமல்லவா? ஆனபடியால்தான் இப்படிப்பட்ட வீண்வம்பு வாதமெல்லாம் அங்கிலேயர்களில் பலர் செய்து வருகிறார்கள். அவர்களிற் சிலர் நமது கோரிக் கைகளைச் செய்துமுடிக்க இஷ்டப்பட்டாலும் மற்றவர்க ளெல்லாமவர்களுக்கு இடங்கொடுக்கிறதில்லை. அனேக வருஷமாயிங்கு வழங்கிவந்த மாமூல்களை மாற்றுவது சுலபமா? வருஷா வருஷம் விடாமல் காங்ரெஸ் சபையைக் கூட்டி நாம் முறையிட்டுக் கொண்டே வருவோமாகில், நமது காரியம் நாளா வட்டத்தில் சித்திக்கும். இங்குள்ள கவர்ன்மெண்டா ருக்கும், அங்கிலேயநாட்டு பார்லிமெண்டாருக்கும் அந்நாட்டு மகாஜனங்களுக்கும் நமது குறைகளைப் பத்திரிகைகளின் மூலமாயும், சிறிய சிறிய புத்தகங் களின் மூலமாயும், பிரதிநிதிகளின் மூலமாயும் அறிவித்து வரவேணும்.

**வினா** - எல்லாம் சரிதான். இவ்வேலைகளையெல்லாம் செய்துவரப் பணம் வேண்டாமா?

**விடை** : பணமில்லாதவன் பிணமல்லவா? பணமில்லாமல் எவ்வேலைதான் முடியும்! இப்படிப்பட்ட சன்மார்க்க விஷயங்களுக்கு உதவாத பணம் என்னத்துக்கு ஐயா? நமது தேசத்தாருக்கு இவ்விஷயத்தில் சிரத்தையும் அபிமானமும் உண்டாகுமேயாகில், பணத்தை சேர்ப்பதுதானா கஷ்டம்? இத்தேசத்திலுள்ள எல்லா ஆண் பெண்களும் பொதுவிஷ்யத்துக்காக வென்று கொஞ்சம் கொஞ்சம் பணம் கொடுப்பாராகில் சுவர்ணக் குவியல் சேரக் கேட்பானேன்? இப்போது இத்தேசங்களிலுள்ள தேவாலயங்களுக்கும், மடங்களுக்கும் பணம் சேரவில்லையா? எத்தனைபேர் ஆயிரமாயிரமாகப் பணத்தைத் தேவாலய விஷயங்களுக்காகக் கொடுத்து வரவில்லையா? பரத்தில் சுகம்பெற வேணுமென்று பணம் செலவு செய்வதுபோல் இகத்திலும் ஷேமமடைய பணம் செலவு செய்வதுபோல் அவசியமல்லவா? இகத்தில் க்ஷேமமாயிருந்தால்தான் பரத்திலும் சுகிர்தம் பெறலாம். எத்தனையோ சுதேசிகள் பணத்தைக் கோயில்களுக்கும், குளங்களுக்கும், சத்திரங்களுக்கும் எழுதிவைத்து விடுகிறார்கள். அம்மாதிரியாகவே இனி நமது தேசத்தார் பொது விஷயங்களுக்காகவும் பணத்தைக் கொடுத்து வரவேணும். பொதுவிஷயங்களில் சிரத்தையுள்ள ஒவ்வொரு சுதேசியும், மாதம் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம் கொடுத்தால் எவ்வளவோ பணம் சேருமே.

**வினா :** அதுவும் வாஸ்தவமே. ஆனாலிவ் விஷயங்களையெடுத்து இத்தேசத்திய மகா ஜனங் களுக்குத் தெளிவாக உரைத்து வரவேணுமே. இதற்குத் தக்க ஏற்பாடுகள் இங்கு அந்தக் காங்ரெஸ் சபையார் ஏதாவது செய்திருக்கிறார்களா?

**விடை :** அச்சபையார் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். நமது இராஜதானியிலும் அங்கங்குள்ள ஒவ்வொரு ஜில்லா பட்டணங்களிலும் இன்னும் சில முக்கிய பட்டணங்களிலும் கமிட்டிகள் ஸ்தாபனமாயிருக்க வேணுமென்றும், அக்கமிட்டிகளில் அங்கங்குள்ள எல்லா முக்கிய சுதேசிகளும் மெம்பர் களாக விருக்க வேணுமென்றும், இதுவுமன்றி, அந்தந்த ஜில்லாக்களிலுள்ள இதர முக்கிய பட்டணங்களிலும், சப்-கமிட்டிகளிருக்க வேணுமென்றும், சப்-கமிட்டிகள் ஜில்லாக் கமிட்டிகளின் துவாராவாய் எல்லா வேலை களையும் நடத்தி வரவேணுமென்றும். ஒவ்வொரு ஜில்லாக் கமிட்டிகளும் சென்னைப் பட்டணத்தில் ஸ்தாபனமாயிருக்கும் பிரதான கமிட்டியுடன் ஆலோசித்து அவர்கள் மூலமாய் எல்லா வேலை களையும் நடத்த வேணுமென்றும் சில விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லாக் கமிட்டிகளும் பெரிய விஷயங்களுக்கு வேண்டிய செலவுகளுக்காக அங்கங்கு பணத்தை வசூல் செய்து செலவு போக மற்றதைச் சேர்த்து வைத்து, இந்தக் காங்ரெஸ் விஷயத் திற்கும், இன்னும் மற்ற முக்கிய பொது விஷயங்களுக் காகவும் வினியோகப்படுத்த வேணும். இப்படி யெல்லாம் சில ஒழுங்குகளையும் விதிகளையும்

ஏற்படுத்திக் கொண்டு இவ்வேலைகளை யெல்லாம் நமது தேசத்தார் நடத்தினால்தான் காங்ரெஸ் சபை வலிவு பெறும்; பணமும் சேரும்; ஜனங்களுக்கும் பொது விஷயங்களில் கியானமும் சிரத்தையும் உண்டாகும்.

**வினா :** இது வாஸ்தவமே. இப்போது சென்னை இராஜாதானியிலிப்பேர்ப்பட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவா?

**விடை :** அனேகமாய் நடந்து வருகின்றன. அங்கங்கு கமிட்டிகள் ஸ்தாபனமாய் வருகின்றன. இன்னும் அங்கங்குள்ள நமது தேசாபிமானிகள் அவைகளை உறுதிப்படுத்தவேணும். இல்லாத விடங்களில் காங்ரெஸ் கமிட்டிகளை அவர்கள் ஸ்தாபனஞ் செய்யவேண்டும். ஒவ்வொரு பட்டணத்திலும் ''காங்ரெஸ் கமிட்டி ஆபிசு'' ஒன்று ஏற்படுத்தி அதற்கு ஓர் காரியதரிசையையும் நியமனஞ் செய்ய வேணும். இவ்விராஜதானியிலுள்ள ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் காங்ரெஸ் கமிட்டி ஆபிசும், அதற்கு ஓர் காரிய தரிசியும், அதைச் சார்ந்த வேலைகளை நடத்தி வர ஓர் கமிட்டியும் ஏற்படுமேயாகில் பணமும் சேரும். ஜனங்களுக்கு பொது விஷயத்தில் கியானமு முண்டாகும். இப்படிச் சில ஒழுங்களையும், விதிகளையும் செய்து கொண்டால்தான் எவ்வேலையையும் நீடித்து நடத்தலாம்.

**வினா :** அது சரிதான். நான்காவது காங்ரெஸ் சபை எங்கே கூடியது?

**விடை:** நான்காவது காங்ரெஸ் சபை "பிரயாகை" என்று சொல்லப்படும் அலஹாபாத்தில் சென்ற 1888 வருஷம் டிசம்பர் மாதக் கடைசியில் கூடியது. அங்கும் சென்னை கல்கத்தா பட்டணங்களில் நடந்த வைபவங்களெல்லாம் நடந்தன. தேசாபிமானிக ளெல்லாம் கூடினார்கள். ஒருவரையொருவர் தழுவி அன்பு பாராட்டினார்கள். இத்தேசத்துக்காக வேண்டிய நன்மைகளைக் குறித்து அங்கு எல்லோரும் ஆலோசித் தார்கள். அச்சபைக்கு கல்கத்தா வர்த்தகக் கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியாக விருந்து மிஸ்டர் ஜார்ஜ் யூல் என்னும் ஓர் செல்வாக்குள்ள அங்கிலேய கனவான் சபா நாயகராக வீற்றிருந்தார்.

இவ்வெண்ணத்தைக் கொண்டே அவர் அங்கிலேய நாட்டிலிருந்து அக்காலத்தில் இவ்விடம் வந்தார். இன்னும் அங்கிலேய நாட்டிலிருந்து மிஸ்டர் கேயின் என்னும் ஓர் பார்லிமெண்டு மெம்பரும் மிஸ்டர்ச் சாம்யூல்ஸன் என்னும் மற்றொரு மெம்பரும் அங்கு வந்திருந்து மெத்தமனங்களித்துப் போனார்கள். அந்தப் பட்டணத்தில் வெகு செல்வாக்குள்ள பண்டிதராகிய அயோத்தியநாத்து என்னும் மகா உத்தம பிராணி முன்னின்று எல்லா வேலைகளையும் நடத்தினார். மூன்று தினம் அச்சபை அங்கு கூடி, காங்ரெஸ் சபையார் வருஷா வருஷம் செய்து வந்த தீர்மானங்களைத் தீர்க்கமாய் ஆலோசித்து அவைகளைக் காயஞ் செய்தார்கள். அங்கு நமக்காக அங்கிலேய நாட்டில் வெகு பிரயாசைப்படும் மிஸ்டர் டிக்பி என்னும் அங்கிலேய கனவானும் அங்கு வந்திருந்

தார்கள். இவரோ வெகு சிலாக்கியர், அதிகமாய்ப் படித்தவர். எழுதும் சக்தியை அதிகமாகப் பெற்றவர், ஆங்கிலேய நாட்டிலுள்ள முக்கிய கனவான்களுக்கு இவர் நன்றாய் தெரிந்தவர். சில வருஷங்களுக்கு முன் இச் சென்னையில் இப்போது பிரசுரமாகும் 'டயிம்ஸ்' பத்திரிகைக்கு பத்திராதியராக விருந்தார். இவ்விராஜ தானியில் 1876 வருஷத்தில் உண்டான மகாகொடிய பஞ்சத்தில், பஞ்சத்துக்காக, இறந்து போன டியூக்கு ஆப்பக்கிங்காம், அங்கிலேய நாட்டிலிருந்து இங்கு வரவழைத்த பணத்தைப் பலவாறாய் ஏழைகளுக்கு வினியோகப்படுத்தி எவ்வளவோ உபகாரம் இத்தேசத் தாருக்குச் செய்தார். கவர்ன்மெண்டாரும் அவருடைய உழைப்பைக் கனப்படுத்தினார்கள். அவருக்கு கவர்ன் மெண்டாரும் சி.ஐ.இ. பட்டமும் கொடுத்தார்கள். இப் போழ்து அவரும் இன்னும் சில அங்கிலேய பிரபுக் களும் லந்தன் நகரத்தில் ஓர் சங்கம் ஏற்படுத்தி அவர்கள் அனுமதி பெற்று இவர் இந்த காங்கிரஸ் சபையின் நோக்கங்களை அங்குள்ள மகா ஜனங்களுக்கு விடாமல் அறிவித்துவருகிறார். அவர்கள் அங்கு செய்துவரும் முயற்சியால்தான் காங்ரெஸ் சபை இங்கு பலனைத்தர ஆரம்பித்து வருகின்றது. பார்லிமெண்டு மெம்பர்களில் அனேகர் இப்போது இத்தேசத்து சீர்திருத்தங்களைக் கவனித்து வருகிறார்கள். மிஸ்டர் சார்லெஸ் பிராட்லா என்னும் மகா உத்தம சிரேஷ்டரும், மிஸ்டர்கெயின் என்னும் மகா உபகாரியும் அங்கு எவ்வளவோ நமக்காகப் பாடுபட்டு தருகிறார்கள். அந்த அலஹா பாத்தில் கூடிய காங்ரெஸ் சபையில் நடந்த கிரந்தங்கள் எல்லாம் ஓர் பெரிய புத்தகமாக அச்சிட்டு ஆங்கிலேய

நாட்டிலும் இத்தேசத்திலும் எத்தனையோ ஆயிரம் பிரதிகள் அனுப்பப்பட்டன.

**வினா -** எல்லாம் சரிதான். இதற்கு எல்லாம் பணம் வேண்டுமே அதற்கு இச்சபையார் என்ன செய்கிறார்கள்?

**விடை :** பணமில்லாமல் அச்சபையார் வெகு கஷ்டப்படுகிறார்கள். பணம் செலவு செய்யாமல் ஒரு வேலையும் கூடிவரமாட்டாது. எத்தனையோ பெயர். நமது தேசத்தில் தங்கள் பணத்தை வீணாய் கரியாக்கி வருகிறார்கள். இப்படிப்பட்ட உபயோகமான வேலைகளுக்கு பணத்தைக் கொஞ்சங்கூட நமது தேசத்தார் உதவுகிறதில்லை. பானங்களிலும் நாட்டியங்களிலும், கச்சேரிகளிலும் பணத்தை அநேகர் வீண் செலவு செய்து விடுகிறார்கள். அங்கிலேயே நாட்டிலுள்ள ஜனங்கள் எவ்வளவோ பணத்தைச் செலவு செய்து எவ்வளவோ தேகப் பிரயாசைப்பட்டு, பற்பலர் தங்கள் உயிரையும் கொடுத்து இப்போது வெகு உயர்ந்த பதவியைப் பெற்றிருக்கிறார்கள்.

நமது தேசத்தாரும் அம்மாதிரியாகவே பணத்தையும் செலவு செய்து கஷ்டத்தையும் பட்டு பற்பல பேறுகளை அங்கிலேயரிடத்திலிருந்து பெற வேண்டும். அதற்கு வேண்டிய திரவிய சகாயம் நமது தேசத்தார் செய்யவேண்டும்.

**வினா :-** பணம் அவசியம்தான். எளிதில் இவ் வேலைக்கு இங்கு வேண்டிய பணம் சேரும். ஆனால், இவ்விஷயத்துக்காக நமது தேசத்தார் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் அதற்கு வழி சொல்லும் ஐயா!

**விடை :** அதுவும் சரி; இப்போது எங்கும் அனேகமாய் அந்தக் காங்ரெஸ் சபையின் நோக்கங் களை ஜனங்கள் அறிந்திருக்கிறாகள். கிறிஸ்துவ மதத்தைப் பரவடிக்க அங்கிலேய நாட்டார் எங்கும் அனுப்புவதுபோல் காங்கிரஸ் கமிட்டியார் சில காங்ரெஸ் பாதிரிகளைக் கிராமங்கள் தோறும் அனுப்ப வேண்டும். அப்பொழுதுதான் ஜனங்களுக்கு இராஜரீக விஷயங்களில் கியானமுண்டாகும். அங்கங்குள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒரு உண்டி பெட்டியோ, அல்லது கைப்பிடி சட்டியோ வைக்க வேண்டும். ஒவ்வொரு முக்கிய கிராமங்களிலும் சிலர் கமிட்டியாகக் கூடி அங்கங்கு மாதம் மாதம் சேரும் தானியத்தையோ, பணத்தையோ (செலவு போக) சென்னை கமிட்டி யாருக்கு அனுப்பிவிட வேண்டும். இதே மாதிரியாக அங்கங்குள்ள முக்கிய பட்டணங்களிலும் சில ஏற்பாடுகள் நமது தேசத்தார் செய்யவேண்டும். இப்படி சேரும் பணத்தையெல்லாம் அவர்கள் இவ்விஷயங் களுக்கு வினியோகப்படுத்த வேண்டும். அதுவுமன்றி, அங்கங்குள்ள கமிட்டி மெம்பர்கள் இந்த காங்ரெஸ் விஷயமாய் அப்போதைக்கப்போது செய்கின்ற கிரந்தங்களை மகாஜனங்களுக்கு சுதேச பாஷைகளில் அறிவித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அப்பொழுது தான் பணம் கொடுப்பவர்களுக்கும் திருப்தி; கொடுக்காதவர்களும் கொடுக்க முன் வருவார்கள்.

**வினா :** இது சரி! சென்ற டிசம்பர் மாதத்தில் 5-வது காங்ரெஸ் சபை கூடியதா?

**விடை :** பொம்பாய் நகரத்தில் அச்சபை கூடிற்று. அச்சபைக்கு சர். உல்லியம் வெட்டர்பர்ன் என்னும் கனவான் சபாநாயகராக வீற்றிருந்தார். அச்சபையில் அனேகமாய் சட்ட நிரூபண சபை சீர்திருத்த விஷயத்தைப் பற்றியே பேசப்பட்டது. இப்போழ்து அவ்விஷயமாய் ஓர் பில் மிஸ்டர் சார்லெஸ் பிராட்லா செய்து அங்கிலேய நாட்டு பார்லிமெண்டில் வெளிப் படுத்தி இருக்கிறார். கவர்ன்மெண்டாரும் முன் சாக்கிரதைப் பட்டு தாங்கள் ஓர் பில் தயார் செய்து பார்லிமெண்டார் முன் வைத்திருக்கிறார்கள். கவர்ன் மெண்டு பில்லின் முக்கிய கருத்து என்னவெனில் மேற்படி சட்ட நிரூபண சபையின் மெம்பர்கள் அனை வரும் கவர்ன்மெண்டாலேயே நியமிக்கப்படுவார்கள். மிஸ்டர் பிராட்லாவின் பில்லின் நோக்கமென்ன வெனில் மேற்படி சபைக்கு பாதி மெம்பர்கள் இத்தேசத் தாரால் நியமிக்கப் படவேண்டு மென்பதே. இவ் விரண்டு பில்லுக்கும் மிப்போழ்து பார்லிமெண்டார் முன்னிருக்கின்றன.

வினா : ஐயா! இந்தக் காங்ரெஸ் சபையின் சரித்திரத்தையும், இச்சபையின் நோக்கங்களையும் நீர் சொல்லக் கேட்டு வெகு ஆனந்த மடைந்தேன். அவைகள் மிக மேலானவை என்பதற்குக் கேட்பா னேன்?

**விடை :** அதற்கு என்ன சந்தேகம்! அச்சபையின் சரித்திரத்தைப் படிக்காதவர்கள் பலவாறாய் அதைப் பற்றிப் பிதற்றி வருகிறார்கள். காங்ரெஸ் சபையார் எடுத்துக்கூறிய பல சீர்திருத்தங்களை அங்கிலேயர்கள்

நாளாவட்டத்தில் செய்து முடித்து, நமது தேசத்தை என்றென்றைக்கும் அவர்களே ஆண்டு கொண்டு வந்து, நாமும் அவர்களும் அன்னியோன்யப் பட்டு சுகித்து பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்ந்து வரவேணுமென்பதுதான் எனது பிரார்த்தனை. அதுவே தான் அச்சபையின் நோக்கம்.

## வாழ்த்து

*சீராருந மிந்திய சக்கரவர்த்தினியம்மை ஜெயம் தின*
*மோங்குகவே*
*பாரார்கதி ரோனோளி மாழ்கலிலாப் பரிபாலன ராச்சிய*
*மோங்குகவே*
*ஏரார்ந்த சுதந்திர - நன்குதரும் மெழிலிங்கிலிஷின்னர*
*சோங்குகவே*
*பேரார்ந்திடு காங்ரெஸெனுஞ் சபையும் பெருமைப் பட*
*வாழிய வாழியவே.*

## வேறு

நம்மையுந் தமைப் போலெண்ணு நல்ல வாங்கிலேயர்
வாழி
செம்மையின் ராஜபக்தி சேருமிந்துக்கள் வாழி
அம்மை விக்டோரியாவி னரசினி லுரிமை யாவும்
நன்மையி னளிக்குங் காங்ரெஸ் நாளுமிப் புவியில் வாழி.

## சில முக்கிய அம்சங்கள்

இங்கிலாண்டு, ஸ்தோத்லாண்டு, ஐர்லாண்டு இவைகள் சேர்ந்த அங்கிலேய மகாநாடு.

விஸ்தீரணம் - லக்ஷத்து இருபது ஆயிரத்து 832-மைல்

| | | |
|---|---|---|
| ஜனத் தொகை | - | 3 கோடியே 3 லக்ஷம் |
| பார்லிமெண்டு மெம்பர்கள் மொத்தம் | - | 652 |
| மொத்தவரி | - | 103 கோடி ரூபாய் |
| மொத்தச் செலவு | - | 89 கோடி ரூபாய் |
| கடன் மொத்தம் | - | 742 கோடி ரூபாய் |
| தலைக்கு வருஷ வரும்படி | - | 352 ரூபாய் |
| தலை ஒன்றுக்கு வரி வீதம் | - | 25 ரூபாய் |
| எழுதப் படிக்கத் திறமையுள்ளவர்கள் | - | 3 கோடி |

## இந்தியா நாடு

| | | |
|---|---|---|
| விஸ்தீரணம் | - | 15 லக்ஷம் சதுர மைல் |
| ஜனத் தொகை | - | 25 கோடியே 60 லக்ஷம் |
| கவர்னர்-ஜெனரல் சபை மெம்பர்கள் மொத்தம் | - | 6 |
| மொத்த வரி | - | 76 கோடியே 7 லக்ஷத்து 12 ஆயிரம் ரூபாய் |
| மொத்தச் செலவு | - | 76 கோடியே 7 லக்ஷத்து 12 ஆயிரம் ரூபாய் |
| கடன் மொத்தம் | - | 17 கோடி ரூபாய் |
| தலைக்கு வருஷ வரும்படி | - | 20 ரூபாய் |

தலை ஒன்றுக்கு - வரி வீதம் - 3 ரூபாய்
எழுதப் படிக்கத்
திறமையுள்ளவர்கள் - 2 கோடி 56 லக்ஷம்.

## இவ்விராஜதானியில் டிஸ்திரிக்கு காங்ரெஸ் கமிட்டிகளுள்ள பட்டணங்கள்.

| | |
|---|---|
| சென்னை நகர ஆபிசு | ஹாஸ்பெட் |
| 100 மவுண்டு ரோட்டு | கர்நூல் |
| செங்கற்பட்டு | நெல்லூர் |
| கடலூர் | முசிலி பட்டணம் |
| கும்பகோணம் | ராஜமகேந்திரம் |
| தஞ்சாவூர் | கோகனாடா |
| திரிசிராப்பள்ளி | விசாக பட்டணம் |
| ஸ்ரீரங்கம் | விஜய நகரம் |
| திண்டுக்கல் | பெர்ஹாம்பூர் |
| மதுரை | பொன்னானி |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | கள்ளிக்கோட்டை |
| திருநெல்வேலி | தலைச்சேரி |
| கோயமுத்தூர் | பாலக்காடு |
| ஈரோடு | மங்களூர் |
| சேலம் | பெங்களூர்க் |
| சித்தூர் | கன்டோண்மெண்டு |
| வேலூர் | செக்கந்தரா பாத் கன்டோண் மெண்டு |
| கடப்பை | குத்தி |

## காங்கிரெஸ் ஸப் கமிட்டிகள்

அனந்தபூர், தாட்டுபத்திரி, பொத்தட்டூர், பையலூர், மதன பல்லி, - கடப்பை ஜில்லா - குண்டூர் - கிருஷ்ணா ஜில்லா மார்காபூர் - கர்நூல் ஜில்லா பெரியகளும், பரமகுடி மதுரை ஜில்லா காவில - நெல்லூர் ஜில்லா வாலாஜா நகர், காவேரி பாக்கம், சித்தூர் ஜல்லா திருப்பத்தூர், நாமக்கல் - சேலம் ஜில்லா பண்ணுருட்டி, சிதம்பரம் கடலூர் ஜில்லா, மாயூரம், மன்னார் குடி, திருவாடி - தஞ்சை ஜில்லா பாளையங் கோட்டை - லால்குடி, திருவாடி - தஞ்சை ஜில்லா பாளையங்கோட்டை - லால்குடி, குழித்தளை, ஒரையூர் - திரிசிராப் பள்ளி ஜில்லா, விஜய நகரம், பிம்லி பட்டணம் கஜ பதி நகரம் - விசாகபட்டணம்.


# துணை நூல்கள் - சில

## Alteram Partem

1. Audi Alteram Partem - 1888 -A. A.O. Hume
2. Old Man's Hope - 1886 - A O. Hume
3. The coming Congress at Madras - 1887
4. Report of the Third Indian National Congress held at Madras - 1887
5. Evolution of the Congress - U C Gopalan
6 The National Congress - 1918 -A S. Rajam
7. Congress and Congressmen in Pre - Gandhian Era - 1967 - B.P. Mazumdar., B.B Mazumdar.
8. Indian National Evoluation - 1934 A.C. Mazumdar
9 Congress - cyclopaedia Vol. I. Iswara Dutt. K.
10. India in Transition. M. N. Roy
11. ஆர்ய ஜன ஐக்கியம் அல்லது காங்ரெஸ் ஜன சபை - 1888 - க. சுப்பிரமணிய ஐயர்
12. பாரத ஜன சபை அல்லது காங்கிரெஸ் மகாசபை சரித்திரம் - முதற்பதிப்பு - 1918 - பாரதியார்.
13. சுய அரசாட்சி வினா- விடை - 1883 -ஜி. சுப்பிரமணிய ஐயர்.
14. இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - இரண்டாம் பதிப்பு. 1978 -பெ.சு. மணி.

## இதழ்கள் -

Indian Social Reformer - Editor K Natarajan.
தேசபக்தன் - ஆசிரியர் திரு. வி. க.
குமரி மலர் - ஆசிரியர் ஏ.கே. செட்டியார்
சுதேசமித்திரன் - (மைக்ரோபிலம்)



'சுதேசமித்திரன்', 'ஹிந்து' பத்திரிகைகளின்
ஸ்தாபகம்களில் ஒருவரும், 'சுதேசமித்திரன்'
நிர்வாகியாய் இருந்தவருமான
**எம். வீரராகவாச்சாரியார்** பி.ஏ.,

# பிற்சேர்க்கை -1

''காங்ரெஸ் வினா - விடை - மூலமும் ஆய்வும் ''முதல் பதிப்பு - நூல் வெளியீட்டு விழாவின் அழைப்பிதழ்

திரு. பெ. சு. மணி எழுதிய

## ''காங்ரெஸ் வினா - விடை, மூலமும் - ஆய்வும்'' நூல் வெளியீட்டு விழா

நாள் - 15-4-80 செவ்வாய்

இடம் - சென்னை மாவட்ட மைய நூலகம்

வெளியீடு

**பூங்கொடி பதிப்பகம்**

22, வடகூர் செல்வ விநாயகர் கோயில் தெரு

மயிலாப்பூர், சென்னை- 600 004.

# அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம், திரு. பெ. சு. மணி எழுதிய 'காங்ரெஸ் வினா - விடை மூலமும் ஆய்வும்' என்னும் நூல் வெளியீட்டு விழா 15-4-80 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு, அண்ணா சாலையில் உள்ள சென்னை மாவட்ட மைய நூலகக் கட்டிடத்தல் (டி.வி.எஸ். பஸ் நிறுத்தம் எதிரில்) டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தாங்கள் அன்புகூர்ந்து வருகை தந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தங்களன்புள்ள,

**வே. சுப்பையா** — **பெ.சு.மணி**

'பூங்கொடி' பதிப்பகம்.

# நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | திரு. பெ.சு.மணி |
| நூல் வெளியீடு | : | திரு. ஜி. கருப்பைய மூப்பனார் |
| தலைமையுரை | : | டாக்டர் ம.பொ. சிவஞானம் |
| சிறப்புரை | : | திரு. எம். பக்தவத்சலம், கு. ராஜவேலு, திரு. அகிலன், திரு. பெ.கோ. சுந்தரராசன் 'சிட்டி' |
| நன்றியுரை | : | வே. சுப்பையா |
| நாட்டுப் பண் | : | |

# நூலைப் பற்றிய சில குறிப்புகள்

1. திரு. மு. வீரராகவாசாரியார் இயற்றிய 'காங்ரெஸ் வினா - விடை' என்னும் நூலின் மூலம் 47 பக்கங் களையும், வரலாற்றுப் பின்னணி, ஆய்வுரையாக 136 பக்கங்களையும் கொண்டது.
2. 'காங்கிரஸ் வினா - விடை' மூலம் 1886-ல் காங்கிரஸ் மகாசபையின் சார்பில் வெளி வந்த ''முதல் தமிழ் அரசியல் பிரசார நூல்'' எனும் வரலாற்றுப் பெருமை வாய்ந்தது.
3. வினா - விடை உத்தியின் மூலம் பொதுமக்க ளிடையே அவர்களது தாய்மொழியின் வாயிலாக அரசியல் விழிப்பை ஏற்படுத்த எழுந்தது, 'காங்கிரஸ் வினா - விடை.
4. 'காங்ரெஸ் வினா - விடை'யின் பிரதிகள் 30000, தமிழ் நாடு, பர்மா, இலங்கை, சிங்கப்பூர், மலேயா, மரீஷியஸ் முதலான நாடுகளில் மக்களுக்கு விநியோகிப்பதற்கென்றே வெளியிடப் பெற்றது.
5. 'காங்கிரஸ் வினா - விடை' அதன் மக்கள் இயக்க ஆதரவுப் பண்பிற்காக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் தின் கடுங் சீற்றத்திற்கு ஆளாகியது.
6. பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ள 'காங்கிரஸ் வினா - விடை'யின் 'மைக்ரோ பிலம்' பதிப்பு பெறப்பட்டு, நூல் வடிவாக்கப்பெற்றது.

காங்ரெஸ் வினாவிடை.

அல்லது

இத்தேசத்தில் வருஷாவருஷம் கூடிவரும்

காங்கிரஸ் ஜனசபையின்

சரித்திரம்.

இது

மு. வீரராகவாச்சாரியரால்

இயற்றப்பட்டது.

THIRD EDITION

Revised and Enlarged

விலை அணா ஒன்று

சென்னை

நாஷனல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

[illegible]

1888


ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106
TAMILNADU INDIA

Acc No 8926

# பிற்சேர்க்கை - 2

நாட்டுப் பற்று, சமூக சீர்திருத்தப்பற்று,
மொழிப்பற்று மூன்றும் நிறைந்த

## முதல் தேச பக்தர்



திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் (1855-1916)
63-வது நினைவு நாள் வெளியீடு

# குறிப்புரை

திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் அறுபதாம் ஆண்டு விழாவின் போது 1915-ல் தேசபக்தர் விருதை சிவஞான யோகி அவர்கள் யாத்தளித்த வாழ்த்துப்பா இன்று 18-4-79 மறுபதிப்பாக வெளியிடப் படுகிறது. அரிய இச்சிறு வெளி யீட்டை அண்மையில் 'சாதனாடிரஸ்ட்' நூலகத் தில் கண்டேன். திரு. ஜி. சு. வைப் பற்றிய சுருக்கமான அறிமுகத்திற்கு உதவுவது நகல் எடுக்க ஆர்வமுடன் அநுமதித்த திரு. ராஜம் அவர்களுக்கு என் நன்றி உரியது. இவ் வெளியீட்டை அச்சிட்டு அன்பளிப்பாக வழங்கிய டாக்டர் கிருஷ்ண ஸ்ரீநிவாஸ் அவர்களுக்கும் என் நன்றி.

*பெ.சு. மணி.*

## சுதேச மித்திரன் பத்திராதிபர். ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய ஐயரின் அறுபதாம் ஆண்டு நிறைவு

### வாழ்த்துப்பா.

(இஃது தமிழ்ப் பிரமசூத்திராசிரியர்,
மறைத்திருவன் சுவாமி விருதை,
சிவஞானயோகிகளா லியற்றப்பட்டது.)

### பிறப்பு - பெயர்

திருவளர் பொழிலெலாஞ் செய்துகாத் தழிக்கும்
ஒரு தனிச் செல்வ னுயரருடன்னால் 2
நிலவுமிப் புவியிற் புலமிக் குடைய
மக்கண் முற்றோன்றிய பக்கமெனப்படும் 4
தமிழகஞ்சார்ந்த விமிழ் சோணாட்டிற்
பாவிற் பெரிய நாவுக்கரசு 6
மெய்யுருக் கண்ட வையஹதனில்
துணிமறைதேர்ந்த கணபதியையர் 8
நன்மனையாகிய பொன் தருமாம்பாள்
வயிற்றிற்றமிழுல குயச்சிறப் பெய்தி 10
ஆயிரத்தெண்ணூற் றைம்பத்து மூன்றா
வாயுங் கிறித்தாண்டு தைம்மதியமையில் 12
தோன்றியவோதித் தோன்றல்வாழ்க
செப்புயர் பெருமைச் சுப்பிரமணிய 14

நிறை பெயர்புனைந்த மறையவ வாழ்க

## இயல்பு

பிறந்த நாட்டன்பிற் சிறந்த கோளரியே
நிலையாமுறுதியி லலையாமலையே

சூழ்ச்சியின் மிக்க வாழ்ச்சி கடலே
வருந்து முயிர்ப் பயிர்க் கிரங்கிய ருடலில்

பெரும் பெயல்வாய்த்த கருஞ்சூண் முகிலே
தாய் மொழி போற்றுந் தூய வாழ்க
ஆங்கிலம் வடமொழி யூங்க வாழ்க

## ஹிந்துப் புதினந்தாள் - அதிற் செயல்

அருள் வீரராகவாசாரி யோடு
புரிந் தொண் ஹிந்துப் புதினத் தாளைத்

துவக்கிச் சேலத் திந்துக்களுக்கும்
முகம்மதியர்க்கு மூண்டக கத்

தென்று முலக வின்புக் குழைக்கும்
விசய ராகவாசாரியார் முன்னைய

குறைபுரியாத பெருமைசால் பற்பலர்
தன்னா டொருவி முந்நீர் கடந்து

தத்துறு காவல் பத்தாண் டிருத்தல்
ஆகிய தண்டந் தீதி லெய்தியதைத்

தெரிந்தவ ணிகழ்ந்த அருஞ் செய் லனைத்தின்
உண்மை யிஃதென வண்மை ஹைகோர்ட்

சென்னைக் கவர்ன் மெண்ட் இந்தியா கவர்ன்மெண்ட்
டறிந்து தெளிய வருந்தி மென்மேல்

வரைந்து விடுதலை பொருந்தச் செய்த
உண்மைக் குழைக்கும் வண்மையே வாழ்க 38

## சுதேசமித்திரன் தோற்றமும் செயலும்

ஆங்கில மறியா ரதை வேண்டா மையிற்
செந்தமி ழறிந்தோரும் பயன்பட வெணி 40
ஆயிரத் தெண்ணூற் றெண்பத்திரண்டாம்
ஆண்டினிற் சுதேச மித்திர னென்னும் 42
நீளெழிற் புதினத் தாளைத் தந்ததில்
செந்தமிழ் நிலத்தின் முற்று சீர்த் தோற்றமும் 44
மற்றுள நாட்டிற் கற்றவர் செய்தியும்
அரசியலறிவும் பிறர்சீர்த் தேற்றமும் 46
பயன்மிகு முலக வியற்கை யுணர்வும்
பெற்புறு கைத்தொழில் நுட்பமுஞ் செட்டும் 48
நாட்டன் புணர்ச்சியுஞ் சேட்புலச் செய்தியும்
பற்பல நூல்களின் திட்பமும் பிறவும் 50
தமிழ் நாடெங்கு மமர்ந்துதாமுறை
சிற்றூரன்றி மற்றொன்றறியா 52
மக்களுமோர்ந்துயத் தக்கபடியறைந்த
தறிவுதருந் தெய்வதருவே வாழ்க! 54

## இலந்தன் சென்று வெல்பிக் கமிஷனில் சாட்சி கூறியது

நிலவு மிந்தியச் செலவு தீர்மானிக்க
மல்கு சிறப்பின் வெல்பிக் கமிஷன் 56
முன் சொற்பொழிவில் வன்மையனா மண்
பகர் சுரேந்திரநாத் பானர்ஜி வெம்பைத் 58

தட மிகு டின்ஷா டெல்ஜிவாச்சா
இந்தியர் தமக்கொரு தந்தையெனத் தகும்
கோபால கிருஷ்ண கோகலே தம்மொடு
பன்னூற்றிமை யின்பஞ்செல்வம்
கைத் தொழில் செட்டு வெற்றி மன்னுரிமை
கட்டுத் தன்னில மாதலினிலந்தன்
என்னப் படுபுரி துன்னிக் கலங் - காக்
கரியாய் நின்ற பொற் களிறே வாழ்க!
கேட்போர் பொறியும் வேட்கையுளமும்
பிறிதிடஞ்சாரா தொருமையுற்றிவர்ந்து
தெள்ளமிழ் துண்டென வுள்கிக்களிக்க
இனித்ததமிழினும் நுனித்தவாங்கிலத்தும்
பெருஞ்சொன்மழை பொழி யருந்தவ வாழ்க
பொது நல விருப்பம் புகட்டும் தாய் வாழ்க!

## புதினத்தாட் புலமை

உடலைப் பொருளை யுயிரைக் கருதா
தடலினாட்டா ரண்ணிய குறைகளை
யின்றவர்க் குணர்த்தி யிரந்தவர்ப் புரந்தும்
மறைவிற்புரி குறை மற்றவ் வுழிக் கண்
ணுடனிருந்தறிந்தா ரொத்தெடுத்துரைத்தும்
நிலமிசைப் பிழைக ணிகழாது காத்தும்
இருந்துழி யிருக்க விருநிலமெங்கணும்
பொருந்தருஞ்செய்தி புலனுறத் தெரித்தும்
நடுமுறைநாடு நல்லிறை யவர்க்குச்
கடல்பொருமுள்ளக் கவினுற மமைச்சர்

போன்று பற்பல சூழ்ச்சி புகன்று
சான்றபஃறுணை சண்ணி மகிழ்ந்தும்
நன்னூறுணர்ச்சி கண்ணாதவரும்
பன்னூற் பொரு ணலம் பருகிச் சிறக்க
அன்னை தந்தை யன்பினனையன்
மன்னனென்ன மருவியுரைத்தும்
இனித்தபன்னல மிடைவிடாதியற்றல்,
தனிப் புதினத்தாட் டலைவரியல்பாம்
அவ்வியல் பனைத்துஞ் செவ்விதினிறைந்த
அரும்பெறற் தெய்வத் திருவே வாழ்க!

## மித்திரன் தினசரிப் பெருமை

உணவினுமின்பப் புணர்வினு மினிது
விரும்பித் தமிழர் அரும் பேறாக
வேட்டுப் படிக்க நாட்புதினந்தாள்
ஆக்கித் தெளிவு தேக்கவ வாழ்க!
மெத்துஞ் சுதேச மித்திரன் றனக்கு
வெள்ளிவிழாக் கண்ட வள்ளல் வாழ்க!

## மாட்சி

முந்துறு மன்பாற் சுந்தரம் பிள்ளை
தீட்டிய காதை கேட்டவ வாழ்க
சென்னையாட்சியர் முன்னொருக்கால் நீ
உலகர் பாலன்பாற் சொலுமுரையிலையங்
கொண்டு பிடித்து மண்டியாராய்ந்து
குற்றமிலனெனத் தெற்றெனத் தேர்ந்து
விடுத்தருளியதால் தடத்திரு மெய்மைக்
காகவுழந்த வாகரிச் சந்திரன்

ஒத்த பெருமை யுற்றமெய்ம் முனி
என்றுலகேத்து கின்றவ வாழ்க!
மீட்டுமணஞ் செயல் பூத்த பெண்மணத்தல்
மிருதியின்னெறியெனத் தெரிந்தவ வாழ்க!
நீவித்திய நாட்டன்பு மறிவும்
முளைத்தமை போலப் பருத்துச் செழித்தும்
காய்த்தும் பயன்பல வாய்த்திவண் வாழ்க!
தென்னாப்பிரிக்கைப் போயர் தம்மால்
உடல் பொருளாவிக் கொடையனனான
காந்தி முன்னைய விந்தியர் படு மினல்
முறையின் விளங்க வுரைத்து நம் நாட்டார்
பொருட்டுணை செய்யத் தெருட்டிய தெய்வ
வொண்மையியல்புடை யண்ணால் வாழ்க!
நின்னச்சியந்திர சாலை வாழ்க!
சுதேச மித்திரப் பெயர்த்தாள் வாழ்க!
நின் மகன் விஸ்வநாத வேள் வாழ்க!
வாழி நின்குடி வாழி நின் பொருள்
வாழி நின் புகழ் வாழி நின் பொறி
வாழி நின்றனறிவு மன்பும்
வாழி நின்னுடல் நலமும் வலியும்
வாழி நின்னறுப தாண்டின் நிறைவு
வாழி நீடுழி நீ வாழி வாழியே!

*64-தன் + இலம் = இலந்தன், மொழி நிலை மாற்றம். 74 - இந்தியா மன்னிறை முடி சூட்டு வாழ்த்துப்பா அடி 3-4-331 வரை; இஃது இந்நூலாசிரியரது. 98 வெள்ளி விழா Jubilee.*

## பிற்சேர்க்கை-3

(தமிழ் நாடு அரசு தமிழ்ப் பழங்கலை இயக்கம் இயக்குநர் திரு. கு. ராஜவேலு 1983-ல் ''கிராமக்களஞ்சியம் - வடாற்காடு மாவட்டம் தொகுப்புப் பணியை செய்து முடித்துத்தர எனக்கு வாய்ப்பளித்தார். மாவட்டம் முழு வதையும் சுற்றுப் பயணம் செய்தபொழுது 2-8-1983-ல் வெட்டுவாணம் சமரச சன்மார்க்க சபை நூலகத்தில் பாரதியார் தொகுத்தெழுதிய ''பாரத ஜனசபை வரலாறு'' எனும் அரிய நூலைக் கண்டெடுத்தேன். என் தேடல் பணிக்கு எழுத்தாளர் வையவன் உதவினார். பாரதியார் எழுதிய அந்த நூலைப் பற்றி ஓர் அறிமுக ஆய்வுக்கட்டுரையை சிறந்த தமிழ் இலக்கியமாத இதழான 'தாமரை' செப்டம்பர் 1983-ல் வெளியிட்டது. இந்நூலை குறித்த முதல் கட்டுரை எனும் பாராட்டுதலையும் பெற்றது.

## பாரதியார் மொழிபெயர்த்து தொகுத்த ''பாரத ஜன சபை காங்கிரஸ் மகா சபையின் சரித்திரம்''

''மொழி பெயர்த்தவர் குறிப்பு'' என ஆங்காங்கே வரும் குறிப்புகள், பாரத ஜன சபை காங்கிரஸ் மகா சபையின் சரித்திரம் மொழிபெயர்ப்பு நூல் என்பதை விள்ளவல்லவை.

பாரதியார் தொகுத்த காங்கிரஸ் மகாசபை சரித்திரம். ''பாரத ஜனசபை - காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்'' எனும் பெயரில் இரு பாகங்களாக வெளியிடப்

பட்டுள்ளன. முதல் பாகம் நவம்பர் 1918-லும், இரண்டாம் பாகம் ஆக்ஸ்ட்டு 1920-லும் 'சுதேச மித்திரன்' வெளியீடுகளாக வந்தன.

முதல் பாகம் மொத்த 188 பக்கங்களுடன் 22 செ.மீ X 14 செ.மீ. அளவில் ஒரு ரூபாய் விலையில் வெளிவந்தது. பாரதியார் பெயர், தொகுப்பாளர் அல்லது ஆசிரியராக நூலில் தனியாக குறிப்பிடப்படவில்லை. மூலநூலைப் பற்றியக் குறிப்பும் இல்லை.

சுதேசமித்திரன் பத்ராதிபர் எழுதியுள்ள ''பீடிகை'' யில் நூலை இயற்றியவர் பாரதியார் என்பது பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''காங்கிரஸ் மகாசபையின் சரித்திரத்தை நம் தாய் மொழியாம் இனிய தமிழ் மொழியில் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைப்பது எளிதான காரியமல்ல. ஆயினும் அக்காரியத்தைக் கூடியவரையில் குற்றங் குறைகளின்றி நிறைவேற்றுவிப்பது நமது கடமை யென்றே கருதினோம்.

அவ்விதமே நிச்சயித்து அதனைத் தொடங்கும் தறுவாய் பாரத மாதாவின் அருளினால் ஸ்ரீமான் சுப்பிரமணியபாரதியின் அருமையான புலமையும், ஆழ்ந்த அறிவும் இக்காலத்திற்கு உற்ற துணையாக அடையப்பெற்றோம். ஆகவே இந்நூலை இயற்றும் பொறுப்பை அவர் மேற்கொண்ட பின்னர் பிரசுரிக்கும் கடமை மட்டில் நமக்கேற்பட்டது. இச்சமயம் பாரத

ஜனசபை சரித்திரத்தின் மேற்பகுதியை பிரசுரிக்கலானோம்.''

பாரதியார் ''பாரத ஜன சபை''யை இயற்றும் பொறுப்பை எந்த ஆண்டில் மேற்கொண்டார் எனும் கேள்விக்கு, நூலின் உள்ளே அவர் எழுதிய குறிப்பில் விடையுள்ளது. 1918-ல் இந்த நூல் இயற்றப் பெற்றுள்ளது.

முதல் பாகம், பத்து அத்தியாயங்கள் கொண்டது. 1885 முதல் 1894 வரை நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையின் நடவடிக்கைகள் மொழிபெயர்க்கப் பெற்று தொகுக்கப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பாளர் எனும் பொறுப்பில் பாரதியார் தமது சொந்தக் கருத்துக்களையும் ஆங்காங்கே குறிப்பிடும் வழக்கத்தைக் கொண்டவர். இந்த நூலிலும் அவ்வித அரிய குறிப்புகளைக் காணலாம்.

1885-ல் காங்கிரஸ் அமைக்கப்பெற்று நடைபெற்ற முதல் கூட்டத்தைப் பற்றி பாரதியார் தனியாக தமது கருத்தை விமர்சனம் பாங்கில் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

''டிஸம்பர் 28-ந் தேதி முதற் கூட்டம் கூடிற்று; வெற்றி! பாரத ஜாதி பேசத் தொடங்கிற்று. அப்பேச்சின் முதல் உச்சாரணங்கள் அன்னிய பாஷையிலே செய்யப் பட்டன. விதியின் ரஹஸ்யங்களை உணர்தல் மிகவும் அரியதன்றோ!''

(பக்கம் - 4 பாரத ஜனசபை முதல்பாகம்; 1918)

பாரதிக்கே உரிய தனிப்பார்வையின் மகத்தான ஆற்றலை மேலே பார்க்கிறோம்.

தமது தொகுப்புப் பணியில் பாரதியார் வருணனைக்கு அளிக்கப்பட்ட இடத்தைப் பற்றியும் ஒரு குறிப்பில் தெரிவித்துள்ளதாவது.

''முதல் ஜன சபைக் கூட்டத்தை நாம் சற்றே விஸ்தாரமாக வர்ணித்தது போலே இரண்டாம் கூட்டத்தை வர்ணிக்கவில்லை. ஆனால் பிரிதிநிதிகள் வருடந்தோறும் அதிகரித்துக் கொண்டே போனார்கள் என்பது மாத்திரம் இங்கே அவசியம் தெரிவிக்க வேண்டிய விஷயம்.'' (பக்கம் 28)

தமிழ்நாட்டின் புதிய விழிப்பிற்கு ஆதிகர்த்தாக் களுள் ஒருவராகத் தாம் போற்றிய ஜி. சுப்பிரமணிய ஐயரைப் பற்றிய மிகச்சிறந்த புகழுரையையும் பாரதியார் பின்வருமாறு வருணித்துள்ளார்;

''தமிழ்நாடு தவமுடையது. ஏனெனில், காங்கிரஸ் மகாசபையின், முதற்கூட்டத்தில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் பாக்கியம் தமிழ் நாட்டுத் தலைவராகிய ஸ்ரீசுதேச மித்திரன் ஜி. சுப்பிரமணிய ஐயருக்கே கிடைத்தது.'' (ப.4)

பம்பாயில் கூடிய முதல் காங்கிரசில் எழுபத் திரண்டு பிரதி நிதிகள் கலந்து கொண்டனர். இதைப் பற்றிய பாரதியாரின் குறிப்பு வருமாறு.

''பம்பாய், சபை கூடின ஸ்தலம், ஆகவே ஸ்தல பிரதிநிதிகள் 18 பேர், அதுதான் மேற்படி ஜாப்தாவில் உயர்ந்த தொகை. அடுத்த படியிலே சென்னையும் புனாவும் நிற்பது கண்டு தமிழ்நாட்டின் ஊர்களைக் கணித்திடுக.''

''தமிழ் நாட்டின் ஊர்களைக் கணித்திடுக'' என பாரதியார் தனியாகச் சுட்டிக் காட்டியுள்ளது. குறிப்பிடத்தக்கது. (தமிழ் நாட்டு பிரதிநிதிகள் விவரம் வருமாறு; சென்னை-8, செங்கற்பட்டு-2, தஞ்சாவூர்-1, கும்பகோணம்-1, மதுரை - 1, திருநெல்வேலி-1, கோயமுத்தூர்-1, சேலம் - 1)

பாரத ஜன சபையில் இரண்டாம் பாகத்துப் பாரதியாரின் தனிக் கருத்துக்களைக் காண்கிறோம். இரண்டாம் பாகம் 1920-ல் வெளிவந்தது; மொத்த பக்கங்கள் 190; 1895 முதல் 1904-வரை நிகழ்ந்த காங்கிரஸ் மகா சபையின் நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது.

இந்த இரண்டாம் பாகத்தில் பாரதியாரின் இரு முக்கிய அரசியல் கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

1. இயக்கங்களில் பங்கேற்காத அரசியல் ஞானம் விரும்பத் தக்கதல்ல; 2. காங்கிரஸ் தொடக்க காலத்தில் மிதவாதிகளின் பிடிப்பில் இருந்ததை பாரதியார் குறிப்பிடுவது. இவையிரண்டும் இரு முக்கிய அரசியல் கருத்துகளாகும். இந்த இரண்டாம் பாகத்தில்

காணப்பெறும் குறிப்பொன்றில் பாரதியார் தாம் எழுதிய ஆண்டு நாள், கிழமையைக் குறிப்பிட்டுள்ளார்.

**முதல் குறிப்பு** 1903-ல் சென்னை தேனாம் பேட்டையில் நடைபெற்ற பத்தொன்பதாவது காங்கிரஸை பற்றிய நிகழ்ச்சிகளை வருணிக்கும் பொழுது இடம் பெற்றுள்ளது. (1848-1909) காங்கிரஸ் மகாசபையின் தலைவர் லால்மோகன் கோஷ் தமது தலைமையுரையில் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்காமல் இருந்ததைப் பற்றி கூறியதாவது.

'சில வருஷங்களாக நான் ராஜரீகக் கிளர்ச்சியில் சம்பந்தப்படாமல் விலகி நின்றேன். இப்போது நீண்ட காலத்துத் தனிமையான சிந்தனையால் மெல்ல மெல்லப் பக்குவமடைந்திருக்கும் எனது ராஜரீகக் கொள்கைகள் தேசத்தாருக்கு அதிகம் பயன்படக்கூடு மென்று நினைக்கிறேன்' (பக்.151. பாரத ஜனசபை; இரண்டாம் பாகம் - 1920).

பாரதியார், லால்மோகன் கோஷின் கருத்தை ஏற்காமல், 'மொழி பெயர்த்தவர் குறிப்பு' எனத் தனியாக பின் வருமாறு தமது மறுப்புரையை இணைத்துள்ளார்.

'ராஜரீகக் கிளர்ச்சியில் சேர்ந்து பழகியிருந்தால் இவருடைய அனுபவம் இன்னும் அதிகப்பக்குவ மடைந்திருக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. பொது விஷயங்களில் கலக்காமல் விலகியிருந்து ஆலோசனை செய்வோருக்கு ராஜாங்க ஞானம் அதிகம் ஏற்படு மென்ற கொள்கை முழு உண்மையானது. (பக்.151)

ஒதுங்கி நின்று அரசியல் பேசும் போக்கை பாரதியார் ஏற்காததை இங்கு அறிகிறோம். புதுச்சேரி யில் இருந்த காலத்தில் கூறப்பட்ட இந்தக் கருத்தை பாரதியாரின் அரசியலைப் பற்றி ஆய்வோர் கருத்தில் கொள்ளவேண்டியதாகும்.

இனி வரும் **இரண்டாம் குறிப்பு**, சற்று விரி வானது; பாரதியின் அரசியல் சிந்தனையைத் தேர்ந்து தெளிய உதவுவது.

1904-ல் பம்பாயில் நிகழ்ந்த இருபதாவது காங்கிரசில் சுரேந்தரநாத் பானர்ஜியின் பேச்சின் மீதான தமது கருத்தை பாரதியார் வெளியிட்டார். இங்கும், 'மொழி பெயர்த்தவர் குறிப்பு' என்பதாகக் குறிப்பிட் டுள்ளார். இதன் முழு விவரம் வருமாறு.

'**இன்று 1918.ம் வருஷம் ஜூலை 8-ந் தேதி திங்கட்கிழமையன்று நான் இந்தச் சரித்திரத்தில் இப்பகுதியிலுள்ள இவ்வரிகளை எழுதிக் கொண்டிருக்கையிலே** (அழுத்தக் குறியீடு இந்நூலாசிரி யருடையது) ஆங்கிலேயே ராஜாங்கத்தார் 'மாண்டேகு - செம்ஸ்போர்ட்' சீர்திருத்த சிபார்சுகள் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். இந்த சிபார்சுகளைத் தேசத்தார் வெறுத்துத் தள்ளுவார்களென்பதில் ஸந்தேஹமில்லை. ஏனென்றால், இன்றுவரை நாம் மாத்திரமேயன்றி ஆனி பெஸெண்ட் முதலிய ஐரோப்பியப் பண்டிதரும் பெயர்கூடக் கேட்டிராத ஜெக்கோ ஸ்லாவ், யிகோஸ்லாவ் முதலிய ஜாதியார்க்கும் பெல்ஜியம்

தேசத்தார்க்கும் ஆப்ரிக்காவில் ஜெர்மானியம் அன்ய ஆட்சியில் வருந்தும் பல நீகிரோ ஜாதியாருக்கும், பூமண்டல முழுமைக்குமே ஸ்வராஜ்யம் ஸம்பாதித்துக் கொடுக்கும் வண்ணமாகவே இக்கொடிய, கொடிய போர் நடைபெற்று வருகிறதென்று லாயிடு ஜ்யார்ஜ் முதலிய ப்ரிட்டிஷ் மந்திரிகளும், அமெரிக்க ஜனாதிபதி வில்ஸனும் திரும்பத்திரும்பத் திரும்பத் திசைக ளெல்லாம் செவிடு படும்படி ஓலமிட்டு வருகையிலே பாரததேசத்தார் இப்போரில் உயிர்களை லக்ஷக் கணக்காகச் சிந்தியும் பணத்தைக் கோடிக்கணக்காக வாரிக்கொடுத்தும் செய்துவரும் பேருபகாரங்களுக்குக் கைம்மாறாக இந்த ஈனத்தனமான சிபார்சுகள் செய்ய முற்பட்ட மந்திரி மாண்டேகுவின் சித்த வற்றுதலை நினைத்து வருத்தப்படுகிறோம். இந்த தரித்ர சிபார்சுகளை ப்ரகடனம் செய்வதற்கு முன்னாகவே ஜனங்களிடம் அவற்றைத் தூக்கிப் பேசி ஆதரிப்பதாக ஆங்கிலேயரிடம் வாக்குக் கொடுத்துவிட்டதாகக் கூறப்படும் மிதவாதிகளின் கூட்டத்தில் இப்போது அக்ரகண்யராக சோபிக்கும் ஸுரேந்தர்நாத் பானர்ஜி பண்டை நாட்களில் ஸ்வராஜ்ய விஷயத்தில் காட்டிய தாகத்தை யோசனை பண்ணும்போது தேசபக்தியை, மரண ஸமீபமான காலத்தில் தளர விடுவாருடைய பேதமையைக் கருதி என்னுள்ளம் மிக வருந்துகின்றது.''

இந்தக் குறிப்பின் தொடக்கத்தில் ''இப்பகுதியி லுள்ள இவ்வரிகள்'' என பாரதியார் குறிப்பிட்டுள்ள அந்த வரிகளாவன வருமாறு.

''அந்த நாட்களில் பெரிய உக்ரமான தேசாபி மானியாகக் கருதப்பட்ட ஸுரேந்திரநாத் பானர்ஜி உயர்தர உத்தியோகங்களில் 100க்கு 14 அல்லது 17 தான் நமக்குக் கிடைக்கின்றன. இவ்வளவுக்கும் தேசம் நம்முடையது, பணம் நமது, ஜனங்களெல்லாரும் நம்மவர் என்று கூறிப்பரிதாபப்பட்டார்.''

தீவிரவாத தேசியத்தை எந்தச் சூழலிலும் தளர்த்தக் கூடாது என பாரதியார் சாற்றியுள்ளதை கூர்ந்து நோக்க வேண்டும்.

பாரதியாரின் 'பாரத ஜனசபை'யின் இருபாகங் களையும் இணைத்து சற்று மாற்றி அமைத்து சுதேசிமித்திரன் பின் வெளியிட்டது. பாரதியாரைப் பற்றிய குறிப்பு முகவுரையில் எழுதப்பெறவில்லை, பாரதியின் பாரத ஜனசபை வரலாற்றை அப்படியே எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் பாரதியின் பெயரை முகவுரையில் குறிப்பிடாதது கண்டனத்திற் குரியது. இந்தநூல் **''காங்கிரஸ் மகாசபை சரித்திரம்''** எனும் பெயரில் வெளிவந்தது. பாரதியாரின் **''மொழி பெயர்த்தவர் குறிப்பு''களும் இந்த நூலில் விடப்பட்டுள்ளன.**

பாரதியின் 'பாரத ஜனசபை' வரலாற்று நூலைப் பற்றியும் அதில் இருந்து சில செய்திகளை எனது **''இந்திய தேசியத்தின் தோற்றமும், வளர்ச்சியும் - இரண்டாம் பதிப்பு 1978''** ''காங்கிரஸ் வினா - விடை

மூலமும் - ஆய்வும் - முதற் பதிப்பு 1979'' ஆகிய இரு நூல்களில் எடுத்துக் காட்டியுள்ளேன்.

''பாரத ஜனசபை', காங்கிரசின் ஆண்டறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு மொழிபெயர்ப்பாக மட்டும் வெளிவந்ததால் பாரதியின் விமர்சனப் பார்வைக்கு வாய்ப்பில்லாமல் அமைந்துள்ளது. ஆயினும் ஆங்காங்கே வருணனைகளாகவும், இடம் பெற்றுள்ள பாரதியார் விமர்சனங்கள் வரலாற்றுச் சிறப்புடையனவாகும்.

காங்கிரஸ் நூற்றாண்டு விழாவின் கால கட்டத்திலாவது (1985) அந்தக் கட்சியினர் பாரதியின் பாரத ஜனசபை வரலாற்றை மீண்டும் வெளியிட முன்வரவேண்டும்.

*நன்றி, தாமரை, செப்டம்பர்-1983*

❖

## பிற்சேர்க்கை - 4

# ஸ்ரீ.மு. வீரராகவாச்சாரியார் (1857-1906)

## வாழ்க்கை குறிப்புகள்

*(சென்னையில் சென்ற நூற்றாண்டின் இறுதியில் மிகப் பிரபலமாக விளங்கியவர்களில் ஒருவர் ஸ்ரீ மு. வீரராகவாச்சாரியார். தமது நண்பரான ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யரவர்களுடன் சேர்ந்து 'ஹிந்து', 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளை நிறுவினார். அவருடைய வாழ்க்கை வரலாறு ஒன்றும் கிடைக்க வில்லை. அவர் காலமானபோது, பத்திரிகைகளில் வெளியான தலையங்கங்களையும், இன்னும் சில குறிப்பு களையும். காஞ்சீபுரத்தில் அவர் நிகழ்த்திய சொற் பொழிவு ஒன்றையும் தொகுத்துள்ளோம்.)*

### காலஞ்சென்ற மு. வீரராகவாசாரியார்

சென்னை''ஹிந்து'' பத்திரிகைக்கு அது ஆரம்பமானது முதல் அதிபரில் ஒருவராயிருந்த முடும்பை வீரராகவாசாரி சென்ற சனியன்று ஆத்தூரில் இறந்துபோனாரெனறு கேட்டு மிக்க விசனம் அடைகிறோம். போன வருஷம் ஏப்ரல் மாதத்தில் ''ஹிந்து'' பத்திரிகையில் தமக்கிருந்த சுதந்திரத்தை விற்றுப் போட்டு விலகினார். அதுமுதல் அவர் அதே வியாகூலமாகி தேக சௌக்கியமில்லாமல் பல சிகிச்சைகள் செய்து கொண்டும் சௌக்கியப்படாமல் நல்ல இடத்தில் போய்ச் சில காலம் வசித்துப்

பார்க்கலாமென்று ஆத்தூருக்குப் போக, அங்கே திடீரென்று இறந்துபோயினர். அவர் செங்கல்பட்டு ஜில்லா வடக்குப்பட்டு கிராமத்தில் பிறந்து, சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் படித்து பி.ஏ., பரீட்சை தேறினர். அப்போதே அவரும் மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய அய்யரும் நேசர்களாகி, 1877- ம் வருஷத்தில் இருவரும் பரீட்சை தேறினர். 1878-ம் வருஷத்தில் இவ்விருவரும் வேறு சிலரும் சேர்ந்து ஹிந்து பத்திரிகையை ஸ்தாபித்தனர். மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் எடிட்டராகவும் வீரராகவாசாரியர் மானேஜராகவும் அந்தப் பத்திரிகை நடத்தி, ஆதியில் வாரம் ஒருமுறை பிரசுரமானனது. வருஷம் வாரம் மும்முறையாகவும் 1886-ம் தினசரியாகவும் மாற்றி, தேசப் பொதுக் காரியங்கள் பத்திரிகை மூலமாகவும் அவர்களது முக்கிய முயற்சி ஸ்தாபிக்கப்பட்ட பற்பல சபைகள் மூலமாகவும் பத்திரிக்கை வந்தது. 1898-ம் வருடத்தில் மிஸ்டர் ஜி. சுப்பிரமணி அய்யர் 'ஹிந்து' பத்திரிகையில் அவர் பெற்றிருந்த இடத்தை விட்டொழிய, மிஸ்டர் வீரராகவாசாரியர் பத்திராதிபராக நடத்தி வந்தனர். இந்த இருபது காலமாக இவ்விருவரும் இணைபிரியாமல் அனேக முக்கிய காரியங்கள் செய்து பொதுநலத்தை முற்படுத்தி வந்த வெகுகாலமாக பேர்பெற்ற ஒரு பத்திரிகையை நடத்தி பல பொதுக் காரியங்களில் முக்கியஸ்தராய் விளங்கி, பலருடைய நேசத்தையும், கவர்ன்மெண்டாருடைய மதிப்பையும் பெற்று வந்தவருக்கு, இவைகளுக் கெல்லாம் ஆதாரமாயிருந்த தமது பத்திரிகை தம் கையை

விட்டுப்போன துக்கம் அவரை விடாமற் பாதித்து வந்தது. மிஸ்டர் வீரராகவாசாரியரிடத்தில் அனேக நல்ல குணங்களிருந்தன. நேசர்களிடத்தில் வாஞ்சையும், ஜனங்களை அரவணைத்து சேர்ப்பதில் சக்தியும் பெருங் காரியங்களை நிர்வகிப்பதில் சாமர்த்தியமும் உள்ளவர். உபகாரத்திலேயே திருஷ்டியுள்ளவர். இவரிறக்கும்போது 50 வயது. மூன்று பிள்ளைகளையும் இரண்டு பெண்களையும் சமுசாரத்தையும் தீராத் துயரத்துக்காளாக்கி மாண்டு போயினர். இந்தியாவின் எப்பாகத்திலும் இங்கிலாண்டிலும் அவரை யறிந்த பலர் இந்த சமாசாரத்தைக் கேட்டுத் துன்பம்படுவார்கள். காங்கிரஸ் மகா சபைக்கும் சென்னை மகா ஜன சபைக்கும் ஆரம்ப காலத்தில் இரவு பகல் வேற்றுமையின்றி பாடுபட்டவர் களில் மிஸ்டர் வீரராகவாசாரி ஒருவர். அவர் 'ஹிந்து' பத்திரிகையை விட்டு பொதுக் காரியங்களில் சேர்ந்து உழைக்க சக்தியில்லாதவரானபோது அவருடைய உதவியை யிழந்த தேசாபிமானிகள் அவரில்லையே யென்று பலமுறை துக்கப்பட்டதுண்டு.

*-'சுதேசமித்திரன்'*
*தலையங்கம் 8-10-1906*
*பக்கம் 2.*

*The late Mr. M. Veeraraghavachariar*

காலஞ்சென்ற மிஸ்டர் மு. வீரராகவாச்சாரியார்

முன்பு, ஹிந்து, இந்துநேசன் பத்திரிகைகட்கு சுவான்தாரராயிருந்த மிஸ்டர் எம். வீரராகவாச்சாரியார்

சென்ற சனிக்கிழமை பிற்பகலில் 2- மணி சுமாருக்கு செங்கல்பட்டு ஜில்லா ஆத்தூரில் மரித்தாரெனக் கேட்க நமக்கு மட்டற்ற துக்கத்தைக் கொடுக்கின்றது.

இவர் சில காலமாக நோயால் பீடிக்கப்பட்டு வந்தார், இவர் சரிர ஸ்திதி அறிந்து இவரது சிநேகிதர்கள் அநேகருக்கு அவரைப்பற்றிக் கவலையாகவே யிருந்தது. ஆனாலும் இவ்வளவு சீக்கிரமாக அவருக்கு நிரியராண காலம் நேரிடுமென்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை.

இவர் சிறு பிராயத்திலேயே படித்துத் தேறி, பி.ஏ. பட்டம்பெற்று சென்னை பச்சையப்பன் கலாசாலையில் போதகர் பதவியில் சிறிதுகாலம் வேலை பார்த்து வந்தார். பின்னர் தேசாபிமானம் மேலிட்டு பால்யத்தி லேயே இன்னும் சிலரைச் சேர்த்துக்கொண்டு சென்னையில் 'ஹிந்து' ஆங்கிலப் பத்திரிகை ஸ்தாபனம் செய்து நடத்தி வருகையில் அவர்களில் சிலர் வேறு வேலைகட்குப் போய்விடவே தானும் தம் சிநேகிதரான மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய அய்யருமாக வெகு வருஷங்கள் ஹிந்துவைச் சீராய் நடத்தி வந்தார்கள்.

சென்னையில் எந்தப் பொது விஷயங்களிலும் முன்னின்று காரியங்களை நிறைவேற்றி வருவதில் சமர்த்தர். காங்கிரஸ் மகாநாடு இச் சென்னையில் கூடும்போதெல்லாம் இவர் முன்வந்து உழைக்கும் குணமுடையோர். சென்னை சர்வ கலாசாலை சகாக்களில் ஒருவராக இருந்தார். சென்னை

விக்டோரியா 'ஹோஸ்டல் ஸ்தாபனம் விஷயத்தில் ஊக்கத்தோடு உழைத்தார். செங்கல்பட்டு தேவஸ் தானம் கமிட்டியில் மெம்பர் ஸ்தானம் வகித்தார். இப்படி இவர் சம்பந்தம் சென்னை நகரத்தில் நடக்கும் ஒவ்வொரு பொதுக் காரியங்களிலும் இருக்கும். சென்னை மகாஜன சபைக்கு அநேக வருடங்கள் காரியதரிசியாக விருந்து அச்சபைக் காரியங்களை உற்சாகத்தோடு கவனித்து வந்தார். ஆகவே அவரது மரண சம்பவம் சென்னை ராஜதானிக்கேயல்ல, இந்தியாவுக்கே ஒரு பெருத்த நஷ்டமென்று சொல்ல வேண்டும். இவருடைய மரண சம்பவத்தால் ஆறாத் துயரிலிருக்கும் அவர் மனைவியாருக்கும், அவரது சின்னஞ்சிறு இரண்டு ஆண் குழந்தைகட்கும், இரண்டு பெண் மக்கட்கும் ஆறுதல் கூறுவோம்.

சுதேசமித்திரன்'' பத்திரிகையின் பத்திராசிரியராய் ஒரு சுமார் 15 வருஷ காலமிருந்தார். அதற்குப் பிறகுதான் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தாம் ஏகதேசத்தில் நடத்த ஆரம்பித்ததாகும். சுதேசமித்திரனுக்கும் தமக்கும் இருந்த சம்பந்தம் ஒழிந்து போகவே ஸ்ரீ வீரராகவாச்சாரியார் மறுபடியும் 'இந்துநேசன்' என்ற ஒரு தமிழ் வார இருமுறை பத்திரிகையை நடத்த ஆரம்பித்தார். அந்த ஆரம்ப காலத்தில் ''இந்துநேசன்'' பத்திரிகை வெகு நேர்த்தியாயிருந்தது. பிரபல பண்டிதர்கள் அநேகர் அதற்கு விஷயதானம் செய்வா ராயினர். ''இந்து நேசன்'' பத்திரிகையில் தோன்றிய அநேக விஷயங்கள் பிறகு நூல் உருக்கொண்டும் வெளிவந்துள்ளன.

ஆனால், தமது தேக அசௌக்கியம் காரண மாகவும், வேறு சில காரணங்களைப் பற்றியும் ''இந்துநேசன்'' பத்திரிகையையும், ''ஹிந்து'' பத்திரிகையை விற்றதுபோலவே அவர் விற்றுவிடும்படி நேர்ந்தது. இச் சென்னை மாகாணத்தில் ஜனங்கள் பேசும் தேச பாஷையில் சமாசாரப் பத்திரிகையொன்றை நடத்தத் துணிந்து முன்வந்தவர் ஸ்ரீமான் வீரராகவாச் சாரியாரையன்றி வேறெவருமில்லை. ஆனால் அவர் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய ஐயரைக் கலவாமல் எந்த யோசனையும் காரியமும் செய்ததில்லை. இருவரும் தமிழ்ப் பாஷையில் சமாசாரப் பத்திரிகை நடத்தியதைப் பார்த்துக்கொண்டுதான், மற்றவர்கள் இப்போது தேச பாஷையில் பத்திரிகைகள் நடத்தி வருகிறார்கள்.

ஸ்ரீ வீரராகவாச்சாரியார் பத்திராசிரியராக மட்டுமன்று, ஜனத் தலைவராவும், பொது விஷயங்களில் மிகவும் சம்பந்தப் பட்டவராகவும் இருந்து வந்திருக்கிறார். 1887- ம் வருஷத்தில் சென்னை காங்கிரசில் இவர் பிரதானஸ்தராயிருந்து உழைத்து வந்தார். நல்ல நிர்வாகசாலி, சாமர்த்தியசாலி, வெகு சரசி, யாரிடத்தும் பிரியமாய்ப் பேசுவார், கை மட்டும் அவ்வளவு தாராளமல்லவாம். முப்பது வருஷ காலம் அவர் தேச சேவை புரிந்திருக்கிறார். ஆங்கில மாதிரியில் செராய் முதலிய உடுத்து விளங்குவது அவர் இயல்பு. இவர் செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தவர். அந்த ஜில்லாவிலுள்ள ஆத்தூர் கிராமத்தில் 6-10-1906 -ல் காலமானார். அவருக்கு இறக்கும்பொழுது 50 வயதுக்குமேலில்லை. அவரது பத்திரிகைகளாயிருந்த

ஹிந்து, சுதேசமித்திரன், இந்துநேசன் இப்போதும் நடந்து வருகின்றன.

திரிசிரபுரம்

*எஸ்.ஜி. இராமானுஜலு நாயுடு*

ஆசிரியர் 'ஆநந்தகுண போதினி

'ஆநந்தகுண போதினி' வ.1, நெ.6

1926- செப்டம்பர், 17, பக்கம் 295.

## *ஸ்ரீமான் மு. வீரராகவாச்சாரியார்*

1885-ஆம் ஆண்டில் பம்பாயில் நடைபெற்ற முதலாவது காங்கிரஸ் மகா சபைக்குச் சென்னைப் பிரதிநிதிகளில் ஒருவராக ஸ்ரீமான் மு. வீரராகவாச்சாரி யார் அவர்கள் சென்றிருந்தார். கோவைப் பிரதிநிதி யாகச் சென்ற 'கலாநிதி' ஆசிரியர் சேலம் படகலாத நரசிம்மலு நாயுடு அவர்கள் தம் திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்'' என்ற புத்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்.

டிசம்பர் 28உ பகல் 12-மணிக்கு காங்கிரஸ் சபை கட்டப்பட்டு, வங்காளத்திலிருந்து வந்த உமிஸ்சந்திர பானர்ஜி சபாநாயகராக நியமிக்கப்பட்டு பின்வருகிற தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவையாவன-

4. கவினெண்டாண்டு சிவில் சர்விஸ் பரீட்சை இந்து தேசத்திலேயும் நடத்தவேண்டுமென்றும் மேற்படி பரீட்சைக்குப் போகும் வயதை 23 செய்யவேண்டு மென்றும். கனம் தாதாபாய் நௌரோஜி அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மகா-ள-ள-ஸ்ரீ வீரராகவாசாரி

யாரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சகலராலும் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டது.

## *காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் (1890) மு. வீரராகவாசாரியார் பேருரை*

1890-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 7-ந் தேதி சாயங்காலம் காஞ்சீபுரம் ஜவுளிக் கடை சத்திரத்தில் காங்கிரஸ் விஷயமாய் ஓர் மகாநாடு கூடிற்று. அச்சபைக்கு அப்பட்டணத்திலுள்ள பலர் வர்த்தகர்களும் வந்திருந்தார்கள். அங்கு வந்தவர்களில் சிலர் எவர்களெனில், காஞ்சீபுரம் முனிசிபாலிடி வைஸ்சேர்மனாகிய ம-ள-ள-ஸ்ரீ கன்னியப்ப முதலியார், ஆறுமுக முதலியார், எம். இராமானுஜாசாரியர், நாட்டு அப்பனையங்கார், எஸ். சுப்பிரமணிய அய்யர், ஸ்ரீரங்காசாரியர், தாமல் அரங்காசாரியார், நாராயண செட்டியார், டி.பாஷிகாசாரியார் முதலியவர்களே. ம-ள-ள-ஸ்ரீ இராமானுஜாசாரியர் அவர்கள், அச்சபைக்கு ம-ள-ள-ஸ்ரீ கன்னியப்ப முதலியார் அவர்களைச் சபா நாயகர் ஆக இருக்கவேணுமென்று கேட்டுக் கொள்ள, அதை அங்கு வந்திருந்தவர்கள் அனைவரும் ஆமோதித்தார்கள். பின்பு ம-ள-ள-ஸ்ரீ இராமானுஜா சாரியர் அவர்கள் அச்சபையின் நோக்கங்களையும் கருத்தையும் வந்திருந்தவர்களுக்கு அறியப்படுத்தி, சென்னையிலிருந்து அங்கு வந்திருந்த திரு. மு. வீரராகவாசாரியர், திரு. வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசி, அவர்கள் காங்கிரஸ் விஷயமாய்ச் சொல்லப்போகும் விஷயங்களை இங்கு

வந்திருப்பவர்கள் கேட்டு தக்க ஏற்பாடுகளைச் செய்யவேணுமென்று சொல்லினர். அதின் பின்பு திரு ஸ்ரீ.மு. வீரராகவாசாரியர் எழுந்து சொன்னதாவது.

''சபா நாயகரே'' மகா ஜனங்களே! இன்று இங்கு கூடியதின் கருத்து இன்னதென்று உங்களுக்கே தெரிந்திருக்கலாம். திரு. இராமானுஜாசாரியர் அவர்கள் சொல்லவும் கேட்டீர்கள். அவர் சொல்லிய விஷயங்களில் ஒன்றை மட்டில் கவனியுங்கள்; அது என்னவெனில் ''நமது தேசத்தார் தேவாலயங்களுக்கும் அன்ன சத்திரங்கள் முதலிய தர்மங்களுக்கும் மேலே நல்ல பதவியைப் பெறவேணுமென்று எண்ணங் கொண்டு ஏராளமாய்ப் பணத்தை உதவுவதுபோல், காங்கிரஸ் முதலிய பொது விஷயங்களுக்கும் பணத்தை உதவவே வேணும்'' என்று சொல்லியதே. இது வாஸ்தவம். நாம் இகத்தில் க்ஷேமப்பட்டு சாய்காலுள்ள வர்களாக விருந்தால்தான் பரத்திலும் க்ஷேமப்படலாம். இங்கு வெகு கஷ்டப்பட்டால், மேலுலகத்தில் சுகப்பட்டு வாழும்படி வேண்டிய கிருஷிகளை நாம் எப்படி செய்து முடிக்கலாம்? ஆங்கிலேயர்கள் இங்கு வெகு சாய்காலுள்ளவர்களான தால்தான் அவர்கள் மதத்தை எங்கும் பணத்தைக்கொண்டு பரவடித்து அந்நிய தேசங்களையும் கைப்பற்றி சுகப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள்.

அம்மாதிரியாகவே நாம் இகத்தில் க்ஷேமமாயிருந் தால்தான் பரத்திலும் க்ஷேமப்படலாம். இந்த எண்ணத்தைக் கொண்டுதான் நமது தேசத்திலுள்ள முக்கிய கனவான்கள் 5 வருஷ காலமாய் காங்கிரஸ்

சபை ஒன்று கூட்டி, அதில் நமக்கு இங்குள்ள பற்பல குறைகளைப் பற்றி விடாமல் முறையிட்டு கவர்ன் மெண்டுக்குத் தெரிவித்து வருகிறார்கள். அச்சபையார் கேட்டுவரும் பற்பல அம்சங்களில் ''சட்ட நிரூபண சபை சீர்திருத்தல்'' வெகு முக்கியமான அம்சம். அதுதான் இத்தேசத்தாருக்குள் இப்பொழுது பரவிவரும் பல வியாதிகளுக்கும் சஞ்சீவி மருந்து. அந்தச் சீர்திருத்தத்தை மட்டில் நாம் கவர்ன்மெண்டாரைக் கொண்டு செய்விப்போமாகில் நமது தேசத்தார் எவ்வளவோ சுகிர்தப்படலாம். இப்பொழுது சற்று யோசியுங்கள், நமது தேசத்தில் எத்தனையோ சட்டங்களையும் திட்டங்களையும் நமது கவர்ன் மெண்டார் விடாமல் செய்து முடித்து வருகிறார்கள். எத்தனை சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் எத்தனை வரிகள் விதிக்கப்பட்டாலும் அவைகளினால் பணக்காரர்களுக்கு எவ்வித கஷ்டமுமில்லை. ஏழைகளுக்குத்தான் எல்லா வருத்தமும். முனிசிபல் வரியைப் பாருங்கள், கவர்ன்மெண்டார் இக்காலத்தில் போலீஸ், ஆஸ்பத்திரி, கல்விப் பயிற்சி முதலிய டிபார்ட்மெண்டுகளுக்குவேண்டிய எல்லாச் செலவுகளையும் முனிசிபாலிடியார் தலைமேல் போட, முனிசிபல் கமிஷனர்கள் நாளுக்கு நாள் வரிகளை உயர்த்தி வருகிறார்கள். இன்கம் டாக்ஸ் வரியினால் சாதாரண வியாபாரிகள் படும் கஷ்டங்களைப் பாருங்கள். காட்டிலாகா சட்டங்களைப் பாருங்கள். உப்பிலாகா சட்டங்களைப் பாருங்கள். ஒவ்வொன்றிற் கும் சட்டங்கள் ஏற்படுத்தி ஏழைக் குடிகளை

வருத்துகிறார்களே! மேற் சொல்லிய ஒவ்வொரு சட்டங்களும் இத்தேசத்திய ஏழைக் குடிகளைப் பாதிக்கின்றனவே. கவர்ன்மெண்டார் அன்னியர்கள், அவர்கள் இத்தேசத்தாருடைய ஆசாரங்களை அறியார், ஆதலால், பலவித சட்டங்களையும் திட்டங்களையும் ஏற்படுத்தி ஜனங்களுக்குக் கஷ்டங்களை உண்டு பண்ணுகிறார்கள். ஆனால், அந்தக் கவர்ன் மெண்டாரால் நாம் எவ்வளவோ நன்மைகளை இங்கு பெற்றிருக்கிறோம், ரெயிலென்ன! தந்தியென்ன! ரோட்டுகளென்ன! பாலங்களென்ன! பத்திரிகைகளுக்கு எழுதவும், இம்மாதிரியான கூட்டங் கூடி அவர் களுடைய நடவடிக்கைகளைப் பற்றிப் பேசவும கொடுத்துள்ள சுதந்திரங்கள் என்ன! இவை எல்லாம் வேறெந்த இராஜாங்கத்திலும் கிடையாவே! உருஷி யர்கள் வெகு கொடுங்கோலரசர்கள். அவர்களிட்டது சட்டம். இப்படிப்பட்ட அநுகூலங்கள் பலவும் கிடைத் திருப்பதால்தான் நம் ஆங்கிலேய கவர்ன்மெண்டாரை இன்னும் கொஞ்சம் நன்மை செய்யவேண்டுமென்று நாம் கேட்க இடமுண்டாயிருக்கிறது. இப்படி கேட்பதற்கும் நமது காருண்ய சக்கிரவர்த்தினி 1858-ம் வருஷத்தில் ஆங்கிலேயே பிரஜைகளைப் போலவே ஜாதிபேத வித்தியாசங்களையும், நிறங்களையும் யோசியாமல் இத்தேசத்தாருக்கும் நியாயம் செய்வோ மென்று தண்டோரா மூலமாய்த் தெரியப்படுத்தி யிருப்பதை ஆதாரமாகக் கொண்டுதான் கவர்ன் மெண்டார் நமக்கு இப்போது பிரதிநிதி சபைகளைக் கொடுத்து நம்மை ஆண்டுவர வேண்டுமென்று நாம் கேட்பது. இப்போது அங்கங்கு கவர்ன்மெண்டாரால்

ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் வெற்று சபைகளே. அவைகளால் இத்தேசத்தாகளில் எவ்வித பயனும் கிடையா. அவைகளிலுள்ள மெம்பர்களில் அனேகருக்கு ஜனங்களுடைய கஷ்ட நிஷ்டூரங்கள் தெரியா. இப்பொழுது கவர்ன்மெண்டார் அச்சபை களுக்கு எல்லா மெம்பர்களையும் நியமித்து வருகிறார்கள். ஆதலால்தான் அவர்கள் அதிகாரிகள் பட்சமாய்ச் சொன்னால் மெஜாரிடி கவர்ன்மெண்டு பட்சமாயிருப்பதால் அவர்கள் பட்சமாகவே எதுவும் அங்கு செய்யப்பட்டு வருகின்றன. அன்றியும் சட்ட நிருபண சபை மெம்பர்களுக்கு எதையும் ஆக்ஷேபித்துக் கேட்டுச் சாதிக்க அதிகாரம் கிடையாது, அங்கு சென்று தலையாட்டி பொம்மைகள் போல் கவர்னர் சொல்லுகிறதெல்லாம் ''சரி சரி'' என்று சொல்லி வரவேண்டியதாயிருக்கிறது. மேலும் சில வருஷங்கள் முன் நமது இராஜதானியில் ஒரு தாசீல்தார் பாக்கி வசூல் விஷயமாய் கிராமாந்திரம் சென்றபோது, ஓர் பிராமணன் வீட்டில் சிரார்த்தம் நடக்கையில் புகுந்து சாதம் பக்ஷண்ணியம் கறிகாய் முதலியவற்றை வெளியில் கொண்டுவந்து போட்டு உடனே சர்க்கார் பாக்கியைக் கட்டும்படி ஆக்ஞாபித்தது எவருக்கும் நன்றாய்த் தெரியுமே. அது அப்படி யிருக்கட்டும். சென்றமாதம் மதுராந்தகம் தாலுக்காவில் மிஸ்டர் மல்லாலி மகா அநீதங்களை எல்லாம் செய்தாரோ, ஒருவருடைய நிலத்தை மற்றொருவருக்கு தானம் கொடுத்து விட்டாரே. வீட்டில் சிலரைப் புகும்படி செய்து அங் குள்ள கணக்குகளைச் சுருட்டி கட்டிக் கொண்டு

வந்தனரே. இதைவிட அநீதமேது? அதனைக் கௌன்ஸிலில் பிரஸ்தாபிக்க எவ்வித அதிகாரமும் இப் போதைய மெம்பர்களுக்குக் கிடையாதே. அச்சபைகளிலிப்போது ''உங்களுக்கு அதிகாரமில்லை. நாங்கள் சொன்னதற்கு ''ஆம் ஆம்'' என்று சொல்லிப் போங்க''ளென்கிறார்களே. இதற்கெல்லாம் நமக்கு வாயுண்டாக்கத்தான் மிஸ்டர் பிராட்லா அவர்கள் சட்ட நிரூபண சபை சீர்திருத்த விஷயமாய் மசோதா ஆக்டு செய்திருக்கிறார். அதில் நமக்கு அநுகூலமான பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர் சென்ற காங்கிரசுக்குப் பொம்பாய் பட்டணத்திற்கு வந்திருந்து நமது அபிப்பிராயங்களைக் கேட்டுப் போனார். இந்த சட்ட நிரூபண சபைகளில் இன்னுமநேக சுதேச மெம்பர்களிருக்க வேணுமென்றும், அவர்களை இத்தேசத்தாரே நியமிக்க அதிகாரமும் பெறவேணு மென்றும் அவர்களுக்குக் கவர்ன்மெண்டாரைப் பற்பல இராஜரீக விஷயங்களைப் பற்றிக் கேள்வி கேட்க அதிகாரம் கொடுக்கவேணுமென்றும், அச்சபையில் வருஷாந்திர வரவு செலவு கணக்குகளைப் பற்றி பேச வேணுமென்றும் காங்கிரஸ் சபை பிரதிநிதிகள் சொல்ல, அவரும் அதற்கு சம்மதித்து இப்போது ஆங்கிலேய நாட்டு பார்லிமெண்டில் ஓர் மசோதா ஆக்டு அவ்விஷயமாய்ச் செய்திருக்கிறார். காங்கிரஸ் சபையும் நாளுக்கு நாள் பலப்பட்டு வருகின்றது. அப்படி யிருக்க ''5 வருஷ காலமாய் காங்கிரஸ் சபை கூடியும் உப்பு விலை குறையவில்லையே. இன்கம் டாக்ஸ் வரி தள்ளுண்ணப்படவில்லையே. மிஸ்டர் மல்லாலி

முதலிய ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் அநீதங்கள் அடங்கவில்லையே'' என்று சிலர் சொல்லக்கூடும். அதற்கு நான் சொல்லக்கூடிய ஜவாபு என்னவெனில், ''உப்பு ரூபாய்க்கு நான்கு படி ஆகாமல் ஆறுபடியாக விற்கப்படுவதும், இன்கம் டாக்ஸ் வரி இன்னும் அதிகப்படாமலிருப்பதும், மிஸ்டர் மல்லாலியும் அவரினத்தாரும் இன்னும் பலவாறு அநீதங்கள் இங்கு செய்யாமலிருப்பதும் அந்தக் காங்கிரஸ் சபை கூடி வருவதால்தான். ஆனபோதிலும் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். இப்பொழுது கவர்ன்மெண்டாரும் சட்ட நிரூபண சபை சீர்திருத்தல் விஷயமாய் ஓர் பில் தயார்செய்து அதை வெளிப்படுத்தி யிருகிறார்கள். அதில் நாம் இப்பொழுது கேட்கும் பல அம்சங்களில் ஒன்று தவிர மற்ற கோரிக்கைகளை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் பில்லின்படி இனி அச்சபையில் இருபது மெம்பர்கள் உட்காருவார்கள். அவர்கள் இராஜரீக விஷயமாய்ப் பல பிரச்னைகளைக் கவர்ன்மெண்டு மெம்பர்களை இனி கேட்கலாம். வரவு செலவு கணக்கையும் அவர்கள் பரிசோதிக்கலாம். ஆனால் அவர்களை எல்லாம் கவர்ன்மெண்டாரேதான் நியமிக்கவேணும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், இவ்விஷயம் வெகு முக்கியமான விஷயம். கவர்ன்மெண்டார் அச்சபைக்கு மெம்பர்களையெல்லாம் நியமித்து வந்தால் அம்மெம்பர்கள் ஜனங்களின் கஷ்ட நிஷ்டூரங்களை எடுத்துக்கூற அவர்களுக்கு நாவு வருமா? வர மாட்டாது. ஆதலால் நாம் செய்யவேண்டியது என்ன வெனில், அச்சபைகளில் மெம்பர்கள் நியமன

விஷயமாய் நமக்கும் சொற்ப அதிகாரம் கொடுக்கவேணு மென்று விண்ணப்பம் தயார் செய்து அதற்குப் பல ஆயிரம் கையெழுத்துகளை வாங்கி ஆங்கிலேய நாட்டு பார்லிமெண்டு மெம்பர்களுக்கு அனுப்பவேணும். அதுவுமன்றி அங்கங்கு இவ்விஷயமாய் மகாநாடுகள் கூடவேணும். இல்லாவிடில் நமக்கு எவ்வித நன்மையும் கிடைக்க மாட்டாதென்று வெகுதூரம் சொல்லி உட்கார்ந் தார்.

*'சுதேசமித்திரன்' 12-4-1890*
*பக்க-2.*

★★★★

## பிற்சேர்க்கை - 5

# சுய அரசாட்சி - வினா விடை

(குமரிமலர் மாத இதழில் திரு ஏ.கே. செட்டியார் 1974-75 களில் சுய அரசாட்சி வினா - விடையை **''முதலாவது அரசியல் அரிச்சுவடி - 1883''** எனும் தலைப்பில் முழுவதையும் வெளியீட்டார். 1979-ல் 'இந்திய ஊழியர் சங்கம் (Servents of India society) 'இராயப்பேட்டை கிளையின் தலைவர் பெரியவர் எஸ். ஆர். வேங்கடராமன் 9.4.1979-ல் அன்புடன் எஸ். மர்ரேராஜம் நூலகத்திற்கு 64 சாமியர்ஸ் சாலை, அழைத்துச் சென்றார். அங்கே நான் நேரடியாக 'சுயராட்சி' வினா - விடை, நூலைப் பார்த்து குறிப்பு* எடுத்தேன்)

***''உபயோகமான அறிவைப் பரவச்செய்யும்'' சபையின் பிரசுரங்கள்***

சுய அரசாட்சி
வினா - விடை

★★★

சுதேசமித்திரன்
பத்திராசிரியரால் மேற்படி
சபையாருக்காக இயற்றப்பட்டு

★★★

★ 5அங்கலம் அகலம், 8 அங்கலம் நீளம்

சென்னைப் பட்டணம்
பிர்டீஷ் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது

★★★

இனாமாகக் கொடுக்கப்படும்
க௲அ௱அ௰ங (1883)

★★★

பின்புற அட்டையில் உள்ள விளம்பரம் :
"உபயோகமான அறிவைப் பரவச்செய்யும் சபை"

நமது தேசத்திலுள்ள சாதாரணமான ஜனங்கள் துரைத்தன விஷயமாயும், கைத்தொழில் விஷயமாயும் புரிந்து கொள்ளவேண்டிய உபயோகமான விஷயங் களைத் திரட்டி கூடிய திரவிய சகாயத்துக்குத் தக்கபடி அடிக்கடி சிறிய புத்தகங்களாகவும் பத்திரிகை களாகவும் எல்லோருக்கும் விலையின்றிக் கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன், மேல் குறித்த பெயர் கொண்ட ஓர் சபை சென்னப்பட்டணம் திருவல்லிக் கேணியில் இப்போது ஏற்படுத்தியிருக்கிறது.

இச்சபையில் கனவான்கள் எல்லோரும் சேர்ந்து கூடிய அனுகூலம் செய்வார்களென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

வருஷத்தில் ஒரு ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டுக் கொடுப்பவர்கள் கையொப்பக்காரராகவும், 100 ரூபாய் அல்லது மேற்பட்டுக் கொடுப்பவர்கள் சபையின் பரிபாலகராகவும் ஏற்படுத்தப்படு வார்கள்.

அன்றியும் சமீபத்திலிருந்து அடிக்கடி தகுந்த உதவி செய்யக் கூடாதவர்களாய் இச்சபையின் கருத்துக் கிணங்கினவர்கள் மொத்தமாய்க் கொடுக்கும் திரவிய சகாயத்தை இச்சபையார் மிகுந்த வணக்கத்துடன் அங்கீகரித்துக்கொள்கிறார்கள்.

2. இச்சபைக்கு வரும் கையொப்பத் தொகையும் மொத்தமாகக் கொடுக்கும் திரவியத்தையும் பெற்றுக் கொண்டு மேல் விவரித்தபடி அதை உபயோகிக்க ஓர் நிர்வாக சபை சென்னப்பட்டணத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

இந்த நிர்வாக சபையார் மூன்று மாதத்துக்கு ஒரு தரம் சபையின் வரவு செலவு கணக்குகளை பகிரங்கப் படுத்துவார்கள்.

அன்றியும் பத்திரிகைகளாகவும் புத்தகங்களாகவும் பிரசுரஞ் செய்யத் தகுந்த விஷயங்களை எழுதி அனுப்பு வித்தால் அவற்றைக்கூட அங்கீகரித்துக் கொள்ளு வார்கள்.

3. சபையைக் குறிக்க வேண்டிய சமாசாரங்களுக் காக சென்னப்பட்டணம் திருவல்லிக்கேணியில் சிங்கராச்சாரியார் தெருவிலிருக்கும் காரியதரிசிகளாகிய மு. வீரராகவாசாரியார், பி.எ. அல்லது என். பட்டாபி ராமராவு, பி.எ. இவர்களுக்கு எழுதவேண்டியது.

இச்சபையார் இப்போது சுய அரசாட்சி விஷயமாய் வினா விடையாக ஓர் புத்தகம் தெலுங்கிலும் அச்சிடக் கொடுத்திருக்கிறார்கள்.

★★★

## சுய அரசாட்சி
### வினா - விடை

வினா : நீர் ஆர்?

விடை : நான் ஹிந்து, சீமை (விக்டோரியா மகாராணி பிரஜைகளில் ஒருவன்.

**வினா :** ஹிந்து என்றால் ஆர்?

**விடை :** ஹிந்து மதத்தில் அபிமானம் வைக்கிறவனும், ஹிமாலயம் முதல் கன்னியாகுமரி பரியந்தமுள்ள இந்த தேசம் தன் சொந்த தேசம் என்று அறிந்து அதன் க்ஷேமத்துக்காக தனக்கு மிகுந்திருக்கும் தனம், அவகாசம், புத்தி இவைகளைச் செலவிடுகிறவனும், தன் தேசத்திலிருக்கும் 25 கோடி ஜனங்களையும் ஜாதி மத குல பேதமின்றி தன் சகோதரர்கள் போல் பாவித்து அவர்களின் நன்மைக்காகப் பாடுபட்டு தீமைகளை விலக்க முயலுகிறவனுமே ஹிந்து.

**வினா :** ஆனால் மகமதியர்களும் கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களல்லவோ?

**வினா :** அல்ல. ஆனால் ஹிந்துக்களும் இவர்களுக்கும் மதவித்தியாச மிருப்பினும் ஒரே தேசஸ்தர்களாயும், தேசத்துக்குண்டாகும் நன்மை தீமைகளுக்கும், க்ஷேமக்ஷாமங்களுக்கும் பொதுவாய்ப் பாத்தியப்பட்டவர் களாயுமிருக்கிறபடியால் இந்தியாவில் வசிக்கும் சகல ஜாதிமார்களும் சகோதர சம்பந்தமுள்ளவர்களாகவே பாவிக்கப்பட வேண்டும்.

மேலும் தேசத்தின் அபிவிர்த்திக்கும் பெருமைக்கும் நமக்குள் ஐக்கியமும் அன்பும் வேண்டுமல்லவா?

மதபேதம் என்பதற்கு சச்சரவு என்று அர்த்த மல்லவே. ஒவ்வொருவரும் தம்தம் முன்னோர் மதாசாரங்களை அனுசரித்துப் பராமரித்து வருவதோடு அந்நிய மதஸ்தர்களை பொது விஷயங்களில் தேச நன்மைக்காக அபிமானித்து ஒத்துப் பிழைக்கலாமே.

இந்த மதமாற்சரியங்களே நமது தேசத்தைக் கெடுத்து இப்போதைய ஈனஸ்திதிக்கும் கொண்டு வந்தன.

நான் எல்லா மதஸ்தர்களும் ஒன்றாய்ப் போக வேண்டுமென்று சர்வதேவ சொல்லவேயில்லை; ஆனால் நான் சொல்லுவது என்னவென்றால், மதவித்தியாசத்தோடு ஐக்கியமும், சத்தியமும், மன உறுதியும் வேண்டும்.

இல்லாத பட்சத்தில் நாம் 25 கோடி சங்கையுள்ள ஜாதியான போதிலும், அவ்வளவும் காக்கைக் கும்பலுக்குச் சமானந்தான்.

**வினா :** ''மகாராணியவர்களின் பிரஜைகளில் ஒருவன்'' என்று பெருமையாய்ச் சொல்லிக் கொண்டீரே அதென்ன?

**விடை :** ஆம், இந்த இந்தியா தேசத்தை ஆளுகிறவர் இங்கிலாந்து தேசத்து அரசியாகிய விக்டோரியா மகாராணி யவர்களாகையால் இந்த தேசத்து ஜனங்கள் அவர் பிரஜைகள்தான். அவர் பிரஜைக்கு மற்ற தேசத்தைவிட அதிகப் பெருமை யுண்டு. எப்படியென்றால் பிரிட்டன் (Britain) ராச்சியத்துக் குடிகளுக்கே சில சுதந்திர பாத்தியங்கள்

உண்டு அவைகளாவனர் 1, 1. சரீர சுதந்திரம், 2. வாக்கு சுதந்திரம், 3. அச்சு சுதந்திரம்.

சரீர சுதந்திரமாவது கவர்ன்மெண்டார் செய்து வரும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற்வரையில் கவர்ன்மெண்டாராகட்டும் எந்த உத்தியோகஸ்தர் ஆகட்டும் என் சரீர சுதந்திரத்தைப் பிடுங்கி என்னை சிறைப்படுத்த பாத்தியமில்லை.

வாக்கு சுதந்திரமாவது ஒருவருடைய நடத்தை யையாவது, குணத்தையாவது, தூஷிக்காமல் மதவிஷ யத்தைக் குறித்தோ துரைத்தன விஷயத்தைக் குறித்தோ வேறு எந்தப் பொது விஷயத்தைக் குறித்தோ எனக்குத் தோன்றினதை எங்கேயாகட்டும் பயமில்லாமலும் ஒருவர் தயவுக்கு எதிர் பார்க்காமலும் சொல்லலாம்.

அச்சு சுதந்திரமாவது, மேற்சொன்னவாறு எந்தெந்த அபிப்பிராயங்களை பயமில்லாமலும் ஒருவர் தயவை எதிர்பார்க்காமலும் வாயினால் சொல்லலாமோ அவைகளை காகிதத்திலும் அச்சிட்டுப் பிரசுரம் செய்யலாம்.

இத்தேசத்தில் சமாசார பத்திரிகைகள் (இங்கிலீஷ் பாஷையில் நியூஸ் பேப்பர் என்றவைகள்) இல்லவே யில்லை. அவைகள் ஏற்பட்டு நாற்பது ஐம்பது வருஷமே ஆயினும், ஆரம்பத்திலேயே அவைகளுக்கு முழு சுதந்தரமும் கொடுக்கப்பட்டது. இந்த சமாசார பத்திரிகைகள் ஐரோப்பாவில் வெகு ஜாஸ்தி. ஆனால் இங்கிலாந்து தேசத்தைத் தவிரவேறு எந்த தேசத்திலும் சுதந்திரமில்லை.

கவர்ன்மெண்டுக்காவது உத்தியோகஸ்தர்களுக் காவது விரோதமாக ஏதாவது எழுதினால் அந்தப் பத்திரிகையை கவர்ன்மெண்டார் பலவந்தமாய் நிறுத்தி விடலாம். இங்கிலாந்தில் அப்படி நிறுத்த கவர்ன் மெண்டுக்காவது கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் களுக்காவது அதிகாரங் கிடையாது. வெகு நூற்றாண் டாய் இங்கிலாந்து பத்திரிகைகள் இப்படி சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றன.

இந்தியாவிலும் சென்ற ஐம்பது வருஷ காலமாய், அநேகமாய் பத்திரிகைகள் இந்த தேசத்தில் தோன்றின காலந் தொடங்கியே, அவைகளுக்கு அப்படியொரு நிர்ப்பந்தமும் இல்லை.

1858-ஆம் வருஷத்தில் சிப்பாய்கள் கலகம் பண்ணின பொழுது ஒருதரம் பத்திரிகைகளின் சுதந்தரம் குறைக்கப்பட்டது. ஆனால் கலகம் ஆனதும் பழைய சுதந்திரம் கொடுக்கப்பட்டு போயிற்று.

பிற்பாடு லிட்டன் பிரபு நமக்கு ராஜப்ரதிநிதியாய் இருந்த காலத்தில் சுதேசபாஷை பத்திரிகைகளெல்லாம் துரைத்தனத்துக்கு விரோதமாய் எழுதுகிறதென்று பயந்து அப்பேர்ப்பட்ட பத்திரிகைகள் இனிமாஜிஸ்ட் ரேட்டுகளின் முன்பாக ஒரு ஜாமின் பத்திரம் கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்.

இந்தத் தீர்மானம் இங்கிலாந்து தேசத்தார். காதில் எட்டினதும் அவர்கள் ஆச்சரியப்பட்டுத் திகைத்து இங்கிலீஷ் துரைத்தனத்தாரும் இப்பேர்ப்பட்ட தகாத நடவடிக்கை நடத்துவார்களா! என்று துக்கித்து (அப்படி

நமது தேசபாஷை பத்திரிகைகளின் சுதந்தரத்தைக் குறைக்க எந்த மந்திரிகள் அனுமதி கொடுத்தார்களோ அந்த மந்திரிகளை உத்தியோகத்தினின்று நீக்கி) இப்போதிருக்கும் மந்திரிகளை நியமித்து லார்டு லிட்டன் பண்ணின தீர்மானத்தை உடனே ரத்து செய்வித்தார்கள்.

இந்தப் புது மந்திரிகள் நமக்கு ரிப்பன் பிரபுவை ராஜப்ரதிநிதியாக அனுப்பிவித்தார்கள்.

ஆகையால் பிரஜைகளை அரசனின் சொத்துப் போல் நினையாமல், பிரஜைகளின் சௌக்கியத்துக்கும் சுகத்துக்குமே அரசர்களும் துரைத்தனங்களும் ஏற்பட்டிருக்கின்றன என்று நிதானித்து, அதற்குத் தக்க விதமாய் இங்கிலாந்தியர் பார்லிமெண்ட் என்று தாங்கள் ஒரு சொந்த சபையை யேற்படுத்தி, தங்கள் கவர்ன் மெண்டை நடத்திக் கொள்ளுகிறார்கள்.

அப்பேர்ப்பட்ட மகாதேசத்தின் பார்வையில் நாமிருக்கிறவரையில் அவர்கள் மனதார யாதொரு குறையும் செய்யமாட்டார்கள்.

இப்போது நாம் இங்கிலீஷ் துரைத்தனத்தாரால் அனுபவிக்கும் துக்கங்களில் லட்சத்திலொரு பங்கு கூட இங்கிலாந்திலிருப்பவர்களுக்குத் தெரியாது. இங்கே நடக்கிறது அவர்களுக்குத் தெரிய சந்தர்ப்பமில்லை. இவ்விடத்திய இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்கள் வாஸ்தவத்தைச் சொல்லுகிறதுமில்லை.

ஆனால், இங்கிலாந்தில் எப்போதெப்போது தெரிந்ததோ அப்போதெல்லாம் நமக்கு சகாயமே செய்து வந்திருக்கிறார்கள்.

**வினா :** இவர்களாலே இந்தியா தேசத்தின் துரைத்தனம் எப்படி நடந்து வருகிறது?

**விடை :** மகாராணியின் மந்திரிமார்களும் பார்லிமெந்தும் மேல் விசாரணை மட்டும் செய்து வருகிறார்கள்.

இந்தியா தேசத்த ஜனங்கள் பிரத்தியேகமாயாவது ஒன்று சேர்ந்தாவது எந்த விஷயத்தைக் குறித்தாவது மனுப் பண்ணிக் கொண்டால் அவர்கள் விசாரிப்பார்கள். சகல விஷயங்களிலும் முடிவான உத்திரவு செய்ய அதிகாரமுள்ளவர்கள்.

ஆனால் டிபார்ட்டுமெண்டு விஷயங்களை இந்த சபையார் கவனிக்க முடியாதாகையால் இந்த மந்திரிகளில் ஒருவரை இந்தியா செக்ரிடேரி (அதாவது காரியதரிசி)யாக நியமித்து இவருக்குத் தனியாய் வேறே பதினாறு மந்திரிகள் கொடுத்து இந்த செக்ரிடேரியும் அவர் மந்திரிகளும் ஆலோசித்து, இந்தியாவில் நடக்கும் சகல விஷயங்களுக்கும் வேண்டிய பொழுது தங்கள் அபிப்பிராயத்தையும் உத்திரவையும் கொடுத்து வருகிறார்கள்.

**வினா :** இந்தியாவின் துரைத்தன காரியத்தை இந்தியாவிலிருந்து யார் பார்க்கிறார்கள்?

**விடை :** கவர்னர் ஜனரல் என்றும், ராஜபிரதிநிதியென்று அர்த்தம் கொள்ளும் வைஸ்ராய் என்றும் பட்டமுள்ள ஒரு உத்தியோகஸ்தர் இந்த தேசத்து துரைத்தனத்தை இந்த தேசத்திலிருந்தே பார்த்து வருகிறார். இந்தியா முழுமைக்கும் இவரே அதிகாரிகள்.

இவருக்கு மந்திரிகள்: 1. அரசிறை மந்திரி, 2. சட்ட நிரூபண மந்திரி, 3. மராமத்து, ரயில், கால்வாய் முதலானவைகளின் மந்திரி, 4. இராணுவ மந்திரி.

இவர்களில் ஒவ்வொருவரும் அவரவர் இலாகாவுக்கு முக்கிய அதிகாரிகள். ஆனால் எந்த டிபார்ட்மெண்டாலும் ஒவ்வொரு உத்திரவையும் கவர்னர் ஜனரல் உள்பட எல்லாரும் சேர்ந்தே செய்யவேண்டும்.

கவர்னர் ஜனரல் சகலத்துக்கும் தலைவராகிலும் அவருக்கு இந்த மந்திரிகளை யோசனை கேட்காமல் யாதொரு உத்திரவு முதலானவைகளும் செய்யக் கூடாது. ஆகிலும் சில விசேஷ சமயங்களில் மாத்திரம் இவர்கள் அபிப்பிராயத்தை மீறிச் செய்யலாம்.

ராச்சியத்தில் கலக முதலானது உண்டான காலமானாலும் க்ஷாமம் முதலான காலமானாலும் தன் சபையாருடைய யோசனையை அனுஷ்டிப்பது யோக்கியமல்ல வென்றும் அப்படி அனுஷ்டிப்பதால் மோசம் வருமென்று தோன்றினாலும் அப்போது தன் மந்திரிகளுடைய அபிப்பிராயத்தை மீறி நடக்கலாம்.

**வினா** : இவருக்கு ராஜப்பிரதிநிதியென்று பேர் வருவானேன்?

**விடை** : இங்கிலாந்து ராஜா இந்த தேசத்துக்கு ராஜா வாகையாலும், அத்தேசத்து அரசன் இத்தேசத்துக்கு வந்துபோய் அரசாட்சி செய்வது அசாத்தியமானதாலும், அந்தஸ்தும் ராஜரீகத்தில் அனுபோகமுள்ள ஒரு பிரபுவை இங்கே யனுப்புவித்து, ராஜாங்கத்தை

நடப்பிவிப்பதால், அந்தப் பிரபுவுக்கு ராஜப்பிரதிநிதி என்று பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவருக்கு ராஜப்பிரதிநிதி யென்று பட்டம் 1858-ம் வருஷத்துக்குப் பிற்பாடுதான் கொடுக்கப் பட்டது. அதற்கு முன்னால் கவர்னர் ஜனரல் என்ற பேர் மாத்திரம் இருந்தது. இப்போதிரண்டு பேரும் வழங்குகிறது.

அவருடைய அந்தஸ்துக்கு லட்சணமாய் ராஜப் பிரதிநிதியென்ற பேரும், அவருடைய அதிகாரத்துக்கு லட்சணமாய் கவர்னர் ஜனரல் என்ற பேரும் வழங்குகிறது.

துரைத்தன உத்திரவுகளிலும் தஸ்தாவேஜிகளிலும் கவர்னர் ஜனரல் என்ற பேரும், இவர் தலைவரா யிருக்கும் இந்தியா கவர்ன்மெண்டரின் உத்திரவுகள் மகாகனம் பொருந்திய கவர்னர் ஜனரலவர்ளும் சபையாரும் செய்த உத்திரவுகளாகவும் வழங்கும்.

**வினா :** இவருக்கு கவர்னர் ஜனரல் என்று பேர் வருவானேன்?

**விடை :** கவர்னர் ஜனரல் என்பதற்கு ''பொது வான அதிபதி'' என்று அர்த்தம். இவருக்குக் கீழே அனேக கவர்னர்கள் இருக்கிறபடியாலும், இவர்களுக்கு மேலெல்லாம் பொதுவான மேலதிகாரத்தை இவர் செலுத்துகிற படியாலும் இவருக்கு இந்தப்பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**வினா :** இவருக்குக் கீழான கவர்னர்கள் யாரார்?

**விடை :** பங்காளம், பம்பாய், சென்னப் பட்டணம், வடமேற்கு மாகாணங்கள் (அயோத்தியாவும்

பஞ்சாபும்) மத்திய மாகாணங்கள், பிரிடிஷ், பர்மா, அஸ்ஸாம் இந்த மாகாணங்களெல்லாம் ஒவ்வொன்றும் கவர்னர் ஜனரலின் உத்திரவுகளுக்கும் தீர்மானங்களுக் கும் அடங்கினவைகள்.

ஒரு மாகாணம் மற்றொரு மாகாணத்து அதிகாரிகளுக்கு அடங்கினவைகளல்ல.

பம்பாய், சென்னப்பட்டணம் இந்த மாகாண களின் அதிகாரிகளுக்கு கவர்னர்கள் என்று பேர் இந்த இரண்டு கவர்னர்களுக்கும் ஆலோசனை சபை யென்றும் சட்ட நிரூபண சபையென்றும் இரண்டு சபைகள் உண்டு.

பங்காளத்து அதிகாரிக்கு உதவி கவர்னர் (இங்கிலீஷில் லெப்டினென்ட் கவர்னர்) என்று பேர். இவருக்கு ஆலோசனை சபையில்லை, சட்ட நிரூபணசபை மட்டும் உண்டு.

வடமேற்கு மாகாணங்கள், பஞ்சாப் இவைகளின் அதிகாரிக்கு உதவி கவர்னர் என்று பேரிருந்தும் ஆலோசனை சபையில்லை, சட்ட நிரூபண சபையு மில்லை.

மத்திய மாகாணங்கள், பிரிட்டிஷ் பர்மா, அஸ்ஸாம் இந்த மாகாணங்களின் அதிகாரிகளுக்கு கம்மிஷ ணர்கள் என்று பேர்.

இவர்கள் மற்றவர்களைவிட கீழ் அந்தஸ்தும் குறைந்த சம்பளமும் உள்ளவர்கள்.

**வினா :** ஏன் இப்படி மாகாணங்களின் அதிகாரி களுக்குப் பலவிதமான அந்தஸ்தும் சம்பளமும் கொடுக்க வேண்டும்?

**விடை :** ஏனென்றால், அதற்கு அந்தந்த மாகாணங்களின் விஸ்தீரணமாவது ஜனத் தொகையாவது நாகரீகமாவது காரணமல்ல.

இந்த இந்தியா தேசத்தை இங்கிலீஷ்காரர் துண்டு துண்டாகக் கைவசமாக்கினார்கள். அப்போதைக்கப் போது கைவசமான பிராந்தியங்களுக்கு அப்போதைக் கப்போது பிரத்தியேகமான துரைத்தனத்தை ஏற்படுத்தி வந்தார்கள்.

முதலாவது சென்னப்பட்டணம் கைவசமாயிற்று, அதற்கு ஒரு கவர்னரும் ஆலோசனை சபையாரும் ஏற்பட்டார்.

பிற்பாடு பங்காளத்துக்கும் அப்படியே யாயிற்று. பங்காளம் கைவசமான போது இந்தியாவின் மற்ற பாகங்கள் கைவசமாக வில்லை.

இம்மூன்று கவர்னர்களும் சுவாதீனஸ்தர்களாய் இங்கிலாந்தில் கம்பேனியாரிடத்தில் உத்தரவு முதலானது பெற்றுக்கொண்டு ஒவ்வொருவரும் தமக்குத் தோன்றியபடி ராஜ்ஜியபாரம் பண்ணினார்கள்.

ஆகையால் இவர்களுக்குள் ஒற்றுமையில்லாமலும், ஒருவருக்கொருவர் ஒத்தாசையில்லாமலும் இருந்தது. ஆகையால் கம்பேனியாரால், பங்காளத்து கவர்னரை கவர்னர் ஜனரலாக்கி மற்ற சென்னைப் பட்டணம், பம்பாய் கவர்னர்கள் இவர் உத்திரவுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

1783-ம் வருஷத்திலேதான் பங்காளத்து கவர்னரை உதவி கவர்னராக்கி, அவருக்கு சட்ட

நிரூபண சபை மட்டும் கொடுத்து, பங்காளம் கவர்னரா யிருந்த வரை பொது அதிகாரியாக்கி, இந்த பங்காளத்தையும் மற்ற மாகாணங்களையும், மேல் விசாரணை மட்டும் செய்து வரும் படியாய் இந்தியா கவர்ன்மெண்டு என்றும் அதற்கு கவர்னர் ஜனரல் தலைவரென்றும் ஏற்படுத்தினார்கள்.

ஆகையால் இப்போது மேற்கண்டவாறு வெவ்வேறு அதிகாரமும் அந்தஸ்துமுள்ள ஏழு கீழ் கவர்ன்மெண்டுகளும், இந்தியா கவர்ன்மெண்டென்கிற ஒரு பொது கவர்ன்மெண்டும் இருக்கின்றன.

**வினா :** இந்தியா கவர்ன்மெண்டார் மற்ற கீழ் கவர்ன்மெண்டார் பேரில் எம்மாதிரியான அதிகாரத்தைச் செலுத்தி வருகிறார்கள்?

**விடை :** (1) அந்நிய தேசத்தாரோடு போக்கு வரவு செய்தல், யுத்தம் அல்லது சமாதானம் செய்தல்.

2. சட்டம் செய்தல் (லோகல் கவர்ன்மெண்டார் செய்யும் சட்டத்துக்கும் இந்தியா கவர்ன் மெண்டாரின் அனுமதி வேண்டும்.
3. வரி போடுதல்.
4. தேசத்தில் வசூலாகும் தொகைகளை பொதுச் செலவுக்கு இவ்வளவென்றும், அந்தந்த மாகாணங் களின் சொந்தச் செலவுக்கு இவ்வளவென்றும் விபாகித்தல்.
5. பொதுவாய் ராஜரீகம் நடத்தும் தோரணையை ஒழுங்குப் படுத்துதல்.

6. லோகல் கவர்ன்மெண்டுகள் செய்யும் சில நடவடிக்கைகளின் பேரில் செய்யப்படும் அப்பீல்களை விசாரித்தல்.

7. கடன் வாங்குதல்.★

**வினா :** ராஜ்ஜியத்தில் பொதுச் செலவுகளாவன எவை?

**விடை :**

1. சைனியச் செலவு
2. பெரிய நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் செலவு
3. ரயில் பாதைகளின் செலவு
4. தபால், தந்தி இந்த இலாகாக்களின் செலவு
5. சில சிவில் விஷயங்களின் செலவுகள்.

இந்தப் பொதுச் செலவுகளுக்காக இந்தியா கவர்ன் மெண்டார் சில வரும்படிகளை தங்கள் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவையாவன.

1. நிலங்களில் வசூலாகும் கிஸ்தி ரெவினியு.
2. சாராயம் முதலிய குடிவகையறாவில் வரும் ரெவினியு.
3. கடற் சுங்க வரியால் கிடைக்கும் ரெவினியு

---

★ இந்தியா கவர்ன்மெண்டார் செய்யும் யுத்தம், சட்டம், ராஜரீக ஒழுங்குகள் இவைகளுக்கும் அவர் போடும் வரிக்கும் இங்கிலாந்து மகாராணியின் மந்திரியில் ஒருவராகிய இந்தியா செக்ரிடேரியின் முன்னனுமதி பெற்றுக்கொண்டு நடத்த வேண்டும்.

4. உப்பு வரியால் கிடைக்கும் ரெவினியு
5. ஸ்டாம்பு ரெவினியு
6. இன்னும் சில சில்லரை ரெவினியுக்கள்.

இவைகளில் வரும் வரும்படிகளை அந்தந்த மாகாணத்து கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன் மெண்டாரின் ஏஜண்டு போலிருந்து வசூல் செய்து இந்திய கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிவிட வேண் டியது.

இந்திய கவர்ன்மெண்டார் மேற்கண்ட பொதுச் செலவுக்கு எவ்வளவு தொகை வேண்டுமோ அது போக பாக்கியில் சில தொகைகளை லோகல் (கீழ்) கவர்ன்மெண்டாருக்குக் கொடுத்து இஷ்டப்படி செலவு செய்து கொள்ளச் சொல்லுவார்கள்.

ஆகையால் நமது ராஜதானியில் வசூலாகும் பணம் பம்பாயில் ரயில் போடவாவது, பஞ்சாப்பின் சம்ரட்சணைக்கு வேண்டிய சைனியச் செலவுக்காவது அல்லது மத்திய மாகாணத்தில் கால்வாய் வெட்ட வாவது உபயோகிக்கப்படும்.

அப்படியே மற்ற மாகாணத்துப் பணத்தை நமது ராஜதானிக்கும் உபயோகப்படுத்துகிறது முண்டு.

**வினா :** ஆனால் இந்த ராஜதானியில் வசூலாகும் 10.30 கோடி ரூபாயிலும் இந்தக் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமே யில்லையா?

**விடை :** 1871 வருஷத்துக்கு முன்னால் இந்த ராஜதானியில் வசூலாகும் தொகையில் ஒரு காசாவது

சுவயமாய்ச் செலவு செய்ய இந்த கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமில்லை.

அந்த வருஷத்தில் மேயோப்பிரபு என்ற கவர்னர் ஜனரல் சில இலாகாக்களைக் குறித்து, இவைகளுக்கு வேண்டிய செலவுகளுக்காக பொது ரெவினியுவி லிருந்து மொத்தமாக சில தொகையை லோகல் கவர்ன்மெண்டார் வசம் ஒப்புவித்து, அவர்களையே சுவயேச்சையாகச் செலவிடும்படி ஏற்பாடு செய்தார்.

இந்த இலாகாக்களிருந்து வரும் வரும்படியையும் இந்தியா கவர்ன்மெண்டார் கணக்கில் பதியாமல் லோகல் கவர்ன்மெண்டார் கணக்கில் பதிந்து அவர்கள் வசம் ஒப்புவிக்கப்படுவதாய் ஏற்பாடு செய்யப்பட்டது.

இப்படி லோகல் கவர்ன்மெண்டார் வசம் ஒப்புவிக்கப்பட்ட இலாகாக்களாவன :

1. ஜெயில்கள்
2. ரிஜிஸ்ட்ரேஷன்
3. போலீஸ்
4. எடியுகேஷன் (பாடசாலை இலாகா)
5. இன்னும் சில சில்லரை இலாகாக்கள்

இப்படி லோகல் கவர்ன்மெண்டார் வசம் ஒப்பு விக்கப்பட்ட தொகை 87 லட்சத்துச் சொச்ச ரூபாய் போக 9 கோடியே சொச்ச ரூபாயும் இந்தியா கவர்ன் மெண்டாரின் சுவாதீனச் செலவாகவே இருந்து கொண்டு வந்தது.

போன வருஷத்தில் ஹிந்துக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்கிற உறுதியான எண்ணத்துடன் இந்த தேசத்துக்கு வந்த ரிப்பன் பிரபு ஏற்பாடுகளை இன்றும் விர்த்தி பண்ணிப் புது ஏற்பாடுகள் செய்தார்.

**வினா :** என்னென்ன புது ஏற்பாடுகள் செய்தாரோ?

**விடை :** மேயோப்பிரபு செய்த ஏற்பாடு நல்ல எண்ணமும் பிரமாணமுமுள்ளதாயிருந்தும், எந்த இலாகாக்களின் வரும்படியே லோகல் கவர்ன்மெண்டாருக்கு ஒப்பு வித்தார்களோ அந்த இலாகாக்களின் வரும்படியும், இந்தியா கவர்ன்மெண்டார் கொடுக்கும் மொத்தத் தொகையும் சொற்பமாயிருந்தபடியால், லோகல் கவர்ன்மெண்டாருக்குத் தகுந்த சுவாதீன சுதந்தரத்தை அந்த ஏற்பாடு கொடுக்கவில்லை.

ரிப்பன் பிரபுவின் ஏற்பாடுகள் அப்படிப் பட்டவையல்ல. முதலாவது லோகல் கவர்ன்மெண்டாருக்கு முன்போல மொத்தத் தொகையைக் கொடுக்காமல் சில வரும்படிகளின் ஆதாரங்களை ஒப்புவித்து அவைகளைப் பெருக்கவும், விர்த்தி செய்யவும் லோகல் கவர்ன்மெண்டாரின் கடமையாக விடப்பட்டிருக்கிறது.

மேலும் சில வரும்படிகளின் முழுதும் ★ இம்பீரியல் வரும்படிகளாகவும், சில வரும்படிகளை பாதி இம்பீரியல் பாதிப்ரொவின்ஷியல் வரும்படிகளாகவும், வேறு சில வரும்படிகளை முழுதும் ப்ரொவின்ஷியலாகவும், செய்யப்பட்டிருக்கிறது.

இதனால் லோகல் கவர்ன்மெண்டார் கொடுத்த பணத்தைச் செலவிட்டு கணக்கு ஒப்புவிக்கும் காரியஸ் தன்போல அக்கறையில்லாதவர்களாக யிருக்கிறதை விட்டு, இப்போதைய ஏற்பாட்டுப்படி, தங்களிடத்தில் ஒப்புவித்திருக்கும ரிவினியுக்களை முயற்சி செய்து விர்த்திக்குத் கொண்டு வர கவலை தோன்றும்.

**வினா :** இப்படி அங்கங்கே வசூலாகும் பணத்தில் பெரும் பாகத்தை இந்தியா கவர்ன் மெண்டாரே வைத்துக்கொண்டு சில பாகத்தை லோகல் கவர்ன்மெண்டு வசத்தில் ஒப்புவித்து அவர்களை அக்கறைப் படச் செய்வதில் என்ன லாபம்?

**விடை :** இதனால் பெரும் லாபம் உண்டு, என்ன வென்றால், சிம்லாவிலோ கல்கத்தாவிலோ இருந்து கொண்டு ஸ்தல விசேஷத்தை யறியாத உத்தியோகஸ் தர்கள் இவ்வளவு விஸ்தீரணமுள்ள தேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் நடக்கும் நன்மை தீமைகளை அறிகிறது கஷ்ட மல்லவா?

அப்படி நன்மை தீமையறிந்து ராஜ்ஜிய வரும் படியைச் செலவு செய்தல் அரச நீதியல்லவா?

★ இம்பீரியல் ரிவினியுக்கள் முற்றிலும் இந்தியா கவர்ன் மெண்டாரின் சுவாதீனத்திலிருப்பவைகள், அவைகளைக் குறைக்கவும், அதிகரிக்கவும், செலவிடவும் இந்தியா கவர்ன் மெண்டாரின் அதிகாரமேயன்றி கீழ் கவர்ன்மெண்டாரின் அதிகாரமல்ல. அப்படி ப்ரொவின்ஷியல் ரிவினியுக்கள் லோகல் (கீழ்) கவர்ன்மெண்டாரின் சுவாதீனத் திலிருப் பவைகள்.

அதையறிந்து ராஜ்ஜிய தந்திர நிபுணனாகிய மேயோப் பிரபு சில தொகைகளை லோகல் கவர்ன்மெண்டார் வசம், ஸ்தல விசேஷத்துக்குத் தக்கபடி நன்மை தீமைகளையறிந்து செலவிடச் சொல்ல ஏற்பாடு செய்தார்.

இந்த ஏற்பாட்டை ரிப்பன் பிரபு விர்த்தி பண்ணினார்.

இன்னொரு லாபம் என்ன வென்றால், இப்படி சில வருமான ஆதாரங்களை இந்தியா கவர்ன்மெண்டார் லோகல் கவர்ன்மெண்டார் வசம் ஒப்புவிப்பதனால் லோகல் கவர்ன்மெண்டார் இன்னும் அல்பமான வேறு சில வரும்படி மூலங்களை ஸ்தல கமிட்டிகள் வசம் ஒப்புவித்து, எப்படி தாங்கள் இந்தியா கவர்ன் மெண்டாரிடத்திலிருந்து சுவாதீனம் பெறுகிறார்களோ அப்படியே அவ்விடத்திய கமிட்டிகளும் (அதாவது முனிசிபாலிடி, லோகல்பண்டு போர்டு முதலான வைகள்) லோகல் கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இந்த லோகல் கமிட்டிகளுக்குக் கொடுக்கும் சுவாதீனத்தைத்தான் இப்போது லார்டு ரிப்பன் சுய அரசாக்ஷி என்று சொல்லி அதை அவ்வளவு முக்கியமாக நினைத்து அந்த விஷயமாய் அனேக தீர்மானங்களைச் செய்திருக்கிறார்.

**வினா :** ஆம் ஐயா! இப்போது எங்கே பார்த்தாலும் சுவய அரசாட்சி என்று கூக்குரலிடுகிறார்களே இது தானா?

**விடை :** ஆம், அது இன்னதென்று உமக்கும் உம்மைப் போலொத்த மற்றவர்க்கும் தெரியவேண்டு மென்றே இப்பொழுது இந்தப் புஸ்தகம் எழுதப்பட் டிருக்கிறது.

இதை நீரும் மற்றவரும் கவனமாய் வாசித்து விஷயத்தை யறிந்து கொண்டு அதன்படி நடக்கமுயல வேண்டும்.

ஜனங்களே தங்கள் தேசத்து விஷயங்களைத் தாங்களே ஒன்று சேர்ந்து பொதுப்படப் பார்த்துக் கொண்டு போவது சுவய அரசாட்சி.

அப்படி ஜனங்களே தங்கள் பொது விஷயங் களைத் தாங்களே பார்த்துக்கொண்டு போவதிலும், இங்கிலாந்தைப் போல சில தேசங்களில் அரச ரென்று ஒருவரிருக்கிறது முண்டு.

பிரான்சு, அமெரிக்கா முதலான சில தேசங்களில் அரசனேயில்லாமல் ஜனங்களே சேர்ந்து தங்கள் புத்திக்கு தோன்றினபடி ராஜ்ஜியத்தை ஆண்டு வருகிறது முண்டு.

**வினா :** அரசனில்லாமல் ஜனங்களாலேயே எப்படி ராஜ்ஜியம் நடக்கின்றது?

**விடை :** வருத்தம் ஒன்றுமில்லை, ஜனங்களுக் குள் அறிவும், தேசாபிமானமும், ஐக்கியமும் விர்த்தி யாகுமானால் அனுபோகத்தினாலேயே எப்பேர்ப்பட்ட வித்தையையும் - அது ராஜ்ஜிய தந்திர வித்தை யானாலும் - தெரிந்து கொள்வார்கள்.

அமெரிக்கா, பிரான்சு போலொத்த தேசங்களுக்கு குடி அரசு நாடுகள் என்று பேர்.

இந்தக் குடி அரசு நாடுகளிலே, அங்கங்கே, நமது தேசத்தில் தாலூக்கா வென்றதை விடச் சிறிதான பிரிவுகளிருக்கும்.

அந்தப் பிரிவுகளிலிருக்கும் ஜனங்கள் எல்லோரு மோ, அல்லது குறித்த சில யோக்கியதை உள்ளவர்கள் மாத்திரமோ, சேர்ந்து, தங்களுக்குப் பிரதிநிதியாக (அதாவது காரியஸ்தன் போல்) ஒரு வரை நியமிப் பார்கள்.

இப்படி தேசத்திலிருக்கும் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஜனங்கள் தங்களுக்கு வேண்டினவர்களை பிரதிநிதியாக நியமித்துக் கொள்வார்கள்.

இந்தப் பிரதிநிதிகள் எல்லாரும் சேர்ந்து ஒரு சபையாவார்கள். இந்த சபையார் தங்களுக்குள் ஒருவரை ப்ரெசிடெண்டாக (அதாவது சபாநாயகராக) நியமித்துக் கொள்வார்கள்.

இந்த சபாநாயகர்தான் ராஜஸ்தானத்திலிருப்பவர். ஆனால் இவருக்கு உத்தியோகஸ்தரை வைக்கிறது எடுக்கிறது இந்த அதிகாரத்தைத் தவிர, மற்ற விஷயங்களில் சபையார் என்ன அபிப்பிராயப்படுகிறார் களோ, என்ன உத்தரவு இடுகிறார்களோ, அதின்படியே அவர் நடக்க வேண்டும்.

இந்தப் பிரதிநிதிகளும், எந்தெந்த ஊருக்குப் பிரதிநிதிகளாக நியமிக்கப் பட்டார்களோ அந்தந்த ஊராருடைய நன்மைக்குப் பாடுபடுகிறது மன்றியில் அவர்களுடைய அபிப்பிராயப்படிக்கும் நடப்பார்கள்.

இந்தப் பிரதிநிதிகளும், பிரதிநிதிகளுக்கு ஏஜமானனாகிய ப்ரெசிடெண்டும், மூன்று வருஷம், அல்லது நான்கு வருஷத்துக்கு ஒரு தரம் புதிது புதிதாக நியமிக்கப்படுவார்கள்.

ஆகையால் எந்தப் பிரதிநிதி தன் வேலையைக் கவனிக்கிறதில்லையோ, எவர் தமது ஊராருடைய அபிப்பிராயப்படி நடக்காமல் சொந்தப் பிரயோஜனத்தையாவது அல்லது சொந்த அபிப்பிராயத்தையாவது அனுசரித்து நடக்கிறாரோ, அவரை அந்த மூன்று அல்லது நான்கு வருஷம் கழித்து மறுபடியும் ஜனங்கள் நியமிக்க மாட்டார்கள்.

வேறு யார் அப்படிச் செய்யாமலிருப்பதாக வாக்குத் தத்தம் செய்கிறார்களோ அவரைப் பார்த்து நியமித்துக் கொள்ளுவார்கள்.

அப்படியே ப்ரெசிடெண்டு (சபாநாயகர்) நியமிப்பதிலும், தங்களுக்குள் எவர் புத்திமானாயும், கீர்த்தி பெற்றவராயும், தேசாபிமான முள்ளவராயும், தங்கள் அபிப்பிராயத்தை ஒட்டி நடக்கிறவராயும், தோன்றுகிறதோ அவரை நியமித்துக் கொள்வார்கள்.

அப்படி நம்பி ஏமாந்து விட்டார்களாயின் மறுதடவை அவரை நியமிக்க மாட்டார்கள்.

இப்படி ஜனங்களின் அபிப்பிராயப்படி பிரதிநிதிகளும், பிரதிநிதிகள் அபிப்பிராயப்படி ப்ரெசிடெண்டும் நடந்தால், தேசத்தில் அதிர்ப்தியும், கலகமும் குழப்பமும் உண்டாகுமோ? உண்டாகாததுந் தவிர

ஜனங்களுக்குள் தேசாபிமானமும், ஐக்கியமும் சுவா தீனமும், உண்டாகிறதல்லவா?

**வினா :** இங்கிலாந்தில் இது மாதிரி அரசு இல்லையோ?

**விடை :** கிரமமாய்ப் பார்த்தால் அந்த தேசத்தின் துரைத்தனத்தை அரசாங்கம் (அதாவது அரசனால் ஆளப்படுகிற ராஜ்ஜியம்) என்று, சொல்லவேண்டும்.

ஆனால், அரசனுக்கு அதிக அதிகாரமில்லாமல் பார்லிமெந்து என்ற மகாராஜ சபையே சகல அதிகாரமும் பெற்றிருக்கிற படியால் பேருக்கு அரசாங்கமே தவிர வாஸ்தவத்தில் குடியரசுக்குச் சமானமானதுதான்.

**வினா :** இந்த இங்கிலாந்தின் பார்லிமெந்துக்கு என்ன அதிகாரம்?

**விடை :** ஜனங்களுக்கு என்ன வரி போட வேண்டு மானாலும் பார்லிமெந்தாருக்கே அந்த வரிபோடும் அதிகாரம் உண்டு.

இரண்டாவது, சட்டம் ஏதேனும் செய்யவேண்டு மானாலும் அதுவும் பார்லிமெந்தாரே செய்யவேண்டும்.

ஏதாவது ராஜ்ஜியச் செலவுக்காகவாவது, யுத்தம் முதலானவைகளின் செலவுக்காகவாவது பணம் வேண்டியிருந்தாலும் கடன் வாங்க வேண்டியிருந்தாலும் இந்த பார்லிமெந்தாரின் அனுமதியில்லாமல் முடியாது.

மகாராணி அவர்களுக்கு யுத்தம் பண்ணத் தீர்மானிக்கும் அதிகாரமுண்டு, ஆனால் ராஜ்ஜியப் பொக்கிஷத்திலிருந்து ஒரு காசுகூட எடுக்கவும்,

புதிதாய் வரிபோடவும், கடன் வாங்கவும் அதிகார மில்லை.

இந்த அதிகாரம் பார்லிமெந்தைச் சேர்ந்தபடியால், வீண் யுத்தம் முதலானது செய்து குடிகளை வருத்தப் படுத்த அரசனால் முடியாது.

இவ்விதமாக அரசனென்று பேருக்கு மாத்திரம் ஒருவன் இங்கிலாந்திலிருக்கிறாரே தவிர சர்வாதி காரமும் இந்த பார்லிமெந்தாரே வகிக்கிறார்கள்.

இந்த பார்லிமெந்து ஜனங்களால் நியமிக்கப்படும் சபையானதால் பிரிடிஷ் தீவுகளின் (அதாவது, இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, அயர்லாந்து, இந்த தேசங்களின்) துரைத்தனம், அவைகளின் ஜனங்கள் அபிப்பிராயத்தின்படி நடக்கிற துரைத்தனமாக இருக்கிறது.

இதைப் பற்றி இங்கிலீஷ் ஜனங்கள் பெருமைப் பட்டு இதர தேசத்து ஜனங்களை இழிவாய்ப் பேசுகிறது முண்டு.

ராஜாங்கமும் அரசனும், ஜனங்களின் சௌக்கியத் திற்கும் நன்மைக்கும் ஏற்பட்டிருப்பதே யொழிய, ஜனங்கள் அரசர்களின் டம்பத்துக்கும் அலங்காரத் துக்கும் அவர்கள் சுகத்துக்கும் ஏற்படவில்லையென்கிற வாஸ்தவத்தை யறிந்து அனுஷ்டானத்துக்கும் கொண்டு வந்தது இங்கிலீஷ் ஜாதியார்கள்தான்.

**வினா :** ஆ! ஆ! இது வெகு நல்ல ஏற்பாடு. இப்பேர்ப்பட்ட நல்ல ஏற்பாடு இந்தியா தேசத்தில் ஏன் இல்லை?

**விடை :** இங்கிலாந்தின் பார்லிமெந்து போன்ற பிரதிநிதி ஸ்தாபனங்கள், இதுவரையில் அவைகளில் லாத தேசங்களில் புதிதாய் உற்பத்தி செய்வது இரண்டொரு நாளில் ஆகக் கூடியதல்ல.

இங்கிலாந்தின் பார்லிமெந்து இன்றைக்கு நேற்றைக்கு உண்டானதல்ல.

சென்ற அறுபது வருஷ காலமாய் இங்கிலாந்து தேசத்து ஜனங்கள் தங்கள் உயிர், ரத்தம், சொத்து, சுயேச்சை இவைகளை திரணமாய் நினைத்து வாரி யிரைத்து அரசர்கள் அரைமனதாய் ஆற்ற மாட்டாமல் கொடுத்ததும், ஜனங்கள் ஜயசீலர்களாய் செருக்கோடு அடைந்ததுமாகிய சுதந்திரங்களல்லவா இப்போது அவர்களுக்கு பார்லிமெந்து ரூபமாயிருக்கின்றன!

அப்பேர்ப்பட்ட சுதந்திரங்களை நம்மவர் சுலபமாய் அடைய சாத்தியமாகுமா?

இங்கிலீஷ்காரர்கள் நமது தேசத்தின் நன்மை களையே உத்தேசித்து ராஜ்ஜியபாரம் செய்து வருகிற படியால், நமது தேசத்தார்கள் எப்போது எந்த சுதந்திரங் களைப் பெற யோக்கியதை யுள்ளவர்களாகக் காட்டு கிறார்களோ அவைகளைக் கவர்ன்மெண்டார் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்.

இப்போது நமது தேசத்தில் பொதுவான ஒரு பார்லிமெந்துண்டாகக் காலம் வரவில்லை.

ஏனென்றால் முன்னே சொன்னபடி நமக்குள் அப்பேர்ப்பட்ட சபையை நடத்தவேண்டிய அறிவும்,

ஐக்கியமும், தேசாபிமானமும் உண்டாகவில்லை. இது காலடையில் உண்டாகுமென்பதற்கு ஆட்சேபனை யில்லை.

மகமதியர் இத்தேசத்தில் வெகு நூற்றாண்டுகளாக ஆண்டு வந்தும், ஹிந்துக்களுக்காவது மகமதியர்களுக் காகவது சுவயராஜ்ஜிய தந்திரத்தில் பயிற்சி உண்டு பண்ண முயலவில்லை.

ஜனங்கள் அபிப்பிராயப்படி ராஜ்ஜியம் நடத்துவது கிரமம் என்று அவர்களுக்குப் பட்டதேயில்லை.

ஆனால், இப்போதைய அரசாங்கத்தாராகிய இங்கிலீஷ்காரர் அப்பேர்ப்பட்ட நோக்கமுள்ளவர் களல்ல.

தாங்கள் சொந்த தேசத்தில் தாங்கள் சர்வ வல்லமையும் பெற்று, தங்கள் அபிப்பிராயத்துக்கும், சுக துக்கத்துக்கும் ஒவ்வ ராஜ்ஜியம் நடத்தி வருவதால் அவ்வாறே தங்களால் ஜெயித்து ஆளப்பட்டு வரும் இந்த தேசத்திலும் அப்பேர்ப்பட்ட துரைத்தனத்தையே காலடைவில் உண்டுபண்ண வேண்டுமென்பது அந்தப் புகழ்பெற்ற இங்கிலாந்து தேசத்தாரின் அபிப்பிராயம்.

**வினா** : என்ன ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

**விடை** : முழு ராஜ்ஜியத்தையும் சேர்ந்த விஷயங் களை ஹிந்துக்களால் ஏற்படுத்தப்படும் சபையார் வசம் ஒப்புவிக்க இப்போது தகுந்த யோக்கியதை நமக்கு வரவில்லையென்று யோசித்து, இப்பொழுது அவ்வளவு

பெரிய விஷயங்களை அப்பேர்ப்பட்ட சபையார் வசம் ஒப்புவிக்காமல் சிறு விஷயங்களாயும் ஜனங்கள் அறிவுக்கும் அனுபோகத்திற்கும் ஒட்டின விஷயங் களாகவும் பார்த்து அவைகளை அங்கங்கேயுள்ள ஜனங்கள் வசம் ஒப்புவிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இப்படி ஒப்புவித்து ஜனங்களை நடத்தச் சொல்வதே ஸ்தானிக சுய அரசாட்சி என்பது.

**வினா :** ஸ்தானிக சுய அரசாட்சி என்பதை இன்னுஞ் சற்று விவரித்துச் சொல்லும்?

**விடை :** சில தேசங்களில் எப்படி முழு ராஜாங்கத்து வர்த்தமானங்களும் ஜனங்களின் பிரதிநிதிகளால் நடக்கின்றனவோ அப்படியே சில பெரியபட்டணங்கள், அல்லது தாலுக்கா முதலியன போன்ற சொல்பமான சில ப்ரதேசங்கள் இவைகளின் வர்த்தமானங்களை, அந்த ப்ரதேசத்திலேயே இருக்கும் ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளின் மூலமாய் நடத்திக்கொள்வது சுவய அரசாட்சி.

அனேகமாய் ஜனங்களே சுவயமாய் அரசு செய்து வரும் தேசங்களில்தான் ஸ்தானிக சுவய அரசாட்சி அதிக விர்த்தி யடைந்துவருகிறது.

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், இந்த ஸ்தானிக சுவய அரசாட்சிக் கிரமமாவது வெகு நாளாக ஸ்தாபிதமாகி திறமையாய் நடந்துவருகிறது.

எப்படிக் குழந்தையாயிருந்து தான் பெரியவனாக வேண்டுமோ அப்படியே ஸ்தானிக சுவய அரசாட்சியின் பயிற்சியானால்தான் முழு தேசத்தையும் ஜனங்கள் சுவய

அரசு செய்வது சுலபமாகவும், பயன் படத் தக்கினதாயு மிருக்கும்.

**வினா :** இந்த தேசத்தில் இவ்விரண்டு முக்கிய மான விஷயங்களில் எதிலாவது துரைத்தனத்தாரால் அதிக முயற்சி செய்யப்பட்டு வருகிறதா?

**விடை :** முன் சொல்லியபடி, இந்த தேசம் அன்னிய தேசத்தாரால் ஆண்டு வருகிறபடியால் நமக்கு சுய அரசு இப்போதைக்குக் கிடைக்கமாட்டாது.

பிற்காலத்தில் நமது தேசத்தார் ஒருமைப்பட்டு, ஜாதிமத மாற்சலியங்களை மறந்து, ராஜ்ஜியத்தை நம்மிடத்தில் ஒப்புவித்தால் ஒரு ஜாதியாரால் மற்றொரு ஜாதியாருக்கு சேதம் கிடைக்கமாட்டாது என்கிற நம்பிக்கை பார்ப்போருக்கு உண்டாகும் படியாய், நாம் நமக்கு அப்போதைக் கப்போது கொடுக்கப்படும் சில்லரை அதிகாரத்தைச் செலுத்துவோமானால், வரவர மேற்சொன்ன மதிப்பற்ற பெருமையும், கனமுமுள்ள ஸ்திதி கிடைக்கும்.

ஆனால், இப்போது நமது தேசமிருக்கும் ஸ்திதிக்கு நம்மவரையே எல்லாவற்றிற்கும் எஜமானராய் ஏற்படுத்தி விட்டால் பலவித காரணங்களினாலே தேசத்துக்கு நஷ்டமும் அபகீர்த்தியும் வந்துவிடும்.

நமக்கு சுய அரசுக்கு வேண்டிய திறமை உண்டாகிற வரையில் இந்த இங்கிலீஷ்காரரே ராஜ்ஜீய பாரம் பண்ணி இதுவரையில் செய்துவந்த நன்மை களைப் போல மேல் மேலும் செய்து வந்து அத்தத் திறமையையும் பிறப்பிக்க வேண்டும்.

நமக்கு ஸ்தல வர்த்தமானங்களைக் கொடுத்து அதுவரையில் அவைகளை நடத்திவரச் சொல்லி, தவறினால் எடுத்துக்காட்டி, நமது தேசத்தாருக்கு நாகரீகத்தையும் ராஜ்ஜிய தந்திர வல்லமையையும் சொல்லவைக்க வேண்டும்.

வெகுநாளாய் மகமதிய அரசர்களின் கொடுமைகளினாலும், மற்ற கலகக்காரர்களின் கொடுமைகளினாலும், நமது தேசம் அலங்கோலப் பட்டிருக்கிறது.

ஆகையால் இப்போது ஸ்தானிக சுவய அரசாட்சியில் மட்டும் ஏற்கனவே சில ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளைத்தான் லார்ட் ரிப்பன் சீர் திருத்த வேண்டுமென்று உறுதிப்பாடாயிருக்கிறார்.

**வினா :** இந்த ஏற்பாடுகள் என்னென்ன?

**விடை :** முனிசிபாலிடிகள், லோகல் பண்டு போர்ட்டுகள், இந்த இரண்டும் மேற்படி நோக்கத்தைக் கொண்டே ஏற்பட்டிருக்கின்றன.

**வினா :** முனிசிபாலிடிகளின் கருத்தென்ன?

**விடை :** ஒரு பெரிய பட்டணமிருந்தால் அதற்கு அந்த ஊர் ஜனங்களின் உபயோகத்துக்காக.

1. ரஸ்தாக்கள் போடுவது.
2. ஏழைகளின் சௌக்கியார்த்தமாய் வைத்திய சாலை (ஆஸ்பத்திரிகள்) கட்டுவது.
3. ஜனங்களுக்குப் பெரியம்மை வந்து உபத்திரவம் பண்ணாமல் அம்மை குத்துவது.

4. ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் அற்பப்படிப்பு களைச் சொல்லி வைக்க பாடசாலைகள் ஏற்படுத்துவது.

5. பட்டணத்தை அசுத்தமில்லாமலும் கண்ணுக்கு அலங்காரமா யிருக்கும்படியும் வைத்துக் கொள்ளுதல்.

6. இன்னும் அந்த ஊர் ஜனங்களுக்குப் பலவிதமான சௌக்கியமும் சுகமும் என்னென்ன விதமாய் உண்டுபண்ணலாமோ அந்த விதமாயெல்லாம் உண்டு பண்ணுதல்.

இவை முதலான விஷயங்களுக்காக அந்த ஊராரிடத்தில் சில தொகை வசூல் செய்து அந்தத் தொகையை அந்த ஊர் ஜனங்களிடத்திலேயே ஒப்பு வித்து மேற்படி விஷயங்களைப் பார்த்து வரச்சொல்லப் படுகிறது, முனிசிபாலிடியின் கருத்து.

**வினா :** இதுவரையில் மேற்சொன்ன முனிசி பாலிடிகளின் விஷயங்கள் ஊர் ஜனங்களால் நடந்து வராமல் உத்தியோகஸ்தர்களால் அல்லவா நடந்து வருகின்றன?

**விடை :** நீர் சொல்கிறது முற்றிலும் சரியல்ல, முனிசிபாலிடிகளில் உத்தியோகஸ்தர் அல்லாத சிலரையும், மெம்பர்களாக நியமிக்கிறார்கள். ஆனால் இவர்கள் பேருக்கு மாத்திரம் மெம்பர்களாக இருந்து வருகிறார்களே தவிர சகல அதிகாரமும் உத்தியோகஸ் தரே, வகித்து வகிறார்கள்.

**வினா :** அது வாஸ்தவந்தான். ஜனங்களுக்கு, இந்த ஸ்தல விஷயங்களையாவது ஒருமையாய்ச் சேர்ந்து பார்த்துக் கொள்ள சக்தி யுண்டாகட்டுமென்ற கோரிக்கையோடு முனிசிபாலிடிகள் ஏற்பட்டிருக்கு மானால், அவைகளை உத்தியோகஸ்தர்களைக் கொண்டு நடத்தச் சொல்லுவானேன்?

**விடை :** அதற்குப் போதுமான முகாந்திர மிருக்கிறது. என்னவென்றால், நமது தேசத்தாருக்குப் பொது விஷயங்களை ஒருமையாய்ச் சேர்ந்து பார்த்துக் கொள்ள அனுபோகமும் பழக்கமும் இல்லை.

அப்படி யில்லாதிருக்கையில் முதலெடுப்பி லேயே ஜனங்களை சுவாதீனமாய் விட்டு, ''நீங்களாப் பார்த்துக் கொண்டு போங்கள்'' என்று விட்டுவிட்டால் ஒன்றும் நடவாது.

எந்த விஷயங்களுக்காக முனிசிபாலிடிகள் ஏற்பட்டனவோ அவைகள் நடவாமல் தவறிப்போம்.

ஆகையால் கொஞ்சநாள் வரையில் இந்த விஷயங்களறிந்த உத்தியோகஸ்தர்களையும் ஜனங் களில் சிலரையும் சேர்த்து வைத்து முனிசிபல் விஷயங் களைப் பார்த்துக்கொண்டு போகச் சொன்னால் ஜனங் களுக்கு அந்த விஷயங்களில் சில பழக்கம் உண்டாகு மென்றே, இதுவரையில் கலெக்டர்களை ப்ரெசி டென்டாகவும், டிப்டி கலெக்டர்களை ப்ரெசி டென்டாகவும், டிப்டி கலெக்டர் முதலானவர்களை வைஸ் பிரசிடெண்டாகவும் நியமித்து, முனிசிபல் விஷயங்களை அவர்களைக் கொண்டு நடப்பிவித்து, மற்ற மெம்பர்களைக் கூட இருந்து பார்த்துக்கொண்டு

வரச்சொல்லுவது போல பேருக்கு மெம்பர்களாய் நியமிக்கப்பட்டுவருகிறது.

வினா : லோகல் பண்டு போர்டுகளின் கருத்தென்ன?

**விடை** : பட்டணங்களில் எப்படி முனிசிபாலிடிகள் இருந்து ரஸ்தா போடுவதும், ஆஸ்பத்திரி கட்டுவதும், சிறு படிப்புக்காக பாடசாலைகள் ஏற்படுவதும், அம்மை குத்துவதும், அசுத்தங்களை நீக்குவதும், இவை முதலான விஷயங்க,ளைச் செய்து வருகின்றனவோ, அப்படிக் கிராமங்களிலும் சிறு பட்டணங்களிலும் மேற்கண்ட விஷயங்களைச் செய்வதற்காக லோகல் பண்டு போர்டுகள் ஏற்பட்டிருக்கின்றன.

பெரிய பட்டணங்களானால் தகுந்த தனவான்களும் புத்திமான்களு மிருப்பார்கள்; அவர்களிடத்தில் பணம் வசூல் செய்து அவர்களையே செலவிடச் சொல்லி வரலாம்.

சிறு பட்டணங்களிலும் கிராமங்களிலும் ஒவ்வொன்றிலும் அப்படிப்பட்ட தனவான்களும் புத்திமான்களும் அகப்படமாட்டார்கள் ஆனதால், அவைகளில் நூறு இருநூற்றை ஒரு தாலுக்கா விஸ்தீரணமுள்ள ஒரு வட்டமாகச் சேர்த்து அவைகளுக்குள்ளிருக்கும் ஜனங்களிடத்திலிருந்து சில தொகையை வசூல் செய்து அந்தத் தொகையை அந்த வட்டத்திலிருக்கும் புத்திமான்களிடத்தில் ஒப்புவித்து அது அந்த வட்டத்தின் நன்மைக்காகச் செலவிடப்பட்டு வருகிறது.

இந்த வட்டத்தில் இப்படி ஏற்படும் புத்திமான் களின் சபைக்குத் தான் லோகல் பண்டு போர்டு என்று பெயர்.

நமக்கு முனிசிபாலிடி போலவே இதுவும் புதிதாகையால் இதுவரையில் உத்தியோகஸ்தர்களையே வாஸ்தவமான அதிகாரிகளாக்கி மற்றவர்களை பேருக்கு மட்டும் மெம்பர்களாக வைத்துக்கொண்டு வரிகள் செலவு செய்யப்பட்டு வருகின்றன.

**வினா :** இந்த முனிசிபாலிடிகளும் லோகல் பண்டு போர்டுகளும் ஏற்பட்டு பத்து வருஷத்துக்கு மேலாகிறது.

ரஸ்தா போடுவதும், ஆஸ்பத்திரிகள் கட்டி ஏழைகளுக்கு வைத்தியம் செய்வதும், சின்னப் பிள்ளை களுக்குப் படிப்புச் சொல்லி வைக்கப் பாடசாலைகள் ஏற்படுத்தி அவைகளை மேல் விசாரணை பார்த்து வருவதும், இவைகளை என்ன, பிரமாதமான விஷயங்களா?

நமது தேசத்தாருக்கும் இது கூடத் தெரியாதா; பத்து வருஷம் போதாதா இவைகளைத் தெரிந்து கொள்வதற்கு; கவர்ன்மெண்டார் சுதேசிகளுக்கே அதிகாரம் கொடுக்க வேண்டும், அந்த அதிகாரத்தைச் செலுத்த அவர்களுக்குத் திறமையும் அப்பியாசமும் உண்டாக வேண்டும்; என்ற எண்ணத்தைக் கொண் டிருந்தார்களானால் இன்றும் இவைகளை ஏன் உத்தியோகஸ்தர்கள் வசத்திலேயே வைத்திருக் கிறார்கள்?

**விடை :** நீங்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்வி தான்.

ஆனால், மேற்படி விஷயங்களைத் தெரிந்து கொள்வது மட்டும் ஒரு பிரயாசையல்ல. தெரிந்த விஷயங்களைப் பத்துப்பேர் சேர்ந்து எது ஊருக்கு க்ஷேமம், எது ஜனங்களுக்குத் திருப்தி யென்று பார்த்து, கட்சிப்பிரதிகட்சி யில்லாமலும், தங்கள் சொந்தப் பிரயோசனத்தை நாடாமலும், அதில் ஒரு அசிரத்தையா யிராமலும், தேசாபிமானத்தோடு கவர்ன்மெண்டார் பேருக்குக் கெடுதலில்லாமல், பணத்தைச் செலவிட வேண்டாமா, அதல்லவா பிரயாசை.

இன்றுங்கூட நமது ஜனங்களுக்கு தென்கலை வடகலை சண்டையும், பார்ப்பான் வெள்ளாழன் சண்டையும், ஹிந்து துலக்கன் சண்டையும் விட வில்லையே.

தென்கலை மெம்பர்கள் வடகலை ஜனங்களுக்கு அநியாயமும், பிராமண மெம்பர்கள் சூத்திர ஜனங் களுக்கு அநியாயமும், ஹிந்து மெம்பர்கள் மகமதியர் களுக்கு அநியாயமும், செய்தால் கவர்ன்மெண்டார் கேட்பார்களா,

ஆகிலும், இப்படி நல்ல காலம் வருமென்று காத்துக் கிடந்தால் ஒரு நாளும் வராது.

நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமானால் தண்ணீரிலிறங்கச் சொல்ல பயந்து முடியாது. என்று நினைத்தல்லவா இப்போது ரிப்பன் பிரபு மகாதயவு கூர்ந்து ஜனங்களுக்கு சொற்ப அதிகாரத்தையாவது

கொடுத்துத்தான் பார்க்க வேண்டுமென்று, வெகு ஐரோப்பியர்கள் அவரைத் தடுத்தும், உறுதியாய் செய்து வருகிறார்.

**வினா :** ரிப்பன் பிரபு யோசித்திருக்கும் புது ஏற்பாடுகளாவன எவை?

**விடை :** இவர் செய்யத் தீர்மானித்திருப்பதை முற்றிலும் புது ஏற்பாடுகள் என்று சொல்லத் தகாது.

ஏனென்றால் இப்போதிருக்கும் முனிசிபாலிடிகள் லோகல் பண்டு போர்ட்டுகளையே ஆதாரமாக வைத்துக்கொண்டு, இவைகளிலிருக்கும் சில குறைகளை நீக்கி என்ன புது ஏற்பாடுகள் செய்தால் ஜனங்களுக்கு முனிசிபாலிடி லோகல் பண்டு போர்டுகளில் அக்கறை யுண்டாய் அவர்களுக்கு சவாதீன புத்தியும், பொது நன்மையை நாடும் குணமும், ஐக்கியமும், தேசாபிமானமும் உண்டாகுமோ அப்பேர்ப்பட்ட ஏற்பாடுகள் செய்கிறதாகத் தீர்மானித் திருக்கிறார்.

இந்த ஏற்பாடுகள் முக்கியமாய் மூன்று.

முதலாவது, லோகல் பண்டு போர்ட்டுகள் இப்போதைப் போல அவ்வளவு விஸ்தீரணமுள்ளதாய் இருக்கக் கூடாது.

இரண்டாவது, கூடிய இடத்திலெல்லாம் முனிசிபாலிடியிலும் லோகல் பண்டு போர்ட்டிலும் மெம்பர்களை முற்றிலுமாவது சில பாகமாவது இலெக்ஷன் செய்யவேண்டும். (அதாவது ஜனங்களே நியமித்துக் கொள்ள வேண்டும்)

மூன்றாவது, இவைகளுக்கு பிரெசிடெண்டு கலெக்டர்களா யிருக்கக் கூடாது.

இந்தச் சீர்திருத்தத்தின் மொத்தக் கருத்தெல்லாம் என்னவென்றால், இந்த ஸ்தல சபைகளில் அதாவது முனிசிபாலிடி) லோகல் பண்டு போர்ட்டுகளில்) உள்ள மெம்பர்களுக்கு, தங்களைப் பேருக்கு வைத்துக் கொண்டு சகல நடவடிக்கைகளையும் கலெக்டரே நடத்திக்கொண்டு போகிறார், நமது அபிப்பிராயத்துக்கு ஒரு மதிப்பு வைக்கிறதில்லை, யென்று தோன்றி யிருக்கும் எண்ணத்தை மாற்றி, தங்களுக்கு ஜாஸ்தி யான பொறுப்பு உண்டாயிருக்கிறது, தாங்கள் செய்யும் நடவடிக்கைகளால் ஜனங்களுக்கும் தீங்கு நேரிடாமல், கவர்ன்மெண்டாருக்கும் திருப்தி யுண்டாக வேண்டும் என்ற ஆவலும் தோன்றும் படியாய், செய்விக்க வேண்டுமென்பது.

**வினா :** லோகல் பண்டு போர்ட்டுகளை இன்னும் குறைந்த விஸ்தீரணமுள்ளவைகளாகச் செய்வதில் என்ன நன்மை ?

**விடை :** வெகு நன்மையிருக்கிறது. இப்போது ஜில்லாவுக்கு ஒரு போர்ட்டாவது, இரண்டு போர்ட்டாவது இருக்கிறது. அதனால் மெம்பர்கள் சரிவர மீடிங்குகளுக்கு வருகிறதில்லை, ஏனென்றால் ஒரு ஜில்லாவில் ஒரு கோடியிலிருந்து மீடிங்கு நடக்கும் ஸ்தலத்திற்கு தன் சொந்த காரியம், சுகம், சௌக்கியம், எல்லாவற்றையும் விட்டுவருவது எப்போதும் சாத்தியமல்ல. மேலும் ஒரு ஜில்லாவே ஒரு போர்ட்டா யிருந்தால் அந்த ஜில்லாவில் ஒரு இடத்தில்

வசிப்பவருக்கு தூரமான மற்றொரு ஸ்தலத்தில் வசிப்பவர்களின் விஷயத்தில் என்ன அக்கறை யிருக்கும்?

தமது ஊருக்குச் சமீபத்தில் ஒரு ரஸ்தா போட வேண்டுமானாலும், ஒரு பாடசாலை ஸ்தாபிக்க வேண்டுமானாலும், ஒரு ஆஸ்பத்திரி கட்ட வேண்டு மானாலும் அதில் அந்த மெம்பருக்கு அக்கறையிருக்கும் ஜனங்களும் வந்து சொல்லிக் கொள்ளுவார்கள், ஜனங்களின் முக தாக்ஷண்ணியத்துக்காகவாவது அந்த மெம்பர் போர்ட்டில் சண்டை போடுவார்.

அப்படியில்லாமல் ரோட்டுப் போடவேண்டி யிருக்கும் 26 ஸ்தலத்திற்கு முப்பது மயிலுக்கு அப்பால் மெம்பர் இருப்பாரானால் இந்த ஜனங்களுக்கும் அந்த மெம்பருக்கும் அனுதாப மிராது, இவர்களுக்கு வேண்டியதை அவர் கவனிக்க மாட்டார் விஷயமும் தெரியாது, தெரிந்தாலும் அக்கறை கொடுக்காது. இப்படிப் பலவாறாய் சீர்கெட்டிருக்கும்.

லோகல் பண்டு போர்ட்டுகளின் ஸ்தல விஸ்தீரணம் குறைந்து ஒரு தாலுக்காவுக்கு ஒரு போர்டிருக்கும் பட்சத்தில் இவைகளை விடப் பெரிய லாபமிருக்கிறது.

என்னவென்றால் அந்தந்த தாலுக்காவின் பணம் அனேகமாய் அந்தந்த தாலுக்காவிலேயே செலவாகும்.

ஒரு வேளை பக்கத்துத் தாலுக்காவுக்கு வரும் வரும்படி போதாதிருந்து அதனால் முக்கியமாக விஷயங்களை விட்டுவிட வேண்டியதாயிருந்தால்

அப்போது இந்த தாலுக்காவின் பணத்தை எடுத்துச் செலவழிக்கும்படி நேரிடும்.

ஒரு தாலுக்காவில் பேதி உபத்திரவம் வந்து ஜனங்களைக் கொல்லுமாயின் அதை அடக்கவேண்டிய வைத்திய உதவிக்காக பக்கத்துத்தாலுக்காவின் பணத்தைச் செலவு செய்ய அவசியமாயிருக்கும்.

மேலும் நாலைந்து தாலுக்காக்களுக்கு பொதுவான ரஸ்தாவாவது வேறெந்தப் பொதுவிஷயமாவது நடக்க வேண்டியிருந்தால், அப்போதும் அந்தந்த தாலுக்காவின் பணம் அந்தந்த தாலுக்காவுக்கே செலவாகும் என்பது முடியாது.

இப்பேர்ப்பட்ட விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களுக்கு அந்தந்த தாலுக்காவின் பணம் அந்தந்த தாலுக்காவுக்கு உபயோகமாகும்.

இப்போது எப்படியிருக்கிறது?

திருநெல்வேலியில் ஒரு ஜமீன்தார் லோகல் பண்டு ஆக்ட் உண்டான பத்து வருஷ காலமாய் வருஷம் இரண்டாயிரம் ரூபா கவர்ன்மெண்டுக்குக் கட்டிக்கொண்டு வருகிறார்.

அப்படிக் கட்டிக்கொண்டு வந்த போதிலும் தமது ஜமீனில் இருநூறு ரூபாய்க்கு ஒரு வேலை செய்ய வேண்டுமென்று விண்ணப்பத்தின் மேல் விண்ணப்பம் செய்து கொண்டார். செய்து கொண்டும் பணம் இல்லையென்றே லோகல்பண்டு போர்ட்டார் சொல்லிவிட்டார்கள்.

ஆனால் இந்த ஜமீன்தார் கொடுக்கும் பணம் எப்படி செலவு செய்யப்படுகிறது? காப்பித் தோட்டத் துக்குரிய ஒரு ஐரோப்பியர் தோட்டத்துக்கு ரோட்டு போடுவதில் செலவாகிறது. தாலுக்காவுக்கு ஒரு போர்டிருந்தால் இப்படி அதிர்ப்திக்கு இடமிராது.

**வினா :** ஒரு தாலுக்காவுக்கு ஒரு போர்டிருப்பதன் லாபம் நன்றாய் விளங்குகிறது. இதுவரையில் ஏன் செய்யவில்லை?

**விடை :** ஆன்ரேபில் எ.ஜெ. அர்பத்நெட் 1870-ம் வருஷத்தில் லோகல் பண்டுபில் தயார் செய்தபோது இந்த விஷயத்தைக் குறித்தே கலெக்கட்டர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டார்.

அநேகர் ஒரு தாலுக்காவுக்கு ஒரு போர்டிருந்தால் தான் அந்தந்த ஊர்ப் பணம் அந்தந்த ஊர் நன்மைக்கே செலவாகுமென்று அபிப்பிராயம் கொடுத்தார்கள்.

பிறகு கலெக்டருக்கு பட்ஜெட் முதலானது தயார் செய்வதில். கஷ்டம் ஜாஸ்தியாகும் என்று அந்த யோசனையை நிறுத்திவிட்டார்கள்.

**வினா :** இப்பொழுது லோகல் பண்டு போர்ட்டு, முனிசிபாலிடி இவைகளுக்கு மெம்பர்களை கலெக்டர் நியமிக்கிறதைவிட ஜனங்களே நியமித்துக் கொள்வதில் உள்ள நன்மையைக் கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்கள்.

**விடை :** இந்த சுவய அரசாட்சியின் மொத்த தாத் பரியத்தை அறிந்திருந்தால் இப்படிக் கேட்கமாட்டீர். இதற்கு முன்னமேயே அங்கங்கே இதிலுள்ள லாபத்தைக் குறிப்பிட்டிருக்கிறோம்.

சுவய அரசாட்சியின் கருத்தென்ன?

இந்த முனிசிபாலிடியும் லோகல் பண்டு போர்ட்டும் சீர்திருத்தப்பட வேண்டுமென்பதே யல்ல.

இப்பொழுது இல்லையாயினும் பின்னால் சில காலம் கழித்தாவது இந்தியாவில் துரைத்தனம் சுதேசிகளுடைய அபிப்பிராயத்தின் படியே நடக்க வேண்டும் என்பது இங்கிலீஷ்கார துரைத்தனத்தின் கருத்து.

இப்போது அப்படிச் செய்வதற்கு இரண்டு தடைகள் இருக்கின்றன.

முதலாவது துரைத்தன விஷயத்தில் அபிப்பிராயம் கொடுக்க ஜனங்களுக்குத் திறமை போதாது இப்போது ஏதாவது புதிதாய் வரிபோட வேண்டுமானாலும், சட்டம் செய்ய வேண்டுமானாலும், ஜனங்கள் அவைகளின் சாதக பாதகங்களை யறிந்து அபிப்பிராயம் சொல்ல சக்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

சில படித்தறிந்த ஹிந்துக்களிருக்கிறார்கள். இவர்கள் அபிப்பிராயம் மிகவும் மதிப்புள்ளதுதான். ஆனால் இப்படி சிதறிக் கிடக்கும் ஹிந்து அபிப்பிராயங்களை கவர்ன்மெண்டார் அறியத் தகுந்த மார்க்கமில்லை. இது இரண்டாவது தடை.

சுதேசிகளடங்கிய ஒரு சபையிருக்க வேண்டும், இந்த சபையார் ஜனங்களால் நியமிக்கப் பட்டவர்களாயிருக்க வேண்டும், இந்த சபையில் ஐந்நூறு அறுநூறு மெம்பர்களிருக்க வேண்டும். பல ஜாதி பல

மதஸ்தர்களாயு மிருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட சபையை நடத்த நமக்கு இன்னும் வேண்டிய அனுபோகமும், ஒற்றுமையும், தேசாபிமானமும் உண்டாகவில்லை.

இந்த லட்சணங்கள் அமைந்திருக்கும் சிலருக்குத் தமது சொந்த வயிற்று வளர்ப்பின் வேதனையை விட்டுப்பொது விஷயங்களைக் கவனிக்க அவகாச மில்லை. அவகாச மிருக்கிறவர்களுக்கோ மேற்சொன்ன லட்சணங்களில்லை.

**வினா :** மெம்பர்களை ஜனங்களே நியமிப்பதில் என்ன நன்மையென்று கேட்டதற்கு ஒன்றும் சொல்ல வில்லையே?

**விடை :** அதைத்தான் சொல்லவருகிறேன். ஜனங்களுக்கு துரைத்தன விஷயங்களைச் சீர் தூக்கியறியப் போதுமான ஞானம் உண்டாகவும், ஜனங்களின் அபிப்பிராயம் துரைத்தனத்தாருக்குத் தெரியும் படியாய் ஒரு சபை யேற்படுத்தி அதைச் சரிவர நடத்தவேண்டிய நற்குணங்கள் உண்டாகவும், இப்போது அஸ்திவாரமாகவே கவர்னர் ஜனரலாகிய ரிப்பன் பிரபு முயற்சி செய்து வருகிறார்.

இந்த முனிசிபாலிடி லோகல் பண்டு போர்ட் டுகள் ஒரு பாடசாலை போலத்தான், அந்தப் பாட சாலையில் சுவய அரசாட்சி யென்ற வித்தையை ஜனங்கள் கற்றுக் கொள்ள வேண்டியது.

மேற்படி போர்ட்டுகளின் மெம்பர்கள் நேராய் நடவடிக்கைகள் நடத்துகிற அனுபோகத்தால் சுவய

அரசாட்சியின் சுரூபத்தை ஒரு சுமாராய்த் தெரிந்து கொள்வார்கள்.

**வினா :** அந்தப் பயிற்சி எப்படி உண்டாகும். விளங்கச் சொல்ல வேண்டும்.

**விடை :** ஜனங்கள் மெம்பர்களை நியமிக்கிறதில் சில ஒழுங்குகள் உண்டு.

முதலாவது, இன்னின்ன யோக்கியதையுள்ள வர்கள்தான் மெம்பராகலாம் என்ற நிஷ்கரிஷையுண்டு.

அதாவது, ஆயிரம் ரூபாய் நிலவரி செலுத்து கிறவரோ, இருபது ரூபாய் முனிசிபல் வரி செலுத்து கிறவரோ, நூறு ரூபாய் மாதச் சம்பள முள்ளவரோ, இவர்தான் மெம்பராயிருக்கலா மென்று ஒரு நிஷ்கரிஷையேற்படும்.

அதுபோலவே இன்னின்ன யோக்கியதை யுள்ளவர்கள் தான் மேற்படியாரை நியமிப்பதில் அபிப்பிராயம் சொல்லலாமென்றும் நிஷ்கரிஷை உண்டாகும்.

இருபது ரூபாய் நிலவரி செலுத்துகிறவர், ஏழு ரூபாய் முனிசிபல் வரி செலுத்துகிறவர், ஐம்பது ரூபாய் மாச வரும்படியுள்ளவர், இன்னும் இதைப்போல சிலயோக்கியதை யுள்ளவருக்குத்தான் நியமிக்க அதிகாரமென்று ஏற்படும்.

இப்படி மெம்பர்களாகத் தகுந்தவர்களின் ஜாபிதாவும், நியமிக்க யோக்கியதை யுள்ளவர்களின் ஜாபிதாவும் முன்னதாக அச்சிட்டு கவர்மெண்டார் பிரசித்தம் செய்வார்கள்.

இத்தனாந் தேதியில் நியமிக்க யோக்கியதை யுள்ளவர்களுக்கு எவரை மெம்பராக நியமிக்க இஷ்டமோ அவர் பேரை ஒரு காகிதத்தில் எழுதி இன்ன இடத்தில் இன்ன உத்தியோகஸ்தர் வசத்திலிருக்கும் பெட்டியில் போட்டுவிட வேண்டியது என்று அதையும் முன்னதாகப் பிரசித்தம் செய்து விடுவார்கள்.

மெம்பராக யோக்கியதையுள்ளவர்கள் தேசாபி மானிகளாயிருந்தால் முன்னதாக ஒவ்வொருவரும் தன்னை மெம்பராக்கிக் கொள்ள போட்டிக்கு வந்து, ''எனக்கு அபிப்பிராயம் கொடு, உனக்கு அபிப்பிராயம் கொடு'' என்று, நியமன அதிகாரிகளான ஜனங்களைக் கோரிக்கொள்ளுவார்கள்.

இங்கிலாந்து, அமெரிக்கா தேசங்களில் இப்படியே நடக்கிறது. கல்கத்தா, பம்பாய், சென்னப்பட்டனம் இந்த நகரங்களிலும் அப்படியே நடக்கிறது.

இவ்வாறே மெம்பர்களை நியமிக்க அதிகாரம் பெற்றவர்களும், சொந்த வேலையை விட்டுவிட்டுப் பொது வேலையாய் எந்த இடத்தில் தமது அபிப் பிராயத்தை எழுதித் தெரிவிக்கக் குறித்திருக்கிறதோ, அங்கே வந்து தமது அபிப்பிராயத்தைத் தெரி விப்பார்கள்.

யோக்கியதை உள்ளவர்கள் இப்படி எல்லாரும் வந்து தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்காவிடின், கவர்ன்மெண்டாருக்கு வெறுப்புண்டாய் ''இவர் களுக்குத் தங்கள் சுதந்தரத்தைப் பரிபாலிக்க அக்கறையில்லை. இவர்கள் யோக்கியதை யிவ்வளவு

தான், இவர்கள் பராதீன சுபாவம் உள்ளவர்கள்'' என்று கொடுத்த அதிகாரத்தைப் பிடுங்கி தங்களுக்கு வேண்டினவர்களையே நியமித்துக் கொள்ளுவார்கள்.

தகுந்த மனுஷியாளை நியமிக்காமல் கண்டபடி கண்டவர்களை நியமித்துப் பொது விஷயம் கெட்டுப் போனால் அப்போதும் கவர்ன்மெண்டாருக்கு வெறுப் புண்டாய் கொடுத்த அதிகாரத்தைப் பிடுங்கிக் கொள்ளுவார்கள்.

இப்படியெல்லாம் நேரிடாமல், சில இடங்களில் அங்கிருக்கும் பெரிய மனுஷரும் புத்திமான்களும் சேர்ந்து நியமன அதிகாரிகளை யெல்லாம் அழைத்து ஒரு இடத்தில் சபை கூட்டி, இன்னின்னாரை மெம்பராக நியமித்துக் கொள்ளுகிறது என்று முன்னதாக நிதானித் துக் கொள்ளுவார்கள்.

அப்படியே நியமன காலத்திலும் முன்னதாக நிச்சயித்துக் கொண்டவர்களுக்கே அபிப்பிராயம் கொடுப்பார்கள்.

அன்றைய தினம் கச்சேரிகளும், கடைகளும் சில இடங்களில் மூடுவார்கள்.

இப்படி வருஷா வருஷமாவது, இரண்டு வருஷம் மூன்று வருஷத்துக் கொருதரமாவது, புதிது புதிதாய் மெம்பர்களை ஜனங்கள் நியமிக்கலாம்.

ஒருதரம் நியமிக்கப்பட்ட மெம்பர் மறுதரமும் நியமிக்கப்படுவதில் யாதொரு ஆட்சேபனையு மில்லை.

இப்படி வருஷத்துக் கொருதரம், அல்லது இரண்டு மூன்று வருஷத்துக்கு ஒரு தரம் தேசமெங்கும் அங்கங்கே நடக்குமாகில் ஜனங்களுக்குப் பொது நன்மையை நாடும் குணமும் பொது விஷயங்களைக் கவனிக்கும் சுபாவமும் விர்த்தியாகாதா?

இவ்வாறு ஜனங்கள் தமது அபிப்பிராயப்படி, எல்லாருக்கும் ''யோக்கியன்'' ''ஜனோபகாரி'' யென்று தெரிந்தவரையே, மெம்பராக நியமித்துக் கொண்டால், முனிசிபாலிடிகளும் லோகல் பண்டு போர்டுகளும் இப்போதிருப்பதுபோல ஜனங்களுக்கு சங்கடத்தையும், வரியையும் மட்டும் உண்டாக்கி, அதிகாரத்தையும் சுகத்தையும் உத்தியோகஸ்தர்களுக்கும் (அதாவது கலெக்டருக்கும்) அவர் சிநேகிதர்களுக்கும், கொடுத்து விடுமா?

எந்த மெம்பர் எப்பொழுது ஜனங்கள் அபிப் பிராயத்துக்கு மீறி நடவடிக்கை நடந்துகிறாரோ, மறுதடவை அவரை ஜனங்கள் மெம்பர்களாக நியமிப்பார்களா?

இப்பொழுது இதில் நன்மை யிருக்கிறதென்று. ஒப்புக்கொள்வீரா?

**வினா :** ஆம், இப்படி மெம்பர்களை ஜனங்கள் நியமித்துக் கொண்டாலும், லோகல் போர்ட்டுகளுக்கு கலெக்டர் ப்ரெசிடெண்டாக இருந்தால், ஜனப்பிரதிநிதி களிடம் சுவாதீனம் ஓங்காதே, இப்போது மெம்பர்களில் சுவாதீன குணமுள்ளவர்களில்லையா?

இவர்களெல்லாம், கலெக்டர் அபிப்பிராயமானது நாளைக்கு சூரியன் மேற்கே உதிக்கும் என்பதென்று தெரிந்தால், தங்கள் சுவாதீனத்தையும் தேசாபி மானத்தையும் தூர வைத்துவிட்டு சரிதான் என்று சொல்லுகிறார்களே.

**விடை :** நான் முன்னமேயே கலெக்டர்கள் ப்ரெசி டெண்டாயிருக்கக் கூடாதென்றும் கூடுமான இடத்திலெல்லாம் கவர்ண்மெண்டு உத்தியோகத்தி லில்லாதவர்களையே ப்ரெசிடெண்டாக்க வேண்டு மென்றும் ரிப்பன் பிரபுவின் அபிப்பிராயமென்று சொன்னேன்.

நீர் சொன்ன காரணத்துக்காகவே, கூடிய இடங்களிலெல்லாம் சுவாதீன சுதேசப் பிரபுக்களே ப்ரெசிடெண்டாயிருக்க வேண்டுமென்று ரிப்பன் பிரபு அபிப்பிராயப் பட்டபடி சென்னபட்டணம் கவர்மெண் டாரும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள்.

எவ்வித நன்மைகள் செய்தாலும் கலெக்டர் களாவது, அவர்களைவிடப் பொல்லாதவர்களான கீழ் ரெவினியு உத்தியோகஸ்தர்களையாவது ப்ரெசி டெண்டாக வைத்தால், எல்லாம் அந்தப் ப்ரெசி டெண்டின் அபிப்பிராயப்படி நடக்குமே ஒழிய, ஜனங்கள் சௌக்கியத்தை அனுசரித்து நடக்காது.

மேலும் ஜனங்கள் எந்தப் பெரும் விஷயத்துக்கும் உத்தியோகஸ்தர்களின் உதவியையே தேடிக் கொண்டிருக்கக் கூடாது.

இங்கிலாந்து முதலிய தேசங்களில் உத்தியோகஸ் தரால் நடக்கும் நடவடிக்கைகள் ரொம்ப சொல்பம்.

ரயில் போடுதல், வாய்க்கால் வெட்டுதல், பாங்கிகள் ஏற்படுத்தி கோடானு கோடி தொகையை வர்த்தகர்களுக்குக் கடன் கொடுத்தால், நியாய விசாரணை செய்தல், பெரு வர்த்தக முயற்சிகள் செய்தல், இப்பேர்ப் பட்டவைகளை யெல்லாம் ஜனங்களே பார்த்துக் கொண்டுபோகிறார்கள்.

இங்கே இவைகளை கவர்ண்மெண்டார் செய்ய வண்டியதாயிருக்கிறது.

இதினால் என்ன நஷ்டம் என்றால், உத்தியோகஸ்தர்களுக்கும் பெரும் சம்பளம் கொடுக்க வேண்டி நேரிடுகிறது, அது ஜனங்கள் கொடுக்கும் வரியிலிருந்து தானே கொடுக்க வேண்டும்.

மேலும் உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கும் அதிகாரத்தினால் அவர்கள் ஜனங்களை ஹிம்சை பண்ணுகிறார்கள், லஞ்சம் வாங்கி நியாயத்தைக் கெடுத்து விடுகிறார்கள், இவ்வளவு 34 செய்தும் ஜனங்கள் சொந்தமாய்ச் செய்து கொண்டால் எவ்வளவு செலவோ அதைவிட அனேகமடங்கு செலவாகிறது. இதுகளெல்லாம் ஜனங்களுக்கு நஷ்டந்தானே.

அப்படி நஷ்டப்பட்டாவது ஊரிலிருக்கும் வேலைத் தொந்திரவில்லாத பெரிய மனுஷ்யாளும் புத்திமான்களும் சும்மா விருப்பானேன்.

ஜனங்களின் பொது விஷயத்தில் தங்கள் புத்தியைச் செலுத்தினால் தங்கள் புத்தி வீண் விஷயத்தில் பிரவேசிக்காமல் நல்ல விஷயங்களில்

பிரவேசிக்கும், அவர்களுக்கு கௌரத்தையும் அதிகாரமும் கிடைக்கும், ஜனங்கள் பணம் மிகும்.

ஜனங்களுக்குப் படிப்பை விர்த்திபண்ணி சோம் பேரிகளாய் விட்டுவிட்டால் ஏதாவது அவர்கள் புத்திக்கு போக்கு வேண்டுமல்லவா?

வியாச்சியம் வழக்குளை உண்டு பண்ணுவார்கள் கலகம் சச்சரவு முதலியவைகளை முட்டுவிப்பார்கள்.

இவைகளை யெல்லாம் ஆலோசித்துத்தான் கூடிய வரையில் எவ்வளவு காரியங்களை சுவாதீன சுதேசகனவான்களின் வசமாய் விட்டு பணச் செலவில் லாமலும், அவர்களுக்கும் ராஜ்ஜிய தந்திர வித்தியாப் பியாசமும் பொழுது போக்கும் உண்டாகும்படியாயும், சுதேசப் பிரபுக்களையே மெம்பர்களாகவும் ப்ரெசி டெண்டாயும் நியமிக்க கவர்ண்மெண்டார் கோரு கிறார்கள்.

**வினா :** ஆம், இவர்கள் வேலையைச் செவ்வை யாய்ச் செய்வார்களா? அவனவன் தன் ஜாதி மத அபிமானத்தாலும், கட்சிப் பிரதி கட்சியாலும், நமக்கென்ன வென்ற அலட்சியத்தாலும், விஷயத்தைக் கெடுத்துப் போடமாட்டானா?

**விடை :** இப்போது நீர் சொன்னது அவசியம் யோசிக்க வேண்டியதுதான். இந்த இழிகுணங்களே நமக்கு மகா சத்துரு.

தமது தேசங் கெட்டாலும், ஊர் கெட்டாலும், தாமே கெட்டுப் போனாலும், தமது அயலான் கெட்டால்

போதும் 35 என்கிற ஜாதிகள் அல்லவோ ஹிந்துக்களில் பெரும்பான்மையோர்.

இப்படி நாமிருக்கிறவரையில் நமது தேசத்துக்கும் நமக்கும் பெருமை வரப்போகிறதில்லை.

அப்படி நமக்குள் ஒற்றுமையும் தேசாபிமானமும் இருந்தால் 25 கோடி ஜனத்தொகை உள்ள நாம் சென்ற ஐந்நூறு வருஷகாலமாய் பராதீனர்களாய் வருவோமா?

ஆகிலும் ஹிந்துக்கள் அப்படி இருக்கக் கூடா தென்றே இப்போதைய புது ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

பொது சுதந்தரங்களை அனுபவிக்கும் திறமை இப்பேர்ப்பட்ட சுதந்தரங்களைக் கொடுத்து அனுப விக்கச் சொன்னால்தான் தெரியும்.

ஒற்றுமையும் தேசாபிமானமும் இல்லை யென்றால் இவைகள் உண்டாவதெப்படி? ஒற்றுமையும் தேசாபிமானமும் எந்தெந்த வேலைகளுக்கு வேண்டுமோ அந்தந்த வேலைகளை ஜனங்களுக்குக் கொடுத்துப் பார்க்க வேண்டும்.

முன் சொன்னதுபோல நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமானால் ஜலத்திலிறங்கச் சொல்லப் பயந்து முடியுமா?

கத்தி பழகத் தெரிய வேண்டுமானால் கத்தியி னால் எங்கே காயம்படுமோ வென்று பயந்து முடியுமா?

அப்படியே ஐக்கியமும் தேசாபிமானமும் ஜனங்களுக்கு உண்டாக வேண்டுமானால் அவைகள்

வேண்டிய விஷயங்களைக் கொடுத்து செய்யச் சொல்ல வேண்டும். கொஞ்ச நாளைக்கு விஷயங்கள் சரிவர நடக்காது போனாலும் போகட்டும்.

**வினா :** ஆனால் ஊரில் வாந்தி பேதி பிரதிபலித் திருக்க முனிசிபாலிடிக்கும் லோகல் பண்டு போர்ட்டு கும் ஒற்றுமையும் தேசாபிமானமும். உண்டாக வேண்டுமென்று, கையாலா தவர்களிடத்தில் விட்டு விட்டு, கவர்ண்மெண்டார் சும்மா விருக்கலாமா. ஜனங்கள் மடிந்து போகார்களா?

**விடை :** நல்ல கேள்வி கேட்டீர் ஆனால் இது ரிப்பன் பிரபுவுக்குப் படாமல் போகவில்லை. அப்பேர்ப் பட்ட சந்தர்ப்பங்களுக்குத் தகுந்த ஏற்பாடு செய்திருக் கிறார்.

கலெக்டர்கள் ப்ரெசிடெண்டாயில்லாதிருந் தாலும், அவர்கள் முனிசிபாலிடியும் லோகல் பண்டு போர்ட்டுகளையும் கேவலம் மறந்துவிடக் கூடாது.

தாங்கள் மெம்பர்களாக விருந்தாவது ப்ரெசி டெண்டாயிருந்தாவது நேராய் நடவடிக்கை நடத்தக் கூடாதேயொழிய, இவர்கள் விலகி நின்று மேற்படி போர்ட்டுகள் எப்படி நடக்கின்றன வென்று கவனமாய்ப் பார்த்து, வேண்டிய சமயங்களில் யோசனை சொல்ல வேண்டியதும், தவறிப் போகு மிடத்தில் எச்சரிப்பதும், கலெக்டர்களின் கடமை யென்று கவர்னர் ஜனரல் அவர்கள் கண்டிப்பாய் உத்திரவு பண்ணியிருக் கிறார்கள்.

நீர் சொன்னதுபோல ஜாதி மத அபிமானத்தாலாவது அசக்தத்தாலாவது பொதுப் பணத்தை வீணாய்ச் செலவு செய்தாலும், செலவு செய்ய வேண்டிய விஷயங்களுக்கு செலவு செய்யாவிட்டாலும், கலேக்டர் கவர்ன்மெண்டுக்கு அறிவிக்க வேண்டியது.

உடனே கவர்ன்மெண்டாருக்கு கலெக்டர் சொல்லுவது சரியென்று படும் பட்சத்தில் கவர்ண் மெண்டார் அந்த போர்ட்டை நேராய் எச்சரிப்பார்கள்.

இப்படி இரண்டொருதரம் எச்சரித்தும் கேட்காமற்போனால், இந்தியா கவர்மெண்டாரின் அனுமதி பெற்றுக்கொண்டு அந்தக் கவலையற்ற போர்ட்டை நீக்கிவைத்து, எந்த வேலையை அலட்சியம் பண்ணினார்களோ அந்த வேலையை கலெக்டரைக் கொண்டாவது வேறு யாரைக் கொண்டாவது செய்யச் சொல்லி, பிறகு வேறு போர்ட்டை தாங்களாகவாவது, அல்லது ஜனங்களைக் கொண்டாவது, நியமித்துக் கொள்ளுவார்கள்.

மேலும் போர்ட்டாரின் நடவடிக்கைகளில் ஏதாவது ஆட்சேபனைக் கிடமாகத் தோன்றும் பட்சத்தில், கவர்ன்மெண்டாருக்கு அந்த நடவடிக்கையை ரத்துச் செய்ய அதிகாரம் உண்டு ஆனால் இந்த அதிகாரம் கலெக்டருக்கு இல்லை.

இவைகள் எல்லாவற்றையும்விட ஜனங்களிடத்தி லேயே பெருத்த அதிகாரமிருக்கிறது.

தங்கள் நன்மைக்கு விரோதம் செய்யும் மெம்பர்களை ஏன் திரும்பவும் நியமிக்க வேண்டும், நியமிக்கவே கூடாது.

**வினா :** சிலர் சொல்லுகிறார்கள். தேவஸ்தான விஷயங்களை நம்மவரிடத்தில் கவர்ன்மெண்டார் ஒப்புவித்தார்களே, அவைகள் செவ்வையாய் நடக்கின்றனவா என்கிறார்கள்?

**விடை :** நானும் இப்படி அநேகர் சொல்ல அடிக்கடி கேட்டிருக்கிறேன்.

இப்படி நம்மவருக்குள்ளேயே அதைரியப் பட்டுக் கொள்வதை, நமக்கு யாதொரு அதிகாரமும் வரக்கூடாது என்றும், எல்லா அதிகாரத்தையும் தாங்களே தங்களுக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் நினைக்கும் சிவிலிடாயன் உத்தியோகஸ்தர்களில் சிலரும், மற்றவர்களும் அடிக்கடி கவர்ன்மெண்டாருக்கு எடுத்துச் சொல்லுகிறார்கள். இதைவிட மடைத் தனமான கட்சி யெங்குமில்லை.

இதையொரு ஆட்சேபனையாய்ச் சொல்லுகிறவர்களுக்கு தேவஸ்தான ஆக்டு இன்ன தென்றாவது ரிப்பன் பிரபு ஏற்படுத்த எத்தனிக்கும் சுய ஆட்சிக் கிரமம் இன்னதென்றாவது தெரியாது.

இந்த தேவஸ்தானங்கள் நம்மவர்களால் சரிவர நடக்காதது நம்மவர்களின் குற்றமேயல்ல, ஆக்டின் குற்றம்.

எப்படியென்றால், கவர்ன்மெண்டார் இந்த தேவஸ்தானங்களைக் கைவிட்ட மாதிரியும் ஒரு காரணமென்று சொல்லலாம்.

கவர்ன்மெண்டார் கைவிட்டது 1842-ம் வருஷத்தில், தேவஸ்தானம் கமிட்டிக●ள் ஏற்படுத்தினது 1863-ம் வருஷத்தில்.

இதின் நடுவில் சில தேவாலயங்கள் மடாதிபதிகளிடத்தில் ஒப்புவிக்கப்பட்டன. வேறு சிலவைகளை அநாதையாய் விட்டுவிட்டார்கள்.

ஆகையால் தேவாலயங்களின் சொத்து வீண் செலவு செய்யப்பட்டது மன்றி, மொத்தமாய் அவைகள் விஷயங்கள் செவ்வையாவும் நடத்தப்படவில்லை.

கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்ட போது எல்லா தேவஸ்தானங்களும் 38 அக் கமிட்டிகளின் அதிகாரத்துக்குள்ளாக வில்லை.

எந்தெந்த தேவஸ்தானங்களுக்கு கவர்ன் மெண்டார் தர்மகர்த்தாக்களை நியமிக்க அதிகாரம் வகித்திருந்தார்களோ அந்த தேவஸ்தானங்கள் மட்டும் கமிட்டிகள் அதிகாரத்துக்கு ஒப்புவிக்கப்பட்டன.

ஆகையால் திருப்பதி, திருவள்ளூர், காஞ்சீபுரம் முதலான தேவாலயங்கள் சுயேச்சையாகவே விடப்பட்டன.

மற்ற தேவாலயங்களைப் பற்றிக்கூட இன்னின்னவைகளுக்கு கவர்ண்மெண்டார் தர்மகர்த்தாக்களை நியமிக்க அதிகாரம் பெற்றிருந்தார்களென்று ரூபிக்கத் தகுந்த தஸ்தாவேஜில்லாமையால், அநேக தர்மகர்த்தாக்கள் கமிட்டிகளுக்கு அடங்குகிறதில்லை யென்று சொல்லிவிட்டார்கள்.

இவர்களை சிவில் கோர்ட்டுகளில் வழக்கு செய்து தங்கள் அதிகாரத்துக்கு உள்ளடக்க கமிட்டிகளுக்கு ஜவேஜியிருந்ததில்லை.

ரிவினியு போர்ட்டாருக்கிருந்த அதிகாரம் கமிட்டி களுக்கு கொடுக்கப்பட்டது வாஸ்தவம்தான். ஆகிலும் இந்த அதிகாரம் இப்பேர்ப்பட்ட தென்று ஒரு இடத்திலாவது வரையறுத்துக் குறிப்பிடவில்லை.

குறிப்பிடாவிட்டாலும் ரிவினியு போர்ட்டாரின் அதிகாரத்துக்கு ஜனங்கள் பயந்திருந்தார்கள்.

கமிட்டிகளின் அதிகாரத்துக்கு ஜனங்கள் பயப் படுவார்களா?

இப்படியிருக்க தேவஸ்தானம் கமிட்டிகள் இவ்வளவாவது நிர்வகித்துக் கொண்டு வருகின்றனவே அதுவே யதிசயம், இவைகள் இன்னும் திருப்தியாக நடவடிக்கை நடத்தி வராதது ஜனங்களுக்கிருக்கும் அஜாக்கிரதையினாலாவது, அக்கறைக் குறைவினா லாவது அல்ல.

ஆகையால் தேவஸ்தானம் கமிட்டிகளின் தவறினாலே சுய அரசாட்சிக்கு நாம் லாயக்கில்லை யென்பது நமது சத்துருக்கள் சொல்லும் வீண் கதை.

**வினா :** அப்படியா, இதுவரையில் இந்தச் சங்கதி யெனக்குத் தெரியாது.

சுய அரசாட்சி ஏற்பாட்டினால் வெகு நன்மைகள் விளையுமென்றே நம்புகிறேன்.

ஆனால் தாங்கள் சொல்லுகிறதைப் பார்த்தால் அனேக வெள்ளைக்கார உத்தியோகஸ்தர்களுக்கு இந்த ஏற்பாடு சம்மதமில்லை போற்றோன்றுகிறது. அது வாஸ்தவந்தானா? ஏன் அவர்களுக்குச் சம்மதமில்லை.

**விடை :** அவர்களில் சிலருக்கு சம்மதமில்லை யென்பது வாஸ்தவந்தான்.

நமது ராஜப்பிரதி நிதி லார்ட் ரிப்பன் தமது ஏற்பாட்டை பம்பாய் கவர்ண்மெண்டாருக்கு அனுப்பி அவர்கள் அபிப்பிராயத்தைக் கேட்டபோது பம்பாய் கவர்ண்மெண்டார் ரிப்பன் பிரபுவின் ஏற்பாட்டை நேராய் அவமதித்து எழுதினார்கள்.

அந்த பம்பாய் கவர்ண்மெண்டார் சொன்னதின் சுருக்கமென்னவென்றால் ''பம்பாய் ராஜதானியில் அவ்வவ்விடத்திய ஜனங்களுக்கு சுவய அரசாட்சி விஷயத்தில் பயிற்சியடைய வேண்டிய ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது இந்தியா கவர்ண்மெண்டார் செய்யச் சொல்லும் ஏற்பாட்டினால் இதுவரையிலும் கைகூடி வந்த நன்மையை யிழந்து விடுவோம். போர்டுகளுக்கு அளவு கடந்த அதிகாரம் கொடுக்கச் சொல்லுகிறீர்கள், அதினாலே பொது விஷயங்களுக்கு மோசம் நேரிடும்.

''இந்த ராஜதானியில் ஜனங்களுக்கு நாகரீகம் போதாது, ஆகையால் கலெக்டர்களே ப்ரசிடெண்டா யிருக்க வேண்டும். ஜனங்களால் ஆளமாட்டாத வேலையைக் கொடுத்து வேலையைக் கெடுப்பதைவிட வேலையைச் செய்யவேண்டிய திறமையை உண்டு

பண்ணுவது நல்லது'' என்று பம்பாய் கவர்ண் மெண்டார் சொன்னார்கள்.

சென்னப்பட்டணம் கவர்ன்மெண்டார்கூட முதலில் இந்த ராஜதானியில் சுவய ராஜ்ஜிய விஷயத்தில் அபிவிர்த்திக்கு இப்போது இடமில்லை யென்றும், ஏற்கனவே இலெக்ஷன் வழக்குகள் நடந்தேறி வருகிறதென்றும், உத்தியோகஸ்தர் அல்லாதவர்களைப் ப்ரெசிடெண்டு ஆக்குதல் கூடாதென்றும், போர்ட்டுகளின் விஸ்தீரணத்தைக் குறைத்தல் கூடாதென்றும், விடைகொடுத்தார்கள்.

இதையெல்லாம் ரிப்பன் பிரபு அவர்கள் கவனிக் காமல் தான் சொன்னபடியே செய்து பார்க்க வேண்டு மென்று சொல்லி மறுவுத்திரவு அனுப்பினார்கள்.

ரிப்பன் பிரபுவினுடைய பிடிவாதம் யில்லாமற் போனால் இந்த மாபெரும் விஷயம் இவ்வளவு தூரம் ஸ்திரத்தை அடைந்திராது.

**வினா :** ஐரோப்பியர்களில் ரிப்பன் பிரபுவைத் தவிர வேறு யாராவது இந்த சுவய அரசாட்சிக்கு சாதகமாக அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்களா?

**விடை :** வெகு பேரிருக்கிறார்கள். கவர்னர் ஜனரலின் மந்திரிகளில் அநேகருக்கு முற்றிலும் சம்மதந்தான்.

முக்கியமாக அரசிறை மந்திரியாகிய மேஜர் பேரிங்கதான் கவர்னர்ஜனரலுக்கு இந்த விஷயத்தில் முக்கிய ஆதரவு.

உத்தியோகஸ்தரல்லாத சில ஐரோப்பியர்களும் இதற்குச் சாதகமாக விருக்கிறார்கள்.

இந்தியாவில் பிரசுரமாகும் ஆங்கிலேய தினசரிப் பத்திரிகைகளில் மகாப் பிரசித்தமானதும் செல்வாக் குள்ளதுமாகிய ''பயோனியர்'' என்ற பத்திரிகையும், லண்டன் நகரத்தில் இதேமாதிரியாய்ப் பிரசித்த மானதும், உலகத்திலிருக்கும் பத்திரிகைகளுக் கெல்லாம் பேர் போனதுமாகிய ''டைம்ஸ்'' பத்திரிகை யும், இந்த ஏற்பாட்டை மெச்சிக் கொண்டிருக்கின்றன.

டைம்ஸ் பத்திரிகை இந்த ஏற்பாட்டை ''மகத்துவ முள்ளதென்றும்'', ''பிரிடிஷ் ஜாதியாரின் பேருக்கு இசைந்தது'' என்றும் சொல்லிற்று.

நமது கவர்னராகிய கிராண்டு டப் அவர்களும் மதுரையில் சுவய அரசாட்சியைத் தான் மிகவும் விரும்புவதாகவும், ஆனால் ஜனங்களுக்குக் கிடைக்கும் சுதந்தரங்களைக் கொண்டு ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரை அக்கிரமம் செய்து நசுக்க கவர்ன்மெண்டார் இடங் கொடார்கள் என்று சொன்னார்.

இன்னும் வடமேற்கு மாகாணங்களின் துரைத்தனத்தைச் சேர்ந்த ரிவினியு போர்ட்டின் முதல் மெம்பராயிருந்து இப்போது வேலையில் நீங்கியிருக்கும் மிஸ்டர் ஏ. ஹியூம் என்ற மகானும் அனுகூலமாகவே யபிப்பிராயம் கொண்டிருக்கிறார்.

இந்த மிஸ்டர் ஏ. ஹியூமுக்கு சுதேசிகளிடத்தில் மிகவும் அபிமானம். உத்தியோகத்தினின்று நீங்கியும்

இங்கிலாந்துக்குப் போகாமல் இறக்குமளவில் இந்த தேசத்திலேயே யிருப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்.

இவர் சுவய அரசாட்சி விஷயமாய் ''சுதேச புத்திமான்களுக்குப் பொதுவாய் விண்ணப்பம்'' என்று ''பயோனியர்'' என்னும் பத்திரிகையில் பிரசுரம் செய்திருக்கிறார்.

இந்த விண்ணப்பத்தை சுதேச பத்திரிகைகள் அனைத்தும் தங்கள் பக்கங்களில் எடுத்துப் பதிப்பித்துப் பிரசுரம் செய்தன.

இந்த விண்ணப்பத்தின் கடைசி பாராவை இங்கே மொழிபெயர்த்துச் சொல்லுகிறேன்.

''வருகிற வருஷத்தில் தேசமெங்கும் இருக்கும் படித்தறிந்த தனவான்களில் சிலரிலும் சுவய அரசாட்சி விஷயத்தில் மனப்பூர்வமான அக்கறை யுள்ளவர்க ளென்று நடவடிக்கையில் காட்டி;

தங்கள் சொந்த அலுவலுக்கும் சுகத்துக்கும் பாதகம் நேரிட்டாலும் அதைப் பாராட்டாமல் பொது விஷயங்களில் மன உறுதியும் புத்தியும் செலுத்திபாடு பட்டு உழைத்து,

எங்கே பார்த்தாலும் அங்கங்கே மெம்பர்களை ஜனங்கள் நியமிப்பதில் அந்த வேலைக்குத் தகுந்தவர்களாய் நியமிக்கும் பொருட்டு.

தங்களையே நியமிக்க வேண்டுமென்று சொந்த நன்மையைக் கோராமல்,

வேண்டிய முயற்சிகளைச் செய்து அல்லது தங்களையே ஜனங்கள் நியமிக்கும் பட்சத்தில் யாதொரு பயமுமின்றி ஒருவர் தயவையும் எதிர்பார்க்காமல்;

தங்கள் பங்குக்கு வரும் கடமைகளை ஊக்கத் தோடும்; விவேகத்தோடும், சத்தியமாயும் நிறைவேற்றி வந்து;

இப்போதைய ஏற்பாட்டிலே தங்கள் தேசம் பரீட்சை செய்யப்படுகிறதென்றும், அந்தப் பரீட்சையில் தேறினால் தங்களுக்குக் கீர்த்தி, தவறினால் அவமான மென்றும், இரவும் பகலும் அதையே நினைத்து எண்ணி;

ஒரே வார்த்தையிற் சொல்லில், தாங்கள் பெரும் நோக்கங்களுக்கும் விடா முயற்சிக்கும் ஆற்றமாட்டாத பிஞ்சிற் பழுத்த குழந்தைகள் அல்ல, முதிர்ந்த ஆண்பிள்ளைகளே, மேன்மையும் சத்தியமுமுள்ள ஆண்பிள்ளைகளென்று நிரூபித்தும் வருவார்களானால்;

அடுத்த வருஷ முடியுமுன் சுவய அரசாட்சி இன்னும் வளர்ந்து பெருகாமல் போகுமா?

இன்னும் ஒரு பத்து வருஷத்திற்குள்ளாக இத்தேசத்து ஜனங்களின் நிலைமையில் பெறும் மாறுதல் உண்டாய் நன்மை விளையாமலும் போகுமோ?

மற்ற தேசங்களில் சுவய அரசாட்சியின் நன்மை களை வேண்டியே ஜனங்கள் தங்கள் ரத்தத்தையும் உயிரையும் சொரிந்தார்கள்.

இத்தேசத்திலோ பொட்டு ரத்தமாவது கசியாமல் இப்பேர்ப்பட்ட புதுமைகள் கைகூடுமே!

இப்படிக் கைகூட வேண்டுமென்றே அநேக இருதயங்கள் சத்தியமாய் உருகியும், ரிப்பன் பிரபு வருகிற வரையில் ஒருவராவது அப்படிக் கைகூடு மென்று கோரத் துணியவில்லை.

என் நண்பர்களே! கவர்ண்மெண்டார் செய்யக் கூடியது செய்தாயிற்று; ஆட்டம் நமது பந்து நமது காற்கிடையில் கிடக்கின்றது; அதை என்ன பண்ணுவீர்களோ அதுவே யோசனை.

ஐயோ! உங்களை மனதாற நேசித்து நீங்கள் நீந்தினாலும் ஆழ்ந்தாலும் உங்களவர்களாகவே யிருப்பவர்கள் கூட இக் கடும் பரீக்ஷை எவ்விதமாய் முடியுமோவென்று ஆவலாய் சந்தேகப்பட்டு தத்தளிக்கிறார்களே'' என்று கேட்போர் மனமுருகும்படி (மிஸ்டர் ஏ. ஹியூம்) சொன்னார்.

லாஹோரில் கனம் பொருந்திய ராஜப்பிரதிநிதி யவர்கள் அந்த ஊர் முனிசிபல் கமிஷனர்களைப் பார்த்துச் சொன்னதாவாது:

''கனவான்களே! எனக்குத் தோன்றுகிறது, இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டார் தங்கள் பாகத்தை நிறைவேற்றி விட்டார்கள். எங்கள் அரசு முறை இன்னதென்று வரையறுத்து விட்டோம், அதை உங்கள் லாஹோர் அல்லது பஞ்சாப் தேசத்து கவர்னருக்கு

லெப்டினன்ட் கவர்னர் அதாவது, உதவி கவர்னர்* என்று பெயர். உதவி கவர்னர் மனதார அங்கீகரித்துக் கொண்டிருக்கிறார்.

''இந்த சமஸ்தானத்தில் அவருக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களும் அவரை ஆதரிப்பார்கள் என்றே நம்புகிறேன்.

''ஆகையால் பஞ்சாப்பிலும் இன்னும் மற்ற இடங்களிலும் ஜனங்கள் தங்கள் பாகத்தைத்தான் நிறைவேற்ற வேண்டியது.

''கனவான்களே! புத்தியும் செல்வாக்குமுள்ள நீங்கள் கவர்ன்மெண்டாரின் வேண்டுகோளுக்கு பித்தி யுத்திரமாக முன்னின்று, ராஜ்ஜியத்தின் துரைத்தன விசாரணையில் உங்களுக்குத் தகுந்த ஸ்தானத்தை அடையுங்கள்.

''இந்த சுய அரசாட்சி யென்ற அரசு முறை நிறை வேறுமோ நிறைவேறாதோ நீங்களே சொல்ல வேண்டும்; உங்களுக்கு இவ்வாறு நான் செய்து கொள்ளும் விண்ணப்பம் உங்களாலே போதுமான மட்டும் நிறைவேறு மென்பதைக் குறித்து நான் சந்தேகப்படவேயில்லை.''

வினா : இப்படி துரைத்தனத்துக்குத் தலைவரான ராஜ ப்ரதிநிதியவர்களும், ஐரோப்பியர்களும், சுவய

★ லாஹோர் அல்லது பஞ்சாப் தேசத்து கவர்னருக்கு லெப்டினன்ட் கவர்னர் அதாவது உதவி கவர்னர் என்று பெயர்

அரசாட்சிக் கிரமத்தால் ஜனங்களுக்குப் பெருத்த நன்மையுண்டாகுமென்று நம்பி இவ்வளவு ஆவலா யிருக்கும் பொழுது ஹிந்துக்கள் அதை அலட்சியம் பண்ணி தங்கள் ஜாதிக்கு சுபாவமாயிருக்கும் பொறாமையும் சுவய நன்மையுமே பாராட்டி தங்கள் தேசத்துக்குத் தற்காலத்திலும் பிற்காலத்திலும் விளையும் அளவற்ற நன்மையைக் கெடுத்துக் கொள்ளுவார்களோ! என்று யோசனையாயிருக்கிறது.

**விடை :** இந்த மகாதேசமாகிய ஹிந்து தேசத்தில் பௌத்த மகாமுனி பௌத்த சமயத்தை ஸ்தாபித்து, அசோக மகாராஜன் அதைப் பரவச் செய்த காலத்திலும்,

பிறகு சங்கராசாரி ஸ்வாமி முதலானவர்களால் பிராமண மதம் ஸ்தாபிமான காலத்திலும்;

எழுநூறு வருஷத்துக்கு முன்னால் மகமதியர்கள் இந்த தேசத்தை ஜெயித்த காலத்திலும்,

பிறகு ஸிவாஜி மகாராஷ்டிர வீரன் மகமதியர்களை அடக்கி ஹிந்து ராஜ்ஜிய ஸ்தாபனம் செய்வித்த காலத்திலும்,

கடையில் ஆங்கிலேயர் இந்த தேசத்தைக் கட்டுக்குள் கொண்டு பழைய ஹிந்து மகமதிய ராஜ்ஜியங்களை கீழ்ப்படுத்தின காலத்திலும்.

பெரும் வேறுபாடுகள் உண்டாய், நூறு நூறாண வருஷங்களுக்கும் அழியாத நன்மை தீமைகளுக்குக் காரணமாயிற்று.

இப்போது இந்த சுவய அரசாட்சி என்பதும் மேற் சொன்ன விஷயங்களைப் போலொத்த ஒரு விஷயம்.


இது ஸ்திரப்பட்டு வேரூன்றி ஓங்கி வளர்ந்து பிற்காலத்தில் ஹிந்து ஜனங்கள் ஒரு தேசத்தாராய் ஒருமைப்பட்டு தங்கள் ராஜ்ஜியத்தைத் தாங்களே ஆண்டு கொள்ளும் திறமை யுண்டாய், ஐரோப்பிய ராஜ்ஜியங்களை விட கீர்த்தியும் பலமும் ஐசுவரியமும் உண்டாய், ஹிந்து தேசமென்ற பேர் என்றைக்கும் மறையாத கடும்பகற் சூரியன் போல பிரகாசிக்கும் ஓர் காலத்துக்கு இப்போது இந்த சுவய அரசாட்சி வேராகுமா?

அல்லது என்றைக்கும் சுவாதீனத்தை யறியா மலும், பெற அசத்கர்களுமாகிய குழந்தைக் கும்பல்கள் இந்த ஹிந்துக்கள், அவர்களுக்கு அன்னிய ராஜாங்கமே கதியென்று நம்மிஷ்டர் துக்கப்படவும், விரோதிகள் நகைக்கவும் இடமாகுமோ?

அது நாம் நடந்து கொள்ளும் நடத்தையைப் பற்றினதென்று நம்மோர் நடக்கவேண்டும்.

சுய அரசாட்சி வினா விடை முற்றிற்று.

❖



அன்பர் மணி அவர்கள் இலக்கியப் பணி என்ற பெயரால் தங்கள் பொழுதையோ, மற்றவர்கள் பொழுதையோ போக்குவதற்காக நூல்கள் எழுதாமல் அறிவுக்கும் சிந்தனைக்கும் ஊட்டந் தரக் கூடிய நூல்களையே படைக்க வேண்டுமென்பதில் தீவிரவாதியாகத் திகழ்வது எனக்குப் பெரிதும் உவகையூட்டுகிறது

அமரர் **வெ.சாமிநாத சர்மா** (1895 -1978)

திரு. பெ.சு, மணி அவர்கள் தான் படித்துப் பெற்ற அறிவை அடிப்படையாக்கி நூலறிவால் நுண்ணறிவை வளர்த்துக் கொண்டவர். நூலகங்களே இவருடைய வாசஸ்தலங்கள். அறிஞருலகிலேயே சஞ்சாரம் செய்பவர். இந்த பழக்கவழக்கங்களால் என்னுடைய நெடுநாளைய நண்பரான அன்பர் மணி சிறந்த எழுத்தாளராக மலர்ந்துள்ளார்.

அமரர் **சிலம்புச் செல்வர் ம.பொ.சி.** (1906-1995)

நிதானம், நேர்மை, நுனித்து நோக்கும் திட்பம், நெஞ்சுறுதி ஆகிய சிறப்பியல்புகளிலே ஒருமைப்பாடுடையவராய் இருக்கின்றனர் எனும் திறனாய்வாளர் பெயர்ப்பட்டியலில் இந்நூலாசிரியர் பெயரையும் குறிப்பிட்டுள்ளார்.

அமரர் **பேராசிரியர் க. கைலாசபதி** (1933-1982)

( இலக்கியமும் திறனாய்வும் 1990-ப.165ல் பார்க்க)

நண்பர் பெ.சு.மணி தன் சீவிய காலத்திலேயே தான் விதைத்தவற்றுக்கான அறுவடையைப் பெற்றுக்கொண்டவர். அதனினும் பார்க்க அந்த அறுவடையின் சிறப்புக்கான பாராட்டுக்களையும் பெற்றுள்ளவர் ஆவார். இப்படியான புலமை, திருப்தி, எல்லோர்க்கும் கிட்டுவதில்லை. அந்தப் பெருமைக்காக நண்பர் பெ.சு. மணி அவர்களை மனம் நிறைய வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி** (1932-2011)

பூங்கொடி பதிப்பகம்